# மனிதன் முகம்

## தோழர் வேலுவின் போராட்டப் பாதை





# மனிதன் முகம்

**தோழர் வேலுவின் போராட்டப் பாதை**



**தோழர் வேலு நினைவேந்தல்**
**மே 16, 2026 - லண்டன்**

வெளியீடு:
தோழர் வேலு நினைவேந்தல் குழு - லண்டன்

## அறிமுகம்

# தோழர் வேலு நினைவாக

**30.7.1967 - 28.3.2026**

இந்த நினைவுப் பதிவு, தோழர் வேலுவை நினைவுகூரும் கட்டுரைகள், அஞ்சலி கள், கவிதைகள் மற்றும் வாழ்க்கைக் குறிப்புகளின் தொகுப்பாகும். 2026 மார்ச் 28 அன்று லண்டனில் வேலு திடீரென இயற்கையை அணைத்துக்கொண்டார். வேலு போன்ற உயிர்ப்பும் உற்சாகமும் நிறைந்த ஒருவரை வார்த்தைகளால் விவரிப்பது மிகவும் கடினம். இருப்பினும், எழுத்திலும் இலக்கியத்திலும் ஆழ்ந்த பற்றுள்ளவராக வேலு இருந்ததால், அவரின் பல பரிமாணங்களைப் பதிவு செய் வதன் மூலம் அவர் பற்றிய புரிதல்களை விசாலிக்கும் முயற்சி இது.

ஒருவர் மறைந்த பின் அவரைப் பற்றி எழுதுவது என்பது தனித்துவமான சுமை. ஏனெனில் மறைந்தவர்கள் பங்களிக்க முடியாது. பொதுவெளியில் எதனை வெளிப்படுத்த வேண்டும் என்ற அளவுகோலைப் பயன்படுத்துவதன் மூலம் அவருடனான நெருக்கமான தருணங்கள்- நினைவுகள்- உரையாடல்களின் ஒரு பகுதியை எம்முள் புதைத்துவிடுகிறோம். இவ்வகையில், அவரின் வாழ்க் கையின் முழுமையான வரலாறைப் படைப்பதல்ல எமது நோக்கு. அவரது வர லாற்றைப்படைப்பது என்பது வருங்காலத் திட்டமாகவே இருக்கமுடியும்.

எனவே, கூட்டாக இணைந்து அவரது குடும்பத்தினர், நண்பர்கள் , தோழர் களை அணுகி, அவர்களின் வாழ்க்கையில் வேலுவின் ஊடாட்டத்தின் தாக் கங்கள் பற்றியும் அவரது வியத்தகு பண்புகள் பற்றியும் பகிருமாறு கேட்டோம். வேலு மறைந்த தருணங்களில் வேலு பற்றிய நினைவுகளைப் பலருடன் அளவளாவும் போது வேலுபற்றி நாம் அறியாப் புதிய தகவல்கள் பகிரப்பட்டன. ஒவ்வொருவ ருக்கும் வேலுவுடனான அனுபவங்கள் பல்வகைப்பட்டதும் தனித்துவமான பொருள் பொதிந்ததும் என அறியமுடிந்தது. தன்னடக்கமும் எளிமையும் கொண்ட படிநிலை மேலாண்மையற்ற அபூர்வ மனிதர் வேலு.

வேலுவை உண்மையாக நாம் நினைவு கூருவது என்பது எமது தனி நபர் சிந் தையைக்கடந்து, அவரின் சமூக - மனித முகத்தினைத் தரிசிப்பதன் மூலமே சாத்தியமாகிறது. ஏனெனில், குழந்தைகளிலிருந்து பெரியவர்- அரசியலுக்கு அர்ப்பணித்தவர்கள் அல்லது அரசியலில் ஈடுபாடு அற்றவர்கள் - அனைவர் மேலும் ஆழமான கரிசனை கொண்டவர் வேலு.

வேலுவின் நினைவுகளை எழுதுவது என்பது, அவரதுஅரசியலை எழுதுவது தான். வேலுவைப் பற்றி எழுதும்போது, அரசியலிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கையைப் பிரிக்கவே முடியாதென நாம் உணர்கிறோம். அவரது பன்முக வாழ்க்கைப் பரிமாணங் களை நாம் தரிசிக்கும் போது அவரது அரசியல் வாழ்வைத் தனியாகப் பிரித்துப் பார்க்கும் பார்வை அர்த்தமற்றதாகிறது. வேலு பல்பரிமாணம் கொண்ட சிக்கலான மனிதர்; கனவுகளுடன் வாழ்ந்தவர்; பெரும்

சவால்களைச் சந்தித்தவர்; ஆர்வமிகு தேடல் கொண்டு தன்னை மனிதனாக வளர்த்துக் கொண்டவர். தீவிர அரசியல், சமூக செயல்பாட்டாளரான வேலு, மக்கள் மேலான கருணையாலும், அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் பண்பாலுமே உலகத்தைப் புரிந்து கொண்டார். முக்கியமாக அந்தப்புரிதலின் உதவியால் உலகை எவ்வாறு மாற்றுவது என்பதைக் கற்றுக்கொண்டார்.

வேலுவைப்பற்றிய வாழ்க்கைத் துணுக்குகளும் நினைவுகளும் நமக்கு ஒரு தனித்துவமான அரசியல் கதையைப் பகர்கின்றன. அவரைச் சுற்றியிருந்த வர்களுடனான ஆழமான பிணைப்புக்கொண்ட வேலு, எமக்கு உணர்த்துவது வெறும் வரட்டுத்தனமான அரசியல் ஒரு போதும் எவ்வித மாற்றத்தையும் தராது என்பதே.

நாம் அதிகார சக்தியை பெரும்பாலும் திமிர்த்தனமான ஆணவக்குரலாகவே புரிந்து கொண்டுள்ளோம். அதனை எதிர்ப்பதற்கும் நாம் அதே அகங்காரத்து டன் செயல்பட முனைகிறோம். ஆனால் வேலுவைப் பற்றிய கதைகள், அன்றாட சாதாரண செயல்களின் தார்மீக சக்தியை வெளிப்படுத்துகின்றன. அவை படிப்படியாக மனிதர்களில் மாற்றத்தை ஏற்படுத்திப் பரந்த அதிர்வலைகளை உருவாக்குகின்றன.

இந்த அஞ்சலிகளை நீங்கள் வாசிக்கும் போது, ஒரு உண்மையான தோழராக இருப்பது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொள்வீர்கள் என எண்ணுகிறோம். இது மார்க்ஸ் அல்லது பெரியார் பற்றி ஒருவர் ஒப்புவிக்கும் வித்தையல்ல. மாறாக, இந்த நீதியற்ற உலகில் மனிதத்தை சுவாசித்து, வாழ்ந்து காட்டிய மனிதனின் கதை. வேலு பற்றிய இந்தப் பனுவல்கள், அன்பும் தோழமையும் மற்றவர்க ளுக்கு எவ்வாறு பரவுகின்றன என்பதை இது காட்டுகிறது. சக மனிதர்களிடம் காட்டும் தோழமையும் ஆழ்ந்த அன்புமே புரட்சிக்கான சக்திவாய்ந்த விதை களை விதைக்கும் என்பதையே இது சுட்டி நிற்கிறது.

உங்களில் பலர் வேலுவை அறிந்திருப்பீர்கள். பலர் அறிந்திருக்கமாட்டீர்கள். அவர் தனது வாழ்க்கை முழுவதையும் ஒரு மார்க்ஸிஸ்ட்டாகவும் சாதி மறுப்பா ளராகவும் போராட்டத்திற்காக அர்ப்பணித்திருந்தாலும், சோர்ந்துவிடாமல் நம்பிக்கையுடனேயே வாழ்ந்தார். அவர் ஒருபோதும் அவ நம்பிக்கையாளராக மாறவில்லை. தனது இணையர் றஜிதா, மகள் நிலோபர், நண்பர்கள், பணியிடத் தோழர்கள், மற்றும் வெளிவட்டத்தினர்களுடன் கூடக் கொண்டிருந்த உறவுக ளில் மகிழ்ச்சியைக் கண்டார்.

இன்றைய காலங்களில் அவ நம்பிக்கை எம்மை சூழ்ந்துள்ளது. எனவே, வேலுவை நம் இதயத்தில் வரிப்பதன் மூலம் தோழமை, கருணை, உறுதி மற்றும் முக்கியமாக திறந்த மனதுடன் முன்னேறுவோம்.

வேலுவுக்கு எமது தோழமையும், அன்பும் மரியாதையும்.

ஓய்வெடுங்கள் வேலு!

**வேலு நினைவேந்தல் குழு - லண்டன்**
16.05.2026

## Introduction

# In memory of Comrade Velu

30. 7. 1967 - 28. 3. 2026

This memorial book weaves together over 50 articles, tributes, poems and memorials to our dear comrade Velu, who passed away suddenly on March 28, 2026 in London. Words feel hopelessly inadequate to describe somebody as full of life and vigour as Velu, and yet he was also someone deeply committed to writing and literature, so it felt fitting to put pen to paper and attempt to describe the many facets of what he meant to us.

Writing about someone after they have passed, and are no longer able to contribute, is a specific burden. Together we choose what to reveal and publicly bear witness to, and what we may keep as stories for ourselves - those intimate moments and conversations that conserve a little slice of him with us. This is purposefully not a biography or full account of his life. Maybe that is a project yet to come. What we intentionally decided as a collective, was to ask his family, comrades and friends to contribute how Velu touched their lives in ordinary and extraordinary ways. As we informally shared stories and memories since his passing, each of us discovered something new about Velu that we had not heard before, finding that he was someone who meant many things to many people. Velu was atypical and non-hierarchical in every way and also incredibly humble and modest. To truly honour Velu, we had to think beyond ourselves as individuals and instead think about him relationally, as someone who was deeply invested in all people whether they were 3 or 80 years old, whether they were committed to politics or not.

Yet, writing our memories about Velu is itself a political act. Whilst gathering our reflections, we are reminded of how impossible it is to separate the political from the personal, subverting the idea that there is one way to describe a life. He was a complex person with many dreams; facing innumerable challenges, living with a deep curiosity and a desire to grow as a person. As a deeply political and social being, it was his empathy for the people in his life who truly contributed to how he understood the world, and importantly how to change it. Writing our personal anecdotes and memories of Velu tell a specific political story - of someone who was deeply intertwined with those around him, who understood that a dogmatic politics could never be truly transformative. Often, the way we conceptualise power is that it is loud and brazen, an understanding which in turn shapes how we challenge it. These stories about Velu highlight the power of ev-

eryday, inconspicuous acts to gradually transform people and places, creating a wider ripple effect. We hope that as you read these tributes, you learn what it means to be a true political actor - not just someone who is able to recite Marx or Periyar, but one who lives and breathes the practice of being a human in this unjust but exceptional world. Velu showed us what it actually means to extend comradeship or love to a fellow human and how these connections can sow powerful revolutionary seeds.

Whether you knew Velu or not, you will discover how Velu dedicated his life to Marxist and anti- caste struggle, always carrying hope. Never defeatist, he found joy in his relationships with his wife Rajitha and daughter Nilofer, with his friends, with people he worked with or even strangers he passed by. It is not easy to remain uncynical in these times and so it is with Velu in our hearts and minds that we move forward - in solidarity, empathy, commitment and most importantly, openness.

**In solidarity, respect and love, Rest in Power Velu.**

**Velu Memorial Committee - London**
**16. 05. 2026**



# மனித நேயர் மரணிப்பதில்லை!

## - றஜிதா



அன்புள்ள வேலுவுக்கு,

உன்னைக் கரம் பிடித்து 22 வருடங்களின் பின்னர் உனது றஜி எழுதும் இறுதி மடல் இது. 22 வருடங்களுக்கு முன்னர் நான் எழுதிய மடல்களுக்கும் இன்று நான் எழுதும் இந்த மடலுக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. அன்று எழுதிய மடல்களில் நாம் இருவரும் சேர்ந்து வாழப் போகும் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு எழுதியிருந்தேன். ஆனால் இன்று உன்னோடு நான் வாழ்ந்த 22 வருட வாழ்க்கை எப்படி இருந்தது என்று எழுதுகிறேன்.

நீ எப்போதும் ஒரு சுதந்திரமான மனிதனாக வாழவே விரும்பினாய். ஆனாலும் உனது இந்த சுதந்திரம் மற்றவர்களை எந்த விதத்திலும் பாதித்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பாய். நீ விரும்பிய அரசியல், இலக்கியம், கவிதை களை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் சக மனிதர் களை இன, மத, சாதி பேதமின்றி மனிதர்களாக மதிக்கும் பண்பை எனக்கும் மகளுக்கும் கற்றுக் கொடுத்திருக்கிறாய். உனது இந்த அடிப்படை மனிதப் பண்பு தான் இன்று நீ எத்தகைய பின்புலமும் இல்லாமல் தனிமனிதனாக இந்தியாவி லிருந்து லண்டன் வந்து இனம், மொழி, மதம் கடந்து பல நூறு மனிதர்களின் அன்பைச் சம்பாதித்து வைத்து சான்றளித்திருக்கிறாய். நாங்கள் முதன் முதலில் தொலைபேசியில் உரையாடிய அன்றே நீ ஒரு சிறப்பான மனிதன் என எனக்குத் தோன்றியது.

நீ பெண்களை எப்படி மதித்தாய் என்பதற்கு சிறந்த சான்றாக, அன்று எமது பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியிலும், என்னை மேலும் படிக்க வைத்து இந்த நாட்டில் நான் தனித்து வாழக்கூடிய தைரியமான பெண்ணாக மாற்றியிருக் கிறாய் என்பதைக் கூறலாம்.

உறவினர்களின் பிள்ளைகளுக்கும், நண்பர்களின் பிள்ளைகளுக்கும் இன்னும் முகமறியாத பல மாணவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து முன்னே செல்ல

வேண்டிய பாதையைக் காட்டியிருந்தாய்.

வேலு! உன்னைக் கரம் பிடித்ததால் நான் என்றும் அதிர்ஷ்டசாலி என்பதை உணர்ந்தேன். ஒரு பெண்ணுக்குத் தன்னை முழுதாகப் புரிந்தவன் கிடைப்பது ஒரு வரம். என்வாழ்வில் அப்படியான வரம் தான் என் வேலு. எனக்கு மட்டுமல்ல எம் மகளுக்கும், எமது குடும்பங்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நீ ஒரு பொக்கிசம். இப்படியான ஒரு பொக்கிசத்தை என்னால் காப்பாற்ற முடிய வில்லை என்று நினைக்கும் போது என் மனம் ஆற மறுக்கிறது. வேலு... எல்லோரை யும் யோசித்த நீ உன் உடல் நலனுக்காக சில மணி நேரங்களாவது ஓய்வெடுத் திருக்கலாம் என்பதே இப்போது எனது வருத்தமாவுள்ளது.

திருமணத்திற்கு முன்னரான எமது தொலைபேசி உரையாடல்கள் எப்போதுமே ஒரு காதலர்களுக்கான உரையாடல்களாக இருந்ததில்லை வேலு. மணிக்க ணக்காக அரசியல், இலக்கியம் என பேசியவற்றில் பாதிக்குமேல் எனக்குப் புரியா விட்டாலும் நீ பேசும் விதமும் உன்னோடு பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையும் தான் நான் அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கத் தூண்டியது. அன்று சில நாவல்களின் பெயர்களைச் சொல்லி என்னை வாசிக்கச் சொல்லுவாய். நானும் லண்டன் வந்த பின்னர் உனது புத்தகத் தொகுப்பிலிருந்து பல நூல்களை வாசிக் கப் பழகியிருந்தேன். லண்டனில் நாம் வீடுகள் மாறும் போதெல்லாம் நாம் சிக்கல் படுவது எமது பாவனைப் பொருட்களை இடம் மாற்றுவதற்கு அல்ல..,உனது புத்தகங்களை இடம் மாற்றுவதற்கு மட்டும் தான். இதற்காக நான் உன்னை ஏசிக் கூட இருக்கிறேன். அந்தளவுக்கு நீ புத்தகங்களை நேசித்தாய் என்பதே உண்மை.

வேலு! நான் எனது மேற்படிப்பிலும், வேலையிலும் மூழ்கியிருந்த போதெல்லாம் எமது மகளுக்கு நான் தாயாக இருந்ததை விட நீதான் அதிகமாகத் தாயாக இருந்திருக்கிறாய். நீ விரும்பியது போலவே, அவளையும் நான் மனித நேயமுள்ள நல்ல பெண்ணாக வளர்ப்பேன். அப்பா கற்றுக் கொடுத்தவற்றை அவளும் மறக்க மாட்டாள் என நம்புகிறேன்.

வேலு, நீ என் பெற்றோருக்கு ஒரு மருமகனாக அல்ல மகனாக இருந்தாய். எனது சகோதரர்களுக்கு மச்சானாக மட்டுமல்ல, நல்ல அண்ணனாகவும் இருந்தாய். என் உறவுகளுக்கெல்லாம் நல்ல தோழனாய், வேலு அண்ணனாய் இருந்தாய். அவர்க ளுக்கெல்லாம் என்னை விட உன்னைத்தான் அதிகம் பிடிக்கும். உன் நண்பர் கள் வட்டாரம், நீ பழகிய உள்ளங்கள் என பல தேசங்களில் இருந்தும் பெருமை யோடு உன் வரலாற்றைப் பகிரும் போது உன் மனைவியாக நான் இன்று மிகவும் பெருமையடைகிறேன். ஒருவர் இல்லாத போதுதான் அவரது அருமை புரியும் என்பார்கள். நீ இல்லாமல் தனிமையில் நிற்கும் போதுதான் வேலு உன் அருமை எனக்கு அதிகமாகப் புரிகிறது. எமக்காகப் பல வருடங்கள் இரவு பகல் பாராது உழைத்துக் களைத்து விட்டாய். இன்னும் ஓரிரு வருடத்தில் உனது ஓய்வு காலம் வரும். அப்போது பல வருடங்கள் நாம் சேர்ந்து சந்தோசமாக நம் பொழுதைக் கழிக்க வேண்டும் என எண்ணியிருந்தேன். ஆனால் நீ இயற்கையோடு அவ சரமாக இணைந்து விட்டாய். துன்பமாயிருந்தாலும் சொல்கிறேன்: இளைப்பாறிக் கொள் வேலு. எனக்கும், மகளுக்கும் நீ அளித்த ஊக்கமும், தன்னம்பிக்கை தரும் வார்த்தைகளும் நீ சேர்த்த சொந்தங்களும், உன்னிடமிருந்து நாம் கற்ற நல்ல

பண்புகளும் எமது மிகுதிக் காலத்தை உறுதியுடன் வாழப் போதும் என நம்பு கிறேன். "மாண்புறு சிந்தை கொண்டு மக்களுக்காக மனித நேயத்துடன் மகத் தான சேவை செய்பவர்கள் என்றும் மரணிப்பதில்லை". வேலு, உனது உடல் உறுப்புகளைத் தானம் செய்ததன் மூலம் இன்றும் நீ எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாய். உனது கொள்கைகளை வார்த்தைக்காக அல்லா மல் உண்மையாக வாழ்ந்து காட்டிய மனிதன் நீ என்று பெருமையோடு கூறுகி றேன். இன்று நான் கலங்கி நிற்பதெல்லாம் இப்படி ஒரு நல்ல மனிதனுடன் இன் னும் சில வருடங்களாவது என்னால் வாழ முடியவில்லையே என்பது தான்.

வேலு! எனக்கு மறு பிறவி என்று ஒன்றிருந்தால் நீயே மீண்டும் கணவனாக வர வேண்டும் என வேண்டுகிறேன்.

நீ தந்து சென்ற இனிய நினைவுகளுடன் என் உயிருள்ள காலம் வரை
என்றும் உன்னுடன் வாழ்வேன்.

இவள்
உன் அன்பு றஜி

●



# From the nature we come and to the Earth we return - A tribute to my father

**-Nilofer**



There are very few people who take the initiative to hear out and debate the political opinions of a six year old. Appa was one of those people. His interest in what I had to say did not come from a place of having general conversation with his daughter, but his drive to understand all perspectives even if it was from the mind of a small child. For as long as I can remember, he made it a priority for me to understand the importance of recognising class struggle and oppression. His selflessness and the fact he felt things so deeply is what made him so different from everyone else. He took the social issues that he was passionate about extremely personally and felt the weight of the atrocities happening on his shoulders. One thing I value the most about the relationship I had with Appa is our ability to talk about everything. We disagreed on a multitude of topics but no matter how far we disagreed he was always willing to understand why our thought processes differed. The memories I cherish the most is how he took me to protests throughout my whole life, the first Palestine demonstration I went to by myself he playfully said to me "I have taught you too much." Now that I look back, it makes me realise all my morals and values were shaped by him. I was raised to not adjust and to be as opinionated as I wanted. That is all he ever expected from me, to be able to shape my own opinion.

Something that I will carry with me always is how much my father sacrificed for me, my whole upbringing and comfort is built on his sacrifice. As my mother worked during the day and Appa did the night 'shift' the majority of my childhood he raised me, how he looked at me, how he held my hand, how he smiled at me so radiantly he reminded me of the sun, it is forever etched into my mind. Throughout my whole life I always heard these 3 words: "Naan unnaku irrukan" whenever I heard those words I knew that anything that happened didn't matter because Appa always had my back. He took me everywhere and anywhere no matter how tired he was he spent every minute of the day with me. I only regret not being able to repay the comfort he provided me with my whole life. He gave up pieces of his own life to provide for mine and I never heard him complain once. This is the man I received the most unconditional love from and I knew no matter what he would be waiting for me with open arms.

Whilst other children were taken to the park my Appa took me to Karl Marx's gravesite. As I look back and laugh at how confused I was as a child, to Appa it was vital for me to know where many of his key beliefs came from. His beliefs for as long as I've known him have remained the same. For the 20 years I have known him, he has remained consistent to the cause throughout it all. He was one of the rare few who believed, deeply and unwaveringly, that achieving peace was not just an idea but a responsibility we all share, which he actively put into practice.

Even though he is no longer here with us, what he believed in has not faded, is still alive in the people he spoke to for even a short while. During my father's extradition case I truly began to understand what kind of person he was, not just politically, but as a father. He had spent so long trying to protect me from the truth and the harsh reality of the fact he may have had to go back.

Despite the burnout and anxiety he experienced, for all of us during this time, he was there for us the same way he had always been. It is no easy feat juggling fatherhood and experiencing the constant fear of going back to a place he had once escaped from, yet he managed to do it all with the same smile on his face. I cannot imagine what it was like trying to explain the suffering he went through to your own child but when he told me, despite how scared I was, a part of me felt that no matter what happened he always would be with me.


One of the causes myself and Appa are the most passionate about is the horrors happening to those in the Dalit community, especially Dalit women. As a man with a daughter I feel that he took this cause close to his heart, it was something he fought for and often discussed with me. When listening

to my account he would really try to gauge how I felt as a woman; he was a man who was a thoughtful listener, and that is something I will struggle to find in anyone.

Appa, I only wish for us to be able to have argued for longer. It is through our long discussions and debates that I was shaped into myself. Yet, even in his absence I will take comfort in the principles he left me with. There will of course be times where I will feel the weight of losing him, but I will always feel at peace knowing he touched the lives of many.

*"And what I really intended to say in the end remains unsaid."*
*- Franz Kafka*

●



# தடாவிலிருந்து நாடுகடத்தல் வரை: வேலுவின் போராட்டப் பாதை

## - நிர்மலா

வேலு! எமது இனிய தோழர், உற்ற நண்பர், எமக்கெல்லாம் இளைய சகோதரர்- திடீரென்று எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த துயர் நிறைந்த நிகழ்வு எம்மை யெல்லாம் அதிர்ச்சியிலாழ்த்திவிட்டது. எந்நேரமும் முகமலர்ந்த புன்சிரிப்புடன் எம் வீட்டுக்கு வருவார். எங்கும் எதிரொலிக்கும் அந்தக் குரலில் எழும் சிரிப்பு வேலுவின் பிரசன்னத்தைக் கட்டியம் கூறும்.

### அரசியல் தஞ்சம்

2002ஆம் ஆண்டு மே மாதம் வேலு இங்கிலாந்துக்கு வந்த இரண்டோ மூன்று தினங்க ளில் ராகவனை அவரது பணிமனையில் சென்று பார்த்துவிட்டு, பின் எமது வீட்டுக்கு வந்தார். அன்று ஆரம்பித்த உறவு, எம்மிடையே இருபத்து நான்கு வருடங்க ளாக நீடித்தது.

தமிழ்நாட்டிலிருந்து ஒரு தீவிர இடதுசாரி, பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கேட்பது இது தான் முதல் தடவையாயிருந்திருக்கும்.

வேலுவின் அகதித் தஞ்சக் கோரிக்கைக்கு, ராகவன் சட்ட ரீதியாகப் பொறுப்பெடுத்திருப்பினும், நான் அவருடைய வழக்குக்கான நீண்ட வாக்குமூலத்தை தயாரிக்க முன் வந்தேன். ஒரு சட்ட ஆலோசகராக, நான் பல வருடங்களாக உலகெங்கிலுமிருந்து வரும் அகதிகளின் விண்ணப்பங்களையும் வழக்குகளையும் தயாரித்திருக்கிறேன். ஆனால் தமிழ் நாட்டிலிருந்து ஒரு தீவிர இடதுசாரியின் தஞ்சக் கோரிக்கையைப் பரிசீலித்தது இதுவே முதல் தடவை. எனது இடதுசாரி



அரசியல் சார்பும் எனது ஆர்வத்தை தூண்டியது. வேலுவின் அரசியல் தஞ்ச விண்ணப் பத்தில், அவருடைய அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான அவருக்கான பிரத்தியேக ஆதாரங்கள் 500 பக்கங்களுக்கு மேல் இருந்தன. அவை ஒவ் வொன்றையும் கவனமாக ப் பரிசீலித்தும் அவரிடம் கலந்துரையாடியும் அவரு டைய விண்ணப்பத்தை தயார் செய்தது எனக்கும் ஒரு கற்றல் அனுபவம். தீவிர இடதுசாரிய களப் போராளியான வேலு, இந்திய பொலிஸாரின் வன் மத்துக்கும் துன்புறுத்தலுக்கும் பொய்க்குற்றச்சாட்டுக்கும் ஆளாகிச் சிறை சென்றவர்.

2002ஆம் ஆண்டு அரசியல் தஞ்சம் கோரிய வேலு, 2003ஆம் ஆண்டு அகதியாக பிரித் தானிய அரசினால் அங்கீகரிக்கப்பட்டார்.

எனவே, அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதென்றே நாமெல்லாம் எண்ணியி ருந்தோம். ஆனால், 2013 இல் இந்தியா அவரை நாடுகடத்த விண்ணப்பித்து அவர் லண்டனில் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அந்த நம்பிக்கை சிதைந்தது. அதற்கெதிராக மூன்று வருடங்களுக்கு மேல் வேலு போராடினார். வேலுவின் இரு வழக்குகளிலும் ஈடுபட்டவர் என்ற வகையிலும், அரசியல் ரீதியாகவும், நட்பு ரீதியா கவும் ஒன்றாக பயணித்தவர் என்ற வகையிலும் அவரது அரசியல், குடும்ப வாழ்க் கையை நான் அறிவேன்.

## குடும்பப் பின்னணி

வேலு, தமிழ் நாட்டின் வட மேற்குப் பகுதியில், ஆந்திரா எல்லையில் இருந்த தர்மபுரி மாவட்டத்தில், துரிஞ்சிப்பட்டி என்ற கிராமத்தில் இரு ஆண் பிள்ளைகள் கொண்ட தொரு குடும்பத்தில் மூத்தவராகப் பிறந்தார். அவருடைய தந்தை, தர்மபுரி மின் சார வாரியத்தில் தொழிலாளராக பணி புரிந்தார். தாயார் லஷ்மி, மிக இளவயதில் வேலுவின் தந்தை சண்முகத்தை தனது குடும்பத்தினரின் விருப்பத்துக்கெதிராக காதல் திருமணம் செய்து கொண்டார். வேலுக்கு 8 வயதான பொழுது அவரது தந்தை வேலைத்தல விபத்தொன்றில் இறந்து விட்டார். அது அரச நிறுவனமாயிருந்தும், அந்த விபத்தை மறைத்து அவர் மாரடைப்பினால் இறந்தார் என காரியத்தை முடித்துவிட்டார்கள். இவையெல்லாம் வேலுவை நிச்சயம் பாதித்தது. லஷ்மி இளம் வயதில் கணவனை இழந்தாலும், தன் குடும்பத்துக்கு தலைவியாக மாறி தனது இருபது வயதுகளிலேயே இரு சிறு பிள்ளைகளையும் தனியாக வளர்க்கும் பொறுப்பேற்றார். லஷ்மியின் குடும்பத்தினர் அவர் மேல் பரிவு காட்டவில்லை. வேலு துரிஞ்சிப்பட்டியில் தனது தந்தையின் உறவினரின் அரவணைப்பிலேயே வளர்ந்தார். அவரது தந்தை வழிப் பாட்டி, வேலுவையும் அவரது சகோதரனையும் மிகுந்த பாசத்துடன் தானே பராமரித்து வந்தார்.

பள்ளிப்படிப்பைத் தர்மபுரியிலேயே முடித்த வேலு, கல்லூரிப்படிப்புக்கு சென் னைக்கு வந்து, அவரது மாமா கோவிந்தராஜன் வீட்டில் தங்கி தனது படிப்பைத் தொடர் ந்தார். கல்லூரிப்படிப்பை ஆரம்பித்த சிறிது காலத்திலேயே தர்மபுரி மின்சார வாரியத்தில் மதிப்பீட்டாளராக அவருக்கு வேலை கிடைத்தது. தாயா ரின் பொரு ளாதார நிலை கருதியும் தம்பியின் படிப்பு கருதியும், அவர் படிப்பைப் பாதியில் நிறுத்தி, தர்மபுரிக்குத் திரும்பி, மின்சார வாரியத்தில் மதிப்பீட்டாள ராக பணி யேற்றார்.

## இடதுசாரி அரசியல் செயல்பாடு

தனது பதின்ம வயதுகளிலேயே இடதுசாரி அரசியலால் ஈர்க்கப்பட்டு செயற்படத் தொடங்கி விட்டார் வேலு. சென்னையில் படிக்கும் பொழுதே சராசரி பதின்ம வயது இளைஞனின் குறும்புத்தனங்களுடன் கூடிய தனது அரசியல் ஈடுபாட்டாலும் புரிதலாலும் மாமாவுடனும் அம்மாவுடனும் தனக்கு ஒரு அதிகப் பிரசங்கித்தன மும் இருந்தது என்று வேலு கூறுவார்.

பதின்ம வயதுகளிலேயே முற்போக்கு இளைஞர் அணியுடன் பணிபுரிய ஆரம்பித் ததும் அவர் தர்மபுரிக்கு மீண்டும் செல்ல இன்னுமொரு காரணமுமாக இருந்தி ருக்கலாம்.

வேலு முற்போக்கு இளைஞர் அணியில் (Radical Youth League - RYL) உறுப் பினராக இணைந்து, அவர்கள் நடாத்திய அரசியல் கூட்டங்கள் கலந்துரை யாடல் களில் பங்கு பற்றத் தொடங்கினார். முற்போக்கு இளைஞர் அணியானது மாண வர்கள், வேலையற்றோர், உழவுத் தொழிலாளர்கள், நிலமற்றோர் போன்றோரின் உரிமைப்பிரச்சனைகளிலும் வாழ்க்கைப் பிரச்சனைகளிலும் ஈடுபட்டு, அவர்க ளுக்கான எதிர்ப்புக்குரலை ஒழுங்கமைக்கும் அரசியல் பணிகளை செய்தது. வேலு இப்பணிகளில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டார். குறிப்பாக, தமது அமைப்பிலிருந்து கைது செய்யப்பட்ட தோழர்களுக்கான சட்ட ரீதியிலான உதவிகளையும் செய்யத்தொடங்கினார். இவர் ஒரு அரச ஊழியர் என்பது இத்த கைய வேலைகளுக்கு அனுசரணையாகவிருந்தது. வேலுவின் அர்ப்பணிப்பு மிகுந்த செயல்பாடு அவரை முற்போக்கு இளைஞர் அணியின் முக்கிய அங்கத்தவ ராக்கியது. அவருக்கு அப்பொழுது வயது பத்தொன்பது.

தர்மபுரி, தமிழ் நாட்டிலேயே அரசினால் புறக்கணிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி குன்றிய பிரதேசம். அதனால், தமிழ் நாட்டில் இடதுசாரி அரசியல் செழு மையாக வளர்ந்த முக்கிய இடமாக மாறியது. தமிழ் நாட்டு எல்லைக்கப்பால் ஆந்திராவில் 'மக்கள் யுத்தம்' (Peoples War) என்ற மார்க்சிச - லெனினிய கெரில்லா அமைப்பு தீவிரமாக இயங்கிக் கொண்டு இருந்தது. தர்மபுரியில் மக்கள் யுத்தம் அமைப்பு பெரிதாக செயல்படாமல் இருந்த போதும், மக்கள் யுத்தத்தின் வெளியரங்கமாக இயங்கும் வெகுஜன அமைப்பாக முற்போக்கு இளைஞர் அணி செயல்பட்டது. மக்கள் யுத்தத்தின் நடமாட்டங்களை கண்கா ணிக்கவும், முற்போக்கு இளைஞர் அணியின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வும் தர்மபுரியில் பாரிய காவல் துறை செயல்பாடுகளும் உளவு நடவடிக்கைகளும் மிகத் தீவிரப்படுத்தப்பட்டன. தமிழ் நாட்டின் முக்கிய உளவு நிறுவனமான கியூ ப்ராஞ்ச் நிரந்தரமாக தர்மபுரி போலீஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனியாக முகாமிட்டு அப்பிர தேசத்து மக்களை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தது.

வேலு முழுமையாக சட்ட ரீதியிலான போராட்டங்களில் ஈடுபட்டிருந்தாலும், காவல் துறையின் கண்காணிப்பு வலையில் இருந்து தப்பமுடியவில்லை. 1991 ஆரம்பத்தி லிருந்து நவம்பர் 1992 தடாவில் கைது செய்யப்படும் வரை பல தடவை கைது செய் யப்பட்டு குறுகிய காலங்களுக்கு தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளானார். பல தடவை, தர்மபுரி போலீஸ் உயர் அதிகாரிகளால் அழைக்கப்பட்டு மிரட்டப்பட்டிருக்கிறார். "உன்னை தடா கேஸ் போட்டு உள்ளுக்குள் தள்ளிவிடு

வோம்", "உன் உயிர் என்கவுன்டரில் போகப் போகிறது, கவனம்" என பல முறை மிரட்டப் பட்டார். ஒருமுறை, தர்மபுரியில் ஒரு விழாவுக்காக மக்கள் திரளாக கூடியிருந்தனர். அவர்களின் 'ஒழுங்கின்மை'யை கவனித்த போலீஸ் அதிகாரி, அவர்களை முறைகேடாக ஏசத்தொடங்கியிருக்கிறான். வேலு அவனிடம் போய் "இப்படியெல்லாம் மக்களிடம் தரக் குறைவாக நீங்கள் பேசக்கூடாது" என வாதிட்டுள்ளார், போலிஸ் அதிகாரியோ வேலுவுக்கு கொலை மிரட்டல் விடுத்திருக்கிறான். போலீஸ் கண்காணிப்பு, மிரட்டல், துன்புறுத்தல் வேலுவின் தினசரி வாழ்க்கையாகியது.


ஒருமுறை, 1991இல் நிகழ்ந்த முற்போக்கு இளைஞர் மாநாடு ஒன்றில் 600, பேரளவில் கலந்து கொண்டனர். மாநாட்டைச் சூழ்ந்து 300 பேரை கைது செய்து, வேலூர் சிறையில் அடைத்தது காவல்துறை. இவ்வேளை, வேலுவும் ரவீந்திரன் என்ற செயல்பாட்டாளரும் மாநாட்டின் முக்கிய பேச்சாளரான நாடறிந்த இடது சாரிக் கவிஞரும் போராளியுமான பேராசிரியர் வரவரராவை பாதுகாப்பாக மாநாட்டிலிருந்து அப்புறப்படுத்தினர். வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட 300 பேருக்கும் பிணை ஒழுங்கு செய்வது , வாக்குமூலங்கள் தயாரிப்பது,சட்ட ஆலோசகர்களை அமர்த்துவது போன்ற வேலைகளைச் சளைக்காமல் செய்தார் வேலு. இந்த மாநாட்டில் தான் செப்டெம்பர் 1991இல் வேலு முற்போக்கு இளைஞர் அணியின் தமிழ் நாட்டு இணைச் செயலராக தேர்வு செய்யப்பட்டார்.

அதன் பின், கியூ ப்ராஞ்சின் (தமிழ் நாட்டு உளவுப்பிரிவு) துன்புறுத்தல் அதிகரித்தது. அடிக்கடி விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் வேலு. விசாரணை என்ற பெயரில் காவல்துறையில் பல தடவை ஓரிரு நாட்கள் தடுத்து வைக்கப்பட்டார் வேலு. ஒரு முறை, கியூ பிராஞ்சினால் ஒரு வாரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அம்முறை அவருக்கு பலத்த அடிகள் துன்புறுத்தல்கள். அதற்கான காரணம், வேலு மின்சார வாரியத்தில் வேலை செய்த தற்காலிக ஊழியர்களின் உரிமைக்காக ஒரு போராட்டத்தை ஒழுங்கு செய்ததே.

வேலு நாடளாவிய ரீதியில் பிரபலமான மக்கள் கலைஞரான கத்தாரை முதன் முறையாகத் தமிழ் நாட்டுக்கு வரவழைத்து, அவரது புரட்சிப்பாடல்களை தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் ஒலிக்கச்செய்தார். தர்மபுரியில் மட்டும் கத்தாரின் மூன்று நிகழ்வுகளை வேலு ஒழுங்கு செய்தார். இதனால், காவல்துறையின் துன்புறுத்தல்களுக்கு ஆளானர்.

## தடாவின் கீழ் கைது - சிறை

வேலு, மக்கள் சிவில் உரிமைக்கழகத்துடன் (PUCL) மனித உரிமை ஆவணப்படுத்தலுக்கு உதவிசெய்தது காவல்துறைக்கு மிகுந்த சினத்தையூட்டியது. மக்கள் சிவில் உரிமைக்கழகம் தர்மபுரியின் மலைப்பகுதிகளிலுள்ள வாச்சாத்தி கிராமத்தில் நடைபெற்ற பாரிய போலீஸ் தாக்குதல்களையும் அதன் கொடுமைகளையும் ஆவணப்படுத்த உண்மை அறியும் குழுவொன்றை அமைத்து அறிக்கை ஒன்றை தயாரிக்க விளைந்தது. கிராமங்களில் பாதிக்கப் பட்டவர்களுடன் பேசி, உண்மை அறியும் குழுவைத் தொடர்பு ஏற்படுத்துவதில் வேலு கடின உழைப்பை நல்கினார். அத்துடன், 81- 82 காலப்பகுதிகளில் மக்கள் யுத்த உறுப்பினர்கள், ஆதரவாளர்களை போலீஸ் போலி என்கவுன்டர்களில் கொலைசெய்தது. இவர்களில் பாலன் என்பவரின் கொலை அரசியல் மேடையில் அவர் உரையாற்றிக்



கொண்டிருக்கும் பொழுது பகிரங்கமாக நிகழ்ந்தது அனைவரும் அறிந்தது. வேலு இந்த இரு சம்பவங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்கள் குடும் பங்களையும் அணுகி, அவர்களின் சம்மதத்தைப் பெற்று உண்மை அறியும் குழுவிற்கு அவர்களுடனான தொடர்புகளை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். இவ் வேலை இலகுவானதல்ல. ஆபத்து நிறைந்தது. இறுதியில், மக் கள் சிவில் உரிமைக்கழகம் வழக்குகளைத் தொடுத்து, பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நீதி பெற்றுக் கொடுத்தனர். வாச்சாத்தி வழக்கின் முடிவு, வேலு லண்டன் வந்தபின் 2011 இல் அறிவிக்கப்பட்டது. பல போலீஸார் சிறைத் தண்டனை பெற் றனர்.

வேலுவையும் முற்போக்கு இளைஞர் அணியையும் முடக்கி , மௌனிக்கும் நோக் குடன் தர்மபுரி காவல் துறை வேலுவை 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தடா சட் டத்தின் கீழ் அவருடைய வீட்டில் வைத்துக் கைது செய்தனர்.

வேலுவின் கைதுக்கு ஒரு வருடத்துக்கு முன்பு ஜெயலலிதா முதலமைச்சராக பதவியேற்றிருந்தார். அவர் பதவியேற்றவுடன் தமிழ்நாடு ஒரு போலீஸ் அரசாக மாறியது என விளிப்பர். காவல் துறை, உளவு அமைப்புகளின் கை ஓங்கி, மக்க ளின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டன. இத்தகைய சூழலில் தான் வேலு வின் கைது நட ந்தது.

வேலுவுக்கு எதிரான தடா வழக்கு முற்றிலும் புனையப்பட்ட ஒரு வழக்கு. மிகத் தொலைவிலுள்ள அதிக பாவனையிலில்லாத ரயில்வே பாலம் ஒன்று நாட்டுக் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாகவும் அதில் வேலுவுக்கு தொடர்பு இருப்பதா கவும்தான் அந்த குற்றச்சாட்டின் சாரம். பாலம் வெடிக்கப்பட்டதற்கு ஒரு மாதத் துக்கு பின், அதுவும் வேறு சிலர் கைது செய்யப்பட்ட பின் தான் வேலு கைதா கினார். கைதாகும்போது வீட்டிலிருந்தார். கைதாகும் பொழுது, அவர் சட்டைப்

பாக்கட்டில் டைனமைட் டெட்டனேட்டர் இருந்ததென்ற காவல் துறையின் அபத்த மான குற்றச்சாட்டு புனையப்பட்டது.


வேலுவை விசாரிக்கும் பொழுது, குண்டு வெடிப்பைப் பற்றி உளவுத்துறை தன்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றார் வேலு. மாறாக, மக்கள் யுத்தம், அதில் ஈடுபடும் நபர்கள் பற்றியே விசாரித்துக்கொண்டு இருந்தனராம். ஆரம்பத்தில் தர்மபுரியிலும், பின்பு சேலம் சிறையிலும், பின்பு சென்னை மத்திய சிறையிலும் வேலு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சேலத்தில் ஆறு மாதம் தனிமைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

வேலுவின் அம்மா லஷ்மி, வேலு சிறையிருந்த நான்கு வருடங்களில் அலையாத அலைச்சல் கிடையாது என வேலு அடிக்கடி கூறுவார். ஒருமுறை அவர் சேலத்துக்கு சென்று வேலுவைப் பார்த்து வருகையில் யாரோ ஒருவன் ரயிலில் இருந்து அவரை வெளியே தள்ளி விட்டான். அவர் ரயிலுக்கும் தண்டவாளத்துக்குமிடையில் விழுந்து அவரது உடலின் ஒரு பக்கத் தசையெல்லாம் பிய்ந்து கிழிந்து விட்டது. மூன்று மாதம் மருத்துவ மனையில் சிகிச்சை. இருந்தும் அவர் வேலுவின் சிறைக்கும் அவரது சட்டத்தரணி சங்கரசுப்புவின் அலுவலகத்துக்கும் தடா கோர்ட்டுக்கும் மேல் நீதிமன்றுக்கும் மாறி மாறி அலைந்தார். அவருக்கு உறுதுணையாக வேலுவின் மாமாவும் அலைந்து திரிந்திருக்கிறார். ஆரம்பத்தில் காவல் துறை லக்கியம்பட்டியில் அவர்கள் வீட்டை நோட்டம் விடுவதற்காக வந்து, மிகுந்த தொல்லை கொடுத்திருக்கிறார்கள். லண்டனில் நான் லஷ்மியை வேலு வீட்டில் சந்தித்த பொழுது வேலுவின் திண்ணிய சுபாவத்தின் அத்திவாரம் எங்கிருந்து வந்தது என்பதை அவரது மலர்ந்த முகமும், ஆணித்தரமான பேச்சும் தெளிவாக க்காட்டியது.

## சிறைவாழ்வுப் போராட்டம்

சென்னையில் வேலுவுடன் 50-60 தடா கைதிகள் இருந்திருக்கின்றனர். அங்கு வேலு, 4 வருடங்கள் தடுப்புக்காவலில் இருந்தார். பல தடவை ஆட்கொணர்வு மனு சமர்ப்பித்தும் பிணையில் விடுமாறு கோரிக்கைகள் முன்வைத்தும் பலனில்லை. அரசதரப்பு, நீதிமன்றின் நடவடிக்கைகளை தாமதம் செய்வதிலேயே முனைப்பாக நின்றது.

சிறையில் நிலைமைகள் மோசமாக இருந்தன. வேலு தனக்கு இயல்பாகவே உள்ள தோழமை உணர்வினால் அனைவரையும் ஈர்த்து, மோசமான சிறை நிலைமைகளுக்கெதிராக குரல் கொடுக்க சக சிறைக்கைதிகளை அணிதிரட்டினார். மோசமான உணவு, மருத்துவ வசதியின்மை, ஆள் நெருக்கடி, ஆகி யவை சிறையில் வழமையாகியிருந்தன. சிறைக் காவலாளிகளும் நிர்வாகமும் கைதிகள் மேல் வன்முறை பிரயோகிப்பதை இயல்பாக்கம் செய்திருந்தனர். ஒருமுறை வேலு சிறையின் தாழ்வாரத்தினூடாக நடந்து செல்கையில், 15 சிறைய திகாரிகள் அவர் மேல் பாய்ந்து தடிகளாலும் பொல்லுகளாலும் சரமாரியாக அடித்திருக்கின்றனர். அவரது கண்ணாடியையும் உடைத்தெறிந்திருக்கின்றனர். கைதிகளிடம் அவர்கள் உரிமைகள் பற்றி வேலு பேசியதற்கான பரிசு தான் இது. இவற்றுக்கெதிராக வேலுவும் சக கைதிகளும் ஆர்ப்பாட்டங்களை செய்து உண்ணாவிரதம் இருந்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர். ராஜீவ் காந்தியின் கொலைக்கு பின்பு, பல இலங்கைத் தமிழ் இளைஞர்களும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பானவர்கள்




என்ற காரணத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் பரஸ்பரம் மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் தன்னுடன் நடந்ததாக வேலு தெரிவித்தார். “மிக நல்லவர்கள். அர்ப்பணிப்பும் உறுதியும் படைத்த இளைஞர்கள்தான், ஆனால் சமூக விடுதலை பற்றியோ தமது போராட்டத்தைப் பற்றியோ ஒரு ஆழமான விளக்கமோ அரசியல் தெளிவோ உள்ளவர்களாகத் தெரியவில்லை” என வேலு எனக்குச் சொல்லியிருக்கிறார். அத்துடன், விடுதலைப் புலிகள் பாணியில் தமிழ் நாட்டில் செயல்பட விரும்பிய சில தமிழ் நாட்டு இளைஞர்களும் இருந்துள்ளார்கள். அவர்கள் விஷயம் தெரியாத அப்பாவிகள் எனக் கூறுவார்.

ஒரு முறை, சென்னைச் சிறையிலிரு ந்து சில தடா கைதிகள் தப்பியோடி விட்டனர். அவர்கள் விடுதலைப் புலிகளைச் சார்ந்தவர்கள் என்று வேலு சொன்னது எனக்கு நினைவு. அதன் பிறகு சிறையதிகாரிகள் கூட்டமாக வ ந்து, மீதிக் கைதிகளை சரமாரியாக அடித்து, உதைத்து, சித்திரவதை செய்தார்கள். பலர் உயிராபத்தால் மருத்துவமனைக்கு அனுப்பப்பட வேண்டிய நிலை. இ ந்தத் தாக்குதல்களும் அதற்கு எதிர்வினையாக எழுந்த சிறைக்கைதிகளின் போராட்டமும் வெளியே கசிந்து , ஊடகங்கள் சிறையின் சீர்கேட்டை வெளிக்கொணர்ந்தன. இதனால், அரசு, நீதிபதி ராதாகிருஷ்ணனை நிலைமையை பரிசீலித்து, ஒரு அறிக்கை தயார் செய்வதற்கு நியமித்தது. அந்த அறிக்கை, அக்கால கட்டத்தில் இந்திய சிறை நிர்வாகம் பற்றிய ஒரு முக்கிய அறிக்கை. ஊடகங்களிலும் இது வெளி வந்தது. இவ்வறிக்கையில் வேலுவும் ஒரு முக்கிய சாட்சி. பின்பு, அவரது அரசியல் தஞ்ச விண்ணப்பத்துக்கும் நாடுகடத்தும் வழக்குக்கும் இந்த அறிக்கையும் ஒரு முக்கிய ஆதாரமாகவிருந்தது.

## நீதித்துறையின் சீர்கேடும் காவல் துறையின் புனைவுகளும்

*வேலுவின் வழக்கு, இந்திய நீதித் துறையில் தடா மற்றும் பயங்கரவாதத் தடை வழக்குகள் நடாத்தப்படும் முறை எவ்வகையான கேலிக்கூத்து என்பதற்கு தெளி வானதொரு உதாரணமாக இருந்தது. தடா நீதிபதிகளை நியமிப்பதில் நீதித் துறையை விட அரச தரப்பின் கைதான் ஓங்கியிருக்கும். காவல் துறையால் புனை யப்பட்ட ஆதாரங்கள் எல்லாம், வேலுவின் சட்டத்தரப்பின் வாதத்தினால் தகர்க்கப்பட்டது. வெடிகுண்டு தயாரித்து, தண்டவாளத்தைத் தகர்க்கப் பாவித்ததாக சமர்ப்பிக்கப்பட்ட காவல் துறையின் தடயங்கள், வேலு தரப்பு தடயவியல் நிபுணர்களால் தவறான திரிப்பு என நிரூபிக்கப்பட்டது.*

*வேலுவுடன் தொடர்பிலிருந்த சில தர்மபுரி இளைஞர்களைக் கைது செய்து சித்திர வதையின் மூலம் அரச தரப்புச் சாட்சிகளாக மாற்றினர் காவல் துறையினர். நீண்ட சித்திரவதையின் பின், அரச தரப்பு சாட்சியாக மாறிய ஒருவர் (அவர் வேலுவுடன் பரிச்சயமானவர் அல்ல) மாத்திரம் ஒரு சில வருட சிறைத் தண்ட னையை ஏற்ற பின் வெளியே வந்தார். வேலுவுடன் நட்பிலிருந்த வேறு சிலர் சித்திரவதையின் காரணமாக அரச சாட்சிகளாக மாறினர். ஆனால் அவர்களின் கதைகளும் முற்றாகப் புனையப்பட்டன. அவர்களும் பின்னர் அரசதரப்புடன் ஒத்துழைக்க மறுத்து விட்டனர். அரசதரப்பிடம் வழக்காட தகுந்த சான்றுகள் ஏதும் இருக்கவில்லை. பல ஆட்கொணர்வு மனுக்களையும் பிணை விண்ணப் பங்களையும் வேலுவின் தாயார் உயர் நீதி மன்றத்துக்கு கொணர்ந்தபோதும், ஒன்றும் நடக்கவில்லை. அரசதரப்பிடம் ஆதாரமேதும் இல்லாதால், வழக்கை தள்ளுபடி செய்யுமாறு வேலுவின் வழக்கறிஞர் கோரியும் வழக்கை அரச தரப்பு வேண்டுமென்றே நீடித்துக் கொண்டு போனது. 1996ஆம் ஆண்டிலேயே வேலுவின் விசாரணை தடா நீதிமன்றில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, இருபக்க வாதங்களும் நீதிபதி முன், வைக்கப்பட்டு வழக்கு முடிந்துவிட்டது. தீர்ப்பு வழங்குவது மட்டுமே மீதமிருந்தது. ஆனால், தொடர்ந்து வேலுவைத் துன்புறுத்துவதற்கு அரசு தரப்பினர் ஒரு உத்தியைக் கையாண்டார்கள். வேலுவின் வழக்கு நடாத்தப்படும் பொழுது 13 நீதிபதிகள் மாற்றப்பட்டு, முடிந்த வழக்கை மீள் விசாரணை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர். தடா நீதிபதிகள் உண்மையில் நீதித் துறையால் அல்ல, அரச தரப்பி னாலேயே நியமனம் பெறுகிறார்கள். இந்த ஒழுங்கீனமற்ற நடைமுறையால் நீதிபதிகள் - நீதிமன்ற விதிகள், நடைமுறைகள் சார்ந்து அரசதரப்பை இலகுவில் எதிர்க்க மாட்டார்கள். யாராவது ஒரு நீதிபதி வேலுவுக்கு பிணை கொடுக்க அல்லது வழக்கை தள்ளுபடி செய்ய தயாராகிறார் என தெரிந்தவுடன் அந்த நீதிபதி இடமாற்றம் செய்யப்படுவார். இதனால் வேலுவின் வழக்கு 13 நீதிபதிகள் முன் மீண்டும் மீண்டும் வாதாடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.*

## பிணையும் போராட்டமும்

*இறுதியில், வேலு 1996இல் பிணையில் சிறையிலிருந்து வெளியே வந்து சென்னை யில் தனது தோழர்களோடு இருந்தார் . ஆனால் காவல் துறையில் கையெழுத்து இட உத்தரவு இடப்பட்டது. வேலு, அரசியல் செயற்பாட்டு வாழ்க்கையை மிகவும் நேசித்தவர். எனவே, பிணையில் இருக்கும் போதும் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்க மைத்தல், சுவரொட்டி ஒட்டுதல், கூட்டங்களுக்கு செல்லுதல், கைதாகும் தோழர்*

களுக்கு சட்ட உதவிகள் செய்தல் என அவரது அரசியல் பணி தொடர்ந்தது.

முற்போக்கு இளைஞர் அணியுடன் இணைந்து செயல்படும் தமிழ் நாடு பெண்கள் உரிமைக் கழகம் தமிழ் நாடு சட்டசபை முன் நிகழ்த்திய ஆர்ப்பாட்டம், டன்லப் கம்பனி தொழிலாளர் போராட்டம், திரைப்பட ஊழியர் போராட்டம் அனைத்திலும் வேலுவின் ஆளுமையான பங்களிப்பு தொடர்ந்தது.

வேலு சட்ட விரோதமாக எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாவிடினும், காவல் துறை அவரை இழுத்துச் சென்று விசாரணை செய்வார்கள். பிணையில் வெளியே வந்த திலிருந்து லண்டன் வரும் வரை 15 தடவைகள் வேலு காவல் துறையாலும் உள வுத்துறையாலும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்காளாகினார். ஒரு தடவை ஒரு வாரமாக பலத்த தாக்குதலுக்கு உள்ளாகி, பிணை விதிகளுக்கு விரோத மாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். 1996 இலிருந்து 2002 வரை அவர் பிணையி லிருந்த காலப்பகுதிகளில் குறைந்தபட்சம் 15 தடவையாவது சட்ட விரோதமாக வேலு தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தலுக்காளாகியிருந்தார்.

வேலுவின் வழக்கு 1992 இல் ஆரம்பித்து, அவர் லண்டனுக்கு 2002ஆம் ஆண்டு தப்பி வரும் வரை தொடர்ந்து நட ந்து கொண்டேயிருந்தது. நூற்றுக்கணக்கான விசாரணைகளுக்கு வேலு தடா நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பார். காவல் துறையினதும் உளவுத்துறையினதும் துன்புறுத்தல் இக்காலகட்டத்தில் தொடர் கதை. இச்சமயம், வேலுவின் தோழரான ரவீந்திரன் கியூ பிராஞ்சின் ஒரு போலி என்கவுன்டரில் கொலை செய்யப்பட்டார். ஒருபுறம், வேலுவுக்கு மிகுந்த அதிர்ச்சியும் துயரமும். அடுத்து வேலுவுக்கும் இது ஒரு எச்சரிக்கைச் சமிக்ஞை.

ரவீ ந்திரனின் என்கவுன்டர் கொலை சார்ந்து பல தடவை வேலு தற்காலிகமாக தடுத்துவைக்கப்பட்டு, மோசமாக சித்திரவதை செய்யப்பட்டார். ரவீந்திரனின் கொலைக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்தது, அவரின் மனைவிக்கு இறப்பு பத்திரம் பெற உதவி செய்தது, ரவீந்திரனுடன் இருந்து தப்பியோடியவர்களின் விபரங்கள் கேட்டும்15 நாள் வரை வேலு தடுப்புகாவலில் சித்திரவதை அனுபவித்தார். இந்தத் தடுப்புகாவல்கள் அனைத்தும் சட்ட விரோதமானவை. காரணம், அவர்



பிணையில் இருந்தார்.

இதன் பின், வேலு வாழ்க்கையில் தான் ஒரு முட்டுச் சந்துக்குள் அகப்பட்டுக் கொண்டதாக உணர்ந்தார். எந்நேரமும் ரவீந்திரன் போல என்கவுன்டரில் கொலை செய்யப்படக்கூடிய சாத்தியமிருந்தது. அப்படியெனில் முழுமையாக தலைமறைவு வாழ்க்கைக்கு செல்ல வேண்டும். வேலு, பரந்த மக்கள் அமைப்பில் தீவிரமாக செயற்பட்டு கொண்டிருந்தமையால் தலைமறைவு வாழ்க்கை அவருக்கும் ஆபத்து, மற்றையோருக்கும்ஆபத்து. அவருடைய 1992 கைது, அவருடைய வழக்கு மற்றும் சிறையில் நட ந்த தாக்குதல் பற்றிய அறிக்கை - இவற்றை எல் லாம் பத்திரிகைகளும் எழுதியிருந்தன. எனவே தலைமறைவு வாழ்க்கை சாத்திய மற்றதாயிற்று. இந்தியாவை விட்டு வெளியேறுவதே ஒரே வழி. எனவே, அவர் பிரித்தானியாவுக்கு வந்து சேர்ந்தார்.

லண்டனில் வேலு இலங்கைத்தமிழ் அகதிகள் சமூகத்துடன் மிக விரைவில் ஒன் றித்து விட்டார். அரசியல் கலை இலக்கியத்தில் முற்போக்கு விழுமியங்களை வரித்துக் கொண்டு மாற்றுக் கருத்தாளர்களாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட இக்குறிப்பிட்ட தமிழ் சமூகம் தான் வேலுவின் தீவிர இடதுசாரி அரசியல் பார்வையையும் செயற்பாட்டையும் அரவணைக்கக் கூடியவர்களாக இருந்தனர் எனவும் கொள்ளலாம்.

**புலம்பெயர் வாழ்வு**

நான் நீண்ட காலமாக ஈடுபட்டு வ ந்த தென்னாசிய தோழமைக் கழக (South Asia Solidarity Group) அரசியல் நடவடிக்கைகள் பலவற்றில் வேலுவும் அகதி அந்தஸ்து கிடைத்தவுடன் ஈடுபடத் தொடங்கினார்.

வேலு தனது அரசியல் பார்வை, கொள்கைகளில் உறுதியாகவிருப்பார். ஆனால் பழகும் பொழுது அவரது மென்மையானதொரு பக்கத்தையே நாம் காணலாம். மிகுந்த ஜனநாயகப் பண்பும் அரவணைப்பும் கொண்ட மனிதர் அவர். யாருக்குமே அவரைப் பிடிக்காமல் விடாது. ஒரு பெண் என்ற வகையில் பல காலமாக முற் போக்கு வட்டங்களில் கூட ஆணாதிக்க மனோபாவமும், தன்முனைப்பும் அதிகமா கவே உள்ள தோழர்களுடன் பழக நேரிடுகின்றது. ஆனால், வேலு அதற்கு விதி விலக்கு. இது என்னுடைய அனுபவம் மாத்திரமல்ல, வேறும் பெண்களினதும் அபிப் பிராயமும்தான். பெண்கள் எழுதுவது, அரசியலில் ஈடுபடுவதையெல்லாம் ஊக்கம ளிப்பார்.

2004 ம் ஆண்டு றஜிதாவை மணமுடித்து 2006 அவர்களின் ஒரே குழந்தையான நிலோபர் பிறந்தாள். பிரித்தானியாவில் அகதியாக வருவோருக்கிருக்கக் கூடிய சமூக பொருளாதார பிரச்சினைகள் அனைத்தையும் வேலுவும் எதிர்நோக்கினார். வேலைத்தலத்தில் இனவாதம், நிறவடிப்படையிலான பாகுபாடு, தொழிலாளர் என்ற வகையில் வர்க்க ஒடுக்குமுறை ஆகியன அனைவருக்கும் பொதுவான வைதான். ஐந்து வருடம் அகதி அந்தஸ்தில் இருந்த வேலு, 2008 ம் ஆண்டு பிரித்தானிய பிரஜை ஆனார்.

றஜிதா பகல் வேலை செய்த காரணத்தால், வேலு இரவு வேலை செய்து கொண்டு பகலில் மகள் நிலோபரை பராமரித்தார். அவருக்கும் நிலோபருக்குமிடையே தந்தை-மகள் என்பதற்கு அப்பாலே ஒரு பிரத்தியேக நட்புப் பிணைப்பு இருந்தது

என்பது எம்மெல்லாருக்கும் தெரிந்தது தான்.

## நாடு கடத்தல் வழக்கு

நிலோபருக்கு ஏழு வயதாயிருக்கும் போது, வேலு குடும்பத்துக்கு பேரிடி ஒன்று காத்திருந்தது.

வேலு மார்ச் 2013இல் போலீசாரால் கைது செய்யப்பட்டார் என செய்தி தெரிந்த வுடன், ராகவன் வேலு வீட்டுக்குச் சென்று கைது பற்றிய விவரங்களை அறிந்தார். பின்னர் போலீஸாருடன் பேசிய போது பிரித்தானிய அரசு, அவரை இந்திய அரசின் கோரிக்கையின் அடிப்படையில் இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்காக கைது செய்ததென்றும் அதற்கான வழக்கு நீதிமன்றில் நிகழுமெனவும், பிணை எடுக்க விண்ணப்பிக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அன்றிரவே, பிரபல மனித உரிமைகள் வழக்கறிஞர்களான பைன்ட்மன்ட்ஸ் சொலிசிட்டர்ஸ் (Bindmans Solicitors)ஐ வேலுவின் சட்டத்தரணிகளாக அமர்த்தி வேலுவை பிணையில் உடனடியாகவே விடுவிப்பதற்கான தயாரிப்புகளை ராகவன் முன்னெடுத்தார். நானும் நண்பர் குகதாசனும் அடுத்த நாளே பிணைக்கு உத்தரவாதிகளாக நிற்க நீதிமன்றம் சென்றிருந்தோம். குகதாசனுடன் வேலு பிரித்தானியாவுக்கு வர முன்னரே, நீண்ட கால இடதுசாரி அரசியல் தொடர்புகள் இருந்தன. மற்றும் சில இலங்கையைச் சேர்ந்த நண்பர்களும் அரசியல் ஆதரவு காட்டுமுகமாக நீதி மன்றம் வந்தனர். நான் இயங்கும் அமைப்பான, தென்னாசிய தோழமைக் கழக முன்னணிச் செயற்பாட்டாளர் அம்ரித் வில்சனும் பிணை உத்தரவாதிகளில் ஒருவராக சமூகமளித்தார். தென்னாசிய தோழமைக்கழக தோழர்கள், வேலு வுக்கு ஆதரவாக ஒரு பிரச்சாரத்தை உடனடியாக ஆரம்பிக்க விரும்பினர். ஆனால் வேலுவின் சட்டத்தரணிகள் அதை விரும்பவில்லை.

வேலு பிணையில் விடுவிக்கப்பட்ட காலப்பகுதியில், பிரித்தானியாவில் பிணையில் விடுவோரை 'எலெக்ற்றோனிக் தகடு'காலில் பூட்டும் நடைமுறை பரவலாக அமல் படுத்தப்பட்டிருந்தது. வேலுவுக்கும் அவ்வாறே. இதனால், வேலுவின் இணையர் றஜிதா, நண்பர்களாகிய நாம் எல்லோருமே கொஞ்சம் ஆடிப்போனோம். நிலோ பருக்கு அதைத் தெரியாமல் வைத்திருப்பது மிகுந்த கடினமான விடயம் என்று வேலு மிகுந்த துக்கத்துடன் எனக்குக் கூறினார்.

இதன் பின், 2013 இலிருந்து 2016 வரை இ ந்த வழக்கினால் தனது குடும்பத்தை நிரந்தரமாகப் பிரிய நேரும், தன் குடும்பத்தின் எதிர்காலம் என்ன, தனது உயி ருக்கு ஆபத்து நேரக்கூடும் போன்ற பாரிய மனப்போராட்டங்களைச் சுமந்து கொண்டு, அதேவேளை மிகுந்த கடின உழைப்புடனும், மனத்திடத்துடனும் வேலு தனது வழக்கின் வெற்றிக்காக போராடினார். அரசியல் தஞ்ச விண்ணப் பத்துக்கு நான் உதவி செய்தது போல், மீண்டும் நாடு கடத்தல் வழக்குத் தயார்ப டுத்தலையும் ஒரு நீண்ட பயணம் போன்று வேலுவும் நானும் ஆரம்பித்தோம்.

வேலுவின் நாடுகடத்தல் வழக்கில் 1500 பக்கங்களைக் கொண்ட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு, அவற்றை ஒவ்வொன்றாக வாசித்து எமது சட்டத்தரணிகளுக்கு அவற்றை விளக்க வேண்டியிருந்தது. வேலுவின் மாமா எல்லா ஆவணங்களை யும் தேடித் திரிந்து அனுப்பிக் கொண்டேயிருந்தார். சட்டத்தரணிகள் தேர்ந்தவர்க ளாகவிருந்தாலும், இந்திய இடதுசாரி அரசியல் பற்றி எதுவுமே அறியாதவர்க

ளாயும் 'தடா வழக்குகளில் இந்திய நீதித் துறை எவ்வளவு மோசமாக அரசியல் மயமாகியிருப்பதையும், எந்த அளவுக்கு தனிமனித சுதந்திரங்கள், உரிமைகள் தடா நீதி மன்றங்களில் மீறப்படுகின்றன என்பது பற்றியும் ஆழமான புரிதல் இல்லா தவர்களாயுமிருந்தனர். இதனால் வேலுவுக்கு எனது ஒத்தாசை மிக அவசியமா கியது. 1996 ம் ஆண்டிலேயே தடா வழக்கு விசாரணையெல்லாம் முடி ந்த பின் தீர்ப்பை வழங்காமல் 2002 ம் ஆண்டு வரை நீதிபதிகளை மாற்றி மாற்றி இழுத்தடித்த இந்திய அரசு, நாடுகடத்தல் வழக்கில் மிகுந்த வன்மத்துடனும் பழிவாங்கும் நோக்குடனும் வாதாடியது. வேலு, நியாயமான சட்ட நடவடிக்கையில் இருந்து தப்பியோடியவர், அவரை மீண்டும் நீதிமன்றில் நிறுத்தி விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும், தண்டனை கொடுக்க வேண்டும் என இந்திய அரசு வற்பு றுத்தியது.

வேலுவை நாடுகடத்தும் வழக்கு நான்கு தனித்தனி வழக்குகளாக பிரிக்கப்பட் டது. முதலாவதாக, பிரித்தானிய சட்டத்தில் இந்தியா வேலுவை நாடு கடத்தும் சட்ட நியாயப்பாடு, பிரித்தானிய நாடு கடத்தும் சட்டத்து டன் பொருத்தப்பாடா என்பது. இரண்டாவதாக, வேலு ஐக்கிய நாடுகளின் அக திகள் சாசனத்தின் அடிப்படையிலும் பிரித்தானிய அரசியல் தஞ்ச சட்டங்களின் அடிப்படையிலும் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர். அகதி வழக்கில் பரிசீலிக் கப்பட்ட ஆதாரங்க ளின் அடிப்படை தான் நாடு கடத்தும் வழக்கினதும் முற்று முழுமையான சாராம்சம் ஆகும். ரயில்வே பாலக் குண்டுவெடிப்பு விடயம்தான் நாடுகடத்தும் வழக்கிலும் ஆராயப்பட்டது.

அகதி அ ந்தஸ்து பெற்றவர், மீண்டும் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படக்கூடாது என்பது பிரித்தானிய சட்டம் மாத்திரமல்ல, சர்வதேச சட்டம். ஆனால் 22 வருட ங் களுக்குப் பின் இந்த வழக்கு ஒரு பிரித்தானிய நீதிமன்றில் மீளாய்வு செய்யப்பட் டது. மூன்றாவது வழக்கு வேலுவினதும், றஜிதா, நிலோபரினதும் குடும்ப வாழ்க்கை - தனிமனித வாழ்க்கையை நாடு கடத்தல் எவ்வகையில் பாதிக்கும் என்பது. நான்காவது, இந்த கேள்விகள் எல்லாவற்றையும் மீளப் பரிசீலிக்கும் ஒரு வழக்கு.

வேலு, முதல் இரு வழக்குகளிலும் தோற்றுவிட்டார். அரசியல் தஞ்சம் கொடுக்கப் பட்ட பின் ஐந்து வருடங்களின் பின், பிரித்தானிய பிரஜையாக மாறிய கார ணத் தால் அவர் இனியும் அகதி அல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்தது எமக்கெல்லாம் பெரும் அதிர்ச்சி. அக்கட்டத்தில் வேலு வெல்வார் என நாம் எல்லோரும் நம்பியிருந்தோம். வேலு பிரித்தானிய பிரஜையாகாமல் தொடர்ந்து அகதி அந்தஸ்திலேயே இருந்திருந்தால், நாடு கடத்தும் கேள்வியே எழுந்திராது, அகதி அந்தஸ்தின் முழுமையான பாதுகாப்பும் அவருக்கிருந்திருக்கும். பிரித்தானிய பிரஜையாக வந்ததால் அந்தப் பாதுகாப்பு இல்லாமல் போனது. அகதி அந்தஸ்து வழங்கப்படுபவரொருவருக்கு அவரின் பாதுகாப்பை செழுமையடையச் செய்யின் அவரை பிரஜையாக்குமாறு அகதி அந்தஸ்து வழங்கும் நாடுகளுக்கு அகதிகள் சாசனம் அறிவுறுத்துகிறது. இந்திய தடா நீதிமன்றங்களில் அபத்தமான, முரணான தீர்ப்புகள் வழங்கப்படுவது போல் தான் பிரித்தானிய நீதிமன்றுகளிலும் மோசமான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என உணர்ந்தோம்.

2014 இலும் 2015 இலும் வழக்குகள் தொடர்ந்தன. நாம் 2016 இல் இறுதி வழக்குக்

குத் தயாரானோம். மூன்றாவது வழக்கையும் நான்காவதுடன் சேர்த்து நடத்துவ தாக நீதி மன்றம் தெரிவித்தது. வேலுவின் நாடு கடத்தும் வழக்கு நீண்ட காலத் துக்கு தாமதமாகிக் கொண்டே போகின்றது என்று நீதிமன்றுக்கும் சட்டத்தர ணிகளுக்கும் அதிருப்தியிருந்தது. கடைசி வழக்குக்கு தயார் செய்யும் வேளை யில் வேலுவுக்கும் எனக்கும் எமது சட்டத்தரணிகள் வழக்கை கொண்டு செல்லும் அணுகு முறையில் அதிருப்தி. ஒரு வகையில் அரச தரப்பு பாரிஸ்டர் கொணர்ந்த ஒரு சமரச பரிந்துரையை எமக்கு சாதகமான ஒரு உத்தியாகப் பயன்படுத்தலாம் என எண்ணி எம்மிடம் அதை வேலுவின் சட்டத்தரணி பிரேரித்தார். எனக்கோ இது ஒரு ஆபத்தான உத்திபோல் தெரிந்தது. நான் ஒன்றும் சொல்லாமல் வேலுவைப் பார்த்தேன். வேலு அர்த்தபூர்வமாய் என்னைப்பார்த்து 'இல்லை' யென தலை யாட்டினார். "இந்திய அரசிடமும் அதன் நீதித்துறையுடனும், கியூ ப்ராஞ்ச் போன்ற அதன் உளவுப்பிரிவுகளிடமும் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. அவர் கள் என்னை அழிக்கப்பட வேண்டிய ஒரு எதிரியாகவே எப்போதும் பார்ப்பார்கள்." என்றார் வேலு. அன்று நானும் வேலுவும் எமது சட்டத்தரணியின் பணிமனையிலி ருந்து வீடு திரும்பும் பொழுது இந்த விடயத்தை திரும்பத் திரும்ப பேசி தலையை பிய்த்துக் கொண்டு தான் சென்றோம். முதலில் எமக்கு எமது சட்டத்தரணிகளின் அப்பாவித்தனம் பற்றி பெருத்த ஏமாற்றம். மூன்று வருடமாக வேலுவும் நானும் அவர்களுக்கு வேலுவின் தடா வழக்கின் புனைவுகள் பற்றி விலாவாரியாக விளக்கியிருந்தோம். இருந்தும் அவர்கள் அதன் முழுத்தாற்பரியத்தையும் புரிந்து கொள்ளவில்லை.

இதற்கு ஒரு காரணம் உண்டு. பிரித்தானியாவின் காலனித்துவ சாம்ராச்சிய கிரீ டத்தில் இந்தியா ஒரு வைடூரியம். காலனித்துவத்துக்குப் பின் தன் 'தாய் நாடு' போல் சிறந்த ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகிறது. 'புராதன கலாசார பாரம்பரியங்களையும்' 'நவீன வளர்ச்சிப்போக்குகளையும்' ஒருங்கே வளர்த்து வருகிறது என்பது தான் பிரித்தானியாவில் இந்தியாவைப் பற்றிய பரப்புரை. பிரித் தானியாவுக்கும், இந்தியாவுக்கும் இடையே ஒரு விசேட பிணைப்பு உண்டு என்ற கருத்தியல் பரப்புரையை பிரித்தானிய ஊடகங்கள், கல்வி நிலையங்கள் அரசி யல் வாதிகள் நீண்ட காலமாக பரப்பி வந்துள்ளனர். இங்கு வாழும் இந்தியர்கள் மேல் நிற வாதத்தை பிரயோகிக்கும் அதே வேளை இத்தகைய பரப்புரையும் சமாந்தரமாகத் தொடரும். இந்தியாவின் பல அடக்கு முறைச் சட்டங்கள் கால னித்துவ காலத்தில் அமுல் படுத்தப்பட்டவை, அல்லது அச்சட்டங்களே தற்போ தைய மோசமான சட்டங்களுக்கு தோற்றுவாய் என்பது பற்றிய புரிந்துணர்வு பிரித்தானியாவில் அரிது. இந்தியாவைப்பற்றிய மேற்கூறிய கருத்தியல்கள் அறி வுஜீவிகளாலும் பலராலும் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்துடன், தற்போது இந்தி யாவின் அபரிமிதமான முதலாளித்துவ கார்ப்பரேட் வளர்ச்சி, பிரித்தானிய ஆளும் வர்க்கத்தையும் மைய ஊடகங்களையும் பிரமிக்க வைக்கின்றன. இந்தியாவுடன் நல்லுறவு பேண வேண்டும் என இங்குள்ள ஆளும் வர்க்கம் விரும்புகிறது. பிரித் தானியாவின் பொருளியல் சக்தி குன்றிக் கொண்டிருக்கும் இக்காலங்களில் இங்குள்ள மேலாதிக்க சக்திகள் இந்தியாவுடன் நல்லுறவைப்பேணவே விரும்பு கின்றன. இவை அனைத்தும் இந்தியா பற்றிய ஒரு மாய விம்பத்தை கட்டமைக் கின்றன.

வேலுவும் அவருக்கு பக்கபலமாக நானும் இந்த உத்தியை கையாளுவது பற்றி

எமது மறுப்பை சட்டத்தரணிக்கு தெரிவித்தோம். நான் இந்த வழக்கின் ஆரம்பத் திலேயே எமது சட்டத்தரணியின் அனுசரணையோடு இந்திய நீதித்துறை , தடா நீதிமன்ற செயல்பாடுகள் பற்றி சிறந்த அறிக்கை தரக்கூடிய சட்ட நிபுணர்களை தேடத் தொடங்கியிருந்தேன். இந்தியாவுக்கு பயணம் சென்றபொழுது டெல்லியில் ஒரு சில நிபுணர்களை சந்தித்தும் வந்தேன். கடைசியில் பி யு சி எல் இன் பொதுச் செ லாளர் - சட்ட வல்லுனர் சுரேஷினதும் நாகசைலாவினதும் தொடர்பு கிட்டியது. குறுகிய காலத்துள், வேலுவின் நாடுகட த்தும் வழக்கின் எல்லா பரிமாணங்க ளையும் ஆராய்ந்து சிறப்பான நீண்ட அறிக்கை ஒன்றை அவர்கள் தயாரித் தார்கள். அவ்வறிக்கை எமது சட்டத்தரணிகளின் பல்வேறு ஐயங்களையும் தீர்த்து வைத்தது. நீதிமன்றில் இறுதி விசாரணையின் போது சுரேஷ் ஏறத்தாழ நான்கு மணி நேரம் நீதிபதியினால் விசாரிக்கப்பட்டார்.

நீதி மன்றம், வேலுவுக்கு ஒரு வயது வந்த யாழ்ப்பாணத்துப் பெண் ஒருவரை மொழி பெயர்ப்பாளராக நியமித்திருந்தது. அவருக்கு, வேலுவின் தமிழோ, அவர் பிரயோ கித்த அரசியல் சொல்லாடல்களோ கருத்துக்களோ எதுவும் புரிய வில்லை என எமக்குப் புரிந்தது. வேலுவின் அரசியல் சொல்லாடல்களை மொழி பெயர்க்க அவர் திண்டாடினார். நீதிபதிக்கும் அரச தரப்பு பாரிஸ்டருக்கும் கூட மொழிபெயர்ப் பாளரின் போதாமை விளங்கிவிட்டது. வேலு தனது சிக்கலான வழக்கு விடயங்கள் அரசியல், தத்துவார்த்தக் கொள்கைகள் பற்றி, தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் விளக்க வேண்டியிருந்தது. நீதிமன்றில் இத்தகைய குழப்பமான நிகழ்வுகளும் நடந்தேறின.

இத்தகைய குறைபாடுகள் மத்தியிலும் நேர்த்தியான தயாரிப்பும் வேலுவின் போராட்டமும் இந்திய அரசின் வலுவற்ற வாதமும் வேலுவுக்கு வெற்றியைக் கொடுத்தது. வழக்கு நிகழ்ந்த ஓரிரு வாரங்களில் வேலுவுக்கு சாதகமான தீர்ப்பை வழங்கினார் நீதிபதி.

வேலுவின் நாடுகடத்தும் வழக்கு நிகழ்ந்த காலப்பகுதியில் பல நாடு கடத்தும் வழக்குகள் வரிசையாக இந்திய அரசால் தொடுக்கப்பட்டன. சில வழக்குகளில் இந்திய அரசு வென்றது என கேள்விப்பட்டோம். வேலு நாடுகடத்தும் வழக்குக்கெதிராக போராடிய காலங்களில் வேலுவையும் குடும்பத்தினரையும் கவ்விக்கொண்ட இருள் மூண்ட அந்தப் படலம் விலகி அவர்கள் வாழ்வில் ஒரு நிம்மதி நிலவத் தொடங்கியது. வேலு மறுபடியும் எம்முடன் அரசியல் நடவடிக்கை களில் ஈடுபடத் தொடங்கினார்.

### சர்வதேசப்போராட்டம் - மார்க்சிச பாதை

நான் தென்னாசிய தோழமைக் கழகத்தில் நீண்ட காலமாக இயங்கி வருகிறேன். மார்க்சிய கருத்தியல்களால் உந்தப்பட்ட எமது செயற்பாட்டாளர்கள் வெவ்வேறு இடதுசாரிய பாரம்பரியங்களிலிருந்து வந்த வர்கள். வேலுவும் நானும் அவர் லண்ட னுக்கு வந்த நாளிலிருந்து தென்னாசிய தோழமைக்கழகத்தின் பல்வேறு அரசி யல் நடவடிக்கைகளில் தோளோடு தோளாக நின்று ஈடுபட்டுள்ளோம். பல ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் இந்தியதூதரகத் துக்கு முன்னாலும், இங்கிலாந்து பாராளுமன்ற சதுக்கத்திலுள்ள காந்தி சிலை யடியில் ஒழுங்கமைத்த ஆர்ப்பாட்டங்களிலும், பல்கலைக்கழக வகுப்பறைகளி




லும், சமூக மையங்களிலும் நடைபெற்ற கூட்டங்களிலும் ஆர்வத்தோடு வேலு பங்கு பற்றி வந்தார்.

இந்திய தூதரகத்துக்கு முன்னால் நிகழும் இந்துத்துவத்துக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் வேலு முன்னணி பங்கு வகிப்பார். சார்ப்ஜீத் என்ற தீவிர செயற்பாட்டாளரும் வேலுவும் தான் பல ஆர்ப்பாட் டங்களில் முன்னணியில் நின்று கோஷங்களை முழங்கு வார்கள். (நாங்கள் சார்ப்ஜீத்ஜையும் 2024 இல் இழந்து விட்டோம்.) வேலு, தென்னாசிய தோழமைக்கழகத்துடன் இணைந்து செயற்பட்ட ஒரு சில போராட்டங்களை என் ஞாபகத்திலிருந்து கூறுகிறேன்.

நந்திக்கிராம் படுகொலைகள், குஜராத் 2002 படுகொலை நினைவேந்தல்கள், ஒபரேஷன் க்ரீன் ஹன்ட், வேதாந்தா அகழ்வுக் கம்பனிக்கெதிரான போராட்டங்கள், மோடியின், பிரித்தானிய வருகைக்கெதிரான போராட்டங்கள், கூடங்குளம் அணு ஆலைப் பிரச்சினை, ஸ்டேர்லைட் ஆர்ப்பாட்டம், பிரித்தானிய அரசின் சாதி பற்றிய கருத்துக் கணிப்பு , இந்திய விவசாயிகளின் போராட் டத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் , இந்து பாஸிஸத்துக்கெதிரான லண்டன் ஊர்வலத்தில் முன்னணி பாத்திரம், 2020 பிரஜாவுரிமை சட்டங்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை சில.

அத்துடன் சிறீலங்கா ஜனநாயக ஒன்றியம், இலங்கையரின் சம உரிமை இயக்கம், விம்பம் - கலை இலக்கிய திரைப்பட வட்டம், தலித் மேம்பாடு முன்னணி, பெரியார்-அம்பேத்கர் படிப்பு வட்டம், தமிழ் மொழிச் சமூகங்களின் செயற்பாட்டகம், மக்கள் போராட்டங்களுக்கான இயக்கம்- இலங்கை (பிரித்தானிய கிளை- 2022 அரகலயவுக்கு ஆதரவுப் போராட்டங்கள்) ஆகிய அமைப்புகளோடு வேலு இணைந்து செயற்பட்டார். அவரது நாடுகடத்தும் வழக்கு காலங்களில் (2013-2016) தான் தன் அரசியல் நடவடிக்கைகளை எமது ஆலோச னையின் பேரில் சற்றுக் குறைத்திருந்தார். லண்டனில், தமிழர் மத்தியில் நடை பெறும் இலக்கிய -அரசியல் கூட்டங்களில் மிகவும் விரும்பப்படு,ம் பேச்சாளராக திகழ்ந்தார்.

வேலு ஒரு மாவோயிஸ்ட். அவர் தன் மார்க்ஸிய அரசியல் கற்றல், போராடுதல் எல்லாவற்றையும் தமிழ் நாட்டு மாவோயிஸ்ட் இயக்கத்திடம் தான் கற்றார். மாவோயிஸ்ட் இயக்கத்துடன் ஆழமான தோழமையும் பிணைப்பும் உடையவர். வேலு, அவ்வியக்கத்தின் பால் விசுவாசமும் கொண்டவரும் கூட. அண்மைக் காலங்களில் தமிழகத் தோழர்களுடன் ஆன்-லைனில் அரசியல் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார் எனவும் அறிவேன். இதனால், அவர் கடைசிவரை தன்னை ஒரு மாவோயிஸ்ட்டாகவே அடையாளம் கண்டார் என்பது என் நம்பிக்கை. ஒபெரேஷன் கேகார் இன் போது அவர் மிகுந்த குழப்பமும் துயரமும் அடை ந்திருந்தார் என எண்ணுகிறேன். நானோ தென்னாசிய தோழமைக் கழகமோ மாவோயிஸ்ட் ஆதரவு அமைப்பாக இல்லாவிடினும், இந்திய அரசுக்கு எதிரான போராட்டங்களிலும் இந்து பாஸிசத்துக்கு எதிராகவும் இந்திய கார்ப்பரேட் நிறுவன வளர்ச்சிக்கு எதிர்ப்பிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் மிகுந்த இதய

சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் அவர் ஈடுபட்டார்.

இந்திய தொழிலாளர் சங்கத்துடனும் (Indian Workers Association - மாவோயிச சார்புடைய பிரிவு) அவர் உற்சாகத்துடன் இயங்கியுள்ளார். எமது சில போராட் டங்களுக்கு இந்திய தொழிலாளர் சங்க தோழர்கள் சிலரையும் அழைத்து வருவார். கடைசி மூன்று வருடங்களாக மாவோயிஸ்ட் இயக்கத்தின் மீதான இந்திய அரசின் தாக்குதல், பாலஸ்தீனத்தில் சியோனிஸ அமெரிக்க ஏகாதிபத் திய தாக்குதல் பற்றியும் அவர் மிகுந்த விசனமடைந்திருந்தார். லண்டனில் பாலஸ்தீன மக்களுக்காக நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற பாரியபோராட்டங்க ளில் இணைந்து கொண்டார்.

வேலு என்னை விட மிக இளையவர். ஆனால் எமது இணைந்த அரசியல் நடவடிக்கைகளினாலும் அவரது தனிப்பட்ட வாழ்வில் நானும் ராகவனும் ஈடுபட்டு, ஒத்தாசையாகவிருந்ததாலும் எம்மிடையே ஒரு ஆழ்ந்த பிணைப்பு ஏற்பட்டது. அவரின் இறப்பு எமக்கு ஒரு நண்பரை, அரசியல் தோழரை ஒரு இளைய சகோதரை இழந்ததற்கு ஒப்பானது. அரசியலுக்கு அப்பால் எனக்கும் ராகவ னுக்கும் வேலுவும் றஜிதாவும் குடும்ப நண்பர்கள். நாமெல்லோரும் உணவுப் பிரியர்கள். எ ங்கள்வீட்டில் இலங்கை நண்பர்கள் பலரும் வேலு குடும்பமும் ஒன்று கூடி ச ந்தோசமான பல நாட்களை கழித்திருக்கிறோம். அரசியலும், இலக்கியமும் உணவு தயாரித்தலும் எமது பிள்ளைகளின் கதையாடல்களில் மகிழ்தலுமே எம்மை பாசமிகு பிணைப்புகளில் கட்டிவைத்திரு ந்தன. இந்த ஒன்று கூடல்கள் தான் எம்மை இந்த ஏகாதிபத்தியத்தின், சர்வ உலக முதலாளித்துவத்தின் தலையாய மையத்தில் 'அந்நியராக' – 'the other' ஆக எதிர் நீச்சல் போட்டு உயிர் வாழ வைக்கிறது. வேலுவின் இறப்பு இந்த பிணைப்பின் ஒரு முக்கிய சங்கிலி உடைந்து விட்டது போன்ற உணர்வைத் தருகின்றது. நாம் வேலுவுடன் வாழ்ந்த காலங்களின் நினைவுகள் எம் உள்ளங்களில் எக்காலமும் உயிரோட்டத்துடன் வாழும்.

●



# மாபெரும் மக்கள் போராளி தோழர் பூபாளன்

**-விவேக்**



*தமிழகத்தில் நக்சல்பாரி புரட்சிகர போராட்டங்களின் அடையாளமாக விளங்கும் தருமபுரி மாவட்டத்தில் பிறந்த அக்னிக் குஞ்சு தோழர் பூபாளன். தமிழகத்தில் தோழர்களால் பூபாளன் என்று அழைக்கப்பட்ட அவரது இயற்பெயர் தோழர் வேலு. சாதி மறுப்பு தம்பதிகளின் முதல் வாரிசான பூபாளன், உயர்நிலை பள்ளி வரை தருமபுரி மாவட்டத்திலும், அதற்குப் பின்னர் பட்டப் படிப்பு வரை சென்னையிலும் பயின்றார். படிக்கும் காலத்தில் கபடி விளையாட்டில் மிகச் சிறப்பான வீரர் அவர். மின்சாரத் துறையில் பணிபுரிந்த தந்தை பணிக் காலத்திலேயே மரணம் அடைந்ததால் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கணக்கெடுப்பாளராக வேலையில் சேர்ந்தார் தோழர் வேலு.*

*தோழர் பூபாளன், 1987 ஆம் ஆண்டு தர்மபுரியின் புரட்சிகர அமைப்பில் செயல்பட தொடங்கினார். அவர் அப்போது தமிழக மின்சார வாரியத்தில் கணக்கீட்டாளராக பணியாற்றி வந்தார். தர்மபுரி மாவட்டத்தில் மின்துறையில் சிஜடியு நடத்திய முக் கிய போராட்டங்களில் தீவிரமாக பங்கேற்றார். ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக மாற்றக் கோரி நடந்த போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்தார்.*

*1987 முதல் 1992 வரை, இந்திய இலங்கை அரசுகளின் துரோக ஒப்பந்தத்தை கண்டித்தும், அமைதிப்படை என்ற பெயரில் இந்திய ஆக்கிரமிப்பு படைகள் நடத்திய கொடுமைகளை எதிர்த்தும், ஈழ விடுதலையை ஆதரித்தும் முற்போக்கு இளைஞர் அணி முற்போக்கு மாணவர் சங்கம், மற்றும் புரட்சி பண்பாட்டு இயக்கம் இணைந்து நடத்திய பல்வேறு ஈழத் தமிழர் ஆதரவு போராட்டங்களில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றார். மார்க்சிய லெனிய மாவோவிய கண்ணோட்டத்தில் இருந்து, ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அவர் தொடர்ந்து ஆதரித்தார். அச்சமயத்தில், ஏ.எம். கோதண்டராமன் தலைமை யிலான சந்தர்ப்பவாத கும்பல், தமிழகத்தில் மக்கள் யுத்த கட்சியை சந்தர்ப்ப வாத பாதைக்குள் தள்ள முயன்ற போது, அதை எதிர்த்த புரட்சிகர சக்திகளுடன் ஒன்றிணைந்தார்.*

இக்காலகட்டத்தில் முற்போக்கு இளைஞர் அணியின் மாநில பொறுப்பிலும் செயல்பட்டார். முற்போக்கு இளைஞர் அணி முற்போக்கு மாணவர் சங்கத்தால் கூடங்குளம் அணு மின் நிலையத்தை எதிர்த்த சைக்கிள் பேரணி தர்மபுரி மாவட்டம் நாயக்கன் கொட்டாயிலிருந்து தொடங்கிய போது, அதை தொடங்கி வைத்தார். இந்தப் பேரணி, தமிழகம் முழுக்க கூடங்குளத்தை நோக்கி பய ணப்பட்ட பேரணியின் ஒரு பகுதியாகும்.

தமிழகத்தில் புரட்சிகர மார்க்சிய - லெனினிய - மாவோவிய அரசியலை இளைஞர் களிடம் கொண்டு சென்று, தீரமிக்க போராட்டங்களை நடத்திய பாரம்பரியம் கொண்டது முற்போக்கு இளைஞர் அணி. தியாகி தோழர் பாலன் தலைமையில் , தர்மபுரியில் வெடித்து எழுந்த மாபெரும் மக்கள் திரள் எழுச்சியின் வாரிசாகவும், அப்போராட்டங்களின் தொடர்ச்சியாகவும், முற்போக்கு இளைஞர் அணி விளங்கி யது. இவ்வமைப்பின் செயல்பாடுகளை, தமிழக உளவு பிரிவு தொடர்ந்து நசுக்கி வந்த காலம் அது. முற்போக்கு இளைஞர் அணியின் தமிழக மாநாட்டை அரூரில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், தமிழக அரசு இந்த மாநாட்டை தடை செய்ததோடு, அப்பகுதியில் 144 தடை உத்தரவை விதித்தது. இதையும் மீறி மாநாட்டை நடத்த, முற்போக்கு இளைஞர் அணியின் மாநில குழு முடிவு செய்தது. தடையை மீறி கூடிய 300க்கும் மேற்பட்ட தோழர்களை தமிழக காவல்துறை கொடூர தடியடிக்கு பின்னர் கைது செய்தது. இவ்வாறு கைது செய்யப்பட்ட தோழர்களை, சிறை மீட்பதற்கான சட்ட உதவிக் குழுவில் தோழர் வேலு முக்கிய பங்காற்றினார். அக்குழுவின் சீரிய முயற்சியால்,அத்தோழர்கள் மீது போடப்பட்ட அநீதியான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அனைத்து தோழர்களும் பிணை பெற்று வெளியே வந்தனர். அரசு ஊழியராக இருந்த போதும், தனது அரசியலால் புரட்சிகர நடைமுறையால் அப்பணிக்கு ஆபத்து வரும் என்று அறிந்திருந்த போதும், அவர் சிறிதும் தயக்கம் இன்றி தன்னுடைய கொள்கை வழியில் சென்றார். இதன் விளைவாக, அவர் வேலையில் இருந்தும் தற்காலிக நீக்கமும் செய்யப்பட்டார்.

1992 இல், மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து குண்டு வைத்தாக தோழர் வேலு மீது பொய் வழக்கு புனையப்பட்டு, 4 ஆண்டுகள் சிறைவாசத்தை அனுப வித்தார்.அப்போதிருந்த சென்னை மத்திய சிறையில், தமிழ்நாடு விடுதலைப் படை மற்றும் இதர தடா சிறைவாசிகளுடன் இணைந்து, ஏராளமான சிறைப் போராட்டங்களில் ஈடுபட்டார்.1995இல், 150 க்கு மேற்பட்ட சிறைவாசிகள் சிறைக் காவலர்களால் தாக்குதலுக் குள்ளாகினர். பலர் காயமுற்றனர்.

சிறைவாசிகள் மீதான தாக்குதலை விசாரணை செய்ய , நீதிபதி ராதாகிரு ஷ்ணன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. சாட்சியங்களை முன்னிறுத்த சிறைவாசிகள் சார்பில், சிவில் உரிமைக் கழகத்தோடு வேலு துணை நின்றார். இவரது முயற்சியில், காயமுற்ற 150க்கு மேற்பட்டவர்களில் 90க்கு மேற்பட் டவர் குறித்த சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. இது தமிழகத்தில் சிறைவாசி களின் உரிமைக் குரலுக்கான வரலாற்று சிறப்புமிக்க எடுத்துக்காட்டாகும். சிறைச்சாலையிலும் கம்யூனிச புரட்சியாளர்களின் வீரமிக்க போராட்ட மரபை

தோழர் பூபாளன் உயர்த்திப்பிடித்தார்.

அவர் சிறையில் இருந்து வெளிவந்த காலத்தில், உல்பா அமைப்பின் தோழர் ஒருவருக்கு மருத்துவ உதவிகளை ஒருங்கிணைப்பதில் முக்கிய பங்காற்றினார். இதர பல இயக்கங்களைச் சார்ந்த தலைமுறைவு தோழர்களுக்கும் உதவி செய்தார். இந்த சமயத்தில் ஒரு சில ஆண்டுகள் புரட்சிகர இயக்கத்தில் முழுநேர ஊழியராக பணியாற்றினார்.குஜராத் கலவரத்தை ஒட்டி, தமிழகத்தில் இருந்து சென்ற பெண்களின் உண்மை அறியும் குழுவை அமைப்பாக்குவதிலும், ஒருங்கிணைப்பதிலும் - தியாகி தோழர் அஜிதாவுடன் இணைந்து பணியாற்றினார். அவர் புரட்சிகர இதழ்களில் சிறந்த பல கவிதைகளை எழுதினார்.

அவர் மீதான தடா பொய் வழக்கில் திட்டமிட்ட வகையில் தண்டனை தருவதற் காக அரசு தீவிர முயற்சிகள் செய்தது. உளவுப் பிரிவுக்கு சாதகமான நீதிபதி யைக் கொண்டு வருவதற்காக, 13 முறை சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதிகள் மாற் றப்பட்டனர். இந்த வழக்கில்,தோழர் சுந்தரமூர்த்திக்கு, 5 ஆயுள் தண்டனைகள் என்ற கொடூரமான நீதிக்கு புறம்பான தண்டனை வழங்கப்பட்டது நாம் அறிந்ததே. இத்தகைய சூழலில், தோழர் பூபாளன் லண்டன் சென்றார்.

தோழர் பூபாளன் இங்கிலாந்தில் இருந்த போதும், அவர் இந்தியாவின் புரட்சிகர மாவோயிஸ்ட் இயக்கத்தை ஆதரித்தும், அதன் மீதான மைய - மாநில அரசுகளின் கொலீர ஒடுக்குமுறைகளை கண்டித்தும், லண்டனில் நடந்த அனைத்து இயக்கங் களிலும் பங்கேற்றார். பசுமை வேட்டைக்கு எதிராக லண்டனில் நடைபெற்ற எழுத் தாளர் அருந்ததிராயின் வெற்றிகரமான நிகழ்வை ஒருங்கிணைத்ததில் மிக முக்கிய பங்கு ஆற்றினார். லண்டனில் வாழ்ந்து வந்த ஈழத் தமிழர் உள்ளிட்ட பல்வேறு தேசிய இனங்களைச் சார்ந்த அரசியல் சக்திகளை ஒருங்கிணைத்து செயற்பட்டார். அந்தக் கூட்டத்தை மாபெரும் வெற்றியாக மாற்றினார். ஆனந்த் தெல்தும்ப்டே, சாய்பாபா போன்ற முற்போக்கு - புரட்சிகர சக்திகள் லண்டனுக்குச் சென்றபோது அவர்களுடன் இருந்து அனைத்து வகை உதவிகளையும் செய்தார். அவர்களது நேர்காணல்களை லண்டன் ஊடகங்களில் வெளிக்கொணர்ந்தார்.பார்ப்பனிய இந்துத்துவ பாசிசம், சாதி அமைப்பின் கொலீரங்கள் போன்றவற்றை எதிர்த்த லண்டன் போராட்டங்களில் மட்டுமின்றி. தேசிய விடுதலைப் போராட் டங்களான பாலஸ்தீனப் போராட்டம் போன்றவற்றை ஆதரித்துப் பங்கேற்றார். லண்டனில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான போராட்டங்களிலும் அவர் பங்கேற்றார்.

இந்தியாவிற்கு நாடு கடத்தப்படலாம் என்ற சூழ்நிலையிலும், அதற்காக இந்திய அரசு பல கோடிகளை செலவு செய்து வழக்கு நடத்தி வந்த நிலையிலும், இந்திய புரட்சிக்கான ஆதரவு, சர்வதேச அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேச விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு போன்ற விஷயங்களில் சிறிதும் அச்சமோ தயக்கமோ இன்றி தொடர்ந்து போராடி வந்தார். தான் மட்டுமின்றி தன்னுடைய இணையர் ரஜிதா மற்றும் மகள் நிலோபர் என குடும்பத்தையே இத்த கைய அரசியல் போராட்டங்களில் ஈடுபட ஊக்குவித்தார். அவர் ஆழ்ந்த மனித நேயம் கொண்ட ஒரு புரட்சியாளர். தோழர்களுக்கு மட்டுமின்றி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவி தேவை என்றால் ஓடோடி வந்து உதவும் உள்ளம் கொண்டவர்.

தமிழகம் மட்டும் இன்றி, லண்டனிலும் அவரது உதவிகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.


1967 இல் தமிழகத்தில் தொடங்கி 2026இல் லண்டனில் முடிந்த அவரது வாழ்க்கைப் பயணம், உழைக்கும் மக்களுக்கான சமரசமற்ற போராட்டம் என்ற பாதையில்தான் பயணித்தது. “வாழ்க்கை போராட்டமயமானது போராட்டம் இன்பமயமானது” என்ற தனது நேசத்துக்குரிய ஆசான் காரல் மார்க்சின் வார்த்தைகளுக்கு, தனது வாழ்க்கை மூலம் பொருள் தந்த போராளிகளில் ஒருவர் தோழர் பூபாளன். தோழர் பூபாளன் மார்க்சிய, லெனினிய, மாவோவியத்தை ஆய்ந்தறிந்து, நக்சல் பாரி பாதையை தனது இறுதி மூச்சு வரை உயர்த்திப் பிடித்த ஒரு மார்க்சியவா தியாவார். ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள், ஒடுக்கப்பட்ட சாதிகள், மற்றும் பெண்களின் உரிமை போராட்டத்தையும் எப்போதும் ஆதரித்த அப்பழுக்கற்ற ஜனநாயக வாதியாவார்.

அரசின் ஒடுக்கு முறைகள் கண்டு நடுங்கி, ஆளும் வர்க்கத்தின் முன் மண்டியிடும் போலிப் புரட்சியாளர்களை போலல்லாமல், கொண்ட கொள்கைக்காக எத்தகைய துன்பங்களையும் அனுபவிக்க துணிந்த ஒரு மெய்யான புரட்சியாளரவர். ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான அன்பு, அநீதியான சமூக அமைப்பின் மீதான சீற்றம் போன்ற கம்யூனிஸ்ட்டுகளின், குறிப்பாக நக்சல்பாரி புரட்சியாளர்களின் மகத்தான புரட்சிகர பண்புகளை அவர் எல்லா இடங்களிலும் வெளிப்படுத்தினார். போராட்டக் களங்களில் மட்டுமல்ல சிறைச்சாலையிலும், புலம்பெயர்ந்த நாட்டிலும் அவரது செயல்பாடுகள் மேற்கண்ட பண்புகளை உறுதியாக வெளிப்படுத்தின. கடும் அடக்குமுறைகளிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் தான் ஒருவர் மெய் யான புரட்சியாளரா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய அக்கி னிப் பரீட்சைகளில் பலமுறை தன்னை உறுதியாக நிரூபித்த ஒரு மாபெரும் மக்கள் போராளி தோழர் பூபாளன். உழைக்கும் மக்களின் விடுதலைக்காக ஏகாதிபத்தியவாதிகளையும் பிற்போக்காளர்களையும் எதிர்த்துப் போராடு வதற்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட தோழர் பூபாளனின் மரணம் நமது இதயங்களில் மலையாக கனக்கிறது. அதே சமயம், அவரது வாழ்வும் போராட்டமும் அநீதிகளுக்கு எதிராக போராடவும், சுரண்டவற்ற சமத்துவ உலகை படைக்கவும் நம்மை உந்தித் தள்ளுகின்றன. அவரது புரட்சிகர நினைவை நெஞ்சில் ஏந்தி, அவரது ஆசை கனவுகளை நனவாக்கப் போராடுவதே, அம்மாபெரும் மக்கள் போராளிக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்! ஆயிரக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந் தாலும், எம்முடன் சேர்ந்து துடித்த அந்த வீரமிக்க இதயம் கொண்டவருக்கு, தமிழகத்தின் புரட்சிகர இயக்கம் தனது செங்கொடியை தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது!!

●

# தோழனுக்கு செவ்வணக்கம்!

## - கோபால்



*சில உறவுகள் அவர்கள் உயிரோடு இருக்கும் போது, அதன் வலிமை நமக்கு தெரிவதில்லை. நம்மை விட்டு பிரியும் போது, அதனை ஏற்பது சற்று கடினமாக இருக்கிறது. அவனது இயற்பெயர் வேலு, இன்றுவரை அப்பெயரில் அவனை நான் அறிந்ததில்லை. அவன் எனக்கு அறிந்த நாள் முதல் பூபாளன்தான். நண்பா என்று தான் என்னை அழைப்பான். முதன்முதலாக நான் அறிமுகமானது மக்கள் சிவில் உரிமைக் கழகம் PUCL- தமிழ்நாடு நடத்திய அறைக் கூட்டம் ஒன்றில் தான். பேச்சாளரிடம் வழக்கமான எனது ஏடாகூடமான குறுக்கு கேள்விக்கு பின் கூட்டம் முடிந்தது. சுதா இராமலிங்கம் அதில் முக்கிய பேச்சாளரும் கூட. அவர்தான் பூபாளனை எனக்கு அறிமுகம் செய்கிறார். "இவர் உங்கள் தோழன் தான்யா" என்று. சுதா இராமலிங்கத்திற்கும் எனக்குமான கருத்து வேறுபாட்டிற்கும் இடையில் நல்ல நட்புடனான உரையாடல் அது. சிகப்பு கறை இட்ட வெள்ளை வேட்டி. அசலில் கறை வேட்டி அரசியல்வாதி தோற்றம். ஆனால், கலகலப்பாக அனைவரையும் சகஜமாக அணுகும் முறை. கூட்டம் முடிந்த பின்பு என்னை அடையாளம் கண்டு அருகில் வந்து தானாக அறிமுகப்படுத்திக் கொண்டான்.*

*அன்று தொடங்கிய பரிச்சயம் இன்று வரை விலகவில்லை. பின்னர் ஒவ்வொரு முறை சென்னை வரும் போதும் சந்திப்பதும், அவனது நண்பர்களை சந்திக்க இணைந்து செல்வதுமாக பழக்கம் தொடர்ந்தது. அரசியல் சார்ந்த நண்பர்கள், இலக்கிய வட்டம் சார்ந்தவர்கள், அவனது சமூக உறவில் வளர்த்து எடுத்த நண்பர்கள் என பல்வேறு விதத்தினர். இளைஞர்கள், சம வயது ஒத்தவர்கள், வயது மூத்தவர்கள் என வயது வித்தியாசம் இன்றி பழகும் முறை, நெருக்கமான உறவுமுறை, அவர்க ளது தேவையை குறிப்பறிந்து உதவுவது என்பது வியப்பாக இருந்தது. என்னைப் போன்று குறுகிய வட்டத்தில் கூட்டிற்குள் சுருங்கும் நபர்களுக்கு இது புது விதமான உறவுமுறை. உறவுகள் அனைத்தும் தோழர், அண்ணன், தம்பி, அக்கா, மாமா, சித்தப்பா என்றுதான். இரத்த உறவு எது, நட்பு*

உறவு எது எனஅறிய முடியாத அளவு நெருக்கமாக வீட்டு குழந்தைகளின் படிப்பு, வகுப்பு தேர்ச்சி, நண்பர்களுடன் ஏற்படும் சச்சரவுகள் குறித்து விசாரிப்பது, பள்ளி குழந்தைகளுக்கு தேவையானது முதல் நண்பர் வீட்டு உலையில் சோறு இல்லை என்பதை அறிந்து தேவையான பொருட்களை கொண்டு சேர்ப்பது, வேலை தேடும் நண்பனுக்கு பயிற்சி வகுப்பில் கொண்டு சேர்ப்பது என பலவித செயல்பாடுகள். இத்தனை குடும்பங்களுக்கும் இவன் ஒரு வாரிசாக.

சனநாயக உரிமை தளத்தில் பூபாளன் பங்கு நான் PUCL செயல்பாட்டில் ஆர்வமுடன் இருப்பதை கண்டு இவரது வழக்கு குறித்தும் சற்று அறிமுகமானது. அப்போது தடா எதிர்ப்பு கூட்டமைப்பு உருவாக்குவதற்கான முயற்சியில் பேராசிரியர் கல்யாணி, பழ. நெடுமாறன் போன்றவர்கள் முன்முயற்சி இருந்த காலகட்டம். ஆந்திராவில் போலி மோதல்கள் அதிகரித்த காலகட்டம். ஆந்திராவில் 'போலி மோதல்கள் அனைத்தும் அரசியல் கொலைகளே' என்று மனித மனித உரிமை அமைப்புகள் புதிய முழக்கங்களை முன்வைத்த காலகட்டம். PUCL சார்பாக பிற மாநிலங்களில் உள்ள மனித உரிமை அமைப்பு களுடன் இணைந்து செயல்பட என்னை உந்தி தள்ளியதில் பூபாளனுக்கு முக்கிய பங்கு உண்டு. எனது மனித உரிமை செயல்பாட்டில் உறுதிப்பாட்டுடன் இருப்பதில் ஒரு வலுவான உந்துதல் பூபாளனின் செயல்முறையில் இருந்தும், நட்புறவிலும் உள்வாங்கியவை. தமிழ் நாட்டில் பொடா சட்டத்தின் முன்வரைவு மசோதா 1998-99 காலக்கட்டத்தில் கொண்டு வரப்பட்ட போது, அதற்கு எதிரான 40க்கு மேற்பட்ட அமைப்புகளின் கூட்டமைப்பு தோழர் நெடுமாறன் தலைமையில் உருவாக்கப்பட்ட போது, அதில் தமிழ்நாட்டில் 1998-99 காலக்கட்டத்தில் பொடா சட்ட முன்மொழிவு மசோதா கொண்டு வரப்பட்ட போது, அதற்கு எதிராக தமிழ்தேசிய அமைப்புக ளும், தலித் அரசியல் சார்பு அமைப்புகளும், இஸ்லாமிய அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும், தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்புகளும் இணைந்த பொடோ எதிர்ப்பு கூட்டமைப்பு உருவானது. அதன் செயல்முறையை வகுத்து முன்னெடுத்துச் செல்ல, அனைத்து கருத்துக்களை உள்வாங்கும் வகையில் செயலாக்கக்குழு உருவாக்கப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்படாமல் போராட்டம் முன் செல்லாது என எச்சரித்தவர் வேலு.

பெரும் போராட்டத்திற்கு பின்னர் இந்தப் பொடா மசோதா கைவிடப்பட்டது. 2002ம் ஆண்டு குஜராத் கலவரத்தின் போது, தமிழகத்தில் இருந்து சென்ற பெண்கள் மட்டும் அடங்கிய உண்மை அறியும் குழுவை அணி திரட்டுவதில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. தோழர் ரவீந்திரன் போலி மோதலில் படுகொலை செய்யப்பட்ட போது, அவரது உடலை மருத்துவ மனையில் இருந்து பெற்று அடக்கம் செய்வது முதல், மோதல் சம்பவத்தை குறித்து உண்மை அறியும் குழு அப்பகுதிக்கு சென்று வர துணை நிற்பது வரை மறைந்த தியாகி தோழர் அஜிதாவுடனும், எழுத்தாளர் கி.நடராஜனுடனும் இணைந்து ஒருங்கிணைத்தான். ஊத்தங்கரை மோதல் படுகொலையின் போதும், தோழர் அஜிதாவுடன் இணைந்து உண்மை அறியும் குழுவை அணி திரட்டுவதில் முக்கிய பங்காற்றினான். சொந்த வழக்குகளில் நீதிமன்றத்திற்கு சென்று வரும் போது எல்லாம் ஒரு எரிச்சலும், தலைவேதனையும் இருப்பதாக அவதியுறும் இவன், அடுத்த தினங்கள் தொட்டு சுறுசுறப்பான செயல் வீரனாக மற்றவரின் பிரச்னைக்கு தீர்வு தேடும் நபராக


*அலைந்து திரிவான். தனது வழக்குகளின் விசாரணை முடிந்த பின்பும், நீதிபதிகள் 13 முறை மாற்றப்பட்டு தான் அலைக்கழிக்கப்படுவது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தான் என முடிவு செய்த அவன் பின்பு தலைமறைவானான். அதன் பின்பு அனது செயல்பாட்டு தளம் மாறியது தான் உண்மை. புலம் பெயர்ந்தவர் துன் பங்களை நேரடியாக அனுபவித்த இவனது செயல்பாடு இடம் மாறியதுடன் புதிய பரிணாமத்தை ஒட்டியது என்றே நான் கூற முடியும். இங்கு மனித உரிமை தளத்தில் பங்காற்றிய இவன், லண்டன் சென்ற பின்பு பிற தேசிய இனங்களின் விடுதலைக் கான போராட்டத்தில் பங்கு பெறுவதும் இந்தியாவில் உள்ள மனித உரிமை மீறல்களை உலகளவில் அம்பலப்படுத்துவதிலும் செயலூக்கமாக இருந்ததை நான் அறிய முடிந்தது. பல தேசிய இன மக்களின் உரிமைக்கான கூட்டு செயல்பாட்டு தளம் உருவாக்கப்பட வேண்டும் என்றும், தொழிலாளர்களின் பென்சன் திட்டத்தில் மாற்றம் குறித்தும் லண்டன், பாரிஸ் நகரங்களில் நடந்த போராட்டங்கள் குறித்து அவன் நிறைய பேசியதுண்டு. இன்று தென் ஆசிய ஒருங்கிணைப்புக்குழு உருவாகி செயல்படுவதை அறியும் போது, மக்கள் போராட்டங்களை வளர்த்தெடுக்கும் அமைப்புகளை உருவாக்குவதையே என்றும் மனதில் இருத்தி மக்கள் போராளியாக கொள்கையடிப்படையில் செய லூக்கமாக இருந்ததை உணரமுடிகிறது. இவனது மகளும், துணைவியாரும் இதற்கு ஏற்ற உறுதுணையாக இருப்பதும் ஒத்திசைவாக இருந்தனர் என்பதை நாம் நினைவு கூறவேண்டும். அவனது கொள்கையினை உயர்த்தி பிடித்து விடுதலைக்கான பாதையில் சனநாயக உரிமைகளை உயர்த்தி பிடிக்கும் மக்கள் போ ராட்டங் களில் பங்கேற்பதும் புதிய சமத்துவ உலகிற்கான வழிமுறையை வகுத்து எடுக்க செயல்படுவதும் மட்டுமே அவனுக்கு செய்யும் சிறந்த அஞ்சலியாக இருக்கும். தோழர் பூபாளன் நினைவை உயர்த்தி பிடிப்போம்!*
*சமத்துவ உலகைப்படைக்க போராட்டம் பாதையில் நடைபோட உறுதி ஏற்போம்!*

●



# வேலுவுடனான எனது அரசியல் பயணம்

- இ. குகதாசன்



நண்பன், சகோதரன், தோழன் வேலுவுக்கு செவ்வஞ்சலிகள்!!

தோழர் சண்முகம் வேலு (தர்மபுரி, தமிழ்நாடு) அவர்களின் பேரிழப்பிற்க்காக துக்கமடைகிறேன்.

மக்களின் விடுதலைக்கான இடதுசாரியத்தை உயர்த்தி பிடித்த அவர், அந்த மகத்தான நோக்கத்திற்காக அவர் வாழ்ந்த வாழ்க்கையை எமக்கெல்லாம் முன்னுதாரணமாக விட்டுச் சென்றுள்ளார்.

தோழர் அவர்கள் லண்டனில் இலக்கியம், அரசியல் அரங்குகளில் நன்கு அறியப் பட்ட ஒருவர். எல்லோருடனும் பழகுவதற்கு இனியவர். பலரதும் அன்பைப் பெற்றவர்.

எனக்கும் தோழருக்குமான உறவு அரசியல் ரீதியானது. 80களில் இந்தியாவில் அவர் சார்ந்திருந்த இடதுசாரிய அமைப்புக்கும் இலங்கையில் நான் செயற்பட்ட NLFT (தமிழீழ தேசிய விடுதலை முன்னணி) இடதுசாரிய இயக்கத்திற்குமான நெருக்கமான உறவின் ஒரு தொடர்ச்சி என வைத்துக்கொள்ளலாம்.

அவர் என்னோடு அரசியல் சந்திப்பு ஒன்றுக்காக டென்மார்க் வரை பயணித்துள்ளதுடன், லண்டனில் நடைபெற்ற இந்திய, இலங்கை அரசுகளிற்கு எதிரான பல போராட்டங்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளிற்கு அவரது அழைப்பை ஏற்று நானும் எனது அழைப்பை ஏற்று அவரும் பரஸ்பரம் பல முறைகள் பங்குபற்றிய உள்ளோம். எமக்கிடையேயான இந்த உறவு என்பது 15 வருடங் களிற்கும் மேலானது.

தோழர் வேலுவின் மனைவி சகோதரி ராஜிதா மற்றும் அவரது மகளுக்கு எனது அன்பினையும் ஆறுதல்களையும் தெரிவிக்கின்றேன்.

தோழருக்கு எனது செவ்வஞ்சலிகள்!!!

●

# தோழர் வேலுவின் சிறைத் தோழன்

## - தடா ஜெ அப்துல் ரஹிம்




*யார் இந்த வேலு என்கிற பூபாளன் ?*

*இருட்டுக் கருவறையில் இமை மூடி கிடைக்கும் சிலந்தியை போல, 48 நாட்கள் சட்டவிரோத காவல்,60 நாட்கள் நீதிமன்ற காவல் என மொத்தம் 108 நாட்கள் சிபிஐயின் கொடுமையான விசாரணைக்கு பிறகு ஒரு நாள் சென்னை சென்ட்ரல் ஜெயிலில் இரவு 8 மணிக்கு என்னை ஒப்படைத்தனர் சிபிஐ அதிகாரிகள்.*

*சிபிஐ அதிகாரிகளின் கொடூர விசாரணை சித்திரவதை போன்றே சிறையில் நடக்குமா என அறியாது, அதற்கு முன்பு சிறை அனுபவம் சிறிதும் இல்லாத எனக்கு ஒருவித பயம், நடுக்கம், அதிர்ச்சி. சென்ட்ரல் ஜெயிலில் 1 வது பிளாக் மாடியில் முதல் செல்லில் அடைக்கப்பட்டேன்.*

*அந்த அறையில் இருந்து தான், ஏற்கனவே ஆட்டோ சங்கர் உட்பட அவரது கூட் டாளிகள் தப்பியோடியது பற்றி பிறகு அறிந்து கொண்டேன்.*

*சுமார் 25 வயதில் சிறை அனுபவம் சிறிதும் இல்லாத அதிர்ச்சி கலந்த தைரியத்து டன் முதல் இரவு சிறையில் கழிந்தது. விடிந்ததும் தோழர்! தோழர்! தோழர் என ஒரு குரல். அதிர்ச்சி கலந்த பார்வையோடு, பார்த்த போது கண்ணாடி அணிந்து குள்ளமான ஒரு நபர் என்னை அழைப்பது தெரிந்து பேசவே முடியாது அவரையே உற்று நோக்கினேன்.*

*" தோழர் கவலைப் படாதீங்க - என் பெயர் வேலு - நானும் தடா சட்டத்தில் சிறையில் இருக்கும் கைதி தான் " என அவராகவே அறிமுகப் படுத்தி கொண்டார் வேலு.*

தடா சட்டத்தில் எஸ்பி வாக்குமூலம் வாங்கினார்களா என கேட்ட போது, நான் ஆமாம் என்று தலை அசைத்தேன். உடனே முதலாவது பிளாக் வார்டன் இடம் சொல்லி என்னை அழைத்து கொண்டு, ரெவிஷன் அலுவலகம் வந்து ஒரு பேப்பர் வாங்கி, எஸ் பி வாக்குமூலம் நானாக எதுவும் கொடுக்கவில்லை - சிபிஐ அதிகாரிகள் என்னை அடித்து துன்புறுத்தி கையெழுத்து வாங்கி கொண்டனர் என அந்த பேப்பரில் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கி, ரெவிஷன் அதிகாரியிடம் கொடுத்து உடனே தடா நீதிமன்றம் அனுப்ப சொல்லி விட்டு ஏதாவது தேவையா தோழர் என கேட்டுக் கொண்டே கவலை படாதீங்க என ஆறுதல் கூறினார் வேலு.

எனக்கு எல்லாமே ஆச்சரியமா இருந்தது. பிறகு பழக பழக ரத்த பந்தம் இல்லாத உடன்பிறப்பாக தோழனாக சிறையில் இருந்தார் வேலு.

சிறையில், பல போராட்டங்களை (தடா சிறைவாசிகள்) நாங்க நடத்தி இருப்போம். அத்துணை போராட்டங்களுக்கும் தோழர் வேலு தான் தலைமை தாங்குவார்.

தடா கைதிகளை, கைவிலங்கு போட்டு நீதிமன்றம் அழைத்து போவது வழக்கம். ஒருமுறை, நெடுஞ்செழியன் அய்யா மற்றும் வீரசிங்கம் அய்யா ஆகியோரை திருச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சென்ட்ரல் ஜெயிலில் அழைத்து சென்ற போது, கைவிலங்கு போட்டதினால் இரண்டு பேருக்கும் கடுமையான வலி ஏற்பட்டு கை கால் எல்லாம் வீங்கி விட்டது.

தடா சிறைவாசிகளை நீதிமன்றம் அழைத்து செல்லும் போது, கைவிலங்கு போடுவதை தவிர்க்க வேண்டும் என அந்த நேரத்தில் தடா சட்டத்தில் இருந்த சுமார் 120 பேரிடமும் தோழர் வேலு கோரினார்.

தோழர் வேலுவின் கோரிக்கையை ஏற்று, அன்று தடா நீதிமன்றம் செல்ல இருந்த நாங்கள் கைவிலங்கு போட மாட்டோம் என்று கூறி சிறைக்காவலர்களிடம் சொன்னோம். உடனே போலீசார் அதெல்லாம் முடியாது கைவிலங்கு போட்டு தான் உங்களை நீதிமன்றம் அழைத்து செல்வோம் என கூறி, எங்க ஆறு பேரை கடுமையாக தாக்கினார்கள் காவலர்கள்.

எங்களை சிறைக்கு வெளியே தாக்குவதை பார்த்த தோழர் வேலு சக தடா சிறைவாசிகளை ஒருங்கிணைத்து, சிறையில் மிகப்பெரிய போராட்டம் நடத்தினர்.

தடா சிறைவாசிகள் சிறையில் நடத்தும் போராட்டத்தை கண்டு, சிறை அதிகாரிகள் எல்லாம் சிறையை விட்டு வெளியே வந்து விட்டனர்.

கைவிலங்கு போட மாட்டோம் என காலை 11 மணிக்கு ஆரம்பித்த எங்கள் போராட்டம், மாலை 5 மணி வரை தொடர்ந்தது. சிறைக்கு வெளியே நாங்கள் 6 பேர் கடுமையான தாக்குதலுக்கு ஆளானாலும், சிறைக்கு உள்ளே தோழர் வேலு தலைமையில் போராட்டம் தொடர்ந்தது.

மாலை, மனித உரிமை அமைப்பு வழக்கறிஞர்கள் சங்கரசுப்பு, வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் வழக்கறிஞர் சுரேஷ் ஆகியோர் வந்து கைவிலங்கு இல்லாமல் எங்களை தடா நீதிமன்றம் அழைத்து சென்றனர். தடா நீதிமன்ற நீதிபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் இனி யாருக்கும் கைவிலங்கு போட்டு நீதிமன்றம் அழைத்து வரக்கூடாது என உத்தரவு பிறப்பித்தார்.

இன்றுவரை, அரசியல் ரீதியாக சிறையில் உள்ள யாருக்கும் கைவிலங்கு போட்டு

*நீதிமன்றம் அழைத்து போவது இல்லை என்றால், அதற்கு முழு முதற் காரணம் தோழர் வேலு அவர்களின் போராட்ட முயற்சி தான்.*

*1995ஆம் வருடம், தடா சட்டத்தில் சிறையில் இருந்த 9 விடுதலை புலிகள் சிறை யில் இருந்து தப்பி சென்று விட்டனர். அதனை காரணம் வைத்து, சிறையில் இருந்த தோழர் வேலு, தோழர் முரளி என்கிற நல்லரசன், மற்றும் (தடா ரஹீம்) என்னை கடுமையாக தாக்கினார்கள் சிறை காவலர்கள். அந்த நேரத்தில் நாங்க மூன்று பேரும் ஒரே அறையில் இருந்து ஒருவருக்கு ஒருவர் காயங்களுக்கு மருந்து போட்டு கொள்வோம்.*

*நாத்திக கொள்கை உடைய வேலு, முரளி இருவரும் என்னை காலை தொழு கைக்கு எழுப்புவார்கள் என்றால் இருவரின் சகிப்புத்தன்மையை பாருங்க.*

*அதன் பிறகு வழக்கறிஞர் சுரேஷ், வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் ஆகியோர் துணை கொண்டு மனித உரிமை அமைப்பு மூலம் சிறையில் எங்களை தாக்குதல் தொடுத்த சிறை காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது இதற்கு முழு காரணம் தோழர் வேலுதான் என்றால் அது மிகையாகாது.*

*அரசு ஊழியராக இருந்த வேலு - தனது தாயார், தம்பி மூலம் வீட்டில் இருந்து மீன் கறி சமைத்து வாரம் ஒரு முறை சிறைக்கு வரழைத்து அனை வருக்கும் பகிர்ந்து கொடுப்பார். அந்த நேரத்தில் சிறையில் அப்படி அனுமதி இருந்தது. தற்போது வீட்டு சாப்பாடு எடுத்து வர சிறையில் அனுமதி இல்லை.*

*தடா சட்டத்தில் யார் சிறைக்கு வந்தாலும் முதல் ஆளாக தோழர் வேலுதான் முன்நின்று அவர்களுக்கு உதவி செய்வார்.*

*தோழர் வேலுவிடம் கற்ற பாடம் தான், நான் சிறையில் இருந்து விடுதலை ஆகும் வரை புதிதாக சிறைக்கு வரும் அரசியல் ரீதியான சிறைவாசிகளை சிறையில் கவனிக்க உந்துதலாக அமைந்தது.*

*புரட்சிகர போராட்டங்களுக்கு முக்கிய கேந்திரமாக விளங்கிய தர்மபுரி மாவட் டத்தில் பிறந்தார் வேலு.*

*அரச ஊழியராக இருந்து கொண்டே, 1990 வாக்கில் நக்சல் பாரி புரட்சிகர அமைப்பு ஆதரவாளராக தனது பொது வாழ்க்கையை தேர்ந்தெடுத்த வேலு, 1992இல் தர்மபுரி ரயில் தண்டவாளத்தில் குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டில் தடா சட்டத்தில் சிறைபடுத்தப்பட்டார்.*

*2011இல் நான் விடுதலை அடைந்த பின்னர், சிறை தோழர் வேலுவைத் தேடினேன். வில்லிவாக்கத்தில் குடியிருந்த இடத்தில் தேடிய போது தோழர் எதோ வெளிநாட் டிற்கு சென்று விட்டார் என தகவல் வந்தது.*

*கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, தோழர் சிமியோன் ராஜா அவர்களிடம் பேசிய போது, தோழர் வேலு பற்றி கேட்டேன். அவர் எனக்கு வேலுவின் அலைபேசி எண்ணைக் கொடுத்தார். அந்த அலைபேசியில் தொடர்பு கொண்டபோது, வேலு பதில் அளிக்கவில்லை.*

*உடனே நான் தடா ரஹீம் என வாட்ஸ்அப் மெசேஜ் அனுப்பினேன். உடனே என்னை தொடர்பு கொண்டார் தோழர் வேலு. சுமார் 30 ஆண்டுகளுக்கு பிறகு, அந்த குரல் கேட்டு மிகப்பெரிய சந்தோஷமடைந்தேன்.*

உடல் நலம் பற்றி கேட்ட போது, தோழர் நான் எப்போதும் போல உடற்பயிற்சி செய்து வருகிறேன் என கூறினார். கபடி வீரரான தோழர் வேலு, எந்நேரமும் உடற் பயிற்சி செய்து கொண்டே இருப்பார்.

சமீபத்தில் தோழர் சுந்தர மூர்த்தி அவர்களின் அலைபேசி அழைப்பு எடுத்து, என்ன தோழர் எப்படி என விசாரித்த போது, தோழர் வேலு இறந்து விட்டார் என்று சொல்லும் போது எனக்கு மூச்சே அடைச்சு போச்சு.

தோழர் சுந்தர மூர்த்தி சொன்னதை நம்பாமல், மற்றத் தோழர்களுக்கு போன் செய்து கேட்ட போது, தோழர் வேலு என்கிற பூபாளன் இந்த பூமியை விட்டு மறைந்து விட்டார் என உறுதிப் படுத்திக் கொண்டேன்.

என் வாழ்நாளில் மறக்க முடியாத மனிதம் என்றால் தோழர் வேலு அவர்களே.

தோழர் வேலு கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் என பன்முக தன்மை கொண்ட வராக இருந்தாலும் களப் போராளியாக இருப்பதில் தான் அவருக்கு பிடித்தம்.

தோழர் வேலு அவர்களை பிரிந்து வாழும் மகள் நிலோபர் மற்றும் மனைவி றஜிதா ஆகியோருக்கு எப்படி ஆறுதல் கூற முடியும்..

போராளிகள் புதைக்கப்படுவது இல்லை விதைக்கப்படுகிறார்கள் .


.

கண்ணீரோடு

தடா ஜெ அப்துல் ரஹிம்

இந்திய தேசிய லீக் கட்சி

மாநில தலைவர்



# தோழர் வேலு:
# போராட்டம் எங்கேயோ அங்கே...

## மு.நித்தியானந்தன்




*'சிறையின் சுவர்களுக்கு மேலால்,*
*சூழப்பட்டிருந்த முள்வேலிக்குள்*
*நிலவு சிக்கிக்கொண்டுவிட்டது.*
*நாங்களோ,*
*பாடல் இசைத்தும்,*
*விவாதித்தும்,*
*புரட்சிக்கனவுகளில்*
*எங்களை இழந்திருந்தோம்.'*

*- தெலுங்குக் கவிஞர் வரவர ராவ்*

'துப்பாக்கிக் குழலிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது.' என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரை மண்டபத்தின் முன்னால் நாங்கள் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மாஓ பிரிவு, அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டி ருந்தது. ஆனால், 1971 இல் ஜே. வி. பி. யின் ஆயுதக் கிளர்ச்சியின்போது, தென்னிலங்கையில் சிங்கள இளை ஞர்களின் சடலங்கள் களனி கங்கையில் மிதந்தன.

1980 ஆண்டுக் காலப்பகுதியில் சென்னையில் நான் நின்றபோது, நக்சலைட்டு களின் வேட்டைக்காடாய் தமிழகம் மாறியிருந்ததைப் பார்த்தேன்.

'நக்சலைட்டுகள் ஏன் உருவாகுகிறார்கள்?' என்பதுபற்றி, இந்திய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரவை அக்காலப் பகுதியில் ஆய்வு நடத்தியது. 'கிராமப் புறங் களில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள்' என்பது பற்றிய அறிக்கையை அது வெளியிட் டிருந்தது.

'தமிழ்நாட்டில் வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நக்சலைட் நடவடிக்கைகள் அதிகரிப்பதற்குக் காரணம், அந்த மாவட்டங்களில் உள்ள நிலமில்லாத விவசா யத் தொழிலாளர்களின் மோசமான நிலைமைதான். பெரும்பாலும் ஹரிஜனங் களான இந்த விவசாயக்கூலிகள், பேராசை பிடித்த வட்டிக்காரர்களாலும், நிலச்சு வாந்தர்களாலும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். கொத்தடிமை முறை சகஜ மாக உள்ளது. குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படுவது இல்லை. தமிழ்நாட்டில் நடந்த நக்சலைட் நிகழ்ச்சிகளில் காணப்பட்ட முக்கியமான போக்குகளில் ஒன்று - உள்ளூர் நிலப்பிரபு, வட்டிக்கார சக்திகளுக்கு எதிராக, நக்சலைட்டுகள் நடத் திய தாக்குதலில் பாதிக்கப்படும் கிராமப் பணக்காரர்கள் 'தற்பாதுகாப்புக் குழுக் களை' அமைத்துக் கொள்வதற்கு அரசின் அதிகாரபூர்வமான உதவியையும் ஆதரவையும் பெறும் நிலையில் இருக்கிறார்கள் என்பதாகும். ஆனால், இதற்கு மாறாக சிறு விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் ஒன்று திரண்டு

குறைந்தபட்சக் கூலியைப் பெறவும், கொத்தடிமைமுறை, தீண்டாமையை அகற்றவும், கடன் நிவாரணம் பெறுவதற்கும் அரசாங்கம் எந்த முயற்சியையும் எடுத்ததாகத் தெரியவில்லை' என்று ஒன்றிய அரசே ஆய்வறிக்கை வெளியிட்ட அரசியல் சூழல்.

1977 இல் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்து, இந்தியாவில் உள்ள அனைத்து நக்சலைட் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து விடலாம் என்று பரிந்துரைத்த பின்னும், தமிழ்நாடு அரசு மட்டும், அதனை ஏற்காது, நக்சலைட் கைதிகளை விடுதலை செய்ய மறுத்தது. போலீஸ் அராஜகம் தலைவிரித்தாடிய ஓர் அவலச் சூழலில், பூபாளன் என்னும் தோழர் வேலு என்ற அரசியல் புரட் சிக்காரன் தர்மபுரியில் பிறப்பெடுக்கிறான்.

கோர்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக, கூலி உயர்வு கோரித் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தொடர்ந்து போராடிய புரட்சிகர இளைஞனாகத் தோழர் வேலு, புரட்சிகர அரசியலில் கால் பதிக்கிறார். அன்று தொடங்கிய அவரின் அரசியல் பயணம் இறுதிவரை தொடர்ந்தது.

அவர் நெருப்பாற்றில் நீந்தியிருக்கிறார். தர்மபுரியில் பாலக்காடு சம்பவம் ஒன்றில் வெடிகுண்டு வைத்தார் என்ற ஜோடிப்பு வழக்கில் தோழர் வேலு நான்கு ஆண்டு காலம் சிறைவைக்கப்பட்டு, பிணையில் வருவதும் போவதுமாக பத்து ஆண்டுகள் கொடிய அடக்குமுறையை எதிர்நோக்கினார். ஆந்திராவில் நக்சலைட் சதி வழக்கில் ஆஜரான கே. ஜி. கண்ணபிரான் என்ற மனித உரிமை வழக்கறிஞர், அந்த வழக்கினை ஆரம்பித்தபோது தனக்கு 45 வயது என்றும், வழக்கு முடிவுக்கு வந்தபோது தனக்கு 60 வயது ஆகிவிட்டது என்றும் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

தோழர் வேலுவின் நீண்டகாலச் சிறைவாசம் அவருக்குச் செழுமையான அனுபவங்களைத் தந்து, அவரைப் புடம் போட்டிருக்கிறது. சிறைச்சாலையில் அவர் சந்திக்க நேர்ந்த ஈழவிடுதலைப் போராளிகளின் அரசியல் வறுமையைப் பற்றி தோழர் வேலு விரிவாகவே என்னிடம் பேசியிருக்கிறார். சக அரசியல் கைதிகளின் நலனுக்காக அவர் நிறையவே உழைத்திருக்கிறார். அவரை எங்கே நிறுத்தினாலும், அவரது போராட்டக்கனல் ஒருபோதும் அணைந்ததில்லை.

வெற்று சுலோகங்களை உச்சாடனம் செய்யும் போலிப் புத்திஜீவிகளின் கூடாரத்திலிருந்து அவர் வெகுதொலைவில் நிற்பவர். பேச்சுக்கும் செயலுக்கும் பேதம் தெரியாத பெருமகன் தோழர் வேலு. நம் காலத்தில் நம்முடன் இத்தகைய மாசற்ற மனிதன் வாழ்ந்து சென்றிருக்கிறான் என்பதை நினைக்க மனம் சிலிர்க்கிறது. இத்தகு பெருமனிதர்கள் எப்போதாவதுதான் தோற்றம் தருகிறார்கள். அந்த மனிதர் என் வீட்டிற்கு வந்தபோதெல்லாம் சூரியனைப்போல ஒரு பிரகாசம் வீட்டில் நிறைவதை உணர்ந்திருக்கிறேன். சொந்த சகோதரனுக்கும் மேலான பாசத்துடன், மனம் விட்டுக்கதைத்தும், சிரித்தும் உறவாடிய நாட்களைத் துயரத்தோடு நினவுகூர்கிறேன். இனம் புரியாத நம்பிக்கையை அள்ளி வீசுபவராகத் திகழ்பவர். மனிதத்துவத்தின் சொரூபமாக அவர் மிளிர்ந்தார்.

அமரந்தாவின் நெருக்கமான இலக்கிய நண்பராக இருந்திருக்கிறார். மார்த் தாத்ராபா எழுதிய 'நிழல்களின் உரையாடல்' என்ற அர்ஜென்டினிய நாவலை அமரந்தா தமிழில் மொழிபெயர்த்திருந்தார். லத்தீன் அமெரிக்க இலக்கியங்




களைத் தமிழில் தருவதைப் பேரிலக்காகக் கொண்டு செயற்படுபவர் அவர். 'நிழல்களின் உரையாடல்' நாவலை விமர்சனம் செய்யுமாறு தோழர் வேலு அந்த நாவலை என்னிடம் தந்திருந்தார். விரிவான விமர்சனமொன்றை ஈஸ்ட் ஹாம் , ட்ரினிட்டி மண்டபத்தில் செய்திருந்தேன். அந்த நாவலின் எனது மதிப்பீட்டினை, தோழர் வேலு பாராட்டிப் பேசியது குறித்து நான் மன நிறைவுற்றேன்.

தோழர் வேலு கூர்மையான வாசகர். அம்பேத்கரிய, மார்க்சிய நூல்களைத் தொடர்ந்து பயில்பவர்.முற்போக்கு இலக்கியங்களின் நல்வாசகன். விளிம்புநிலை மாந்தர், ஆதிவாசிகள், ஏகாதிபத்தியப் பொருளாதாரம் என்பன அவருக்கு உவப்பான வாசிப்புப் பரப்பாக இருந்தது. 'வெர்ரியர் எல்வினும் அவரது பழங்குடிகளும்' என்ற ராமச்சந்திர குஹா எழுதிய நூலை அவர் வாசித்து, வெகுவாக அதனைச் சிலாகித்துக் கூறியுள்ளார். அவருடைய புத்தக அலுமாரி கனதியான, அறிவார்ந்த நூல்களால் நிறைந்திருந்தது. தமிழகத்தில் அவ்வப்போது வெளியாகும் நல்ல மொழிபெயர்ப்பு நூல்களை, உடனுக்குடன் தெரிந்து அறிமுகம் செய்பவர் வேலு.

லண்டனில் நடைபெறும் அரசியல், கலை இலக்கியக் கூட்டங்களில் தோழர் வேலு எப்படியும் பிரசன்னமாகியிருப்பார். நூல் விமர்சனங்களில் கூர்மையான தனது பார்வையை முன்வைப்பார். தமிழ்ப் பிரபாவின் 'பேட்டை' என்ற நாவலை விமர்சிக்கையில்,'ஒடுக்கப்பட்ட மக்களின் மறுக்கப்பட்டிருந்த பேட்டை தமிழ் இலக்கியங்களில் வகைப்படுத்தப்பட்ட நிலப்பகுதியில் இல்லாத பகுதி. எந்தவிதத் திணைக் கோட்பாடுகளுக்கும் உட்படாதது.இந்தப் பேட்டையில் உள்ள மக்களும் அவர்களின் வாழ்க்கையும் மொழியும் பொதுப்புத்திகளில் சித்திரிக்கப்பட்ட வகைமாதிரி அல்ல' என்று நுணுக்கமான தன் வர்க்கப்பார் வையை முன்வைப்பவர்.

லண்டனில் நடைபெற்ற மிகப்பல இலக்கிய, அரசியல் கூட்டங்களில் நாங்கள் பங்குபற்றிப் பேசியிருக்கிறோம். பெரியார்மீது தமிழகத்தில் அவதூறுப் பிரச்சாரம் நிகழ்த்தப்பட்டபோது, அதனைக் கண்டித்து, நாங்கள் பவுசரின் நூல் விற்பனைக் கூடத்தில் கூட்டம் நடத்தியபோது, சீமானின் லும்பன் கூட்டம் நுழைந்து காடைத்தனம் பண்ணிய வேளையில், தோழர் வேலு, மீனாள் நித்தியானந்தன், ராகவன்

ஆகியோருடன் நானும் கடும் வாதத்தில் இறங்கினோம். நிலைமை மோசமான நிலையில் போலீசார் வந்து அந்தக் காடைக்கூட்டத்தை வெளியேற்றியது. மோத லாக வெடிக்கும் அந்தச் சூழலில் தோழர் வேலு, உறுதியாகவும் நிதானத்துடனும் தீர்க்கமாகப் பதில் அளித்தார். எந்தக் கூட்டத்திலும் தோழர் வேலுவின் பிரசன்னம் பிரகாசமாயிருக்கும்.

மகாராஷ்டிர மாநிலத்தில், பூனேயில், பீமா கொரேகானில் 2018, ஜனவரி முதலாந் திகதி தலித் செயற்பாட்டாளர்களுக்கும் இந்துத்துவ ஆதிக்கசாதி பேஷ்வா வலதுசாரிகளுக்கும் இடையே மூண்ட வன்முறையில், வழக்கறிஞர்கள், பத்திரி கையாளர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், சமூகப்போராளிகள் என 16 பேர் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர் என்று, பத்தாயிரம் பக்கக் குற்றப்பத் திரிகையைத் தாக்கல் செய்து சிறையில் அடைத்தனர். சிறையில் அடைக்கப்பட்ட 83 வயதான ஸ்டான் சுவாமி, போதிய மருத்துவ வசதி இன்றி சிறையிலேயே மரணித்தார். ஸ்டான் சுவாமி அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்திருந்தபோது, அவரோடு நான் உரையாடி இருக்கிறேன். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் ஒருவர் தவிர, 14 பேருக்குப் பிணை கிடைத்து, வெளியில் வந்துள்ளனர்.

சீரிய அம்பேத்கரியரான தோழர் வேலு, டீமு16 எனப்படும் இந்த இந்திய அரசின் அராஜகக் கைது நடவடிக்கைகளைக் கேட்டுக் கடும் அறச்சீற்றம் கொண்டி ருந்தார். 1818 ஆம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி பூனேயில், பீமா கொரே கானில், பார்ப்பனிய- பேஷ்வாக்கள் என்ற அடக்குமுறை ஆதிக்க சாதியின ருக்கும் , தீண்டப்படாத மஹார் சிப்பாய்களைக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெ னிக்கும் இடையே நடந்த போரில், பேஷ்வாக்களை வென்று, மஹார் குழுமத்தினர் வெற்றிவாகை சூடினர். அந்தப்போரில் மரணித்த மஹார் இனச் சிப்பாய்களுக்கு வெற்றித் தூணும் அந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. பாபாசாஹிப் அம்பேத்கர் 1927 ஆம் ஆண்டு, ஜனவரி முதல் திகதி பீமா கொரேகானுக்குச் சென்று, மறைந்த மஹார் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியுள்ளார். ஒவ்வோரா ண்டும் தலித் அமைப்பினர் அங்கு கூடிச் சங்கமிக்கும் களமாக அது மாறியது. அந்த வெற்றித் திருநாளின் 200 ஆவது ஆண்டு நிறைவினை, 2018 ஜனவரி முதலாந் திகதி பெரு மளவில் தலித் மக்கள் திரண்டு கொண்டாடிய வேளையில்தான், பேஷ்வாக் குண்டர்கள் திட்டமிட்டு வன்முறையில் ஈடுபட்டு, கலவரத்தை உருவாக்கினார்கள். இக்கலவரத்தை உருவாக்கி, பிரதமரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர் என்று சமூகப் போராளிகளைக் கைது செய்த செயலால் தோழர் வேலு பெரும் மனக்கிலேசங் கொண்டிருந்தார். கைது செய்யப்பட்டிருந்த போராளிகளில் ஒருவ ரான புரட்சிகரத் தெலுங்குக் கவிஞரான வரவர ராவ் அவர்கள் தோழர் வேலுவிற்கு மிகவும் பரிச்சயமான தோழராவார். ஆயிரம் மைல் தொலைவில் இருந்தாலும், கைது செய்யப்பட்ட தோழர்களின் சிறைத் துயரைத் தோழர் வேலு நெஞ்சில் சுமந் தார். பெருந்துயரமும் சினமும் அவரை ஆட்கொண்டிருந்தன. போராட்டம் எங்கே யோ, அடக்குமுறைகள் எங்கேயோ அங்கெல்லாம் தோழர் வேலுவின் இதயம் ஊன்றிநின்றது.

முற்போக்குச் செயற்பாட்டாளர்களை மாஓயிஸ்டுகள் என்று முத்திரை குத்தி,

அவர்களுக்குப் பிணையும் வழங்காது, போலிஸ், அரசு, நீதிமன்றம் அனைத்தும் இணைந்து நடத்திக் கொண்டிருந்தஅராஜகத்தைப் பார்த்து, தோழர் வேலு மனங் கொதித்தார்.

சிறைவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் சிறையில் மோசமாக நடத்தப்பட்டு வருவதைக் கண்டு அந்த நல்ல மனிதரின் நெஞ்சம் வாடியது. இந்த வழக்கின் போக்கினை தோழர் வேலு தொடர்ந்து அவதானித்து வந்தார். டில்லிப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் ஹனி பாபுவின் கைது பற்றி, ஆனந்த் டெல்டும்ப்டே, கௌதம் நவ்லகா பற்றித் தொடர்ந்து தனது முகநூலில் தோழர் வேலு பதிவிட்டு வந்தார். பொய்வழக்குப் போடப்பட்டு பத்தாண்டுகள் சிறைவாசம் அனுபவித்து, வெளியில் வந்த பேராசிரியர் சாய்பாபாவின் மறைவினைத் தனது பதிவில் கொணர்ந்து, அஞ்சலி செலுத்தியிருந்தார் தோழர் வேலு.



*பீமா கோரேகான் வன்முறையில் கைது செய்யப்பட்ட18 பேர்.*

பீமா கொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்ட சமூகச் செயற்பாட்டாளர்கள் அனுபவிக்கும் சிறைக்கொடுமைகளை விபரிக்கும், அல்பா ஷா எழுதிய The Incarcerations என்ற ஆங்கில நூலின் தமிழாக்கத்தை, தோழர் வேலு நம் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

ஜெய்பூர் மாவட்டத்தில், நக்சலைட் போராளியான தோழி சுகுணா இந்திராவதி நதியில் தன்னை மாய்த்துக் கொண்ட சோகத்தை, தோழர் வேலு பதிவு செய்திருந்தார்.

ஜவஹர்லால் பல்கலைக் கழகத்தில் கைது செய்யப்பட்ட உமர் காலித், சர்ஜீல் இமாம் ஆகிய மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட கொடுமையை, தோழர் வேலு தொடர்ந்து சாடி வந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் மியூசியத்தில் புராதன மத்திய கிழக்குக் கலைக்கூடத்தில், 'பாலஸ் தீனம்' என்ற சொல் காலமுரண் (anachronic) கொண்டது என்று நீக்கப்பட்டது என்ற செய்தியை, தோழர் வேலு நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.

நம் சாதாரண வாழ்வின் ஓட்டத்தில், நாம் கண்டுகொள்ளாமல் விடுகிற கோரங் களை, அவலங்களை, சூசகமான நச்சு வலைகளை, தோழர் வேலு நுணுக்கமாக அவதானித்து நம் அக்கறைக்கு உட்படுத்துகிறார்.

தனது முகநூலுக்கு 'மனிதன் முகம்' என்று அழகிய பெயரிட்டார். அவரது முகநூல் பதிவுகளில் வெற்று அரட்டைகள் இடம் பெறுவதில்லை. தாங்கள் சமைத்த பருப்பு சாம்பார், தாங்கள் விடுமுறையில் கொழும்பின் ஐந்து நட்சத்திர நீச்சல் தடா கங்களில் நீச்சல் அடிக்கும் படங்களை அவரின் முகநூல் பதிவில் காண்ப தற்கில்லை.

அவர் இந்த உலகின் மனிதன் முகமாக நின்றார். ஏழை மக்களின் கண்ணீரில் அவர் நிறைந்திருந்தார் அதிகாரத்திற்கு எதிரான ஆதிவாசிகளின் போராட்டத்தில் அவர் தோய்ந்திருந்தார். இந்தியச் சிறைகளில் வாடும் அரசியல் தோழர்களின் துயரில் அவர் கரைந்திருந்தார் அடிமட்ட மக்களின் ஜீவாதாரத்திற்கான குரல்கள் எங்கு ஒலித்தனவோ அங்கெல்லாம் அவரின் தாபம் நிறைந்திருந்தது. போர்த்துக் கலில் தொழிலாளர் போராட்டம் நடத்தியபோது, அவர்களின் நெருக்கமான தோழ ராகத் தன்னை இனங்காட்டினார். பாசிசப் போக்குகள் விடுதலை இயக்கத்தில் தலை தூக்கும்போதெல்லாம் அவற்றை எளிதாக இனங்காணும் நுண்ணறிவு கொண்டிருந்தார் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் அவர் என்றும் முன்னணியில் நின்றிருக்கிறார் அரசியல் கலந்துரையாடல்களில், எந்தப் பிரச்சி னையையும் தொழிலார் வர்க்கக் கண்ணோட்டத்தில் நின்று அணுகும் போக்கி லிருந்து அவர் விலகிச் சென்றது கிடையாது, மாற்றார் கருத்தை மதித்து, தனது தர்க்கத்தை அவர் வலியுறுத்துபவர். 'தேடிச் சோறு நிதந்தின்று' வாழும் வேடிக்கை மனிதரல்ல. அவர்மானிடர் இங்கு நல்ல வாழ்வு வாழும் அற்புதக் கனவினை நெஞ்சில் சுமந்து திரிந்தவர் அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்லும் வசீகரம் அவரிடமிருந்தது. அவர் வாழ்வெல்லாம் போராட்டமாயிருந்தது. இந்தியச் சிறைகளில் அவரின் இளவயது வாழ்க்கை கழிந்தது. பிரிட்டனில் அவருக்கு அகதி அந்தஸ்து கிடைத்து அவர் பிரிட்டிஷ் பிரஜை ஆனார். இந்திய அரசு இண்டர் போலுக்கூடாக அவரைப் பயங்கரவாதி என்று அவர்மீது நாடுகடத்தும் வழக் கைத் தொடர்ந்தது. இந்திய அரசு எந்த வழக்குகளை இவர்மீது தொடர்ந்ததோ, அதே வழக்குகளை முன்வைத்தே பிரித்தானிய அரசு, அவற்றை ஏற்றுக்கொண்டு அவருக்கு பிரித்தானிய பிரஜை என்று அங்கீகாரம் வழங்கியது.. ஆனால், அதே குற்றவழக்குகளை முன்வைத்து, தோழர் வேலு மீது இந்திய அரசு வழக்குத் தொடர்ந்தபோது, 'அகதியாய் இருந்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட மனு, பிரித்தானிய பிரஜை ஆன ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்காது அவர் மீதான குற் றச்சாட்டு வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்' என்று நீதி மன்றம் அறுதியிட்டது. தோழர் வேலுவின் நண்பர் வட்டம் அதிர்ந்து போனது.

மூன்றாண்டுகளுக்கு மேலாக நீடித்த வழக்கு இறுதியில் வெற்றிகரமாக முடிந்தது என்று தோழர் வேலு நீதிமன்றிலிருந்து எனக்கு அறிவித்தபோது நான் சிந்தை

நிறைந்தேன். ஆனால், இண்டர்போல் விரித்த வலையில் சிக்காது மீண்ட தோழர் வேலு, காலன் விரித்த வலையில் சிக்கிக்கொண்ட சோகம் நம் மனதைவிட்டு என்றும் அகலாது. எங்கெல்லாம் அநீதிக்கு எதிரான போராட்டம் ஒலிக்கின்றதோ, அங்கெல்லாம் மந்தகாசப் புன்னகையோடு நீ ஒளிர்வாய், என் தோழனே!

●



# வேலு மாமா விதைத்த அன்பு

- யுவராஜன்



நான் வேலுவின் மாமா மகன்.

நான் சென்னையில் வளர்ந்தேன். அப்பொழுது மாமா ஏற்கனவே லண்டனில் தனது வாழ்க்கையை அமைத்திருந்தார். தூரத்தில் இருந்தபோதிலும், அவர் எப்போதும் என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தார். என்னை ஊக்கப்படுத்தி, வழிகாட்டி, அமைதியாகவே நான் உலகைப் பார்க்கும் பார்வையை வடிவமைத்தவர்.

நான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, வேலைக்காக இங்கிலாந்துக்கு வந்தேன். ஆனால் பின்னோக்கிப் பார்க்கும்போது, அந்தப் பயணம் அப்போது தான் தொடங்கியது என்று என்னால் சிந்திக்கமுடியவில்லை. நான் இன்னும் சிறுவனாக இருந்த காலத்திலேயே இந்த விதையை மாமா என்னுள் விதைத்தார் என்று நான் உண்மையாக நம்புகிறேன். அவரது கதைகள், வாழ்க்கையைப் பற்றிய அவரது பார்வை, உலகத்தை அவர் திறந்த மனதுடன் அணைத்த விதம் இவையெல்லாம் அதற்குக் காரணம். நான் புதிய விஷயங்களை அறியவும், வளரவும், வாழ்க்கையை இன்னும் விரிவாகக் காண வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. அதிலும், என் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் அவர் மனமார்ந்த மகிழ்ச்சி அடைந்தார்.

நான் இறுதியாக இங்கே வந்தபோது, விமான நிலையத்தில் என்னை வரவேற்றவர் அவர்தான். எனக்குப் புதிதாகவும், சற்றே பயமூட்டுவதாகவும் தோன்றிய அந்த இடத்தில், அதே அன்பான புன்னகையுடன் அவர் நின்றிருந்தார்.

அவர் எனக்கு ஆதரவாக இருந்ததோடு மட்டும் இல்லாமல், என் ஒவ்வொரு சாத னையையும் கொண்டாடினார். நான் செய்த மிகச் சிறிய விஷயத்திற்குக் கூட அவர் பெருமைப்படுவார். மனிதர்களை உயர்த்திப் பேசவும், அவர்கள் மதிக்கப்படுகிறார் கள் என்ற உணர்வை ஏற்படுத்தவும் அவருக்கு இயல்பாக வந்தது.

மாமா அனைவருடனும் எளிதாக இணைந்து பழகக்கூடியவர். ஒருமுறை மட்டுமே சந்தித்தவராக இருந்தாலும், பல ஆண்டுகள் அறிந்தவராக இருந்தாலும், அவர் மனதில் நிற்கும் ஒரு தடத்தை விட்டுச் செல்வார். அவரது அன்பு இயல்பானது, அவரது தாராளம் நிலையானது, அவரது இருப்பு மறக்க முடியாதது.

எங்கள் குடும்பத்திற்கு, அவர் ஒரு உறவினரைத் தாண்டியவர். என் அம்மாவுக்கு, அவர் சொந்த தம்பியை போன்றவர் - ஆழமாக நேசித்தவர், முழுமையாக நம்பிய வர், மனதின் மிக அருகில் வைத்திருந்தவர்.

என் அப்பாவுக்கும் மாமாவுக்கும் மிகவும் சிறப்பான ஒரு பந்தம் இருந்தது. பல விஷயங்களில் அவர்கள் ஒரே மாதிரியாக இருந்தார்கள். இருவரும் அளவற்ற தாராளம் கொண்டவர்கள், மகிழ்ச்சியால் நிரம்பியவர்கள், தங்களின் வாழ்க் கையை முழுமையாக பிறருக்காக வாழ்ந்தவர்கள். சிறிய விஷயங்களில்கூட அவர்கள் ஒரே மாதிரி, எப்போதும் பிறரை முன்னிலைப்படுத்தி, தங்களைப் பின் னால் வைத்தவர்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என் அப்பா மறைந்தபோது, மாமா என் வாழ்க்கை யில் இன்னும் முக்கியமான இடத்தைப் பெற்றார். பல வழிகளில், நான் அவரில் என் அப்பாவையே கண்டேன். சில நேரங்களில், என் அப்பா தனது ஒரு பகுதியை மாமாவிடம் விட்டுச் சென்றார் போலவே உணர்ந்தேன்.

ஒவ்வொரு முறையும் நான் அவரைச் சந்திக்கும்போது, நாங்கள் இரவு நேரம் தாண்டியும் மணிநேரங்களாக அமர்ந்து பேசுவோம். அந்த உரையாடல்களில் பலவும் என் அப்பாவைப் பற்றியவையாகவே இருக்கும். நான் நினைவில் வைத் திருக்க முடியாத காலங்களின் கதைகளை அவர் பகிர்ந்து கொள்வார். அவரின் மூலம், நான் என் அப்பாவை முன்பு அறியாத விதங்களில் அறிந்து கொண்டேன். அந்த தருணங்கள் எனக்கு எல்லாமாக இருந்தன. இப்போது அவரை இழப்பது... என் அப்பாவை மீண்டும் ஒருமுறை இழப்பதைப் போலவே உணர்கிறேன்.

ஆனால் இந்த இழப்பிலும் கூட, அவர் தன்னைக் சுற்றி எவ்வளவு அன்பை உருவாக்கியிருந்தார் என்பதை நான் காண்கிறேன். பல ஆண்டுகளாக, அவர் இங்கே ஒரு வாழ்க்கையை மட்டுமல்ல, ஒரு குடும்பத்தையும் உருவாக்கினார், நட்பு களின் மூலம், அன்பின் மூலம், மனிதர்களுக்காக எப்போதும் அருகில் இருப்பதன் மூலம். அவர் தனது குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், அதையும் தாண்டி பல ருக்கும் அளவில்லாமல் கொடுத்தார். அமைதியாக உதவி செய்வதும், கஷ்டத் தில் இருந்தவர்களுடன் துணையாக நிற்பதும் - அதுவே அவர் இயல்பு.

கடந்த சில ஆண்டுகளில், அவருடன் அதிக நேரம் செலவிடும் அதிர்ஷ்டம் எனக் குக் கிடைத்தது. நாங்கள் ஒன்றாகப் பயணம் செய்தோம். சில நேரங்களில் மாதங் கள் முன்பே விடுமுறை திட்டங்களை அமைப்போம். அந்தத் திட்டங்கள் எனக்கு மிகவும் நினைவாக இருக்கும். அந்தத் தொலைபேசி அழைப்புகளை நான் இழப் பேன். அவர் எப்போதும் எனக்காக இருந்தார் என்ற அந்த நிச்சயத்தை நான் இழப் பேன். உண்மையில், நான் அவருக்கு அழைக்க காத்திருக்கவே மாட்டார், எப்போ

தும் முதலில் என்னை அழைப்பது அவர்தான்.

அவர் கொடுப்பதிலும், வலிமையிலும், அன்பிலும் நிரம்பிய ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். பல போராட்டங்களை எதிர்கொண்டபோதிலும், அவற்றை அமைதியான மனவலிமையுடன் சுமந்தார். எந்தத் துன்பமும் அவரது அன்பை குறைக்க அனுமதிக்கவில்லை.

அவர் மிகவும் சீக்கிரமாக எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார், இந்த வாழ்க்கையில் அவர் உண்மையில் பெற வேண்டிய ஓய்வை முழுமையாக அனுபவிக்காமல். ஆனால் இப்போது அவர் அந்த அமைதியை அடைந்திருப்பார் என்ற நம்பிக்கையை நான் பற்றிக்கொள்கிறேன்.

மாமா எல்லாவற்றிற்கும் நன்றி. உங்கள் அன்பிற்கும், வழிகாட்டுதலுக்கும், என்மீது வைத்த நம்பிக்கைக்கும், நான் ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு எனக்காக இருந்ததற்கும் நன்றி.

நீங்கள் ஆழமாக நேசிக்கப்பட்டவர். நீங்கள் ஆழமாக நினைவுகூரப்படுவீர்கள். நீங்கள் எப்போதும் எங்களுள் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள், நீங்கள் தொட்ட வாழ்க்கைகளில், நீங்கள் உருவாக்கிய நினைவுகளில், நீங்கள் விதைத்த அன்பில்.


நன்றி!

●



# நீ என்னிடமிருந்து வெகுதூரம் போய் விடமுடியாது.

## - கிருஷ்ணன்




தொண்ணூறுகளின் மத்தியில், நான் முற்போக்கு மாணவர் சங்கம், முற்போக்கு இளைஞர் அணி ஆகிய அமைப்புகளின் பத்திரிகையான 'முன்னோடி' ஆசிரியர் குழுவில் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். வருடத்திற்கு ஒன்றோ இரண்டோ இதழ் வரும். அதில் என்னுடைய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. சிறையில் இருக்கும் தோழர்களுக்கும் அவ்விதழ் சென்று சேரும். ஒரு முறை, அடுத்த இதழ் தயாரிப்பிற் கான கூட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது, மூத்த தோழர் கூறினார். சிறையில் தோழர் பூபாளன் உங்களைப் பற்றி விசாரித்தார். வெளியில் வந்ததும் உங்களைத் தான் முதலில் காண வேண்டும் என்றார். அவரும் ஒரு கவிஞர்தான் என்றார். எனக்கு ஆச்சர்யமும், மகிழ்ச்சியும்.

சில மாதங்களில் அவர் வெளி வருகிறார். அவரைக் காண்பதற்காக நான் காலை யிலேயே கிளம்பி சென்னை இராணி அண்ணா நகரில் உள்ள முன்னோடி அலுவலகத்திற்கு சென்று விட்டேன். தோழர்கள் மத்தியில் நின்று பேசிக் கொண்டிருக்கிறார். நான் வந்தவுடன் என்னை அறிமுகம் செய்கிறார்கள். அதே சிரித்த முகத்துடன் என் கைகளைப் பற்றி அழுத்தமாக குலுக்குகிறார். எனக்கு அன்றுதான் சந்திக்கும் புதிய மனிதர் என்பதான எண்ணமே இல்லை. காலங்கா

லமாக பழகிக் கொண்டிருந்தவரை மீண்டும் சந்திப்பது போன்ற உணர்வு. நீங்கள் திருமங்கலம் அருகேயுள்ள பாடி பகுதிதானே, இருங்கள் நானும் வருகிறேன் என் வீடு வில்லிவாக்கம் தான் என்கிறார்.

அன்று துவங்கிய எங்கள் நட்பு, அமைப்பு உறுப்பினர்கள் என்ற இடத்தில் துவங்கி, கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்கள். மார்க்சியத்தின் மீது பற்று கொண்டவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக சக மனிதர்களை, அவர்களின் வாழ்வை துன்ப துயரங்களைக் குறித்து அதிக அக்கறை கொண்ட மனிதர்கள் என்பதாக இருவர் மீதான இருவரின் அன்பும், நெருக்கமும் அதிகமானது. எந்தச் சூழலில் எப்படியாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டு நட்போடு இருப்பது என்பது எழுதிக்கொள்ளாத விதிகளாக கடைசி வரை இருந்து வந்தது.

அமைப்புத் தோழர்களே பலமுறை கிண்டலாக விளையாட்டாக குறிப்பிடுவார்கள் "இரண்டு கடோத்கஜன்களும் (அப்பொழுது நானும் ஓரளவு குண்டாகத்தான் இருந்தேன்) ஒன்றாகத்தான் எங்கும் போவீர்களோ" என. சென்னையில் நடைபெற்ற இடதுசாரி நூல் வெளியீட்டு விழாக்கள், விமர்சனக் கூட்டங்கள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் என இருவரும் அலைந்து திரிந்த நாட்கள்தான் என் வாழ்வின் அற்புதமான நினைவு கொள்ளத்தக்க தருணங்களாக இருந்தன. நாங்கள் இருவ ரும் ஒரே கிளையில் ஒன்றாக அமைப்பு வேலைகள் செய்தவர்கள் இல்லை. ஆனா லும் அதனைத்தாண்டி, எங்கள் நட்பு தொடர்ந்து கொண்டே இருந்தது.

தோழர் வேலு, தொழிலாளர் அமைப்பினில் வேலை செய்தார். டன்லப் ஆலையை மூடும் முடிவுகளுக்கு எதிராக தொழிலாளர் போராட்டங்களில் கலந்து கொள்வது, கும்முடிப்பூண்டியில் துவங்க இருந்த டூபாண்ட் ஆலைக்கு எதிரான போராட்டங்கள் என 2000 ம் வரை சென்னையைச் சுற்றி நடந்த பல தொழிலாளர் போராட்டங்க ளில் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டு அது தொடர்பான பல அமைப்பு வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்.

சென்னையில் நடந்த அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டுக் கூட்டமைப்பின் வேலை கள் பலவற்றில் தோழரோடு சேர்ந்து செயல்பட்டிருக்கிறேன். கல்கத்தாவில், மக்கள் யுத்த அமைப்புக்கு எதிரான தாக்குதல்களை கண்டித்து நடந்த மிகப் பெரிய பேரணி பொதுக்கூட்டத்திற்கு இருவருமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த பல தோழர்களுடன் கலந்து கொண்டோம்.

ஒன்றைக் குறிப்பிட வேண்டும். தோழர் ஒரு சுதந்திரமான மனிதர். தன் சுதந்தி ரமான சிந்தனைக்கு சரியெனப்பட்டதை தயங்காமல் யாருடனும் சேர்ந்து செய் யக்கூடிய மன இயல்பினர். மாறுபட்ட கண்ணோட்டங்களை பெரிதுபடுத்தவோ, அதற்காக தீவிரமாக சண்டையிடவோ கூடியவராக அவரை நான் கண்ட அனுப வம் எனக்கில்லை. மாநாடு, ஊர்வலங்களுக்காக சென்ற இடங்களில் சட்டெனக் காணாமல் போய்விடுவார். முடியும் தறுவாயில் எங்கிருந்தோ வந்து சிரித்துக் கொண்டே கைகோர்த்துக் கொள்வார்.

அது மூவர் தூக்கு தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட நேரம். மரணதண்டனை ஒழிப்பு பற்றிய ஒரு ஆவணப்படம் எடுக்க வேண்டும் என நானும் பூபாளனும் விரும்பினோம். பூபாளன் வழக்கறிஞர் சங்கரசுப்புவை தன் வழக்கு தொடர்பாக வாரம் ஓரிருமுறை சென்று பார்த்துக் கொண்டிருந்தார். சங்கரசுப்பு அப்பொழுது அண்ணாநகரில்

இருந்தார். பலமுறை பூபாளனுடன் நானும் அவர் இல்லத்திற்குச் சென்று உள்ளேன். பூபாளன் "வழக்கறிஞர் சங்கரசுப்பு, வழக்கறிஞர் துரைசாமி போன்றோரிடம் நேர் காணலுக்கு ஏற்பாடு செய்து தருவது என் பொறுப்பு" என்றார். நான் கேள்விகளைத் தொகுத்துக் கொண்டுவர ஒப்புக் கொண்டேன். வீடியோவிற்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுது, செவ்வாய்ப்பேட்டை பாலன் என்ற தோழர், அப்பொழுதுதான் செவ்வாய்ப்பேட்டையில் வீடியோ கவரேஜ் மற்றும் புகைப்பட ஸ்ரூடியோ துவங்கியிருந்தார், இருவருமாக செவ்வாய்ப்பேட்டை போய் தோழரைச் சந்தித்து எங்கள் திட்டத்தைக் கூறினோம். அவருக்கும் அவ்விசயத் தில் மிகுந்த ஆர்வம். தான் வீடியோ எடுப்பது, எடிட்டிங் என அனைத்து தொழில் நுட்ப விசயங்களையும் பார்த்துக் கொள்வதாகக் கூறினார். எல்லாம் சரியாகப் பொருந்தி வந்தது. கடைசியாக அமைப்பில் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். எங்களுக்கு மரணதண்டனை ஒழிப்பு என்கிற எங்கள் கருத்தை ஏற்றுக் கொள்வார் களா என்ற சந்தேகம். ஆனாலும் அமைப்பிற்கு தெரிவிக்காமல் செய்யக்கூடாது எனப் போய் பேசினோம். நீங்கள் ஆவணப்படம் எடுக்க நினைப்பது நல்ல விசயம். மூவர் தூக்கு தண்டனையை எதிர்த்து ஆவணப்படம் எடுங்கள், ஆனால் மரணதண்டனை கூடாது என்கிற கருத்தை வலியுறுத்தி அதைச் செய்ய வேண் டாம் என்றார்கள். எதிர்பார்த்ததுதான்.

மிகுந்த ஏமாற்றத்துடன் வெளியே வந்தோம். ஒருவருக்கு ஒருவர் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் மிகுந்த சோர்வோடு ஒரு இரவு வேளையில் வடபழனியில் நடந்து கொண்டிருந்தோம். பூபாளன் தோளில் கைபோட்டு என்னிடம் சொன்னார். "கிருஷ்ணா கவலையை விடு நாம எடுப்போம். வெளி வரட்டும். பின்னால் சுயவிமர் சனம் செய்து கொண்டால் போச்சு" என்றார். எனக்கு சிரிப்பு வந்தது. நீண்ட நேர் காணலை வழக்கறிஞர் தோழர் சங்கரசுப்புவிடமும், வழக்கறிஞர் துரைசாமி யிடமும் அடுத்தடுத்து வேகவேகமாக எடுத்தோம். ஆனால் சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டிய நிலை வரை செல்லவில்லை. அது ஏனோ பாதியிலேயே நின்று போனது.

'முன்னோடி' இதழ் அப்பொழுது இராயப்பேட்டையில் உள்ள ஒரு அச்சகத்தில்தான் அச்சடிக்கப்படும். அந்த அச்சகத்திற்கு இருவரும் ஒன்றாக பல நாட்கள் அலைந்தி ருக்கிறோம். சென்னையின் கொளுத்தும் வெயிலில் பலநாட்கள் தோழனோடு சேர்ந்து சுற்றுவதே சுகம் எனச் சுற்றியிருக்கிறேன். பசிக்குது தலைவா! என்றால், சட்டென அருகில் எங்கேனும் திருமண மண்டபமோ, கோயில் அன்னதானமோ எது தெரிந்தாலும் வா கிருஷ்ணா ஒன்றும் பிரச்னையில்லை, எல்லாம் நம்ம மக்கள்தான் என இழுத்துக் கொண்டு போய் விடுவார். அவரோடு செல்கையில் நடந்த சுவாரசி யமான பல சந்தர்ப்பங்கள் இன்றும் நேற்று நடந்தவை போல மனதில் உள்ளன.

பெண்கள் விசயத்தில் தோழர்கள் மிகவும் சீரியசானவர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஒரு முறை நாங்கள் சில தோழர்களுடன் இரயில்வே கிரா சிங்கை கடப்பதற்காக காத்திருக்கிறோம். கேட் மூடப்பட்டுள்ளது. சில நிமிடங்க ளில் வெளிமாநிலம் செல்லும் தொடர்வண்டி கிராசிங்கைத் தாண்டிச் செல்கிறது. அதில் கூட்டமாகச் செல்லும் இளம் பெண்கள் பலர் எங்களை நோக்கி கையசைக் கிறார்கள். நாங்கள் அனைவரும் தலைகுனிந்து கொள்கிறோம். சட்டெனத் திரும்பி பார்க்கிறேன். பூபாளன் அப்பெண்களுக்கு கையசைத்துக் கொண்டே

என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். நான் நினைத்துக் கொண்டேன், நம்மை நோக்கி பயணம் போகும் மகிழ்ச்சியில் கையைசைக்கும் சக மனிதர்களின் மகிழ்ச்சியில் நாமும் கலந்து கொண்டு அவர்களின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டு அவர்களை உற்சாகப்படுத்துவது எத்தனை அற்புதமான விசயம். நாம் ஏன் இந்தக் கோணத்தை நினைத்துக் கொள்ளவேயில்லை.

தமிழ்நாட்டிலேயே கூகிவா தியாங்கோவின் "சிலுவையில் தொங்கும் சாத்தான்" மொழிபெயர்ப்பு நாவல் வெளிவந்தவுடன் படித்த முதல் ஆளாக அன்று நானாகத் தான் இருந்திருப்பேன். அந்நூல் வெளியீடு சென்னை நீதிமன்றத்திற்கு எதிரே யுள்ள ஒரு அரங்கில்தான் நடந்தது. பூபாளன்தான் அது குறித்து என்னிடம் கூறி அழைத்துச் சென்றார். அவருக்கு அந்நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியரை நன்கு தெரியும், நூல் வெளியிட்டவுடன் ஒரு பிரதி வாங்கி என்னிடம் தந்து "படித்துவிட்டு எனக்குத்தா கிருஷ்ணா!" என என்னிடம் கொடுத்தார். ஒரே மூச்சில் அன்று அந்த நாவலை நான் படித்தேன்.

அதே போல்தான் ஆ. இரா. வேங்கடாசலபதி தொகுப்பில் காலச்சுவடு பதிப்பக வெளியீடாக 2000ம்ஆண்டில் வந்த "புதுமைப்பித்தன் சிறுகதைகள்" தொகுப்பை வாங்கி என்னிடம் தந்தார். இன்றும் அவர் ஞாபகமாக என் புத்தக அலமாரியில் உள்ளது. அடிக்கடி படைப்பு முயற்சிகள், அதில் உள்ள சிக்கல்கள், தமிழ்ச் சிறுக தைகள், கவிதைகள் குறித்து எங்களிடையே பல உரையாடல்கள் பல நாட்கள் நடந்துள்ளன.

2000த்தின் இறுதியில் நாடு முழுதும் தமிழ்நாடு உட்பட பல தோழர்கள் போலி மோதல்களில் கொலை செய்யப்படுகிறார்கள். தமிழகத்திலும் இரவீந்திரன் போன்ற தோழர்கள் தியாகி ஆகிறார்கள். இவற்றால் மன உளைச்சலுக்கு உள் ளான நான் என் செயல்பாடுகளை மெல்ல நிறுத்திக் கொண்டு மெல்ல வெளியேறு கிறேன். அப்பொழுதும் பூபாளனோடான எனது நட்பு தொடர்கிறது. அவர் எப்பொ முதும் போல் என் வீட்டிற்கு வருவதும். நான் அவர் வீட்டிற்கு போவதுமாக எங்கள் நட்பு தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

என் உறவினர்கள் அனைவரையும் பூபாளனுக்குத் தெரியும், அனைவருடனும் நன்கு நெருங்கி அன்போடும் வாஞ்சையோடும் பழகக்கூடியவர். அவருடைய அம்மாவையும், மாமாவையும் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களும் என் மீது மிகுந்த அன்பு பாராட்டியவர்கள். அவர் அம்மா நேரம் வாய்க்கும் பொழுதெல்லாம். பூபாளனை சிறையிலிருந்து மீட்பதற்காக அவர் பட்ட பாட்டினை என்னிடம் கூறு வார். நீதிமன்றத்திற்கும், சிறைச்சாலைக்கும் வழக்கிற்காகவும் அலைந்ததைப் பற்றிய பல கதைகளை பலநாட்கள் கேட்டிருக்கிறேன். அவரின் அம்மாவும், மாமாவும் இல்லை என்றால் நானறிய அவர் சிறையிலிருந்து வெளிவந்திருக்கவே முடியாது. மர்க்சிம் கார்க்கியின் தாயையும், பேரறிவாளனின் அம்மா அற்புதம்மா ளின் கதைகளையும் கேட்டிருக்கிறோம். பூபாளனின் அம்மாவின் கதை இவற்றிற்கு எந்த விதத்திலும் குறைந்தவை அல்ல. பூபாளனிடம் பேசும் பொழுதெல்லாம் நான் சொல்வது ஒன்றுதான். எழுதுங்கள், எழுதுங்கள். அதிகமாக இல்லாவிட்டாலும் சிறுசிறு பதிவுகளாகவேனும் எழுதுங்கள் என்பேன். கடைசி வரை அவர் பேஸ் புக்கில் தகவல்களை பார்வர்டு செய்பவராக மட்டுமே இருந்துவிட்டார். அவரின் அனுபவங்களும், அவரின் அம்மாவின் கதைகளும் எழுதப்படாத காற்றில் கரைந்த

இதிகாசங்களாகவே இருந்துவிட்டன.

என் திருமணத்திற்கு முன்பு ஒரு வருடம் நான் பாண்டிச்சேரியில் வேலை செய்தேன் ஒரு முறை பூபாளன் என்னைப் பார்க்க பாண்டிச்சேரி வந்தார். ஒரு நாள் காலை வந்திருந்து மறுநாள் காலை திரும்பிச் செல்லும் திட்டத்தோடு வந்தார். என் அறையில் அமர்ந்து மாலை வரை பேசிக் கொண்டிருந்தோம். மாலை, “கிருஷ்ணா பாண்டிச்சேரி வந்துவிட்டு ஒரு பீர் கூடச் சாப்பிடாமல் போனால் மரியாதை இல்லை வா நல்ல பார் ஒன்றுக்கு போய் நல்ல பீராக குடித்துவிட்டு சினிமாவுக்கு போய் வரலாம்” என்றார். எனக்குப் பழக்கமில்லை. தோழனின் விருப்பத்திற்காக அவரோடு ஒரு திரையரங்கிற்கு எதிரேயுள்ள பாருக்குச் சென்றோம். அதிமாக வெல்லாம் அவர் குடித்ததாகத் தெரியவில்லை. எதிரே இருந்த தியேட்டரில் அப்பொழுது அஜித்தின் சிட்டிசன் படம் வெளிவந்து ஓடிக் கொண்டிருந்தது. தலை வனுக்கு தியேட்டருக்குள் போவதற்குள் நிலை தடுமாறிவிட்டது. வீதியிலேயே வாந்தி எடுத்துவிட்டார். கைத்தாங்கலாக அழைத்துச் சென்று இருக்கையில் அமர வைத்தேன். பிறகு படம் முடியும் வரை தூங்கிப் போய்விட்டார். படம் முடிந்த தும் இரவு நேரப் பாண்டிச்சேரியில் அவரை என் சைக்கிளின் பின்னால் உட்கார வைத்து என் அறைவரை மிதித்துச் சென்றேன்.

என் தங்கை திருமணம் காதல் திருமணம். 2000ல் மதுரை அருகேயுள்ள திண் டுக்கல் நத்தம் கிராமத்தில் நடந்தது. நான் திருமண வேலைக்காக முன்பே கிளம் பிவிட்டேன். பூபாளன் திருமணத்திற்கு ஒரு நாள் முன்பாக மதுரை வந்துவிட்டார். நான் கிளம்பும் பொழுது என்னை வழியனுப்பி வைக்க வீடு வந்திருந்தார். எங்க ளுடன் எங்கள் பைகளில் ஒன்றை தூக்கிக் கொண்டு என் தோள் மீது கை போட் டுக் கொண்டு தள்ளிக் கொண்டு வந்தவர். காதில் கிசுகிசுத்தார். “நான்கு மையக்கமிட்டி உறுப்பினர்கள் ஆந்திர காவல்துறையால் போலி மோதலில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.” மனம் நொடியில் கணத்துப் போனது. அவரே என்னை சமாதானமும் செய்தார். “விடு கிருஷ்ணா, போ கல்யாண வேலைகளைப் பார்” என்றார்.

என் திருமணத்தில், என் தோழனாக அவர் அம்மா மற்றும் மாமாவுடன் இரண்டு நாட்களும் வந்திருந்தார். அப்பாவாலும் தங்கையாலும் பார்த்துக் குடும்பத்தால் நடத்தப்பட்ட சடங்கு சம்பிரதாயங்கள் கொண்ட திருமணமாக என் திருமணம் நடைபெற்ற பொழுதிலும், தன் எந்தக் கருத்தையும் வெளிக் காட்டாமல் மிகுந்த சந்தோசத்துடன் கலந்து கொண்டார். அதன் பிறகும் பலநாட்கள் என் வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருந்தார். 2002ல் திடீரென அவரிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. எங்கும் அவர் குறித்த எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. தோழர்கள் பலரிடமும் தொடர்ந்து விசாரித்துக் கொண்டே இருந்தேன். கடைசியில் ஒரு நாள் ஒரு தோழர் மூலம் அவர் லண்டன் சென்றுவிட்டார் என்பதை அறிந்தேன்.

அதன் பிறகு 2011 அல்லது 2012 வாக்கில் லண்டனில் நடைபெற்ற புத்தகம் குறித்த சில கூட்டங்களில் அவர் இருப்பதான புகைப்படங்களை பேஸ்புக்கில் கண்டேன். தொடர்பு கொள்ள தொலைபேசி எண் கேட்டு முயற்சித்தேன் பலனின்றி சில வருடங்கள் நகர்ந்தன. கடைசியில் அலுவலக வேலை தொடர்பான ஒரு சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொள்ள 2014ல் லண்டன் வந்த பொழுது தோழர் யமுனா ராஜேந்திரன் மூலமாக அவர் தொடர்பு கிடைத்தது. லண்டனில் நேரில் சந்திக்கும்

வரை அவருக்கு தன்னைப் பார்க்க வரும் நபர் யாரென்றே தெரியாமல் என்னை வந்து சந்தித்தார். அந்த முறை நான் அங்கிருந்ததே ஐந்து நாட்கள்தான். அதில் இரண்டு நாட்களை அவருடன் கழித்தேன். அவர் இணையர் தோழர் ரஜிதாவின் அறிமுகம் கிடைத்தது. பள்ளி செல்லும் சிறுமியாக அவர் மகளைக் கண்டேன்.

எங்களை அழைத்துச் செல்ல அவர்களின் காரில் தோழர் ரஜிதாவும் சின்னக் குழந்தை நிலோபரும், அவர் வீட்டு அருகில் உள்ள இரயில் நிலையத்திற்கு வந்திருந்தார்கள். தெருவில் வைத்தே பரஸ்பர அறிமுகங்கள் நடந்தன. “உங்களைப் பற்றி நிறைய கதைத்திருக்கிறார் உங்கள் தோழர், உங்களை நேரில் சந்தித்ததில் சந்தோசம்” என்றார் ரஜிதா.

வேலு சிரித்துக் கொண்டே என்னிடம் சொன்னார், “கிருஷ்ணா திருமணத்திற்கு முன்பு என் கவிதைகளை அனைத்தும் வலுக்கட்டாயமாக ரஜிதாவிற்குச் சொல்வேன், அவர் ஐயோ என்னை விட்டுவிடுங்கள் உங்களை திருமணம் செய்து கொள்கிறேன். ஆனால் உங்கள் கவிதைகளைச் சொல்லி என்னைப் படுத்தாதீர்கள்” என்பார் என எங்கள் அறிமுகம் நடந்த நாள் இன்றும் பசுமையாக மனதில் உள்ளது,

இரண்டு நாளும் லண்டனை வேலுவுடன் சுற்றினேன். அவர் மகளை பள்ளிக்கு அவள் தோழன் ஒருவனுடன் நாங்கள் கொண்டு விட்டோம். மார்க்ஸ் சமாதி முதல் கிரீனிச் வரை லண்டனின் அனைத்து போக்குவரத்து வாய்ப்புகளிலும் அரசியல் மற்றும் குடும்ப விசயங்களை பேசிக் கொண்டே சுற்றினோம்.

அங்கும் அவர் இந்தியன் வொர்கர்ஸ் மூவ்மென்ட், சவுத் ஏசியன் சாலிடாரிட்டி கழகம் ஆகியவற்றில் இணைந்து பல ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களில் கலந்து கொண்டிருந்தார். இந்துத்துவ பாசிச இந்திய அரசின் பல மக்கள் விரோத நடவடிக்கைகள், சட்டங்களை எதிர்த்து முன்னணியில் நின்று போராட்டங்களை சக தோழர்க ளோடு தலைமையேற்று நடத்தியுள்ளார். மாவோயிஸ்டகள் மீதான அடக்குமு றைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடத்தியுள்ளார், பாலஸ்தீ னத்தில் காசா மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இனஅழிப்பு யுத்தம், லெபனான், ஈரான் ஆகியவற்றிற்கு எதிரான சர்வதேச சட்டங்களை மீறி அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுத்தாக்குதலுக்கு எதிரான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் முன்னிலை யில் நின்று பங்களித்தார்.. இங்கிருந்து லண்டன் வந்த முக்கிய ஆளுமைகளான ஆனந்த் டெல்டும்டே, சாய்பாபா, அருந்ததி ராய் போன்றவர்களை அவர்களது கூட்டங்களுக்கும், பத்திரிகையாளர்கள் சந்திப்புக் கும் ஏற்பாடு செய்வது என்கிற தன்னுடைய புரட்சிகர கடமைகளை கடுமையான பொருளாதார மற்றும் சட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவர் செய்து கொண்டிருப்பதைக் கண்டு நான் ஆச்சர்யமும் பெருமிதமும் கொண்டேன்.

இன்றும் என்னால் மறக்க முடியாத ஒரு சம்பவம், கிரீனிச் இராயல் அப்சர்வேட்டரிக்கு எதிரேயுள்ள புல்தரையில் நின்று கொண்டே, முன்னே தெரியும் நகரை பார்த்துக் கொண்டே அரசியல் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவர் கூறினார். “கிருஷ்ணா நான் வேலை செய்யும் நிறுவனத்திற்கு கிரானைட் கற்கள் வந்து இறங்கின. அவை பழைய தமிழ் செய்தித்தாள் காகிதங்களால் சுற்றப்பட்டிருந்தன. அவை சேலம், தருமபுரி மாவட்ட செய்தித்தாள்கள். என் மண்ணின் மலைகள் இந்த கான்க்ரீட் காடுகளின் வெட்டி பந்தாக்களுக்காக வெட்டிக் கடத்தப்படுகின்றன என நினைத்த அந்த நொடியில், நான் வெடித்துக்

கதறி அழுதேன்" என்று சொல்லும் பொழுதே அவர் கண்ணில் கண்ணீர்த்துளிகள். சொல்லவே வேண்டாம் என்னாலும் என் கண்ணில் வரும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல், இருவரும் வெகுநேரம் மௌனமாக அந்தக் கனமான பொழுதைக் கடந்தோம்.

அன்று மாலை எனக்கு சென்னைக்கு விமானம். அவர் வீட்டிற்குச் சென்று அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன். அப்பொழுது வேலு ஒரு நீலநிற கார் வைத்திருந்தார் அதில் என்னை அழைத்து வந்து அருகில் உள்ள இரயில் நிலையத்தில் இறக்கிவிட்டார். சப்வேயில் நான் இறங்கும் முன் அவர் என்னைக் கட்டியணைத்து விடை கொடுத்தார். அவர் கண்களில் கண்ணீர். நான் சொன்னேன் நாம் கண்டிப்பாக மீண்டும் சந்திப்போம். அவர் சிரித்தார். அதுதான் நான் அவரை நேரில சந்திக்கும் கடைசி சந்திப்பு என்பதை, நான் நினைத்தும் பார்க்கவில்லை.

சென்னை வந்த பிறகு வாட்ஸ்ஆப்பில் எங்கள் நட்பு தொடர்ந்தது. குறைந்தது மாதமொருமுறையேனும் அவரிடமிருந்து எனக்கு அழைப்பு வரும். என்ன படிக்கிறோம், என்ன நடக்கிறது, குடும்ப விவகாரங்கள் என அரைமணிநேரம், ஒரு மணிநேரம் உரையாடல் தொடரும். வீடியோ சாட்டிங்கில் பல முறை இரு குடும்பத்தாரும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம்.

நான் பேஸ்புக்கில் எழுதும் பதிவுகள், விமர்சனங்கள், கவிதைகள் ஆகியவற்றிற்கு முதலில் லைக்கிடுபவராக அவர்தான் இருந்தார். நல்ல விமர்சனம், கவிதை என நான் எழுதியவற்றில் எதையேனும் நினைத்தால் உடனடியாக எனக்கு வாட்ஸ்அப்பில் கால் செய்துவிடுவார். நானும் அது போன்று எதையேனும் எழுதினால் கண்டிப்பாக மனிதனிடமிருந்து கால் வரும் என்று எதிர்பார்ப்பதும் அது நடப்பதும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டிருப்பதன் வெளிப்பாடாகவே இருந்தது. 2018 ஆகஸ்டில் பீமா கொரேகான் வழக்கைத் தொடர்ந்து நிறைய அறிவாளிகள் நாடு முழுதும் கைது செய்யப்பட்டார்கள். அப்பொழுது நான் ஒரு கவிதை எழுதினேன். உடனே என்னை அழைத்துப் பேசினார். ஆனந்த் டெல்டும்டேவுடனான அவருடைய உரையாடல்களையும், அவரை லண்டனிலிருந்து வெளிவரும் ஒரு இதழுக்காக எடுத்த நேர்காணலையும் குறிப்பிட்டார். ஒரு முறை ஒரு ஆங்கிலக் கவிதைக்காக ஒரு கவிஞர் கைது செய்யப்பட்டார். அவரின் ஆங்கிலக் கவிதையை தமிழில் மொழிபெயர்த்து பேஸ்புக்கில் பகிர்ந்தேன். உடன் அழைத்துப் பேசினார்.

ஒரு முறை எனக்கேற்பட்ட சந்தேகத்தை பேஸ்புக்கில் பகிர்ந்தேன். "டிராட்ஸ்கியிஸ்ட்கள் கடுமையாக டிராட்ஸ்கியை ஏற்றுக் கொள்ளாதவர்களை ஸ்டாலினிஸ்ட்கள் என்று வசைபாடுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லும் ஸ்டாலினிஸ்ட்கள் தானே உலகில் சோவியத் யூனியனுக்கு பின்னால் பல புரட்சிகளை வழிநடத்தினார்கள். எங்கேயும் டிராட்ஸ்கியிஸ்ட்கள் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரியவில்லையே?" என. பல விமர்சனங்களும், லைக்குகளும் வந்தன. சில மணி நேரங்களில் மனிதன் என்னை அழைத்தார். "கிருஷ்ணா, இன்றைக்கு இனி ஆயுதப் போராட்டத்தால் உலகைக் காப்பாற்ற முடியாது என்கிற பலரும், அன்றைக்கு லெனின், மாவோ காலத்தில் இருந்திருந்தால் காவுத்ஸ்கி, பெர்ன்ஸ்டைன் போன்றவர்களின் வாரிசுகளாகத்தான் இருந்திருப்பார்கள். காலத்தால் இவர்கள் பிந்தியவர்களாக இருப்பதன் சாதகத்தாலும்,

அப்புரட்சிகள் வெற்றி பெற்றதாலேயே இன்றைக்கு அவர்களை கொண்டாடு கிறார்கள். அறிவுஜீவிகளைப் பற்றி லெனின் எழுதாததா? உனக்குத் தெரியாதா கிருஷ்ணா!" என்று நீண்ட நேரம் அவருடைய கருத்துக்களை பகிர்ந்து கொண் டார்.

"ஆயுதப் போராட்டம் இனி சாத்தியமில்லை என்று சொல்வது வெறும் நடைமுறை அனுபவம் சார்ந்த பிரச்சினை மட்டுமா? Theoreticalலாக நீங்கள் மறுக்க வேண்டிய விசயங்களும், மாற்று frameworkயை உருவாக்க வேண்டிய விசய மும் இல்லையா கிருஷ்ணா?"

"தலைவா நீ புல் பார்மில் இருக்க நீ continue பண்ணு தலைவா!"

"சிரித்துக் கொண்டே தொடர்ந்தார். ஆயுதப் போராட்டம் இனி சாத்தியமில்லை என்பவர்கள், மார்க்சை மறுக்க வேண்டும், லெனினை மறுக்க வேண்டும். பாரிஸ் கம்யூன், அரசும் புரட்சியும் நூல்களை மறுக்க வேண்டும். state பற்றிய மார்க்சிய வரையறைகளை மறுவரையறை செய்ய வேண்டும். இவர்களின் மாற்று என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும்? பாராளுமன்ற ஜனநாயகத்திற்குள்ளேயே இது சாத்தியம்- பாட்டாளி வர்க்கத்திற்கு தன்னை பாதுகாத்துக் கொள்ள படை வேண்டாம். சொந்த அமைப்பு வேண்டாம். என்ன கிருஷ்ணா இதெல்லாம்."

"Empirical Data" மட்டும் தான் ஒன்றை மறுப்பதற்கு அடிப்படை என்றால் சோவி யத் யூனியனும், சீனாவும் பாதை விலகிய போதே நீங்கள் மார்க்சியத்தை கைகழுவி இருக்க வேண்டுமே." என்று அன்று பேசியவை இன்றும் என் காது களுக்குள் கேட்டுக் கொண்டே இருக்கிறது. எதற்கு இதனை இங்கு சொல்ல நினைத்தேன் என்றால், அதுதான் அவர்.

ஊடாட்டம் ஆய்வுக் குழு குறித்து அறிந்து, அவர் அதில் தன்னையும் இணைத்துக் கொள்ளச் சொல்லி இணைந்து கொண்டார். அக்குழுவின் இணைய வழி கூட்டங் கள் அனைத்திலும் கிட்டத்தட்ட கலந்து கொண்டார். ஊடாட்டம் குழு சார்பில் நடைபெற்ற மார்க்சிய நூல்கள் வாசிப்பு உரையாடல் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்டார். தனக்கான வாய்ப்பில் தன் கருத்துக்களை பதிய தவறிய தில்லை. ஊடாட்டத்திற்கு நிதியினையும் தொடர்ச்சியாக அனுப்பி உதவியுள்ளார்.

கடைசியாக 21 ஜனவரி 2026 நாள் சில நூல்கள் அவற்றின் பதிப்பக முகவரிகள் கேட்டு எனக்கு வாட்ஸ்அப்பில் பேசினார். சில மணி நேரங்களில் முகவரிகளை அனுப்பினேன். அவர் எனக்கு அனுப்பிய கடைசி பதில் செய்தி "மிக்க நன்றி கிருஷ்ணன்".

**27 மார்ச் 2026 அன்று வேலுவின் நிலையைக் கேள்விப்பட்டவுடன், எனக்குள் எழுந்த உணர்ச்சியின் வெளிப்பாடு:**

உனக்கும் எனக்கும் இடையிலான
இந்தக் கண்ணாமூச்சி
மீண்டும் மீண்டும் நடந்து கொண்டேதான் இருக்கிறது.

முன்பொருமுறையும் நீ இப்படித்தான் செய்தாய்.
எங்கிருக்கிறாய், எங்கே போகிறாய்?
எதுவும் சொல்லாமல்

கண்டம்விட்டு கண்டம் காணாமல் போனாய்.

நான் உன்னைத் தேடி வரமாட்டேன்
என்று நினைத்திருக்கலாம்.

ஒரு காலை வேளையில்
ஈஸ்ட் ஹாம் மெட்ரோ வாசலில்
யார் அழைத்திருக்கிறார் எனத் தெரியாமலேயே
வந்து பார்த்து நீ திடுக்கிட
நான் நின்று கொண்டிருந்தேன்!

உனது ஆச்சர்யத்தையும்
நமது மகிழ்ச்சியையும்
நாம் கட்டியணைத்து
சிரித்து முடிக்க
வெகு நேரமானது.

உனக்கு நன்றாக என்னைப் பற்றித் தெரியும்
நீ எங்கு போனாலும்
அடையாளங்களைத் துறந்தாலும்
முகவரியை மறைத்தாலும்

நான் வந்து நிற்பேன்
ஒரு நாள் உன் முன்.
முன்பொரு நாள் நடந்ததே
அதே போல,

நீ என்னிடமிருந்து
எங்கும் எப்பொழுதும்
வெகுதூரம் போய் விடமுடியாது.

மகேஷ் இராமநாதன் @ கிருஷ்ணன்

●



# மனிதன் முகம் - தோழர் வேலுவை நினைவுகூரல்

## - ராகவன்

தோழர் வேலு இயற்கை எய்தினார் என்ற செய்தியைக் கேட்டபோது, நான் இலங்கையில் இருந்தேன். நம்பமுடியாத அந்த செய்தி என் உள்ளத்தைக் கலங்கச் செய்தது. வாழ்க்கையில் பலரை சந்திக்கிறோம் அவர்கள் வந்து செல்கிறார்கள் ஒருநாள் மரணத்தை அணைக்கிறார்கள். ஆனால் சிலரின் மரணம் மட்டும் ஏற்றுக் கொள்ள முடியாத ஆழ்ந்த துயரத்தில் நம்மை தள்ளிவிடுகிறது. தோழர் வேலு அத்தகைய அபூர்வமான மனிதர்.

அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது பெரும் துயருடன் கூடிய மறக்கமுடியா நிகழ்வென்றே சொல்வேன்.

லண்டனில் அவர் வாழ்ந்த அரசியல் வாழ்க்கை, அவரைச் சூழ்ந்த சட்டரீதியான சிக்கல்கள், மற்றும் அவரது குடும்ப வாழ்க்கை-இந்த மூன்று அடிப்படை பரிமாணங்களிலும் நானும், எனது இணையரான நிர்மலாவும், அவருடன் இணைந்தும், சில சமயங்க்களில் கருத்து வேறுபாடுடனும் நட்புடன் பயணித்தவர்கள். இவை தனித்தனி பிரிவுகள் அல்ல. ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த வாழ்வியல் அத்தியாயங்கள். தோழர் வேலுவின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பிரித்து அவரின் அரசியலைத் தரிசிக்க முடியாது.

2002 ஆம் ஆண்டு மே மாதத்தில், வேலு தமிழ்நாட்டிலிருந்து அகதியாக லண்டன் வரவிருக்கிறார் என்று என் நண்பர் அகிலன் தெரிவித்தார். அவர் மூலம் உமா காந்தன் எனும் நண்பருடன் நான் அறிமுகமானேன். வேலு மார்க்சிஸ்ட்-



லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெகுஜன அமைப்பான முற்போக்கு இளைஞர் அணியில் இணைச் செயலராக செயற்பட்டவர் என்றும் அவரது உயிருக்கு ஆபத்து என்றும் அவர்கள் எனக்கு தெரிவித்து அவருக்கான சட்ட ஆலோசனை களை கேட்டனர்.

சட்ட ஆலோசகராக இருந்த நான், "முதலில் அவர் வந்து சேரட்டும் பின்னர் நான் என் கடமையைச் செய்வேன்" என்றேன். 2002 மே 29 அன்று வேலு லண்டனை வந்தடைந்து , ஜூன் முதல் வாரம் எனது பணியிடத்துக்கு வந்தார். அவரது தீட் சண்யமான நேர் கொண்ட பார்வையும், கள்ளமற்ற பெரும் சிரிப்பும், தோழமையும் என்னை உடனே ஈர்த்தது. தோழர் என்ற அவரின் விளிப்பு ஆத்மார்த்தமான அன்பையும் , தோழமையையும் எனக்கு உணர்த்தியது.

பொதுவாக, சட்ட உதவி கேட்டு வருபவர்களை நான் வீட்டிற்கு அழைப்பதில்லை. வழக்கு முடிந்த பிறகே சிலர் நெருங்கியவர்களாக மாறுவர். ஆனால், அரசியல் காரணத்திற்காக தமிழ்நாட்டிலிருந்து தஞ்சம் கேட்டு வந்த முதல் நபர் வேலுவா கத்தான் இருக்கும் என நான் நம்புகிறேன். இந்தியாவை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் பிரித்தானிய அரசு இணைத்து இருந்ததனால், அவரது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் தீர்ப்பாய மேல்முறையீட்டு வாய்ப்பு இல்லாமல் போகும் அபாயம் இருந்தது. பிரித்தானிய அகராதியில் இந்தியா மனித உரிமை களை மதிக்கும் ஜனநாயக நாடு.

எனவே, அவர் தஞ்சம் கோருவதற்கு முன் அவரது ஆவணங்களை முறையாகத் தயார் செய்து, வலுவான வாக்குமூலத்தைப் பெறுவது அவசியமாயிற்று. அவரது அரசியல் பின்னணியை நான் நிர்மலாவிடம் கூறியபோது, அவர் வாக்குமூலத்தைத் தயாரிக்க முன்வந்தார். எனவே, வேலுவை எமது வீட்டுக்கு அழைத்தோம். விரி வான வாக்குமூலம் தயார் செய்யப் பல நாட்கள் எடுத்தன. அதன் பின், 2002 ஜூன் 16 அன்று அவர் தஞ்சம் கோர அனுப்பப்பட்டார். குறிப்பாக 2000ம் ஆண்டு கால கட்டத்தில் அவரது அமைப்பில் இருந்தவர்கள் சிலர் பொலிசாரின் என் கவுண்டர் கொலைக்கு ஆளானார்கள். அப்போது அவர் பிணையில் இருந்தார். 2002 மே மாதம் வேறொரு பெயர் கொண்ட கடவுச்சீட்டில் அவர் லண்டன் வந்தார். அவர் திரும்ப போனால் அவரது அரசியல் கொள்கை காரணமாக அவர் சித்திர வதைக்கு அல்லது கொலைக்கு ஆளாவார் எனபதே அவரது அரசியல் தஞ்சக் கோரிக்கையின் அடிப்படை.

எதிர்பார்த்தபடி, அவர் கைது செய்யப்பட்டு துரித தஞ்சச் செயல்முறைக்குள் கொண்டு வரப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். ஆரம்பத்தில் பிரித்தானிய அரசு அவரது கோரிக்கையை நிராகரித்தாலும், "ஆதாரமற்றது" என்று சொல்லி மேல்முறையீட்டு உரிமையை நிராகரிக்க முடியவில்லை. ஏனெனில், அவரது வாக் குமூலம் உறுதியானது. அத்துடன் அவரது சிறை சம்பந்தமான ஆவணங்களும் வலுவான சாட்சியாக அமைந்தன. ஏனவே, தஞ்சக்கோரிக்கையை நிராகரித்த போதும் அவருக்கு மேல் முறையீட்டு உரிமை வழங்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டார். இறுதியில், அவர் வழக்கில் வெற்றி பெற்று 2003 ம் ஆண்டு அவருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டது. .

அரசியல் தஞ்சத்திற்கான தயாரிப்புகள் நடைபெற்ற காலகட்டத்தில், அவரை இப்ராஹிம் பாபு எனும் சன்சிபார் மார்க்சிஸ்டின் நினைவு தினத்துக்கு அழைத்து

சென்றேன். பாபு ஒரு காலனித்துவ எதிர்ப்பாளர் தான்சானியாவில் சிறைக்கு சென்றவர். காலனித்துவத்திற்கு எதிரான ஆபிரிக்க ஒன்றியத்தை முன்னெடுத் தவர்களில் ஒருவர். தோழர் வேலுவுக்கு பல தரப்பட்ட மக்கள்-ஆண், பெண், நிறம், மத வேறுபாடு இன்றி-அந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனநாயக முறை மிகவும் பிடித்துவிட்டது. "தோழரே! ஒரு நிகழ்வை இப்படித்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்," எனக் கூறினார்.

சுவாரஸ்யமான ஒரு விடயத்தையும் சொல்ல வேண்டும், வேலு அரசியல் தஞ்சம் கோரும் காலகட்டத்தில் ஒரு இலங்கைக்காரரின் வீட்டில் தங்கி இருந்தார். அந்த இலங்கைக்காரர், இவர் இந்தியர் என சொல்லி அரசியல் தஞ்சம் கேட்டதை நம்பவில்லை. இலங்கையர் என பொய் சொல்லி அரசியல் தஞ்சம் பெற்றதாகவே அவர் நம்பினார். ஏனெனில், சில தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியர்கள் சிலர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். வேலுவின் அரசியல் தஞ்சம் வெற்றி பெற்ற பிறகே அந்த இலங்கைக்காரர் வேலுவை நம்பினார் என நினைக்கிறேன்

தோழர் வேலுவின் இந்திய அரசியல் போராட்டங்களில் சிறை அனுபவங்களில் எனக்கு நேரடிப்பரிச்சயம் இல்லை எனிலும் அவரது அரசியல் தஞ்சக் கோரிக்கைக்கு உதவியவன் என்ற வகையிலும் அதன் பின் அவரோடு நட்பைப் பேணியவன் என்ற வகையிலும் அவரது அரசியல் அனுபவங்களை அறிவேன். அவை முழுவதையும் எழுதும் இடமல்ல இது. எனவே, சுருக்கமாக அவரது அனுபவங்களை பகிர்கிறேன்.

மார்க்கிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (மக்கள் யுத்தம்) வெகு ஜனப் பிரிவான முற்போக்கு இளைஞர் அணியின் இணைச் செயலராக பணியாற்றிய



வேலுவின் மேல் 2 அக்டோபர் 1992 அன்று தர்மபுரி, பாலக்காடு ரெயில் நிலைய தண்டவாளங்களை குண்டு வைத்து தகர்க்க சதி செய்ததாகவும் நாட்டு வெடி குண்டுகள் தயாரித்ததாதவும் பொலிசார் போலிக்குற்றச்சாட்டை புனைந்து 8 நவம்பர் 1992 இல் அவரை வீட்டில் வைத்து கைது செய்து தடா சட்டத்தின் கீழ் சிறையில் வைத்தனர். அவரது அரசியல் செயல்பாடுகளை பொறுக்க முடியா அரசு அவர் மேலான பொய்க்குற்றச்சாட்டை சுமத்தி கைது செய்தது ஒன்றும் வியப்பல்ல. முற்போக்குக் கவிஞர், எழுத்தாளரான வரவர ராவையும் கத்தார் என்ற புரட்சிப்பா டகரையும் தமிழ் நாட்டிற்கு அழைத்து கூட்டங்களில் பங்கு கொள்ள வைத்தவர் களில் வேலு முக்கியமானவர். பல தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப் பதிலும் வேலு பங்கு பற்றினார்.

நான் கு வருடங்கள் சிறையில் இருந்து அதன் பின் பிணையில் வருவதும் திரும்ப கைது செய்யப்படுவதுமாக 10 வருடங்கள் ஓடின. அவர் சிறையில் இருந்த காலப்ப குதிகளில் தடா ( பயங்கரவாத - சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச்சட்டம்) கைதிகளின் உரிமைக்கான உண்ணாவிரதம் போன்ற பல போராட்டங்களை முன்னின்று நடத்தினார் . சிறையில் இருந்து பிணையில் வெளிவந்த பின்னும் அவர் தொடர்ந்து விளிம்பு நிலை மக்களுக்கான போராட்டங்களையும் அணி திரட்டல் களையும் தொடர்ந்தார். குறிப்பாக மக்கள் சிவில் உரிமைக்கழகத்துடன் ( PUCL) இணைந்து செயல்பட்டு அரசின் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர உதவி புரிந்தார். இதனால் தொடர்ந்து பொலிசாரால் குறிவைக்கப்பட்டு பல தடவைகள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தல்களுக்கு ஆளானார்.

அரசியல் தஞ்ச கால கட்டத்தில் இருந்து இறுதிவரை வேலு குடும்ப நண்பராக வும், அரசியல் தோழனாகவும் எங்களுடன் பயணித்தார். வேலுவை நண்பனா கவும் தோழனாகவும் பெற்றது ஒரு வரம்.

ஒருமுறை வேலு எமது வீட்டுக்கு வந்திருந்தார். வேலு எமது வீட்டுக்கு வந்தால் பெரும்பாலும் இரவு தங்கிவிட்டே போவார். 2003 காலப்பகுதியில் ஒரு இரவுப் பொழுது. நான் வைன் போத்தல் ஒன்றை திறந்து ஒரு குவளையை அவருக்கு நீட்டினேன். தோழர் வேண்டாம் என்றார். நான் தமாஷாக சொன்னேன். தோழர் ! ஹிட்லர் குடிப்பதில்லை, கொமெய்னி குடிப்பதில்லை, பிரபாகரனும் குடிப்பதில்லை என்றேன். உடனே வேலு பெரும் குரலுடன் தோழர் எனக்கும் ஒரு குவளை தாங்க என்று வாங்கிக் குடித்தார்.

அவருடன் நான் சில நேரங்களில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், நட்பையும் தோழமையையும் பேணினார். அவர் எப்போதும் பிறரின் கருத்துகளை மதித்து கேட்பார். குழந்தைகளிலிருந்து பெரியவர் வரை அனைவரது கருத்துக ளையும் செவி மடுப்பார். அதுவே அவரது அரசியல் செழுமையின் அடிப்படை.

எனது மகன் கௌசிகனுக்கு அப்போ 12 வயது. வேலு வந்தால் அவரை தனது பியானோ இருக்கும் அறைக்கு அழைத்து சென்று பியானோ வாசித்து காட்ட வேலு அந்த இசை துக்கமா சந்தோசமா என சொல்லவேண்டும். அத்துடன் பியானோ எப்போ கண்டு பிடிக்கப்பட்டது. அது எவ்வாறு தொழில் படுகிறது என பெரு விளக்கம். வேலு அதனை பொறுமையுடன் கேட்பார். பின்னர் எங்களுக்கு வந்து சொல்லிப்பெரும் சிரிப்பை உதிர்ப்பார். எனது மகள் மைத்திரேயிக்கும் வேலுவுக் கும் பிறந்த தினம் ஒரே நாள். நாங்கள் மறந்து விட்டாலும் வேலு எனது மகளின்



பிறந்த தினத்துக்கு வாழ்த்து சொல்ல மறப்பதில்லை. அவரிடமிருந்து தான் முதல் வாழ்த்து வரும்.

அரசியல் தஞ்சம் கிடைத்த பிறகு அவர் தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. வாழ்க்கையே போராட்டமாகவும் போராட்டமே வாழ்க்கையாகவும் வரித்து வாழ்ந்த மனிதர் அவர். அவர் ஒரு தளபாடங்கள் விற்கும் கடையில் ஊழியராக பணி புரிந்தார். அங்கு நிகழும் நிற வாத பாகுபாடுகள் பற்றி பல தடவை கூறியிருக்கிறார்.

இங்கிலாந்து வந்தபின், பாலஸ்தீனம் முதல் பர்மா வரை, இலங்கை முதல் லத்தீன் அமெரிக்கா வரை - எங்கெங்கு அடக்குமுறை இருந்ததோ அங்கெங்கு அவரது குரலும் இருந்தது. ஆனால் அவர் ஒருபோதும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளவில்லை.

பல்வேறு போராட்டங்கள், கருத்தரங்குகள், நூல் விமர்சனங்கள், சந்திப்புகள் என அவரது காத்திரமான பங்களிப்பு தொடர்ந்து இருந்தது. வேலு பங்களிக்காத நூல் விமர்சனங்கள் மிக குறைவு. வேலைப்பளு மத்தியிலும் நூல்களை வாசித்து விமர்சனங்களை ஆணித்தரமாக முன்வைப்பார்.

அவர் இங்கிலாந்து வந்த பின்பும் இந்திய அரசின் கண்காணிப்பு அவரை விட்டு விலகவில்லை. அரசியல் தஞ்சம் அவருக்கு ஆரம்பத்தில் ஒரு பாதுகாப்பாக இருந்தது. ஆனால், அவர் பிரித்தானிய குடியுரிமை பெற்ற பின் அவரை நாடுகடத்த வேண்டி இந்திய அரசு பிரித்தானியாவிடம் விண்ணப்பித்தது . 2013ல் அவர் கைது செய்யப்பட்டு வழக்கு மூன்று வருடங்களுக்கு மேல் நடைபெற்றது. அந்த வழக்கிலும் அவர் வெற்றி பெற்றார்.

வேலு வெறும் வரட்டுக் கோட்பாட்டை ஒப்புவிக்கும் மார்க்சிஸ்ட் அல்ல. அவர் ஒரு களப் போராளி. தொழிலாளியாக உழைத்து, தொழிலாளர்களின் வலியை நேரடியாக உணர்ந்தவர். இந்தியாவில் கல்லுடைக்கும் தொழிலாளிகள், தலித்

மக்கள், பழங்குடியினர் என பல்வேறு விளிம்பு நிலை மக்களுடன் வாழ்ந்து அவர்களின் வாழ்க்கையைப் பகிர்ந்தவர்.

அவரது சிந்தனை விரிவானது. இந்திய சூழலில் மார்க்சிசத்தை வளப்படுத்துவதற்கு அம்பெத்கரிய பெரியாரிய சிந்தனைகளின் அவசியத்தை ஆழமாக புரிந்து கொண்டவர் வேலு. "சோசலிசம் வந்தால் சாதி ஒழியும்" என்ற சொல்லாடலை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய உபகண்டத்தில் சாதியம் என்பது தனித்துவமான அடக்குமுறை என்பதை ஆழமாகப் புரிந்திருந்தார். சாதியத்துக்கெதிரான போராட்டங்களைப் பண்பாட்டுத்தளத்திலும் அரசியல் தளத்திலும் முன்னெடுப்பதன் அவசியத்தை அவர் உணர்ந்திருந்தார். சாதியமானது மேற்கட்டுமானத்தின் ஒரு பிரதிபலிப்பு அடிக்கட்டுமானம் தகர்ந்து விட்டால் சாதியம் தானாக அழிந்துவிடும் என்ற வரட்டுதனமான தத்துவார்த்த பார்வை அவருக்கு இருக்கவில்லை. இந்தியாவில் இருப்பது தொழிற் பிரிவினை மட்டுமல்ல , தொழிலாளர் பிரிவினையும் தான் என்ற அம்பெட்கரிய சிந்தனையின் ஆழத்தை புரிந்து கொண்டவர். பார்ப்பனிய ஆதிக்கம் பற்றிய பெரியாரின் சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டவர். ஆனால் அனைத்து விடயங்களையும் மார்க்சிச தரிசனத்துக்கூடாகத்தான் அணுகினார். தனது வர்க்கப்பார்வையை எப்போதும் சமரசம் கொண்டது கிடையாது. தொடர்ந்த வாசிப்பு, இடைவிடா அரசியல் பங்களிப்பு , விளிம்பு நிலை மக்கள் பற்றிய கரிசனம் இவை மூன்றும் வேலுவின் அரசியலை செழுமைப்படுத்தியது. முரண்பாடுகளை கடந்து குறைந்தபட்ச பொது வேலைத்திட்டத்தில் சேர்ந்து இயங்கும் மாண்பை அவர் பெற்றிருந்தார்.

அவர் சிறையில் இருந்த போது சக கைதிகளுடன் மிக அன்பாக பழகினார். அவர்கள் மேல் பரிவு காட்டி அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தார். அவர் கைது செய்யப்பட்ட 1992 காலப்பகுதியில் தமிழ் நாட்டு மீட்புப்படை என்ற அமைப்பின் இளைஞர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். தோழர் ! அவர்கள் ஒன்றுமே தெரியா காமெடிப் பீசுகள் என அட்டகாசமாக சிரித்தார் வேலு. ஆனால் நல்ல பயலுகள் என்றார். அவர்கள் கைது செய்யப்பட்டபின் தமிழ் நாட்டு மீட்புப்படை என்ற பெயரை அவர்களுக்கு சூட்டியதே காவல் படை தான் என்றார் அவர். ஏனெனில் அவர்களுக்கு பெயர் ஏதும் இருக்கவில்லை. விடுதலைப்புலிகளைப் போல் பாவனை செய்து அவர்கள் இடுப்பில் பிஸ்டலை வைத்துக்கொண்டு கிராமங்களில் சைக்கிளில் திரிந்ததால் கைது செய்யப்பட்டனர் என சொல்லி சிரித்தார்.

தனது கருத்துக்கு உடன் படாதவர்களுடனும் அவர் பழகி நட்பை பேணுவார். ஆனால், தனது கொள்கையை ஒரு போதும் சமரசம் செய்தது கிடையாது. இந்த பண்பு தான் அனைவரதும் மதிப்புக்கும் அன்புக்கும் அவர் உரித்தாகியது.

அதே சமயம், அவர் குடும்பத்தை புறக்கணிக்கவில்லை. கடின உழைப்பும், குடும்ப பாசமும், மனித நேயமும் இவை அனைத்தும் அவரை தனித்துவமானவராக்கின. அவரது தாயின் துணிச்சலும் அன்பும், அவரை உருவாக்கிய அடித்தளம். அவர் கைது செய்யப்பட்ட பத்து வருட காலத்தில் அவரது தாயார் துணிச்சலுடன் அவருக்கு முழு ஆதரவையும் வழங்கினார். நான் வேலுவின் தாயாரை வேலுவின் வீட்டில் சில வருடங்கள் முன் சந்தித்தேன். அவரது தாயின் துணிச்சல் , ஆளுமை தான் வேலுவுக்கு கடத்தப்பட்டிருக்கின்றது என நான் எண்ணினேன்.

பாலஸ்தீனம் மேலான இஸ்ரேலிய இன அழிப்பு, ஈரான் மேலான அமெரிக்க ஆக்கிரமிப்பு , உலகெங்கும் தீவிர வலதுசாரிகளின் ஆதிக்கம், போன்ற பல நிகழ்வுகளால் கடந்த சில வருடங்களாக வேலு மிக ஆதங்கம் அடைந்திருந்தார். .குறிப்பாக இந்தியாவில் இந்துத்துவ ஆதிக்கம், இந்தியாவில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மேலான அரசின் அடக்கு முறை பற்றிய ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார். வேலைமுடிந்து வந்த பின் இரவிரவாக செய்திகளை வாசித்து மனம் குமுறுவார் என அவரது இணையர் ரஜிதா தெரிவித்து, திட காத்திரமாகவும், உணவுப்பிரியராக இருந்தும் கூட சில வருடங்களாக உணவுக்கட்டுப்பாட்டை பேணிய வேலுவுக்கு மாரடைப்பு வந்ததற்கு அவரது மனக்குமுறல் ஒரு காரணம் என்றார். அது ஒன்றும் மிகைப்படுத்தலல்ல. அநீதி கண்டு பொங்கும் அவரது குணாதிசயம் அது.

இன்று நாம் இழந்தது ஒரு நண்பனை மட்டுமல்ல, ஒரு போராளியை, ஒரு சிந்தனையாளரை, ஒரு மனித நேயவாதியை.


16 ஏப்ரல் 2026 அன்று, செங் கொடியுடன், பாலஸ்தீன கொடியும் போர்த்து விழிநீர் சிந்த ஒரு சர்வதேசவாதியை வழியனுப்பி வைத்தது கண்முன்னே நிற்கிறது. பல்வேறு அரசியல்கருத்துகளை கொண்டவர்கள், நண்பர்கள், அயலவர், உறவினரென ப் பலர் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டது வேலுவின் நட்புக்கும் மானிட நேயத்துக்குமான சாட்சி.

அவரது கள்ளம் கபடமற்ற பெரும் சிரிப்பு, நேர்மை, அன்பு - இவை அனைத்தும் இன்னும் நினைவில் ஒலிக்கின்றன.

“உன்னைப்போல் அயலானையும் நேசி” என்ற பைபிள் வாசகம் அவருக்கு பொருந்தாது என்று நான் நினைக்கிறேன் ஏனெனில் அவர் மற்றவர்களை தன்னை விட அதிகமாக நேசித்தவர். அவர் மேல் அளவு கடந்த பிரியம் கொண்ட இணையர் ரஜிதாவிற்கும் அன்பு மகள் நிலோபருக்கும் ஆறுதல் கூற என்னிடம் வார்த்தைகள் இல்லை.

‘மனிதன் முகம்’என தனது முகநூல் கணக்கிற்கு பெயரிட்டது தற்செயலானது அல்ல. அது மனிதத்திற்கான குரல். அடக்கப்பட்ட மக்களுக்கான போர்க்குரல். சாதி, மத, இன, மொழி, வர்க்க பேதமற்ற சமத்துவமான புதிய உலகிற்கான புரட்சிகர அழைப்பு.

●



## சென்னையில் மே 02, 2026 நடைபெற்ற வேலுவின் நினைவேந்தலில்

# டாக்டர் வி. சுரேஷ் அளித்த

## உரையின் சாராம்சம்



வேலு என்ற பூபாளனின் நாடுகடத்தல் வழக்கில் தொடர்பு கொண்டவன் என்ற முறையில், வேலு பற்றியும், இந்திய பயங்கரவாத தடைச்சட்டங்களின் மோசமான பக்கங்கள் பற்றியுமான சிறு குறிப்பு இது.

வேலுவை எனக்கு தனிப்பட்டமுறையிலோ, அரசியல்ரீதியாகவோ பழக்கம் இல்லை. அவரது அரசியல் பாதை வேறு. நான் மக்கள் சிவில் உரிமைக்கழகத்தை (PUCL) சார்ந்தவன். வேலு மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர். எனவே, அவருடைய அரசியல் மற்றும் கொள்கைகளுடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் உண்டு. நான் ஒரு குற்றவியல் வழக்கறிஞர் என்ற வகையில், பல தடா (TADA) வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக 1990களில் ஆஜராகியிருக்கிறேன். அவ்வகையில் தான், சிறைவாசியான வேலுவை 1994-1995 காலப்பகுதிகளில் நான் நீதிமன்றத்தில் சந்தித்திருக்கிறேன். அவரை பூபாளன் என்றே எனக்குத் தெரியும்.

முக்கியமாக, 1995 காலப்பகுதியில், அவர் சென்னை மத்திய சிறையில் இருந்த போது, பல அதிகார துர்ப்பிரயோகம் மற்றும் சிறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் நிகழ்த்திய வன்முறை சம்பவங்கள் நடந்தன. அதுபோன்ற ஒரு சம்பவத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட சிறைக்கைதிகள் சிறைக்காவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். வேலுவும் மிக மோசமாக தாக்கப்பட்டு காயமடைந்தார். இந்த சம்பவங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரித்து, மக்கள் சிவில் உரிமைக்கழகம் பொது நல வழக்கொன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனை விசாரிக்க, தடா நீதிமன்றில் நீதிபதியாக இருந்த ராதாகிருஷ்ணனை, விசாரிக்கும் அதிகாரியாக நீதிமன்றம் நியமித்தது. அவர் சிறைக்குச்

சென்று, பல கைதிகளின் வாக்குமூலங்களைத் சேகரித்து, ஒரு அறிக்கையைத் தயாரித்தார். அதில் வேலு தாக்கப்பட்டது குறித்த விவரங்களும் அடங்கியிருந்தது.

வேலு, 1996ஆம் ஆண்டு பிணையிலிருந்து வெளி வந்து, 2002க்குப் பின், ஆரம்பம் வரை தனது நீதிமன்ற வழக்கு விசாரணைத் தேதிகள் அனைத்துக்கும் தவறாமல் சென்றார். 2002 க்குப்பின் அவரைப்பற்றிய தகவல் ஒன்றும் எனக்கு தெரியாது.

2015 இறுதியில், இலண்டனில் இருந்து என்னுடன் உரையாடிய நிர்மலா, வேலுவை பிரித்தானியாவிலிருந்து நாடுகடத்த இந்தியா விண்ணப்பித்திருக்கிறதென்றும் அவரது வழக்குக்காக நிபுணத்துவ அறிக்கை (legal expert advice) ஒன்றை தயார் செய்து தருமாறும் என்னையும், என் இணையரும் வழக்கறிஞருமான நாகசைலா வையும் கேட்டுக்கொண்டார். அப்போதுதான் எனக்கு 2002 இல் வேலு பிரித்தானியா சென்ற விடயமும் அங்கு அவர் அரசியல் தஞ்சம் கேட்டு அதில் வெற்றி பெற்று 2007 இல் பிரித்தானிய பிரஜையாகியதும் தெரிய வந்தது.

நாங்கள் இருவரும் நாடுகடத்தல் வழக்கில் எழுந்த சட்டக் கேள்விகள் குறித்து அறிக்கை தயார் செய்ய ஒப்புக்கொண்டோம். 74 பக்கங்கள் கொண்ட ஒரு நீண்ட அறிக்கையைத் தயார் செய்து, வேலுவின் வழக்கறிஞர்களுக்கு அதனை பெப்ரவரி 2016 இல் அனுப்பினோம்.

அந்த அறிக்கையின் சாரம் என்னவெனில், இந்தியாவில் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வேலு திருப்பியனுப்பப்பட்டால், அவரை தடா சட்டத்தின் கீழ் விசாரணை செய்து ஆயுள் தண்டனை கொடுக்கும் சாத்தியம் அதிகம். அத்துடன் இந்த வழக்கில் வேலுவுடன் குற்றம் சாட்டப்பட்ட இருவர் ஏற்கனவே குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டதால், நியாயமான முறையில் அவரது விசாரணைகள் சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் குறைவு என்பதே ஆகும். அவர் 1992 இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின், அவரது விசாரணையின் போது 13 நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். பத்து வருடங்களுக்கு மேல் அவரது விசாரணை நிகழ்ந்தது. அனைத்து சாட்சியங்களினதும் விசாரணை பூர்த்தி அடைந்த போதும், தீர்ப்பு வழங்குவது தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது . வழக்கு தாமதம் குறித்து புகார் தெரிவித்து, அதனால் தன்னுடைய விரைவான விசாரணைக்கான உரிமை பாதிக்கப்படுகின்றது என்று வேலு சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கும், குடியரசுத் தலைவருக்கும் ஒரு கடிதம் அனுப்பினார்

2016 இல் நாடுகடத்தல் வழக்கு நிகழ்ந்த போது, நான் தொலைத்தொடர்பு சாதனமூடாக ஆஜரானேன். அதில், இத்தகைய வழக்குகளில் பிணை வழங்குவதற்கான முறை என்னவெனில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் முதற்பார்வையில் அந்த குற்றத்தைத் தாங்கள் செய்யவில்லை என்று காண்பிக்க வேண்டும். அதை எதிர்க்க அரசு தரப்பு வழக்குரைஞருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னரே, பிணை குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும். இந்த வழக்கில், பிணையின்றி பல காலமாக சிறையில் வைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு சாட்டப்பட்ட குற்றத்தில் அவர்கள் மீது சுமத்தப்பட்ட பங்கைப் பொறுத்து பிணை வழங்கவேண்டும் என்ற ஷாகீன் வெல்பேர் வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் வேலுவிற்கு பிணை

அளிக்கப்பட்டது. அவ்வழக்கில் நீதிமன்றம், இதுபோன்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களை அவர்களது பாத்திரத்தின் அடிப்படையில் நான்காக வரையறுக்க வேண்டும் என்றும் அதில் (அ) என்பதுமிகவும் கொடூரமான குற்றங்களில் நேரடித் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். வேலு விற்குத் தொடர்புடையதாகக் கூறப்படும் சம்பவத்தினால் எவ்வித உயிரிழப்பும் ஏற்படாத நிலையில், அவர் (இ) / (ஈ) பிரிவின் கீழ் பிணைக்குத் தகுதியானவர் என்ற அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது.

எனதும் நாகசைலாவினதும் அறிக்கை, வேலுவின் நாடுகடத்தல் வழக்கை வெல்வதற்கான முக்கிய ஆவணம். வேலுவுக்கு சாதகமாக பிரித்தானிய நீதி மன்றம் தீர்ப்பை வழங்கியது.

வேலுவின் வழக்கும் 10 ஆண்டுகள் நீண்ட தாமதமும், தடா/பொடா/உபா போன்ற கொடுங்கோன்மைச் சட்டங்களின் கீழ் பயங்கரவாத வழக்குகள் எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். வேலுவின் நாடுகடத்தல் வழக்கு ஒரு பழிவாங்கல் நடவடிக்கைதான். வேலுவின் அரசியல் பின்னணி பற்றி, நாடு கடத்தல் வழக்கில் இந்திய அரசு தரப்பினர் மௌனம் சாதித்து, அவரை ஒரு குற்றவாளியாக மட்டுமே உருவகித்தனர். தடா, போட்டா மற்றும் உபாவின் (UAPA) கீழ், பயங்கரவாத நடவடிக்கை எவ்வாறு வரையறுக்கப்படுகின்றது என்பது மிகப்பிரச்சனையானது. வேலுவின் மேலான குற்றச்சாட்டு, ரயில்வே பாலத்துக்கு நாட்டு வெடிகுண்டு வைத்தது. அந்த நாட்டு வெடிகுண்டு வெடித்து யாருமே பாதிக்கப்படவில்லை. ஒரு உயிரிழப்போ, சேதமோ இருக்கவில்லை. அது உண்மையில் ரயில்வே சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு. இங்கு பிரச்சனை 'சதி' என்ற குற்றத்தை சுமத்தியது. சதி என்ற பெயரில் காவல்துறை தமக்கு வேண்டப்படாதவர்களை அடக்க' இக்குற்றத்தை துர்ப்பிரயோகம் செய்வது நடக்கிறது. சதி என்ற குற்றம் எவ்வகையில் சிக்கலானது என்பதற்கு ஒரு சிறிய உவமையைத் தருகிறேன்: இடம் ஒன்று முதல் இடம் 20 வரை செல்லும் ஒரு இரயிலில் ஒன்றில் ஏறி 20வதில் இறங்குபவர்கள் இருப்பர். நடுவில் ஏறி நடுவிலேயே இறங்கும் ஆரம்பமோ இறுதி நிறுத்தமோ தெரியாதவர்களும் இருப்பர். ஆனால் சதி வழக்கில் அவர்களும் குற்றவாளிகளாக்கப் படலாம்.

மக்கள் சிவில் உரிமைக்கழக அறிக்கையின் படி தடா சட்டந்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டவர்கள் 8% . உவாப்பாவின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் 2.8% . ஒருவரை இந்த மோசமான சட்டங்களின் கீழ் கைது செய்து வருடக்கணக்கில் சிறையில் அடைத்து பின்னர் குற்றமற்றவர் என விடுதலை செய்யும்போது அவர் தனது வாழ்க்கையை இழந்து விடுகிறார். முன்னர் தடா சட்டத்தின் கீழ் ஓரளவு கடினப்பட்டு பிணை எடுக்கும் வாய்ப்புகள் இருந்தன. இப்போ சட்டம் தடாவை விட பல மடங்கு கடுமையானதாக இருக்கிறது. இந்த கொடிய சட்டங்களின் கீழ் ஊடகவியலாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், தலித் அரசியலை முன்னெடுப்பவர்கள் என பலர் கைது செய்யப்படுகிறார்கள். அத்துடன் சதி என்பதை எவ்வாறு புனைகிறார்கள் என்பதற்கு சமீபத்தில் நான் வழக்காடிய உபா பிணை வழக்கில் இசுலாமியர்கள் கைது செய்யப்பட்டது ஒரு உதாரணம். இசுலாமிய

மார்க்கம் மற்றும் இந்திய, உலக அரசியல், இசுலாமிய மார்க்கத்திலுள்ள ஆட்சிஇயல் முறைகள் ஆகியவற்றைப் பற்றிய கலந்துரையாடல்கள் நடத்தியது "சதி" என வரையறுக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர். பிணை கேட்டு வழக்காடும்போது, நான் இந்திய அரசியல் சட்டத்தின் 25 வது பிரிவின் படி ஒருவர் தன் மத நம்பிக்கையைப் பற்றி பேசுவது, அதை கடைபிடிப்பது மற்றும் பரப்புவது அவர்களது அடிப்படை உரிமையாகும் என்று வாதாடினேன். ஆனால் "சதி" என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்ததால், இந்த வாதம் ஏற்கப்படாமல், அவருக்கு பிணை மறுக்கப்பட்டது.

இந்தியாவில் இன்று அரசியல் அமைப்பு சட்டம் (Constitution) இல்லாமல் போகும் சூழலின் அபாயத்தை நாம் உணர்கிறோம். எனவே, சமூக ஆர்வலர்களும் அரசியல் அறிஞர்களும் வேலுவின் நாடுகடத்தல் வழக்கு சம்பந்தமான ஒரு பதிவை கொண்டுவருதல் அவசியம். அது இந்தியாவின் காலனியத்தன்மை வாய்ந்த பயங்கரவாத தடைச்சட்டங்களின் நீதியற்ற , முறைகேடான பக்கங்களையும், அதில் சிக்கி சட்டரீதியாக குற்றமற்றவர் என்று தீர்ப்பைப் பெற ஒருவர் படவேண்டிய கஷ்டங்களையும் முன்வைத்து, மனித உரிமை மற்றும் ஜனநாயகப் போராட்டத்தை வலுப்படுத்த உதவும். அவ்வாறான ஆவணப்படுத்தலே வேலுவுக்கான அஞ்சலியாக அமையும்.

●


**சென்னையில் - மே 02, 2026 நடைபெற்ற வேலுவின் நினைவேந்தலில்**











# தோழர் வேலுவை நினைவேந்தி

## இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ்

*பங்குனி மாதம் 28ம் திகதி அன்று முகநூல் வழி வந்த தகவலானது அன்றைய காலைப் பொழுதை இருளாகவே எமக்கு விடிய வைத்தது.*

*துயரம் கவிந்த விடியல் அது. துயரத் தகவல் அறிந்த அத்தருணம் தோழர் வேலுவின் ஆஜானுபாகுவான அசையும் தோற்றமே எம்முன்னால் நிழலாடியது.*

*அத்தோற்றமானது அசையா நிலையில் உறைந்துபோய் நிரந்தரமாக உறங்கிப்போனதே!*

*சாதிய சமூக ஒடுக்குமுறைகள் மீதான எமது விமர்சன நடைமுறைச் செயல்பாடுகளை அவதானித்த தோழர் வேலு எம்மோடும் மிக நெருக்கமானார்.*

*தமிழகத்தில் அவருடைய கடந்தகால அரசியல் இயக்க செயல்பாடுகளையும் அதன் நிமித்தமாக ஆதிக்க அதிகாரங்கள் அவர் கழுத்தை நெரித்துக் கொல்வதற்காக மேற்கொண்ட தகவலையும் நாம் அறிந்து வியந்தோம்.*

*இவ்வாறான அவரது கடந்தகால செயற்பாடுகளாலும் எமக்கு மிக நெருக்கமானார் தோழர் வேலு.*

*சாதியம் தொடர்பாக எம்மால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடல்லாது எமது செயல்பாடுகளுக்கு ஆதரவாகவும், எமது சாதிய சமூக ஒடுக்குமுறைச் செயல்பாடுகள் தொடர்பாக தனது ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் வழங்கி வந்தவர்.*

*சமூக அரசியல் செயல்பாடுகளுக்கும் அப்பால் மிக நெருக்கமான நட்புறவுடன் சகல விடயங்களையும் பகிர்ந்து உரையாடும் நெருக்கமும் எமக்கிடையில் திகழ்ந்தது பேரதிசயமே.*

*அவ்வதிசயம் என்றும் ஓர் அருவ நிழலாய் எம்மோடு தொடரும்.*

●

# சிறையில் செதுக்கப்பட்ட சித்திரமாய் என் நினைவில் தோழர் பூபாளன்

**- நடராஜன்**



பூபாளன் என்கின்ற தோழர். வேலுவை நினைத்ததும் எனக்கு முதலில் சித்திரமாய் தெரிவது 1991 முதல் 1996 வரையிலான சென்னை சிறைச்சாலை, அதனைச் சுற்றிய நிகழ்வுகளே நினைவுக்கு வருகிறது.நான் முதன்முதலில் அவரை 1988ஆம் ஆண்டு தர்மபுரியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் சந்தித்தேன். அவர் அப்பொழுது 'முற்போக்கு இளைஞர் அணி'என்ற அமைப்பில் உறுப்பினராக இருந்தார். இந்த பொதுக்கூட்டம் மதுரையில் நடந்த ஒரு பணப்பறிமுதல் நடவடிக்கையை ஒட்டி, காவல்துறையும் தமிழ்நாடு அரசும் அப்பொழுது மிகக் கொலீரமான அடக்குமுறையை ஏவியிருந்தன. மார்க்சிய-லெனினிய கட்சியையும், நக்சல்பாரி அமைப்பையும் ஒடுக்க காவல்துறை நினைத்தது. அதற்கு எதிராக இந்த பொதுக் கூட்டங்கள் சென்னை, மதுரை, பரமக்குடி, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய இடங்களில் அடக்குமுறை எதிர்ப்பு இயக்கம் சார்பில் நடைபெற்றன. இந்தக் கூட்டத்தின் முக்கியப் பேச்சாளர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மனித உரிமைப் போராளி டாக்டர் பாலகோபால். இந்த எல்லா இடங்களிலும் அவர் உரையாற்றினார். சென்னையில் ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பும் நடைபெற்றது. தோழர் நீண்ட பயணம் சுந்தரம் அவர்கள், இன்று கௌரி லங்கேஷ் பத்திரிக்கையில் ஊடகவியலாளராக இருக்கும் அன்றைய மாணவர் சிவசுந்தர், AIRSF செயலாளர் ஆகியோரும் இதில் சிறப்புரை ஆற்றினர். இந்தப் பொதுக்கூட்டங்கள் மிகவும் எழுச்சியுடன் மக்கள் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றன. அப்போது பாலகோபால் அவர்களுடன் இருந்து, அவரை இந்த இடங்களுக்கு எல்லாவற்றிற்கும்

அழைத்துச் சென்றேன். 21 வயது இளைஞரான வேலுவை தோழர் பாலகோபால் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். புன்முறுவல் தோழமையுடன் அறிமுகமான அவர் 2000ஆம் ஆண்டிலும் அப்படியேதான் இருந்தார்.

பெரும்பாலும் சென்னைவாசிகள், அதிலும் இளைஞர்கள், தங்களை விட வயதில் மூத்தவர்களை "தலைவா", "தலைவா" என்று அழைக்கும் பழக்கம் அப்பொழுது இருந்தது. வேலு சென்னையில் கல்லூரியில் பயின்றதால் இந்த பழக்கம் அவரையும் தொற்றிக் கொண்டது. தோழர் என்று சில நேரங்களில் அழைத்தாலும், பெரும்பாலும் "தலைவா"என்று அன்புடன், ஒருவித காதலுடன் அழைப்பது வேலுவின் பழக்கமாக இருந்தது. 30 ஆண்டுகள் கழிந்தும் கூட இணையவழி கூட்டங்களிலும் அப்படித்தான் அவர் என்னை அழைத்தார். தன்னைவிட வயதில் மூத்தவர்கள் சிலரையும் தலைவா என்ற அழைக்கும் பழக்கம் அவரிடம் இயல்பாக இருந்ததை அவருடைய நினைவஞ்சலி குறிப்புகள் தெரிவிக்கின்றன. எமர்ஜென்சி காலத்திற்குப் பிறகு அனைத்திந்திய அளவில் உருவான PUCL இயக்கம் தமிழ் நாட்டிலும் வலுவாக இருந்தது. துக்ளக் சோ, எஸ்.வி. ராஜதுரை, வழக்கறிஞர்கள் இப்ராஹிம், சங்கரசுப்பு உள்ளிட்ட பலர் அதில் செயல்பட்டு கொண்டிருந்தனர். பின்னர் எம்ஜிஆர் காலத்தில் நடந்த போலி என்கவுண்டர் பிரச்சினையில் துக்ளக் சோ அதை விட்டு விலகியதால் தற்காலிகமாக அந்த இயக்கம் பின்னடைவை சந்தித்தது. 1989 ஆம் ஆண்டில்மீண்டும் PUCL புத்துயிர் பெற்றது. அதற்கு டாக்டர் பாலகோபால், மூத்த வழக்கறிஞர் கண்ணபிரான், வழக்கறிஞர் ஆசைத்தம்பி உள்ளிட்ட பலர் காரணமாக இருந்தனர். முற்போக்கு மாணவர் சங்கம், இளைஞர் அணி சார்பாக ஈழ விடுதலைக்கு உண்மையான ஆதரவு என்பது தமிழக மக்கள் விடுதலையே என்ற முழக்கத்துடன் ஈழ விடுதலை ஆதரவு கூட்டமைப்பு, தமிழ் பாதுகாப்பு கூட்டமைப்பு, அமைதிப்படை எதிர்ப்பு இயக்கம் ஆகியவை சென்னையிலும் தமிழ்நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. பேராசிரியர்கள் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் அவர்கள் இந்த கூட்டமைப்புகளுக்கு அப்பொழுது தலைமை வகித்தனர். கூடங்குளம் அணு உலை தொடங்கப்பட்ட போது அதற்கு எதிராக கூட்டமைப்பு சென்னையில் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் இயக்கங்கள் நடைபெற்றன.

பத்திரிக்கையாளர்கள் ஞாநி, ரமேஷ் ஆகியோர் அணு உலை பாதிப்புகள் குறித்து வீடியோவை இந்த இயக்கம் சார்பில் தொகுத்து வெளியிட்டனர். இந்த இயக்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களில் இருந்து சைக்கிள் பேரணி கூடங்குளம் நோக்கி நடைபெற்றது. தர்மபுரியில் தொடங்கிய சைக்கிள் பேரணிக்கு வேலுவின் முன்முயற்சி முக்கியமானது என்பதை இங்கு பதிவு செய்ய வேண்டும். சென்னை சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நான் 'முன்னோடி'பத்திரிகை இதழின் ஆசிரியர் குழுவில் இருந்தேன். வேலு''பூபாளன்' என்ற பெயரில் கவிதைகள் எழுதினார். அதில் சில கவிதைகள் முன்னோடி இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. 1992 இல் தர்மபுரியில் ரயில் தண்டவாளத்தில் நடந்த சிறு வெடிப்பை முன்னிட்டு, தோழர் பூபாளன் மற்றும் திராவிடக் கழக தோழர் சிசுபாலன்

ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அப்பொழுது தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் காட்டாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1991 பாபர் மசூதி இடிப்பு மற்றும் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த

ஜெயலலிதா அனைத்து கம்யூனிஸ்ட் இயக்கங்கள், தமிழ்த் தேசிய இயக்கங்கள், சிறுபான்மை இயக்கங்கள் மீது மிகக் கொலீரமான அடக்குமுறைகளை ஏவினார். தோழர்கள் வேலுவும், சிசுபாலனும் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சென்னை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தனர். இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக அப்பொழுது பல்வேறு கூட்டு இயக்கங்கள், கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த கூட்டமைப்புகளின் ஒரு பகுதியாக அமைப்பு சார்பில் கலந்து கொண்டு, இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தோம். பாட்டாளி மக்கள் கட்சி, பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் இந்த கூட்டமைப்பில் இருந்தன என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

தடா சிறைவாசி வேலு, அவருடைய அம்மா லஷ்மி, அவருடைய மாமா ஆகியோருக்கும் வழக்கை நடத்திய வழக்கறிஞர் சங்கரசுப்பு, இயக்கத் தோழர்கள் ஆகியோருக்கும் இடையில் ஒரு பாலமாக நான் செயல்பட்டேன். தர்மபுரியில் இருந்த வேலுவின் அம்மா சென்னை சிறைச்சாலையில் வேலுவை சந்தித்து விட்டு ரயிலில் திரும்புகிறாா. கழுத்தில் இருந்த செயினை பறிக்க நினைத்த திருடன் தர்மபுரி அருகே வரும்பொழுது அவரின் செயினை அறுத்துவிட்டு அவரை கீழே தள்ளி விடுகிறான். தண்டவாளங்களுக்கு இடையில் அவர் விழுந்து விட்டதால் அவருக்கு காலில் சதைகள் கிழிந்து போனது. அதற்குப் பிறகு அவர் சென்னையில் தன்னுடைய தம்பியின் வில்லிவாக்கம் வீட்டிற்கு வந்து விட்டார். இந்த நான்கு ஆண்டு காலம் பெரும்பாலும் வழக்கு வெற்றி அடைய வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து விடாப்பிடியாக நானும் தோழர் சங்கரசுப்புவும் முயற்சி எடுத்தோம். அதன் ஒரு பகுதியாக அப்பொழுது தடய அறிவியல் துறை (Forensic Science Department) மதுரையில் வேலை செய்த, எனக்கு சட்டக் கல்லூரியில் சீனியராக இருந்த, இப்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரான தொல். திருமாவளவன் அவர்களை இரண்டு அல்லது மூன்று முறை நான் சந்தித்திருக்கிறேன். அதில் குறிப்பாக தடய அறிவியல் துறை எப்படி வெடிமருந்துகளை சாட்சிகளாக பயன்படுத்துகிறது, அறிவியல் பூர்வமான கண்ணோட்டத்தில் சாட்சியங்களை விசாரிப்பது எப்படி என்பதற்காக இந்தச் சந்திப்புகள் நடைபெற்றன. இதற்குப் பிறகும் திருமாவளவன் சென்னை வரும்போது தோழர் சங்கரசுப்புவைச் சந்திப்பார். இந்த நட்பு, தோழர் திருமாவுக்கு அவருடைய சில வழக்குகளை நடத்துவதற்கு பின்னாளில் உதவிகரமாக இருந்தது. சென்னை பல்கலைக் கழகத்தின் பாதுகாப்புத் துறை (Defence Studies) துறைத் தலைவரையும் நானும் சங்கரசுப்புவும் சந்தித்து உரையாடினோம். வேலு வழக்கின் குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் சங்கரசுப்பு இவ்வளவு மிக நுணுக்கமாக உழைத்து நடத்த விரும்பினார். அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து அதை முழுமைப்படுத்துவதில் சிறப்பாகச் செயல்பட்டதாக இன்றும் கருதுகிறேன். இதற்கான ஆலோசனைகளையும் தோழர் வேலு சிறையில் இருந்தபடியே வழங்கினார். வேலுவின் அம்மா எங்களுடைய குடும்ப நண்பராக இருந்தார். இந்தக் காலத்தில் வேலுவைச் சிறையில் வாரத்திற்கு அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறையாவது சந்தித்து விடுவேன். அவருக்குத் தேவையான உணவு, புத்தகங்களை அளித்து, வழக்கின் நிலவரம் குறித்து அவரிடமும் சங்கரசுப்புவிடமும் தூதுவராக செயல்பட்டேன். வேலுவின் அம்மா அப்பொழுது வில்லிவாக்கத்தில் தன் தம்பியுடன் ஒரு வாடகை

வீட்டில் இருந்தார். சிறைக்கு போய் வந்தவுடன் வேலுவின் அம்மாவையும் மாமாவையும் அவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்துவிடுவேன். அவர்கள் தங்கள் சொந்த பிள்ளையைப் போல உணவளித்து உபசரிப்பார்கள். ஒரு வழக்கில் பொய் குற்றச்சாட்டில் கைதானதால் எனக்கு அரசாங்கம் பிழைப்பு ஊதியம் (suspension salary) வழங்கிக் கொண்டிருந்தது. இது எனக்கு முழுநேர ஊழியரைப் போல செயல்பட ஊக்கமளித்தது. இதேபோன்று வேலு தமிழக மின்சாரத் துறையில் வேலை செய்ததால் அவருக்கும் சஸ்பென்ஷன் சம்பளம் கிடைத்தது. என்னுடைய அனுபவம் இதற்கு உதவியது. மின்வாரிய துறையில் இருந்த CITU தொழிற்சங்க தோழர்கள் இதற்கு உதவி செய்தார்கள். மாற்று அரசியல் கருத்து இருந்தாலும் வேலுடன் அவர்கள் தோழமையுடன் இருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிட வேண்டும் அதற்கு வேலுவின் அர்ப்பணிப்பும் தொழிற்சங்க பங்களிப்பும் காரணமாக இருந்தது. அதனால் அவருக்கு மாதந்தோறும் போதுமான பணம் கிடைத்தது அது அவருடைய அம்மாவுக்கும் உறுதுணையாக இருந்தது. வேலு சிறைக்குள் ஒரு ஆளுமையாக வளர்வதற்கு இந்த நான்கு ஆண்டுகாலப் பங்கு முக்கியமானது. அதில் ஒரு சிறிய பங்கு எனக்கும் இருந்தது. சிறையில் இருந்த காலத்திலும் வேலு சிறந்த அமைப்பாளராக இருந்தார். இஸ்லாமிய சிறைவாசிகள், தமிழ் தேசிய சிறைவாசிகள், வீரப்பன் கூட்டாளிகள் என்று பலரையும் தன்னுடைய தோழமை வட்டத்திற்குள் கொண்டு வந்தார். அவர்களின் விடுதலைக்கு சட்ட ரீதியான உதவிகளை எனது மூலம் செய்தார். வேறுபட்ட கருத்துடையவர்கள் கூட வேலு வின் தோழமைப் பண்பு, அவரின் அன்பு வட்டாரத்துக்குள் கொண்டு வர தோழரால் முடிந்தது. அவர் வாழ்நாளின் இறுதி வரையிலும் இந்த பண்பு அவரிடம் தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருந்தது. லண்டன் வாழ் தோழர்கள் இந்த தோழமையை சிறப்பாக உணர்ந்திருப்பார்கள் என்பதை அங்குள்ள நட்பு வட்டாரங்களின் இறுதி அஞ்சலிப்பதிவுகள் காட்டுகின்றன. இதன் தொடர்ச்சியாக 1995 ஆம் ஆண்டில் சென்னை மத்திய சிறையில் நடந்த போலீஸ் தாக்குதலுக்கு எதிராகச் சிறைவாசி களை அமைப்பாக்கி, 'நீதிபதி ராதாகிருஷ்ணன் கமிஷன்' முன்னால் சிறைவா சிகள் சாட்சியம் அளிக்க வைப்பதற்கு தோழர் வேலுவால் தன் நண்பர்களுடன் இணைந்து செய்ய முடிந்தது.

அவர் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்தபோது நான் வழக்கு வேலைகளிலி ருந்து விடுபட்டு 'மக்கள் பண்பாட்டுப் பேரவை' என்ற அமைப்பின் மாநிலச் செயலா ளராகவும், 'மக்கள் பண்பாடு' இதழை நடத்துவதிலும் கவனம் செலுத்தினேன். படைப்பிலக்கியங்கள், மார்க்சிய கோட்பாடுகள் குறித்து தோழர் வேலுவுடன் நேரில் பல விவாதங்கள் செய்ய வாய்ப்பு கிடைத்தது. வேலுவுக்கு இலக்கியத்தில் இருந்த முன்முயற்சியும், நான் உள்ளிட்ட தோழர்களின் உற்சாகமும் சேர்ந்து அவர் நிறைய கவிதைகளை எழுதினார். மக்கள் பண்பாடு, முன்னோடி இதழ்களில் அவை வெளியானது.

அவரின் கவிதைகள் :

'மதம்'

மலரென்று முகர்ந்து பார்த்தேன் பிணத்தின் வாசனை 'அரசியல் (புதிய) வரவு'
அந்த பழைய குட்டையில்
ஒரு தவளையின் துள்ளல் - தண்ணீரின் சப்தம்

இப்படி நறுக்குகள் தெறித்தது போல் சொல்வதுதான் அவருடைய கவிதை பாணி

யாக இருந்தன. 2000 ஆம் ஆண்டில் அமைப்பின் செயல் யுத்தி மாற்றங்களில் எனக்குமாறுபட்ட கருத்து இருந்தது. ஆயுதப் போராட்டமே முதன்மையானது மக் கள் திரள் போராட்டங்கள் இரண்டாம் பட்சமாக இருக்க வேண்டும், நகர்ப்புற மக்கள் இயக்கங்களை முழுவதுமாக தலைமறைவாக நடத்துவது அல்லது கை விட்டு விடுவது என்ற செயல் யுத்தி முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டது. இதற்கு மாறுபட்ட கருத்தை வைத்து விவாதித்தும் எந்த பலனும் இல்லாததால் அமைப்பி லிருந்து வெளியேறினேன். தொடர்ச்சியாக மக்கள் பண்பாட்டுப் பேரவையின் மாநிலக் குழு கலைக்கப்பட்டது மக்கள் பண்பாடு இதழ் நிறுத்தப்பட்டது. பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி தூக்கமின்மை நோய்க்கு ஆளானேன். அதனால் ஏற்பட்ட மறதியால் எனக்கு பல விஷயங்கள் மறந்து விட்டதால் வேலுவுடன் தொடர்புடைய பல நிகழ்வுகளை இங்கு எழுத முடியாமல் போனதற்கு வருத்தமாக இருக்கிறது. வேலுவின் வழக்கு வெற்றிகரமாக வழக்கறிஞர் சங்கரசுப்புவால் நடத்தப்பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையுடன் திராவிடக் கழகத் தோழர் சிசுபாலன் விடுதலை அடைந்தார்.

2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு வேலுவைச் சந்திக்கவில்லை. 2017 க்குப் பிறகு 'ஊடாட்டம்' ஆய்வுக் குழுவில் இணைந்தேன். தோழர்களுடன் கருத்தரங்குகள், பல்வேறு ஆய்வுகள், விவாதங்கள் செய்து கொண்டிருந்தோம். மார்க்சிய அடிப்படை நூல்களைப் படித்து விவாதிப்பது என்று முடிவு செய்தோம். அந்த மார்க்சிய அடிப்படை நூல்களை தொடர்ந்து படித்து விவாதிப்பதற்காக 'மனிதன் முகம் (MANITHANMUGAM)' என்ற முகநூல் பெயரில் தோழர் வேலு, ஊடாட்டம் ஆய் வுக் குழுவின் இணையவழி வாசிப்பு கூட்டங்களில், கருத்தரங்குகளில் கலந்து கொண்டார். மார்க்சிய மூல நூல்களை முழுமையாகப் படித்துவிட்டு வந்த வேலு உற்சாகத்துடன் இதில் பங்கு கொண்டார். கேள்விகளை எழுப்பினார். பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்தார். அவ்வப்போது வேலு அவருடைய முகநூல் வழியாக லண்டனில் அவர் பங்கேற்ற போராட்டங்கள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் குறித்து அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. திடீரென அவருடைய மறைவு மிகவும் சோகமான நினைவாக இன்று உள்ளது. வாழ்நாளில் மார்க்சிய-லெனினிய கோட்பாட்டைக் கற்றும் கடைப் பிடித்தும் உறுதியாக நின்ற வர். மக்கள் திரள் போராட்டங்களை அர்ப்பணிப்புடன் செயல்படுத்தியவர் ஆதரவு அளித்தவர். தோழரின் நினைவைப் போற்றுவோம். பூபாலன் என்பதற்கு தமிழில் 'பூமியை காப்பவன்' என்ற பொருள் உள்ளது. ஆனால் அவர் பெயரை 'பூபாளன்' என்றுதான் நான் புரிந்து கொண்டேன்.


'பூபாளன்' என்பதற்கு'பூபாளம்' என்ற இசை ராகம் - விடியலுக்கான இசை என்ற பொருள் படும்படி தான் நான் எடுத்துக் கொண்டேன். அதனால் அந்தப் பெயரில் அவருடைய கவிதைகளை இதழ்களில் வெளியிட்டேன். அதற்குக் காரணம் பள்ளி நாட்களில் இதே பெயரில் ஒரு கையெழுத்து பத்திரிகையை நாங்கள் நடத்தி இருந்தோம்.

விடியற்காலையில் இசையை எப்பொழுது கேட்டாலும் பூபாளன் என்கிற வேலு நினைவில் வந்து 'தலைவா' என்று கொஞ்சலுடன் அன்புடன் அழைப்பார்!

கி. நடராசன்
CPIML REDSTAR

●

# When restless got laid to rest
## - Umakanthan



"Nanbu,"

The day I first heard about you, you were only a figment of imagination. We didn't have video calls like today. In my mind, I pictured a typical macho Tamil man, perhaps militant, perhaps an angry young man. We were both young then, you just a year older than me.

Kottravai had spoken of you, the one person in that Chennai group who truly cared about the polity and the situation in the Vanni. She herself had been imprisoned on suspicion of being a Black Tiger, only to be released without charges, except for arriving in India without a valid visa from Talaimannar. That story aside, she held you in the highest regard, for your inquisitive mind and your relentless search for truth.

When you reached out to me about seeking asylum in the UK in 2002, the only person I could think of was Raghavan. I knew no other Sri Lankan law firm would truly understand the Tamil Nadu asylum context. Most would have asked you to fabricate a story, claim to be from Mannar or Matale, spin a narrative. But yours was a genuine case of persecution for your political beliefs. I am grateful to this day that Raghavan took your case and secured your asylum so swiftly.

By the time you arrived, we had already become friends. Along with Akilan, we drove from Heathrow to my flat in Stockwell. It feels like another lifetime now. I realized this when I spoke to Raji and heard that Nilofer is already in her second year of law school.

I never got to say goodbye, not adieu, not alvida, not even a meendum sandhipom ( we will meet again). The harsh truth is we will never meet again, not in this lifetime. Yet, you remain with me, in fragments, when I drive, when memories return unannounced.

I remember that day a million voices marched through central London against the invasion of Iraq in 2003, you and I went with tuna sandwiches and a few cans of beer. After the march, we sat in Hyde Park. Before we left

the park, you offered your seat to a Nigerian woman, as any good man from our upbringing would. I teased you, saying women here might not want such gestures. That was us, kelir murai (kinship), Maaman–Machan (kith & kin), always teasing, always close.

You were always in pursuit of knowledge, keeping pace with the shifting currents of left movements in both the UK and India. At times, I felt the struggle was a losing one, against systems drenched in the blood and sweat of our people, of all people. However, you had the energy to keep going, right till the very end.

I only wish you had fought your own brain, come back to us, and continued that fight against imperialism and fascism.

I ask your forgiveness, for the small angers, the trivial disagreements. You never held ego; you always made peace. You were a comrade I never truly had elsewhere, in Bangalore or in London.

We became close, yet you rarely imposed your politics on me, perhaps to avoid conflict. But I was always with you in spirit. I simply did not have your endurance to pursue it fully. I grew up admiring the very movement you believed in and worked for.

The way you spoke of your life as an activist, so matter-of-fact, so unburdened, made me feel I too could walk that path. I admire that in you, and in all who have sacrificed their lives, childhood, and freedom for the liberation of others.

You taught me that oppression is not just by people, but by ideas. You explored that, challenged it, and gave voice to it for the Tamil world, the universal working class.

My nephew would jokingly say, "Velu Uncle is busy with his katturai (essays)" Even my colleagues at my Food & Wine shop remember you fondly. They called me, asking how you left us.

These are only fragments of our time together. But I know you will continue to appear in my life, in other forms, in other struggles.

I do not believe in rebirth or karma. Yet, I know I will see every fallen comrade in Dandakaranya, in every Gondh resisting Vedanta in Odisha, in every voice raised in Tamil Nadu or Sri Lanka for freedom and justice.

Lal Salam
Sev Vanakkam
Red Salute

●

# சிறைச் சுவர்களைத் தகர்த்த குரல்

**- ஆலப்பாக்கம் முருகேசன்**



*தோழருக்கு செவ்வணக்கம்!*

*வேலு என்பது அனைவருக்கும் பரிச்சயமான பெயர். சிறையில் இருக்கும் போது சமூக நிகழ்வுகளைப் பற்றி பேசும் போது, உடன் இருந்த இஸ்லாமிய தோழர்களோடும் சரி, மற்றவர்களோடும் சரி அவர்களின் நடைமுறையை முகம் சுழிக்காமல் மார்க்சிய பார்வையில் விமர்சனம் செய்வார் வேலு. அதில் எந்த சமரசமும் செய்து கொள்ள மாட்டார். சிறையில் நடந்த போராட்டங்களில் முக்கியமானது, தடா சிறைவாசிகளின் நேர்காணல் விதிமுறைகளை உடைத்து மாற்றியமைத்தது. அந்த விதிமுறைகள்:*

*1) இரத்த உறவுகள் அல்லாத வேறு யாரும் தடா சிறைவாசிகளை நேர்காணல் செய்ய முடியாது.*

*2) சிறை வாசிகள் தமிழில் மட்டுமே உறவினர்களுடன் பேச வேண்டும்.*

*3) உறவினர்களிடம் பேசும் போது சிறையதிகாரி என்ன பேசுகிறோம் என்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிருப்பார்.*

*இதுபோன்ற பல எண்ணற்ற கடுமையான விதிமுறைகளை எதிர்த்து 60 தடா சிறைவாசிகளை ஒருங்கிணைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக பின்வாங்க அதிரடியாக தமிழ்நாடு விடுத லைப் படை தோழர்களோடு சேர்ந்து தோழர் கண்ணுசாமி, தோழர் சிசுபாலன், தோழர் சிறியோன் ஆகிய 9 பேர் உண்ணாவிரதத்தில் உறுதியாக நின்று போராட் டத்தை தொடர்ந்தோம். எங்களோடு இருந்தவர்கள் சிறையதிகாரிகளின்*

அறிவுரையை ஏற்று போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டனர். நிலைமை எதிராக போவதைக் கண்டு தோழர் வேலு மற்ற 8 பேருடன் ஆலோசனை நடத்தினார். 7ம் நாள் தொடர்ந்த உண்ணாவிரதப் போராட்டம், தண்ணீரைத் தவிர வேறு எதுவும் எடுக்காததால், தோழர்கள் அனைவரும் சோர்வுற்று இருந்த போதும், " கோரிக்கைகளுக்கான முடிவை எடுக்காத வரையில் போராட்டத்தை கைவிடப் போவதில்லை" என்ற முடிவிலிருந்து பின்வாங்காத நிலையில், (தோழர் வேலு உட்பட) 9 பேரும் சிறையின் மொட்டை மாடியில் ஏறி நின்று, ( ஆபத்தான நிலையில்) புரட்சிகர பாடல்களை பாடியது அனைத்து சிறைவாசிகளின் கவனத்தையும் ஈர்த்தது. முடிவில், சிறை நிர்வாகம் பணிந்தது. எங்களது அனைத்து கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ' போராட்டமே வாழ்வின் விதி' என்ற மார்க்சின் மேற்கோளை உறுதிப்படுத்தியதில் தோழர் வேலுவின் பங்கு அளப்பரியது.

சிறையில் நிர்வாகத்திற்கும் தடா சிறைவாசிகளுக்கும் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளில் முதல் ஆளாக வேலு இருப்பார். சிறைவாசிகள் யாராக இருப்பினும் அவர்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்புவதில் முதல் நபர் அவர். இதனால் சிறை நிர்வாகம் தோழர் வேலு மீது கடும் கோபம் கொண்டிருந்தது. ஒருமுறை விடுதலைப்புலிகள் சிறையில் இருந்து தப்பித்த போது, வேலுவும் தமிழ்நாடு விடுதலைப்படை தோழர்களும் கடுமையாக தாக்கப்பட்டனர். எழுந்திருக்கவே முடியாத அளவு அவர் உடம்பு முழுக்க காயங்கள். அவர் 33 மாதங்கள் சிறைக்குள் சிறை வைக்கப்பட்டார். குளிக்க சோப்பு இல்லை. மாற்றி உடுத்த உடை இல்லை. ஒரே தட்டில் இரண்டு மூன்று பேர் சாப்பிட்டு கொள்ள வேண்டும். ஒரே அறையில் 3 - 4 பேர். பகலில் கதவைத் திறக்காமல் சாப்பாட்டு தட்டை உள்ளே தள்ளி விடுவார்கள். இயற்கை உபாதைகளுக்கு ஒவ்வொருவராக திறந்து விடுவார்கள். அந்த நிலையிலும் மற்ற தோழர்களின் மனநிலையைத் தேற்றுவார். மூன்று மாதத்திற்கு பின்பு, அடக்குமுறையை எதிர்த்து, 'வழக்கு மன்றத்திற்கு' செல்ல முடியாது என்றும், உண்ண முடியாது என்றும் தோழர் வேலு போராட்டத்தை முன்னின்று நடத்தினார். அதிலும் வெற்றி பெற்றார். சிறையில் கொஞ்சம் தேர்வுக்குப் பின்பு, பொருட்கள் வாங்குவதற்கு எல்லோரிடத்திலும் கையில் பணம் இல்லை என்று சிரமப்படுவார்கள். அப்போது தோழர் வேலு தனக்கு வரும் பாதி சம்பளத் தொகையை கொண்டு மற்றவர்களின் தேவையை கேட்டறிந்து வாங்கி கொடுப்பார்.

அவர் மார்க்சிய லெனினியத்தை உயர்த்திப் பிடித்தவர். அதற்கு இணையாக எதையும் ஏற்றுக் கொள்ளாதவர். கொண்ட கொள்கையில் உறுதியும் பற்றும் கொண்டவர். அவரது இழப்பு, உற்ற உறவினருக்கு மட்டுமின்றி, அவரைச் சார்ந்த அமைப்புக்கும் சமூக நலனுக்கும், மாற்றத்திற்கும் வேண்டி போராடும் அனைத்து தோழர்களுக்கும் ஏற்பட்ட ஈடு செய்யமுடியாப் பேரிழப்பாகும். மார்க்சிய லெனினிய கண்ணோட்டத்தை முன்னிறுத்தும் அவரது அணுகுமுறையில் நின்று நாம் விடுதலைக்கான பாதையில் பயணிப்போம் என உறுதி ஏற்போம்!

●

# More Than a Neighbour: The Lasting Impact of Velu

## - Karen and Leah



From the very first moment we met Velu, to be precise, on Saturday 29th March 2025, in his beautiful back garden on a sunny afternoon with Rajitha and Nilofer, he showed genuine kindness.

His smile and caring spirit made us feel welcome. After a few moments, he declared, “We are family!” He helped, protected and cared for us from that day forward.

We will always hold dear in our hearts the memory of when Velu cut down the 25 year old, 8ft high maple tree in our garden. He saw me from his window and must have wondered, “How does she intend to cut down that tree with a handsaw? It will take her all weekend!” However, after I had sawed one branch, he came down and rescued me from a task that would have taken days. He returned with his electric saw in hand, barefoot, shorts and a t-shirt. He asked, “Karen, what do you want cut down next?” Within an hour, the tree went from being “Goliath” to

a "bonsai." The result was that the sunlight flooded our gardens. Nature was allowed to shine brightly.

We will cherish Velu's garden ideas. Making a plan of how we visualized the garden. To take our time and how to save money. We keenly wanted our garden to be "Velu and Rajitha 2.0". All our family and friends who visited marveled at Velu and Rajitha's garden. The first thing they said when they looked through our kitchen window was, "Oh, your garden is beautiful." Then Leah would reply, "No, that's our neighbours. Ours is on the right." Then they said, "Okay. We can see the potential."

We will miss Velu's laughter and joyful, loud voice. We knew he was popular and loved because he was forever on his phone. He was Leah's alarm clock to wake up on time. If she had not heard him, she soon realised he was going into work later and that she was late for work.

Even though our time with Velu was cut short, his presence remains vivid in our minds, strong, steady, and lovingly caring. We feel deeply grateful to have known such a remarkable man: compassionate, intelligent, kind and devoted to both his family and the wider world.

We soon learned through his family that Velu's care extended far beyond those closest to him. He stood up for those who had no voice, guided by a deep sense of justice and humanity. He was not only a loving family man and friend, but also a true advocate for others. Someone who made a difference simply by being who he was.

Some people pass through our lives and then some people leave an imprint. Velu was firmly the latter. His kind of presence is rare. We hope that there are more Velus in the world.

With respect and gratitude, Karen and Leah

# புலம்பெயர் தாயகத்தில் ஒரு போர்த்தளபதி

## -தோழர் குறிஞ்சி



தமிழகத்திலிருந்து சென்று இங்கிலாந்துவாசியாகி விட்ட பூபாளன் எனும் வேலு, ஓர் அருமையான மார்க்சியத் தோழர். அவர் காலமாகி விட்ட செய்தியை இலண்டனிலிருந்து தோழர் யமுனா ராஜேந்திரன் என்னிடம் தெரிவித்தார். பிற தோழர்களும் அதை உறுதிப்படுத்தினர். இரக்கமற்ற அச்செய்தி ஒரு கணம் என்னை மிகவும் பதற்றத்தில் ஆழ்த்தி விட்டது.

2006 / 2008 / 2010 / 2017 / 2024 ஆகிய ஆண்டுகளில் நான் இலண்டன் சென்ற ஒவ்வொரு முறையும் அவரோடு கழித்த பொழுதுகள் மறக்க முடியாதவை. குறிப்பாக 2010 ஆம் ஆண்டு அவரது இல்லத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். இலங்கையைச் சார்ந்த அவரது துணைவியார் றஜிதா அவர்களின் இனிய வரவேற்பை என்னால் மறக்க இயலாது. அவரது ஒரே மகள் அப்பொழுது சிறுமியாக இருந்தார்.

பிறகு சிறிது இடைவெளி விட்டு 2017-ஆம் ஆண்டு மீண்டும் நான் இலண்டன் சென்றிருந்த பொழுது, பேராசான் கார்ல் மார்க்ஸ் இலண்டனில் வாழ்ந்த இடங்களை எல்லாம் கால்நடையாகவே சென்று பார்க்கத்தக்க வகையில் ‘மார்க்ஸ் நடை’ (Marx Walk) எனும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த அரிய நடைப் பயணத்தில் என்னோடு தோழர் வேலு அவர்களும் பங்கேற்றார். அதே காலகட்டத்தில் ஈஸ்ட்ஹாமிலுள்ள பௌசர் புத்தகக் கடையில் யமுனா ராஜேந்திரன் , வேலு மற்றும் நண்பர்களிடையில், ‘இந்தியாவில் மனித உரிமைகள் ’ குறித்த ஓர் உரை நிகழ்ச்சியில் நான் பங்கேற்ற தருணமும் மறக்க முடியாதது.

அடுத்து, சென்ற முறை 2024-இல் நான் இங்கிலாந்து சென்ற பொழுது, இலண்டனின் முக்கியப் பகுதியான ட்ரபால்கர் ஸ்கொயர் பகுதிக்கு வருமாறு அவரிடம் வேண்டினேன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவரை அங்கு பார்த்த பொழுது, அவர் சற்றே மெலிந்திருந்ததை உணர முடிந்தது. பிறகு அங்கிருந்து இருவரும் இலண்டன் அம்பேத்கர் நினைவு இல்லத்திற்குச் சென்றோம். நீண்ட நேரம் அங்கிருந்து விட்டு, அதன் பின் ஓர் உணவு விடுதியில் ஓய்வாக அமர்ந்து உரையாடினோம். அப்பொழுது பல்வேறு செய்திகள் குறித்து அவரோடு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் நல்வாய்ப்பு அமைந்தது. அதுதான் அவரை நான் இறுதியாகச் சந்தித்த தருணம்.

பாலஸ்தீனம் குறித்தும், அமெரிக்க வல்லரசின் சூழ்ச்சிகள் குறித்தும்,இந்தியாவில் மார்க்சிய - லெனினிய இயக்கச் செயல்பாடுகள் குறித்தும் தனது கருத்துக்களை அவர் பகிர்ந்து கொண்டார். அதேசமயம் அவரது கடும் பணிச்சுமை பற்றியும், அது தனது செயல்பாடுகளுக்கு எவ்வாறு பின்னடைவை உண்டாக்குகிறது என்பதையும் தெளிவு படுத்தினார்.

தோழர் வேலு அவர்கள் மார்க்சியத்தின்பால் தீவிர ஈடுபாடு கொண்டவர். அது சார்ந்த செயல்பாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர். மார்க்சியத்தின் வெல்லற்கரிய தன்மை குறித்து உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர்.

இலண்டனில் நடைபெறும் முற்போக்கு நிகழ்வுகளில் உற்சாகமாகப் பங்கேற்பவர். அங்குள்ள இடதுசாரித் தோழர்களின் இணைப்புச் சங்கிலியில் முக்கியக் கண்ணியாகத் திகழ்ந்தவர். உலகெங்கும் நிகழும் கம்யூனிச முன்னெடுப்புகளை மிகுந்த ஈடுபாட்டுடன் வரவேற்றுக் கொண்டாடுபவர்.

அவரது மற்றுமோர் பண்பு, தனது கொள்கைக்காக எத்தனை இடர்களையும் ஏற்கும் மனத்துணிவு ஆகும். அவரது மரபணுவிலேயே போர்க்குணம் மேலோங்கியிருந்தது.

தமிழகத்தில் அவர் பங்கேற்ற போராட்டங்களில் அவரது அர்ப்பணிப்பு தெளிவாக வெளிப்பட்டது. எடுத்துக்காட்டாக, தடா எனும் கொடும் சட்டத்தை அவர் எதிர்கொண்ட விதத்தைக் குறிப்பிடலாம். 1993 ஆம் ஆண்டில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுடன் தோழர் வேலு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 1993 நவம்பர் மாதத் "தமிழ் நிலம்" எனும் தனது பத்திரிகையில் வேலுவை, அரிமா எனப் புகழ்ந்து பதிவிட்டுள்ளார். அப்பொழுது அவரது பெயர் சிறையில் வடிவேல் எனப் பதிவாகியுள்ளது .

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மைந்தரும், தனது போராட்டங்களுக்காகப் பத்தாண்டுகள் சிறையில் இருந்தவரும், சமரசமற்ற போராளியுமான தோழர் பொழிலன் மற்றும் தமிழ்நாடு திராவிடர் கழகத்தில் தற்பொழுது மாநில அமைப்புச் செயலாளராக இருக்கும் தோழர் த. சண்முகம் போன்றவர்களும் அவரோடு சென்னை சிறையில் இருந்துள்ளனர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சென்னை சிறையில் உள்ள இளம் தோழர்களுக்கு வெண்பா இயற்றுவது எப்படி என்பது குறித்து வகுப்புகள் எடுத்துள்ளார். திராவிடர் கழகத்தைச் சார்ந்த சண்முகம் போன்ற தோழர்களோடு இணைந்து வேலு அவர்களும் அந்த வெண்பா பயிற்சி


வகுப்பில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. கவிதையின்பால் தோழர் வேலு அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டை இது வெளிப்படுத்துகிறது.

தன்முனைப்பு அற்ற வேலு தோழரை மறப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல! 58 வயதே ஆன அவர் மாரடைப்பால் காலமானது எவர் ஒருவருக்கும் செரிக்க இயலாத சோகச்செய்தியே ஆகும். அவரது மறைவுக்குப் பிறகு அவரது உடல் மருத்துவமனைக்குத் தானமாக வழங்கப்பட்டது, அவரது மனித நேயத்தின் ஒரு சிறு வெளிப்பாடுதான்.

தாய்த் தமிழகத்திலும், இலண்டனிலும் உள்ள வேலு அவர்களின் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது துணைவியார் ரெஜிதா மற்றும் மகள் நிலோபர் ஆகியோரது துயர் பகிர்கிறேன்.

●



# தோழர் எனும் குரல்

## - மாஜிதா




தோழர் வேலுவைச் சந்தித்தது வழமையாக ஈஸ்ட்டாமில்நடைபெறும் ஒரு இலக்கியக் கூட்டத்தில்தான்.2014ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அப்பொழுது எனது மகளுக்கு நான்கு வயது. அவளையும் அழைத்துக் கொண்டு அந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். கூட்டம் ஆரம்பித்திருந்தது. அந்த நேரத்தில் மகள் சித்திரம் வரைய வேண்டும் என்று தனது பையில் இருந்த கலர் பென்சில்களையும் பேப்பரையும் கையிலெடுத்த பொழுது அங்கு மேசை இருக்கவில்லை. நான் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கையில் முன்னால் பேச்சாளர்களுக்கு போடப்பட்டிருந்த மேசையில் அமர்ந்திருந்த ஒருத்தர் அம்மா இங்க வா. மாமாவுக்கு பக்கத்தில் இருந்து வரையலாம் என்று புன்னகையுடன் அழைத்தார். உடனே மகள் ஓடிப்போய் அமர்ந்து கொண்டாள். கூட்டம் முடிந்ததும் நான் வேலு என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அன்றிலிருந்து தோழர் வேலுவினை இலக்கியக் கூட்டங்களில் அடிக்கடி சந்திப்பேன்.

மீண்டும் தோழர் வேலுவுடனான நட்பு நான் கதை எழுத ஆரம்பித்த பொழுது நிகழ்ந்தது. மணல் வீடு சஞ்சிகையில் எழுதிய TWO MUMMIES என்ற கதையை வாசித்து விட்டு தொலை பேசியில் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். கதைகளை வாசித்து அதற்குகாக போன் பண்ணி பேசும் வாசகர் நீங்க மட்டும் தான் தோழர் என்று நான் கூற அவர் சிரித்துக் கொண்டே தோழர் நீங்க இன்னும் நிறைய எழுதணும் என்ற உற்சாகக் குரல் அவரிடமிருந்து விடை பெறும்.

தோழர் வேலுவின் விமர்சன உரைகள் பலவற்றினை கேட்டிருக்கின்றேன். மிகவும் காத்திரமாக தனது கருத்துக்களை முன்வைத்து பேசுகின்ற இயல்பு அவரிடமிருந்தது. தன்னுடைய அரசியலுக்கும் கொள்கைகளுக்கும் பிடிக்காதவற்றை மிகவும் நிதானமாக கூச்சலின்றி உரையாடும் திறனை பெற்றிருந்ததார்.

தோழர் வேலுவின் திடீர் மறைவு நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த உள அழுத்தத்தினை அளித்துச் சென்றிருக்கின்றது. ஆனால் அவருடைய அரசியலும், நட்பும் நம்முடன் இருக்கின்றன.

இறுதியாக தோழர் வேலுவை ஆஸ்பத்திரியில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. உயிர் காக்கும் உதவியுடன் அவரது இதயம் இயங்கிக் கொண்டிருந்தது. அருகில் மனைவியும் மகளும் அமர்ந்திருந்தார்கள். நான் அவரது வலது கையைப் பிடித்து போய் வாருங்கள் தோழர் என்று கண்ணீருடன் விடைபெற்றேன். அப்பொழுதும் தோழர் எனும் குரல் என்னைச் சுற்றி அமர்ந்த்திருப்பதை உணர்ந்தேன்.

●

# Messages behind the captivating smile

## Rasanayagam family



Dear Velu Uncle, we have still not processed that you are no longer with us. You were always a ray of sunshine spreading positivity to everyone around you. No one can ever forget the huge smile and warmth that you carried everywhere with you. We have had the fortune to know you as the wonderful husband of Raji aunty and amazing dad of Nilofer. We live in a society where people easily turn a blind eye to injustice. It is only recently we have learned of all your accomplishments as a human activist. You never showed the pain of struggles that you carried on your shoulders all these years.

To us, you were simply our beloved Velu uncle who only wanted the best for us. We met you for the first time in 2004 and immediately we became fond of you. You always had a terrific sense of humour that drew everyone towards you. Every memory of you encompasses the love to share knowledge with others. You lived by example reminding us to enjoy the simple pleasures in life. You were a man of simplicity. Even now your sudden demise is a lesson to us all that we should never forget that life is short and at every opportunity we get, we should create memories without thinking that it can be done later.

When our community tried to force upon the ideology that certain things should be done at a certain age, you encouraged us to follow our dreams and most importantly not to worry about what others might say or think.

You would say to us 'Go and live your life on your own terms and if something is meant to happen, it will fall into your hands at the right time". You were the happiest and the first person to wholeheartedly wish us on all our achievements since the beginning.

We remember vividly when you proudly explained to us the meaning behind the name of Nilofer (Persian name for a lotus flower). Your attention to detail was phenomenal especially when there was an association to nature. We can promise you she will sure flourish as a beautiful and successful woman, carrying on your legacy forward to great heights. You have brought her up with good values and it is no surprise that she will be a great lawyer.

While visiting your house after COVID, we got to see the bookshelf that you had built yourself during lockdown with all your favourite books. You told us that knowledge is as big as an ocean and there is not enough time to read all the books in the world.

We will endeavour to follow your footsteps and ensure to help each other out. You have touched so many of our lives on many levels simply by being you. As you would always say, all you need to experience true happiness is appreciate your family, spend time with friends and love what you do.


We hope that you find peace in the nature that surrounds you, which is the place that brings you joy. We all miss you deeply, but we all know that you will be watching over us with that huge smile across your face.

With lots of love, Rasanayagam family



# தோழர் வேலு அவர்களின் நினைவலைகளில்
## - வி. சிவலிங்கம்.

தோழருடன் உரையாடிய நாட்கள் சிறிதளவாக இருந்த போதிலும் எம் மத்தியில் எழுந்த உரையாடல் பலகால தோழமையின் பிரதிபலிப்பாகவே இருந்தது. இதற்கான பிரதான காரணம் இருவரும் ஒரே கோட்பாடுகளில் பயணித்த காரணத்தால் அந்த உறவு மிக அன்னியோன்யமானதாகவும், நெருக்க மானதாகவும், உயர்ந்த தரத்திலான உரையாடலாகவும் இருந்துள்ளது. எனது எழுத்துக்களைப் படிப்பதில் அவர் காட்டிய ஆர்வம் அவரது கருத்துக்களை அறிவதில் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.
அவரது கடந்த காலங்கள் தொடர்பாக நாம் பகிர்ந்த சில அனுபவங்களை அவரது நினைவாகப் பகிர்ந்து கொள்வதே பொருத்தமானது என நம்புகிறேன்.



பொதுவாகவே செல்வப் பங்கீடு மிகவும் ஏற்றத்தாழ்வாகவும், நிலப் பங்கீடு சிலரிடம் குவிந்து காணப்படுவதால் அல்லது வேலைவாய்ப்பு அற்ற நிலை தொடர்வதால் அல்லது பொருளாதார பங்களிப்பில் தொடர்ந்தும் ஒரு பிரிவினர் ஓரங்கட்டப்படுவதால் ஏற்படும் நிலமைகளே ஒரு புரட்சிகரப் போராளியை தோற்றுவிக்கும் புறச் சூழலாக அவரது வாழ்வில் அமைந்ததாக நான் காண்கிறேன்.
மக்கள் தாம் வறுமையில் வாழ்வதாக எண்ணி அதற்கெதிராக போராட்டம் நடத்துவதில்லை. பதிலாக அந்த வறுமை நிலை நீதியற்றதாகவும், தடுக்

கக்கூடியதாகவும் இருந்தும் மாற்றம் ஏற்படவில்லை எனக் கருதும் போதே எழுச்சி கொள்கிறார்கள்.

வறுமை, நில ஆக்கிரமிப்பு, சாதி ஆதிக்கம், வேலைவாய்ப்பின்மை என்பன சந்ததி சந்ததியாக தொடரும்போது அங்கு நீதி மறுக்கப்படுவதை எந்த சாமான்ய மனிதனும் கடந்து செல்ல முடியாது.

இங்கு தோழர் வேலு அவர்களின் புரட்சிகர அரசியல் ஈடுபாடு என்பது எங்கு ஆரம்பிக்கிறதெனில் சகல அமைதி வழிப் போராட்டங்களும் எதனையும் பிறப்பிக்கப் போவதில்லை என்ற நிலை காணப்படும்போதே ஒரு புரட்சிகரப் போராளி தோற்றம் பெறுகிறான். அவ்வாறான ஒரு பின்புலத்தில்தான் அவரது அரசியல் ஆரம்பமும் நிகழ்கிறது.

இங்கு தோழரின் அரசியல் புரிதல் எங்கு ஆரம்பிக்கிறதெனில் பாராளுமன்ற ஆட்சிப் பொறிமுறை ஆட்சியாளரைத்தான் மாற்றுகிறது. அது உள்ளூர் அதிகாரக் கட்டுமானங்களை மாற்றுவதில்லை. எனவே ஆட்சியாளரை மட்டுமல்ல, நிர்வாகக் கட்டுமானங்களையும் மாற்ற வேண்டுமெனில் புரட்சிகர மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதாக இருக்கிறது.

இந்திய சமூகக் கட்டுமானத்தில் ஆதிக்க சாதியினர் நில உடமையாளர்களாகவும், பண முதலீடுகளை வழங்குபவர்களாகவும், உள்ளூர் நிர்வாக ஆதிக்கத்தை வைத்திருப்பவர்களாகவும் உள்ளனர். மத்தியதர வர்க்கத்தினர் என்போர் பணம் படைத்த விவசாயிகள். இங்கு தலித்துகளும்,ஆதிவாசிகளுமே நிலமற்றவர்களாகவும்,கூலிகளாகவும், ஒப்பந்த தொழிலாளிகளாகவும் உள்ளனர்.

தோழருடனான உரையாடலின் போது அவர் மிகவும் உணர்ச்சி வசப்படும் அம்சங்கள் எனில் தொழிலாளர்களின் உழைப்பு எவ்வித வேதனமும் இல்லாமல் பறிக்கப்படுவது, பாலியல் வன்முறை அதிகரித்து வருவது, சம்பள மறுப்பு அத்துடன் அவர்கள் மேல் தொடர்ச்சியாக நடத்தப்படும் சமூக அவமதிப்பு போன்றனவாகும்.

அவர் பல காலங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை அவரது ஒவ்வொரு அனுபவமும் எடுத்துக் காட்டியது. மிக நிறைந்த அனுபவங்களை தமது இளம் பராயத்திலேயே பெற்றுக்கொண்ட காரணத்தால் அவரால் புரட்சிகரப் பாதையைத் தொடர்ந்தும் பின்பற்ற முடிந்தது.

மிகவும் அமைதியான, ஆழமான சிந்தனை மிக்க தோழரின் மறைவு என்பது பெரும் இழப்பு ஆகும். இந்த இழப்பைத் தாங்கி தொடர்ந்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடரும் அவரது மனைவி, மகள் ஆகியோருடன் எனது ஆழ்ந்த இரங்கல்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

அவரது இலட்சியங்களைத் தொடர்ந்தும் எடுத்துச் செல்வதே எமது பணியாக அமையும்.

●

# தோழர் வேலுவுக்கு மக்கள் போராட்ட இயக்கத்தின் செவ்வணக்கங்கள்!!

ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையை நேசிப்பவர்களால் தோழர் வேலு என்று அன்போடு அழைக்கப்பட்ட சண்முகம் வேலு அவர்கள் எம்மை விட்டு மறைந்து விட்டார். அவருக்கு மக்கள் போராட்ட இயக்கத்தினதும், சம உரிமை இயக்கத்தினதும் நெஞ்சார்ந்த அஞ்சலிகளை தெரிவித்து கொள்கிறோம். அவரது எதிர்பாராத மறைவால் வாடும் அவரது அன்புத் துணைவியாருக்கும் அவர்களின் பாசமிகு மகளுக்கும் எமது அன்பினையும், ஆறுதல்களையும் தெரிவித்து கொள்கிறோம்.

தோழர் வேலு தமிழ்நாட்டின் தருமபுரி பகுதியை சேர்ந்த ஒரு சாதாரண உழைக்கும் சாமானிய குடும்பத்தை சேர்ந்தவர். ஏழை மக்களின் குரலாக, சமத்துவத்தின் முழக்கமாக எழுந்த மக்கள் யுத்தம் அமைப்பிலும் மற்றும் இடதுசாரிய தொழிற்சங்கத்திலும் இணைந்து போராடியவர். அவரது



போராட்டங்களுக்காக தமிழ்நாடு அரசின் அடக்குமுறை சட்டமான 'தடா' சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டு கொடிய சித்திரவதைக்கு உள்ளாக்கப்படடார், இந்தியாவில் இருந்து வெளியேறி பிரித்தானியா வந்த பின்பும் பன்னாட்டு காவல்துறை மூலம் இந்திய மத்திய அரசு வழக்கு தொடுத்து தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தது.

தோழர் வேலுவுக்கும் மக்கள் போராட்ட இயக்கத்திற்குமான பிணைப்பு மிகவும் நீண்டது. தேசிய விடுதலை போராட்டத்திற்கும் வர்க்க விடுதலை போராட்டத்துக்குமான ஒருமைப்பாடுகள் முரண்பாடுகள் குறித்து அவர் பலமுறை எங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

சம உரிமை இயக்கம் பிரித்தானியாவில் நடத்திய பல கூட்டங்களில் அவர் பங்கு பற்றி உரையாற்றினார். தேசிய இனங்களின் ஒற்றுமையே உழைக்கும் மக்களுக்கு தீர்வாக இருக்கும் என்பதை அவர் ஒவ்வொரு கூட்டங்களிலும் வலியுறுத்தினார் கோத்தபாய ராஜபக்ச அரசினது கொள்ளைகளையும், ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து எழுந்த மக்கள் எழுச்சிக்கு உறுதுணையாக பிரித்தானியாவில் தொடர்ந்து நடத்தப்பட்ட போராட்டங்கள் ஒவ்வொன்றிலும் தோழர் வேலுவின் குரல் ஓங்கி ஒலித்தது.

தோழர் வேலு அவர்கள் உறுப்பினராக இருந்த Indian workers association, South Asian Solidarity Group என்னும் அமைப்புகள் பிரித்தானியாவில் நடத்திய போராட்டங்கள், கூட்டங்கள் என்பவற்றில் மக்கள் போராட்ட இயக்கம், சம உரிமை இயக்கம் என்னும் எமது அமைப்புகளின் உறுப்பினர்கள் பங்கு கொண்டார்கள். இவ்வாறு தோழர் வேலுவுக்கும் எமக்குமான ஒருமைப்பாடு தொழிலாளர்களின் ஒற்றுமை என்னும் கருத்தின் அடிப்படையில் உறுதியாக அமைந்து இருந்தது.

தோழர் வேலு இன்று நம்மை விட்டு பிரிந்து சென்று விட்டார். வர்க்க விடுதலை, சர்வதேசிய உழைக்கும் மக்களின் ஒற்றுமை, என்னும் பதாகைகளை உயர்த்தி பிடித்த தோழர் பாதையில் தொடர்ந்து பயணிப்போம். சென்று வாருங்கள் எமது தோழரே. உமக்கு எமது செவ்வணக்கங்கள்!!

**மக்கள் போராட்ட இயக்கம் - பிரித்தானிய கிளை (இலங்கை)**



# தோழா!தேடுதே மனம் உங்களை

## - நவரட்ன ராணி



தோழர் வேலு(பூபாளன்) இனி எம் அருகில் காணக் கிடைக் காத, பேச முடியாதவர் ஆகி விட்டாரே. அவர் உடல் நல மின்றி இருக்கின்றார் என நண்ப னின் முகநூல் பதிவினூடாக அறிந்து , விரைவில் நலமோடு மீண்டு வாருங்கள் எனப் பதிவிட்டேன். நாம் யாரும் அறிந்திலோம் அவர் மீளப் போவதில்லை என்று. அத்துன்ப நாளான அன்று முகநூலைத் திறந்த வேளை என் இதயம் இறுதியாக நின்றது போன்ற நிலையானேன் தோழருக்கான "செவ்வணக்கம்" கண்ணுற்ற போது எதுவும் புரியவில்லை.. காரணமும் துலங்கவில்லை.

தோழரின் புவி வாழ்வு துறந்த செய்தியைக் கிரகித்ததால். ஸ்தம்பித்த கணம் விடுத்து, அழுதபோது, என் மகளின் திகைப்பு வினாவிற்கு விக்கலோடு என் துன்பத்தைக் கூறிய வேளை அவளும் கண் கலங்கினாள். நம்பவே முடிய வில்லை தோழர் இனி எம்மிடையே இல்லை என்று.

அற்புதமான தோழன். பட்டை தீட்டிய அறிவு. என்நேரமும் புன்னகை மாறா முகம். கடுமையான விவாதத்தின் போதும் முகம் சுழித்ததில்லை. அவரின் வாசிப்புத் திறன் அளப்பரியது. கண்ட மாத்திரத்தில் தோழர் என அழைத்த வண்ணம் ஓடி வந்து அணைக்கும் பேரன்பு , கண்ணியம் குறையா வார்த்தைகள், மறக்க முடியாத தோற்றம் என நிறையவே நல்லவைகளைத் தன்னகத்தே கொண்ட அற்புதன். அதி அற்புதமான சமூகப் போராளி. தந்தை பெரியாரை நேசிப்பவர். நற் சிந்தனை கொண்ட முற்போக்குவாதி. வரமாகப் பெற்ற நண் பனை இழந்து விடுவோம் எனக் கனவிலும் எண்ணியதில்லை. கடைசியாக சென்ற வருடம் சத்தித்தேன். இதுதான் எம் இறுதிச் சந்திப்பு என ஊகிக்க முடிய வில்லை. அவர் குரலைக் கூட இறுதியாக என் அக்கா புஸ்பராணியின் இழப்பின் போது தொலை பேசி ஊடாக செவியுற்றேன்.

தெளிந்த நீரோடை போன்ற அவரின் உரையை இனி எங்கே கேட்பது. அவர் இணையர் ரஜிதாவையும், அன்பு மகள் நிலோபரையும் உறவுகளையும் எவரால் இனித் தேற்ற முடியும். சென்று வாருங்கள் தோழரே. ஆனால் நீங்கள் திரும்ப மாட்டீர்களே நண்பனே.!

இதயம் உங்கள் பிரிவு வலியில் தவிக்கின்றது. மறக்கமுடியா உங்களை இனிக் காண்பதுஎன்று? எம் துயருக்கும் கண்ணீருக்கும் பதில்? விடையில்லாப் பிரிவு . காலந்தான் ஆற்றுமோ..?

●

# எங்கு தேடினும் கிடைக்கா இன்சொல் இனியன் எங்கள் தோழர் வேலு

## - மாதவி சிவலீலன்



இலக்கிய, அரசியல் மேடைகளில் ஆணித்தரமாக ஒலித்த அந்தக் குரல் அடங்கிவிட்டது என்பதை இன்றும் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. “ஏன் இது நிகழ்ந்தது? இது நடந்திருக்கவே கூடாது, ஏன் வேலுவை இழந்தோம்” என்ற கேள்வியே அடிக்கடி நெஞ்சை உலுக்கிக் கொண்டிருக்கிறது.

யாவரிடமும் அன்பைப் பகிர்ந்து, தன் ஆளுமைமிக்க அறிவால் கற்றோர் மையத்தில்ஒளி வீசிய நிலவொன்று திடீரென வானிலிருந்து பறிக்கப்பட்டது போல், உங்கள் வாழ்வு நிறைவடைந்து நீங்கள் அமரத்துவம் அடைந்தமை, எமக்குக் கலீரமான தண்டனையாகவே அமைந்துவிட்டது.

ஒரு சபைக்குள் நான் வரும் போதெல்லாம், அட்டகாசச் சிரிப்புடனும் உளமார்ந்த அன்போடும் “தலைவி” என அழைக்கும் அந்தக் குரல் இனி எப்போது கேட்கும்? காத்திரமான கருத்துக்களை உங்களுக்கேயுரிய அமைதியோடும் நிதானத்தோடும் முன்வைக்கும் உங்கள் பாங்கு, எப்போதும் எவரையும் கவர்ந்திருந்தது. அந்த நாளில், நிலமகளிடம் உங்களை ஒப் படைத்து இறுதி வழியனுப்பல் செய்து திரும்பியபோது, எத்தனை வேதனையை ஒவ்வொருவரும்

சுமந்தோம் என்பதை அறியாமலேயே, நீங்கள் அங்கு அமைதியான உறக்கத்திற்குச் சென்றுவிட்டீர்கள். நாம்ஏதும் செய்ய முடியாத கையறு நிலையில், கனத்த மனதுடன் கால்களைப் பெயர்த்துப் பெயர்த்து நடந்தோம்.

வேலு, இலண்டனில் நடைபெற்ற உங்கள் இறுதி நிகழ்வில் தான், இளையவர்கள், நடுத்தர வயதினர், முதியவர்கள் என அனைவரும் "எங்களுக்கான வேலு இனி இல்லை" என்று தேம்பி அழுததை நான் கண்டேன். அது மட்டுமல்ல பல்லின மக்களும் தமக்குச் சொந்தமான உறவொன்றை இழந்ததுபோல் துயருற்றுக் கூடி நின்றனர். அத்தனை மனிதர்களையும் நீங்கள் அன்பினாலும் பண்பினாலும் உதவிடும் குணத்தினாலும் வென்றிருந்தீர்கள்.

உங்கள் இழப்பின் பின்னரே, சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நீங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்ததும், உழன்று களப்பணியாற்றியதும், எத்தனை மனிதர்களின் வாழ்வில் தடம் பதித்தீர்கள் என்பதையும் அறியும்போது, ஒரு புறம் பெருமையும் மறுபுறம் விசும்பலுமாக மனம் ஆட்கொள்ளப்படுகிறது. உங்கள் எண்ணங்களும், சிந்தனைகளும், விருப்பங்களும் எதிர்வரும் காலத்தில் ஈடேற வேண்டும் என்பதே எங்களின் மனமார்ந்த வேண்டுதல்.

ஒருநாள் தொலைபேசியில் அழைத்து, "ரஜித்தாவிற்கு உங்களைத் தெரியுமாம். 'எங்கட மிஸ்ஸோ?' என்று கேட்கச் சொன்னவா?" என நீங்கள் உரையாடினீர்கள். ஆம், பழைய கதைகள், சிரிப்புகளென அன்றைய பொழுது இனிதாகியது. அதே ரஜித்தா வைத்தியசாலையில் என்னைக் கண்டபோது, "மிஸ், வேலுவை எழுப்பித் தந்து விட்டுப் போங்கள்" என்று அழுத அந்தக் கணத்தில், என்னிடம் வார்த்தைகளும் இல்லை; அவளை ஆற்றுப்படுத்தும் திராணியும் இல்லை.

உங்கள் அன்பு மகள் நிலோபரில் இன்றும் உங்களை நாங்கள் காண்கிறோம். அவளது ஒவ்வொரு செயற்பாடும், உடல்மொழியும், உரையாடும் பாங்கும் நெஞ்சிற்கு மிக நெருக்கமாகின்றன. றஜிதாவிற்கும் நிலோபருக்கும் உங்கள் நினைவுகள் வலிமையாய் இருந்து, அவர்களை வழிநடத்தும் என்று நம்புகி றேன். வேலு, நீங்கள் உடலால் எம்மிடமிருந்து நீங்கியிருந்தாலும், உங்கள் சிந்தனைகளிலும், உங்கள் அன்பிலும், உங்கள் பணியிலும், உங்கள் குரலிலும் நீங்கள் எம்மிடையே என்றும் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள். நல்லதொரு மானுட அறத்தினனான உங்கள் நினைவுகளை நெஞ்சிருத்தி உங்களுக்கு எந்தன் சிரந்தாழ்ந்த அஞ்சலிகள்.

●

# நீங்க எனக்கு அப்பாவா, சகோதரனா, இல்லை மச்சானா?

## யதீஸ்

நீங்க எனக்கு அப்பாவா, சகோதரனா, இல்லை மச்சானா?

உங்களுடன் பழகிய காலத்தில்தான் உங்களுடைய பண்புகளை அறிந்து கொண்டேன்.

எத்தனையோ பேருக்கு இரங்கல் அனுப்பின எனக்கு, நானே இரங்கல் செய்தி தரணுமா?

நீங்கள் உயிர் விடும் அந்த இறுதி தருணங்களில், உங்களுக்காக வந்தவர்களையும் அவர்களின் வார்த்தைகளையும் கண்டபோது உணர்ந்தேன் எங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் உங்கள் மேல் அளவற்ற அன்பு இருந்தது. கொள்கைகளுடன் வாழும் பல பேரில், நீங்கள் வித்தியாசமான கொள்கையுடன் வாழ்ந்த ஒரு மாமனிதர் அண்ணா. உங்களது இழப்பு எங்களுக்கு மட்டுமல்ல, பல ருக்கும் பேரதிர்ச்சி. நீங்கள் என்னுடன் செலவழித்த அந்த அன்பான தருணங்களை நினைத்துப் பார்க்கிறேன். அவை இனி எப்போதும் திரும்ப கிடைக்காது.
நான் முதன்முறை லண்டன் வந்தபோது, என்னை கூட்டிச் சென்று எல்லா இடங்களையும் தெளிவான விளக்கத்துடன் காட்டினீர்கள். புத்தாண்டுக்கு நீங்கள் கொடுத்த அந்தப் பரிசு இன்னும் உங்கள் நினைவுகளுடன் என்னிடம் பத்திரமாக உள்ளது. நேர்மையான, எனக்கு நெருங்கிய உறவினரை பெருமைக்குரிய ஒரு மனிதரை இழந்து நிற்கிறேன்.



நீங்கள் 'உறவுக்காரர்' என்று சொல்லும்போது எனக்கும் பெருமையாக இருக்கிறது. நீங்கள் என்னை உங்களுடையவனாக, சகோதரனாக, அல்லது மருமகனாக ஏற்று பழகினீர்கள்.

உண்மையை ஏற்க மனம் தடுமாறுகிறது.

இனிமேல் உங்களின் பாசம், அந்த அன்பான புன்னகையுடன் கூடிய பரிவான பேச்சு எனக்கு மட்டுமல்ல, யாருக்கும் கிடைக்காது என்னும்போது விழிகள் நனைகின்றன. நீங்கள் இனி எப்போதும் வரவே மாட்டீர்களா?

உங்களை நேரில் கண்டதில்லை என்றாலும், உங்களை மனதார நேசிக்கும் என் பிள்ளைகள் உங்களுக்காக எழுதியுள்ளார்கள்:

அன்பான எங்களோட மாமாவுக்கு,

எங்கட அப்பா லண்டன் வரும்போது தனியா இருக்கப்போறார்னு நாங்க நினைக்கல. அவருக்குத் துணையா நீங்களும் அத்தையும் இருக்கீங்கன்னு ஆறுதல் பட்டோம். ஆனா அதெல்லாம் ஒரு வருஷத்துல போச்சு.

அலைனா ஸ்காலர்ஷிப் பாஸ் பண்ணினப்போ லேப்டாப் வாங்கித் தந்தீங்களே, நான் பாஸ் பண்றப்போ நீங்க வாங்கித் தர மாட்டீங்களா? உங்கட அழகான அந்த சிரிப்பும், தெளிவான அந்த பேச்சும் இப்போதும் இனி எங்களுக்கு ஒரு கனவு தானா? உங்கள நேரில பார்த்ததில்ல. ஆனாலும் எங்களுக்கு நீங்க ஒரு அப்பா மாதிரி இருந்தீங்க.

இனி யாரு உங்க இடத்த நிரப்புவாங்க?

- அன்பு அலைனாவும் ஆதிவும்

எல்லாவற்றுக்கும் நன்றி அண்ணா!

இப்படிக்கு, உங்கள் சகோதரனும் மைத்துனருமான யதீஸ்

●



*“The true revolutionary is guided by great feelings of love.”* *- Che Guevara*

## Sagana Santhagunam

Velu mama’s passing has left a deep and lasting mark on all of our lives. It is hard to imagine a world without his infectious laugh, his kind heart, and the warmth he carried so effortlessly. He had a way of making people feel seen, welcomed, and loved—and that is something we will miss every single day. Velu mama was a comrade to my dad, a brother to my mother, and the most loving uncle to me and my brother.



Velu mama showed us that family is not only defined by blood, but by love. We never saw him as just a family friend—he was truly one of us, someone placed in our lives as an extension of our own family. He treated me and my brother like his own children: always making time for us, always showing up, always filling our home with laughter and comfort.

Some of my most cherished memories with him are the simplest ones—especially Christmas, sitting together, eating biryani, and laughing until the room felt full of nothing but joy. His stories, espe-

cially about his life in India and his deep love for food, had a way of bringing people together. And when he spoke, you listened—not just because of what he said, but because of the care and wisdom behind it. His gentle advice stayed with us long after the moment had passed.

He believed in us. He encouraged us to value education, to stand on our own feet, and to build something meaningful for ourselves. He sparked my love for books, and we shared a connection through history and politics—conversations I will hold onto for the rest of my life. He always had a passion for learning something new and treated everyone with the same respect and kindness.

One memory that will never leave me is when my brother was taken to hospital after a football injury. It was a moment filled with fear, the kind that makes everything else fade away. But before we could even process what was happening, Velu mama was there. He came without being asked, without a second thought. In a moment where we felt helpless, his presence became our strength. He didn't just visit—he stood with us, shared our worry, and brought a quiet reassurance that we were going to be okay. That moment speaks volumes about the depth of his love and the kind of person he truly was.

Even now, he is still present in our home. In every room, there are reminders of him—from the things he helped build during his time at B&Q, to the memories that live quietly in the spaces he once filled. It is impossible to walk through our home without feeling a part of him still there.

His absence leaves a silence that cannot be filled, a space that cannot be replaced. But alongside that pain is a deep sense of gratitude—for the love he gave, the lessons he taught, and the way he made us feel that we truly belonged.

Velu mama may no longer be with us, but he has not left us. He lives on in our memories, in our laughter, in the values he instilled in us, and in the love, we continue to carry because of him.

And no matter where life takes us, a part of him will always walk with us.

●

# ‘‘தொடர்ந்து பயணிப்போம் தோழர்களே!’’

*- தோழர் வேலு*



பிரித்தானியாவின் இந்திய இலங்கை வாழ் முற்போக்கு செயற்பாட்டாளர்களின் ஓர் உறவு பாலம் என்றால் எம் முன்னே வரும் முதல் பெயர் தோழர் வேலு.

பொதுவுடமை என்றாலே உலகின் அனைத்து விடயங்களையும் அரசியல் விஞ்ஞான தெளிவுடனும் கொள்கை உறுதியுடனும் பின்பற்றி பயணிப்பது என்பது இக்கால சூழலில் எவ்வளவு சவாலானது என்று இருக்கின்ற போது தனது இளமைக் காலம் முதல் மக்கள் அரசியலை முன்னெடுத்து குறிப்பாக பிரித்தானியாவிலே இலங்கை இந்திய முற்போக்கு செயற்பாட்டாளர்களின் பேரன்பிற்கு பாத்திரமானவர் என்றால் அது தோழர் வேலுவே,

எமது லண்டன் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி ஏற்பாடு செய்த பெரும்பான்மையான அனைத்து நிகழ்வுகளிலும் ஓர் தலைமை தாங்குபவராய், விமர்சகராய், பேச்சாளராய், ஆதரவு செயற்பாட்டாளராய் என்று அவர் பங்கு பற்றியதை கட்சி என்றும் நினைவில் கொள்ளும்.

தோழர் வேலு நம்மிடம் கூறிய வார்த்தைகள், தோழர்களே உங்களது கட்சியின் செயற்பாடுகளை நான் இங்கு அல்ல நான் இலங்கை சென்ற சமயங்களில் எல்லாம் தவறாது உங்கள் பொதுச் செயலாளர் தோழர் சி, க, செந்திவேல் உட்பட பல தோழர்களை நீண்ட பல மணி நேரமாக உரையாடாமல் நான் லண்டன் திரும்பியது இல்லை நானும் தோழமை உணர்வுடன் கூறுகிறேன் எங்கள் பணி மிகக் கடினமானது ஆனால் மனதுக்கு மிக மிக மகிழ்ச்சியானது தொடர்ந்து பயணிப்போம் தோழர்களே, எனும் வார்த்தை.

இந்த உலகில் தோழர் வேலு விட்டுச் செல்லும் பணிகளை தொடர்ந்து முன்னேடுத்து முன்னோக்கி செல்வதே தோழர் வேலுவுக்கு நாம் வழங்கும் உறுதியான செவ்வஞ்சலியாக இருக்கும்.

**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி - இலண்டன் கிளை**

# நீங்கா நினைவுடன்
## -தேவி


தம்பி வேலு, நானும் பிள்ளைகளும் உங்களோடு பழகிய நாட்கள் நான்கு நாட்கள் தான். அந்த நாட்களில் எங்களை உபசரித்து அன்போடு பழகியதை மறக்க முடியாது. நான் உங்கள் திடீர் மரணம் அறிந்து லண்டன் வந்தேன். அப்போது எனது சகோதரி நீங்கள் எப்படி அடக்கு முறையின்றி தன்னை மனித நேயத்துடன் பொருளாதாரக் கஸ்டத்தின் மத்தியிலும் தன்னை படிக்க ஊக்கம் கொடுத்து நல்ல ஒரு கணவனாக, தன்னை மதித்து உணர்வுகளுக்கு மதிப்பும் மரியாதையுடனும் சுதந்திரமும் கொடுத்து வாழ்ந்த ஒரு நல்ல துணைவர் என்று சொல்லி குமுறி அழுவார். வீட்டிற்கு வந்த உறவினர்கள் நண்பர்கள் எல்லோரும் அவரின் நல்ல குணத்தையும் பண்புகளையும் கண்ட உடனேயே பல நாட்கள் பழகியதுபோல சிநேகித உணர்வுடன் பழகுவார் என்றும் உதவிகள் புரியும் குணமும் ஆலோசனைகள் சொல்லி ஊக்கப்படுத்துவார் என்றும் சொன்னார் கள். அவர் கொள்கைகளை வாய்ப்பேச்சோடு மட்டும் நிற்கவில்லை. வாழ்க் கையிலும் அதை கடைசிவரை கடைப்பிடித்த ஒரு நல்ல மனிதர். இப்படிப்பட்ட ஒருவர் எனக்கு சகோதரனாக கிடைக்கவில்லை என்று மிகவும் ஏங்குகிறேன். எனது சகோதரி றஜீதாவிற்கு நீண்டகாலம் அவரோடு கடைசிவரை வாழ அதிஸ்டம் இல்லாமல் போனதற்காக மிகவும் வருந்துகிறேன். வேலுவைப் போலவே அவரின் மகள் நிலோபர் துணிவோடும் தந்தையாரின் உயர்ந்த குணங்களோடும் கொள்கைகளோடும் பண்புகளோடும் தாயாரை அரவ ணைத்து வேலுவின் இழப்பை ஈடு செய்ய கடவுளை வேண்டுகின்றேன்.

- நீங்கா நினைவுடன் மைத்துனி தேவி குடும்பம்.



# A Tribute to Tholar Velu

## - Visagaperumal Vasanthan



I came to know Tholar Velu when his wife, Rajitha, joined the firm where I worked. Through our social interactions, I grew to appreciate his warmth, humility, and integrity.

Velu was a kind and thoughtful person who made everyone feel valued. He was deeply devoted to his family and carried himself with quiet strength and grace.

For a few months, his daughter Nilofer attended tuition classes conducted by my daughter at my residence, which brought our families closer. Most Saturdays, Velu would bring her to class. During those times, he and I would sit at the café next door, sharing conversations, exchanging views, and spending our time meaningfully. It was through these moments that I learned much about India—his village, his life, and his experiences. Some of his stories were difficult; he had spent time in detention due to his political views and activities.

With each meeting, our friendship deepened, and so did my respect for him. He had a remarkable ability to present different perspectives and explain the other side of a story with clarity and thoughtfulness.

Velu was also an avid reader and a perceptive reviewer of books. He had a unique gift for connecting themes from literature to real-life experiences, creating engaging and insightful discussions that I found truly enriching.

A few hours before his life support was withdrawn, our friend Melroy and I went to his ward to say our final goodbye. I found him peaceful and radiant.

Velu will be remembered for his gentle nature and the lasting impression he left on all who knew him. He will be dearly missed.

●

# மார்க்சிய இயக்கத்தின் தீவிரப் போராளி தோழர் வேலு

## நவஜோதி ஜோகரட்னம்

*மார்க்சிய புரட்சியாளர், நக்சலைட் போராளியாக இருந்தவர், சிறைவாசம் அனுபவித்தவர், இலக்கிய விமர்சகர் என தோழர் வேலுவின் பலவிதமான செயற்பாடுகளை அறிந்திருந்த எனக்கு, விமர்சகர் மு.நித்தியானந்தனின் தொலைபேசிச் செய்தி என் இதயத்தை இடித்து அதிர்ச்சியில் ஆழ்த்தியது.*

விம்பம் கலை, இலக்கிய அமைப்பினுடாக இடம்பெறும் நிகழ்ச்சிகளின் மூலமாகவே தோழர் வேலு அவர்கள் எனக்கு அறிமுகமாகியதோடு, ஒரு நீண்ட கால உறவைக் கொண்டவர் அவர். ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் என மனித நேசத்துடன் திகழ்ந்த அவர் என்னை எங்கு கண்டாலும் முதலில் ‘ஆ. .நவஜோதி எப்படி இக்கிறீங்கள்?’ என்று அன்போடும் மலர்ந்த இனிய முகத்தோடும் வினவும் குரல் என்னிதயத்தில் ஒலிக்கிறது. அந்தக் குரலை இனிக் கேட்க முடியாது மௌனிக்கப்பட்டுவிட்டதா? என அறியும்போது இதயம் நனைகிறது.

கம்யூனிச செயற்பாட்டாளராக இயங்கிய இவர் கருத்தியல் ரீதியாகவும், கம்பீரமாகவும், ஆளுமையாகவும் உரையாற்றுவதை நான் பல நிகழ்வுகளில் அவதானித்து வந்துள்ளேன். இவரது இடதுசாரிப் போக்கானது எனது தந்தை அகஸ்தியரின் நூல் வெளியீடுகளில் வேலு அவர்கள் முற்போக்குச்சிந்தனையோடும், சம்பவங்களைக் கோர்த்து கருத்தியல் ரீதியாகவும் பேசியபோதெல்லாம் அவை என்னை



அசத்திப் போட்டதுண்டு. அவற்றையெல்லாம் இவ்வேளை நன்றியோடு நினைவுகளிலிருந்து குறிப்பிட விரும்புகின்றேன்.

லண்டனில் அவரின் வீட்டுக்கு ஒரு தடவை அவருடன் நெருக்கமான உறவுகொண்ட முற்போக்குச் சிந்தனைவாதிகளான நிர்மலா ராகவன், நித்தியானந்தன் மீனாளுடன் இணைந்து சென்றிருக்கின்றேன். அவரின் ஆர்ப்பரித்த அன்பான வரவேற்பும், அவரது மனைவி றஜித்தா மற்றும் அவரது ஆசை மகள் நிலோவின் அன்பும் புன்சிரிப்பும் இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றது. என்ன ஒரு மகிழ்வான தருணம் அது

லண்டனில் பல இலக்கிய நிகழ்வுகளில் அவருடன் இணைந்து நான் பேசியிருந் தாலும் கொரோனாக் காலத்தின் நீண்ட இடைவெளிக்குப் பின்னர், விம்பம் கலை இலக்கிய அமைப்பின் பதினெட்டாம் ஆண்டின் சிறப்பு நிகழ்வில்தான் தோழர் வேலு வோடு இறுதியாக இணைந்து உரையாற்றும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. செ.வே.காசிநாதன் எழுதிய 'விற்கன்ஸ்ரைனின்: மொழி. அர்த்தம், மனம்' என்ற மெய்யியல் துறையில் எழுதப்பட்ட அந்நூலுக்கு நான் தலைமை தாங்கி நெறிப்ப டுத்தியிருந்தேன்.

மார்க்சிய செயற்பாட்டாளரான வேலு அவர்களும் அந்நூலுக்கு கருத்துரை வழங் கியிருந்தார். கம்யூனிச சித்தாந்தத்தைப் புரிந்த இவர் : 'சொற்கள் என்பன வெறும் சொற்களாக மட்டுமே இருப்பதில்லை நாங்கள் என்ன செய்யலாம் என்பதை வரையறுக்கும் எல்லாப் பரப்பாகவும் அவை திகழ்வதால்தான் நாம் அவற்றிற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்' என மார்க்சிய தத்துவஞானி ஸ்லவோஜ் ஷிசெக் (Slavoj Zizek) இன் குறிப்பை முன்வைத்துப் பேசியமை அவரின் பல்துறை ஆளுமைகளைப் புலப்படுத்தி நின்றது.

இப்படி வேலு அவர்களின் பல்வேறு பேச்சுத் திறமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். வேலு அவர்களின் மறைவை மனம் ஏற்றுக்கொள்ள மறுதலிக்கிறது. மனிதநேசம் கொண்ட வேலுவின் சிறந்த நினைவுகள் யாவும் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும் என்று கூறி நிற்க விரும்புகின்றேன்.

●



# 'மனிதர்' வாழ்கிறார்!

## - மாலி



வாழ்கிறோம்; அந்த வாழ்வில் சில தருணங்கள், வாழ்வை சற்று சிந்திக்க கட்டாயப்படுத்திவிடுகின்றன. அத் தருணங்கள், சிலசில வகைப்பட்டனவாய் அமைகின்றன.

மானுட வாழ்வுக்கும் - அதன் வழிகாட்டலுக்கும் எத்தனை எத்தனை தத்து வங்கள்! வாழ்வு முழுவதுமே இவற்றை படித்தும் கேட்டும் வாழ்கிறோம். ஆனால், இந்த `சில தருணங்கள்', அந்த வாழ்வை எளிதாய் - ஆழமாய் நமக்கு உணர்த்திவிடுகின்றன. முன்பின் தெரியாத ஒருவர், இந்த வாழ்வியல் கரிசனைகளில்தான் சிற்சில இடங்களில் - சிற்சில வேளைகளில் ஒன்றுகூடும் ஒன்று கூடல்களில், வாழ்வில் தெரியவந்தார் அறிமுகமானார். ஆனால், ஒன்றுகூடல்கள் கலைந்த பின்னரும் அவர் ஒன்றித்துக்கொண்டார். பேச்சோடு பேச்சாய் போய்விடாத ஒன்று, அவரின் மூச்சோடு இருந்தது. அதனுடைய ஆதர்சம் தான் அதுவென்பது உணர்வாகிறது.

சாதாரணமாகத்தான் உலவித் திரிந்த அந்த ஆகர்சத்தின் திடீர் `விஸ்வரூபம்', மலைப்பாக தெரிந்தது. தோழர் வேலு, திடீரென்று மறைந்தார். அவரின் ஒரு விஸ்வரூபம் தெரிந்தது.

``பாரடியோ வானத்தின் புதுமையெல்லாம்
உவகையுற நவநவமாய்த் தோற்றும் காட்சி...''

- பாரதியின் இந்த வரிகள் தோழர் வேலுவின் காட்சியாய்த் தெரிந்தன. பொதுவாக, ஒரு மனித வாழ்வின் அரைவாசிக் கால வாழ்வு. அந்த வாழ்வுள் நாம் ஒரு `மனிதனை' கண்டோம்.

`அர்த்தமுள்ள வாழ்வு'; `மகிழ்ச்சியான வாழ்வு' என்று, வாழ்வின் தத்துவத்தை பொதுவில் சொல்வோமா? அத் தத்துவம் தெரிந்தது. `வாழ்க்கை என்பது சாகும் வரை அல்ல, மற்றவர் மனங்களில் வாழும் வரை' என்பதையும் சான் றாக்கி, மறைந்து போனார் தோழர் வேலு. கடைசியாக ஒரு திருமணத்தில் பார்த்தோம். வீட்டுக்கு விருந்துக்கு வரவேண்டும், விரைவில் அழைப்பேன் என்றார். மனைவியும் கூடவிருந்தார்.

மகளும் மனைவியுமாக `விருந்துக்கு' அழைத்திருக்கிறார்கள். அவர் சொன் னது இதுவா? தோழர் வேலு வாழ்கிறார். பேச்சில் அல்லாமல், வாழ்வில் வாழ்ந்தவர் அவர் வாழ்கிறார்.

●

# சிந்தனையும் செயலும்...

## எம். பௌசர்



எங்கள் தோழர் வேலு அவர்களின் அரசியல் , சமூக வாழ்வின் முழுப் பக்கங்க ளையும் நாம் அறிந்தவர்கள் அல்ல. அவரது வாழ்வும் செயற்பாடும் இரு வேறு நிலப்பரப்புகள் சார்ந்து இருந்துள்ளன. 1980 தொடக்கம் 2000ம் வரையான அவரது தமிழக அரசியல், சமூக விடயங்களை அங்கிருக்கும் தோழர்களே முழுமையாக எழுத முடியும். 2001க்குப் பின் அவர் இங்கிலாந்துக்கு வந்ததன் பின்னான காலத் தில் அவருடனான அறிமுகமும் உறவும் கிடைத்து , பொதுத்தளத்திலும், தனிப்பட்ட வகையிலும் அவருக்கும் எமக்குமிடையிலும் இருந்த தொடர்பும் பணியும் பங்களிப்பும் குறித்தே சில குறிப்புகளை இங்கு பதிய முடியும்.

2007, 2008ம் ஆண்டு காலப் பகுதிகளில் Leytonstone மண்டபத்தில் நடாத்தப்பட்டு வந்த நிகழ்வு ஒன்றில்தான் தோழர் வேலுவை முதலில் கண்டு அவருடன் உரை யாடி , விவாதித்து எமக்குள் உறவும் நேசமும் முகிழ்ந்த தருணத்தை, அவரை இழந்து நிற்கும் இன்று நினைவின் அடுக்கில் இருந்து மீட்டிப் பார்க்க முடிகிறது. தோழர், தோழமை என்கிற அர்த்தத்திற்கு உயிர் தந்த அடையாளம் அவர். இப்போது அவர் குறித்து சுருக்க மாக சொல்ல வேண்டுமானால், கருத்தியல் (IDE-OLOGY) , சித்தாந்தம் உறுதியாக வழிப்படுத்திய மனிதர் அவர் எனச் சொல்லலாம். அவரது சிந்தனையும் செயலும் அவர் நம்பிய கருத்தியலின் வழிதான் வெளிப்பட்டது. அவைதான் அவரை வழிப்படுத்தியது, செயற்படுத்தியது, போராடத் தூண்டியது. இதன் அடிப்படையில் என் வாழ்வில் நான் கண்ட மிக முக்கியமான மனிதர் அவர். அவருடன் நாமும் இணைந்து பொதுப்பணி செய்துள்ளோம், விவாதித்துள்ளோம், கற்றுக் கொண் டுள்ளோம் என்பது ஒரு மகத்தான பேறுதான்.

அவர் எம்மிடையே இல்லா ஒரு வெறுமை நிலையில்தான், லண்டன் செயற்த ளத்தில் அவரது இடத்தினை, வகிபாகத்தினைக் குறித்த தேடல் முன்னுக்கு வருகிறது. லண்டன் அரசியல், கலை இலக்கிய முன்னெடுப்புகளில், நிகழ்வுகளில் தோழர் வேலு , நாம் இயங்கும் (இயங்கிய) தளமானது , வெகுஜன , தேசியவாத அரங்குகளுக்கு மாற்றான ஒரு முன்னோடி, முற்போக்கு வட்டம்தான். அரசியல் கருத்து நிலைகள், இலக்கியப் போக்குகள், நூல்கள் குறித்த உரையாடல்கள், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான வெளிப்பாடுகள் அதன் உள்ளீடுகள். இவற்றில் தோழர் வேலு மிக முக்கியமான பாத்திரத்தினை வகித்து வந்துள்ளார். அவரது பிரசன்னம் மட்டுமல்ல, அதனையும் தாண்டி , அவரது உரைகளாக இருக்கட்டும், விவாதங்களில் அவர் வெளிப்படுத்தும் கருத்துக்களாக இருக்கட்டும், அவைகள் அந்த நிகழ்விற்கு ஆழமான அர்த்தத்தினை கொடுப்பதாக இருந்து வந்துள்ளது. இப்போது அவரில்லாத இனி வரும் காலங்களில் அவரது இடம் நிரப்பப்படாது என்பதும் நமக்கு மிகப் பெரும் இழப்புத்தான்.

அவரை வழிப்படுத்திய கருத்து நிலை என்பது மார்க்சிய லெனினிச கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. அம்பேத்கர், பெரியாரை இரு தோள்களிலும் சுமந்து நின்ற விரிவான சிந்தனை, படிப்பு வீச்சைக் கொண்டது. மிகத் தேடல்மிகு வாசிப்பாளராக அவர் இருந்தார். புத்தகங்கள் அவரது ஆன்மாவுக்கு மிக அணுக்கமாக இருந்தது. இவற்றுடன் சேர்த்து, தன் இளமைக் காலம் முதல் இந்தியப் புரட்சிகர மாவோயிஸ்ட் இயக்கத்தின் தொடர்பும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மக்கள் யுத்தக் குழு) உறுப்பினர் வாழ்வும் அதன் பின்புலமும் அவரது சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் அடிப்படையாக இருந்துள்ளது.

அவரது உடல் உறுப்புகளை தானமாக வழங்கிய செயற்பாடே, மக்கள் மீதான அவரது ஆழமான நேசிப்பினையும் தியாக உணர்வையும் மெய்ப்படுத்த போது மானது. இப்போது அவரது பொது வாழ்வை சாரமாகப் பார்த்தால், புரட்சிகரப் பாதையில் , ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக தன் வாழ் நாள் முழுதும் இந்தியாவிற்குள்ளும், இங்கிலாந்திலும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் எதிரிக்கு முன் மண்டியிடாது , கொள்கை உறுதியுடன் வாழ்ந்திருக்கிறார் என்பது அவர் மீதான மதிப்பினை , எம் நினைவுகளில் என்றும் நிலைத்திருக்கச் செய்யும்.

அவர் பிரிவால் துயற்று வாடி நிற்கும் துணை றஜிதா, அன்பு மகள் நிலோபர் மற்றும் குடும்பத்தினருக்கு அன்பும் ஆறுதலும்.

உங்களுடன் சேர்ந்து நாமும் உயரிய கொள்கைக்காக வாழ்ந்த ஒரு பொது மனிதனை, அன்பானதோழரை இழந்தோம்.

●

# வேலு மச்சான் - மெடோனா

இறப்பு என்பது எல்லோருக்கும் எழுதப்பட்ட ஒன்று தான். இருப்பினும் உங்கள் இழப்பின் வலியை உணர்த்த வார்த்தைகள் இல்லை. ஓய்வின்றி ஓடிய கால்கள் பூமிக்கு வந்த எனது வேலை முடிந்து விட்டது என்று ஓய்ந்து விட்டதா?

எனது தங்கையின் கணவனாய் நீங்கள் எங்கள் குடும்பத்தில் இணைந்த காலம் முதல் எம் ஒவ்வொருவர் மீதும் நீங்கள் காட்டிய அன்பும், பாசமும்,அக்கறையும் உங்கள் இறுதி மூச்சு வரை குறையவில்லை. அன்பான உங்கள் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது.

எனது கணவனை இழந்து நானும்,எனது பிள்ளைகளும் நின்ற வேளை "மச்சாள் உடைந்து விடாதே. நீ தைரியமான பெண். நாங்கள் இருக்கிறோம்..."என்று வாய் வார்த்தைக்காக மட்டுமன்றி எங்கள் வாழ்க்கைப் படியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆலோசகராக ஊக்குவிப்பாளராக இருந்தீர்கள்.

நான் 2023 ம் ஆண்டு லண் டன் வந்த போது என்னை அன்போடு வரவேற்று, உபச ரித்து 40 நாட்கள் முக்கிய மான இடங்களையெல்லாம் சுற்றிக் காட்டினீர்கள். நண் பர்களிடமெல்லாம் மச்சாள் என்று பெருமையோடு அறிமுகம் செய்தீர்கள். அந்த நாட்களை எப்படி மறப் பேன்?எனது பிள்ளைகள் வேலு சித்தப்பாவை எப்படி மறப்பார்கள்? உங்ளோடு பழகிய உறவுகள் உங்கள் நினைவுகளை,உங்கள் வாழ்க்கை வரலாற்றைக் கூறக் கேட்கும்போது பெருமிதமாக உள்ளது. எங்களுடைய குடும்பத் தின் சொல்லித் தீராத பெருமிதம் எங்கள் வேலு மச்சான்.




நீங்கா நினைவுகளுடன்
அன்பு மச்சாள்
மெடோனா.

●



# வேலு அவர்களின் சட்டப் போராட்டம்

**- சிறிநிவாசன்**

*தோழர் வேலு அவர்களை 2010 ஆம் ஆண்டு, லண்டன் நகரில் நான் ஆராய்ச்சி மாணவனாக இருந்த போது, நடந்த ஒரு கூட்டத்தில் சந்தித்தேன். அரசியல் இயக்கங்களில் பங்கேற்கும் தனி நபர்களின் மீதான மனித உரிமைகள் மீறல் குறித்த ஏதோ ஒரு கூட்டம் என்று நினைவு. பலர் இருந்த அந்த கூட்டத்தில் அவருடன் அதிகமாக பேசும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பின்னொரு நாள் வேறு ஒரு அரங்கில் சந்தித்தேன். என்ன கூட்டம் என்று நினைவில்லை. அப்போது அவர் இந்தியாவில் அவர் செய்து வந்த அரசியல் பணிகள் குறித்து சொன்னார். என்னுடைய உறவினர் ஒருவர் வழக்கறிஞராக இருந்தவர். அவர் வழக்குக்காக செய்த சில விஷயங்களை பற்றி பேச்சு வந்தது. அதன் பின்னர் இந்தியாவில் வேலுவின் வழக்கு பற்றியும் அதன் தொடர்ச்சியாக இங்கிலாந்து வந்து அகதியாக மாறி பின்னர் நிரந்தர குடிமகனாகி வாழ்ந்து வருவது பற்றியும் முழுமையாக அறிந்து கொண்டேன். என்னுடைய துணைவியார் லண்டனில் என்னுடன் தங்கியிருக்க வீடு பார்த்து கொடுத்தார் வேலு. ஆங்கிலம் துளியும் தெரியாத என் மனைவிக்கு வேலுவின் குடும்பம் ஆறுதலாக இருந்தது. அனைத்து விபரங்களை குறித்து பேச விவாதிக்க அவருக்கு அது ஒரு நல்வாய்ப்பு. நான் என் மனைவியுடன் இருந்த காலம் முழுதும் அவருடைய வீடு இருந்த பகுதியில் தான் தங்கியிருந்தேன்.*

*அவருடைய துணைவியார் றஜிதா, குழந்தை நிலோபர் எப்போதும் இன்மு கத்துடன் வரவேற்று பேசி நல்ல உணவு அளிப்பார்கள். என்னைப் போன்ற வர்களுக்கு சிறந்த உணவு அதிலும் சுவையான இந்திய இலங்கை சமையல் என்பது மிகப் பெரும் பேறு என்று சொல்லலாம். 2011 ஆண்டு தொடக்கம் அவரை அடிக்கடி சந்தித்து பேசவும், அரசியல், இலக்கியம், சட்ட நடைமுறைகள் குறித்து பேசவும் பல வாய்ப்புகள் வந்தது. சுருக்கமாக சொன்னால் அவருக்கு இந்தியாவில் அரசியல், இலக்கிய உலகில் என்ன நடக்கிறது என்று மிகவும் தெளிவாக தெரிந்து இருந்தது. ஏதாவது இந்திய அரசியல் இயக்கங்கள் குறித்து சரியான விபரங்களை தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவரிடம் தான் கேட்க வேண்டும்.*

அவர் பெரும்பாலும் இரவு நேர பணியாளராக இருந்து வந்தார். சரியான உறக்கம் கிடையாது என்பது அவருடைய குடும்பத்தாருக்கும் என்னை போன்றவருக்கும் தெரிந்த விஷயம். நான் இங்கிலாந்தில் இருந்த 2014 ஆம் ஆண்டு வரை அவர் இரவில் வேலைக்கு செல்வதும் பகலில் ஏதாவது எழுதவும், படிக்கவும் செய்து வந்தார். அருந்ததி ராய் அவர்கள் லண்டன் வந்திருந்த போது நடந்த சில கூட்டங்களில் அவரைப் பேச ஏற்பாடுகள் செய்தவர்களில் வேலுவும் ஒருவர். மத்திய லண்டன் நகரில் உள்ள புகழ் பெற்ற குவேக்கர் மையத்தில் நடந்த கூட்டம் அளவில் மிகப் பெரியது. ஏராளமான மாணவர்கள் இந்திய இளைஞர்கள், அறிவாளிகள் கலந்து கொண்டிருந்தனர். மிகவும் சிறப்பான இந்த அரசியல் கூட்டங்களை குறித்து அப்போதைய இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இந்திய நாட்டுக்கு எதிரான சதிகள் லண்டனில் நடக்கிறது என்று குற்றம் சாட்டினார்.

## நாடு கடத்தும் வழக்கு

அவருடைய நினைவுகள் குறித்து நான் நினைக்கும் போதெல்லாம் அவர் நடத்திய வழக்கு என் முன் வருகிறது.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரை தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டத்தில் நடந்ததாக சொல்லப்படும் குண்டு வெடிப்பு தொடர்பான, பயங்கரவாத சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வரும் ஒரு வழக்குக்காக தமிழக காவல் துறையினரிடம் ஒப்படைக்க இந்தியா இங்கிலாந்து அரசை கோரியது. இந்த வழக்கு தொடர்பாக லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் மாவட்ட நீதிமன்றம் வேலுவை கைது செய்து சிறை யில் வைக்க ஆணை பிறப்பித்தது. அன்று நான் லண்டன் பல்கலைக் கழக நூலகத்தில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தேன். அந்த வேளையில் றஜிதா அவர்கள் தொலைபேசியில் அழைத்து தகவல் சொன்னார். அவர்கள் வீட்டுக்கு நான் போய் சேரும் முன்னரே லண்டன் காவல் துறையினர் அவரை கைது செய்து அவரை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

அடுத்த இரண்டொரு நாட்களில் அவர் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவார்கள் அப்போது பிணையில் எடுக்க வாய்ப்பிருந்தால் அவரை வெளியில் கொண்டு வரலாம் என்று கேள்விப்பட்டேன். இது ஒரு அரசியல் வழக்கு இதை ஒரு குற்ற வழக்காக கருதக் கூடாது என்று மனு செய்யலாம் என்று விவாதம் நடந்து கொண்டிருந்தது. எப்படியாயினும், முதலில் அவரை வெளியில் கொண்டு வருவதுதான் உடனடி பணி என்று முடிவாகியிருந்தது. அவரை நீதி மன்றத்திற்கு கொண்டுவரும் நாளில் மார்லிபோன் (Marylebone) பகுதியில் இருக்கும் மாவட்ட நீதிமன்றத்தில் காத்துக் கொண்டிருந்தோம்.

அவருக்கு வாதாட வயதில் மிகவும் குறைந்த செல்வி. அபிகெயில் என்ற ஒரு இளம் பெண் வழக்கறிஞர் ஒருவரை அமர்த்தியிருந்தார்கள். வயதில் குறைந்தவராக இருப்பினும் மிக புலமை வாய்ந்தவராகவும் திடமானவராகவும் இருந்தார் அந்தப் பெண்மணி. பொதுவாக லண்டனில் அலுவலில் உள்ள அதிகாரிகள் புன்னகை யுடன்தான் இருப்பார்கள். அன்று நான் எதிர்பார்த்ததற்கு மாறாக இறுகிய முகத்துடன், மிக உயரமாக ஒரு நீதிபதி வந்து அமர்ந்தார். திரு.ஸ்னோ என்ற பெயருடைய அவரை ஒரு கடுங்கோட்பாட்டு வாதி என்றும் பிணையில் வேலுவை இந்த நீதிபதி விட வாய்ப்புக் குறைவு என்றும் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வேலு கூண்டில் கொண்டு வந்து அமர்த்தப்பட்டதும் அவர் வழக்கை எடுத்தார்கள். எந்தப்பிரிவுகளில் நீங்கள் பிணை மற்றும் சட்ட நிவாரணம் கேட்கிறீர்கள், இந்த வழக்கு எந்தச் சட்ட பிரிவுகளில் வருகிறது என்று நீதிபதி கேட்டார். வழக்கறிஞர் சில பிரிவுகளை சொன்னார். என்ன ஆச்சர்யம் அந்த நீதிபதியும் சில பிரிவுகளை சேர்த்துக் கொள்ளலாம் என்று அந்த இளம் வழக்கறிஞருக்கு பரிந்துரைத்தார். சட்டப் பிரிவுகள் குறித்த விபரங்கள் முடிந்ததும் அவரை பிணையில் விட எனக்கு காரணம் ஏதும் இருப்பதாக தெரிய வில்லை என்று நீதிபதி சொல்லிக் கொண்டே, வழக்கறிஞரை பார்த்து ஏன் அவரை வெளியில் விடவேண்டும் என்று கேட்டார்.

பதிலாக, வேலுவின் மீதான இந்த வழக்கு ஒரு அரசியல் வழக்கு, அவர் அகதியாக வந்து இங்கிலாந்து நாட்டின் குடிமகன் ஆனவர், இங்கிலாந்து வாழ் இந்தியர் தமிழர் மத்தியில் பிரபலமானவர், சமூக மதிப்பு உள்ளவர் அவர் எங்கும் ஓடி விடமாட்டார் என்று சொன்னார். கூடவே, அவர் மீதான வழக்கில் சொல்லப்படும் ஒரு வெடி குண்டு சம்பவம் நடக்கவே இல்லை, அத்துடன் அவர் அரசியல் புகலிடம் கேட்டு வந்தது முதல் இதுவரையிலான பல முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் தீர்மானிக்கப் படவேண்டும் என்பதால் அவரை வெளியில் விட வேண்டும் என்றார். இது நடந்து கொண்டிருக்கும் போதே, நீதிமன்ற எழுத்தர் சில காகிதங்களை நீதிபதியிடம் நீட்டி வேலுவின் அரசியல் புகலிட வழக்கை லண்டன் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து பின்னாளில் அகதிகள் தீர்ப்பாயத்தின் தலைவராக இருந்த புகழ்பெற்ற நீதிபதி திரு. மைக்கேல் காலின்ஸ் விசாரித்து அவர் அகதியாக இங்கே இருக்கலாம் என்று தீர்ப்பளித்து இருக்கிறார் என்று சொன்னார். பொதுவாக புகலிட வழக்குகள் மிக அரிதாகவே தீர்ப்பாயம் வரை செல்லும். அதே வழக்கை காரணம் காட்டித்தான் வேலுவை இப்போது இந்திய அரசு மீண்டும் இந்தியா கொண்டு வர வேண்டும் என்று மனு செய்திருக்கிறது என்றும் தெளிவாக்கினார். நீதிபதியின் முகத்தில் ஒரு மாற்றம் !

நீதிபதி காலின்ஸ் எழுதிய தீர்ப்பை பார்த்ததும், சரி அவரை வெளியே விடலாம் என்று முடிவு செய்கிறேன், ஆனால் அவர் குறைந்தது 50,000 பவுண்ஸ் பிணை தர வேண்டும் என்றார். அவர் சமூகத்தில் முக்கியம் வாய்ந்த நபர் என்று சொல் கிறீர்கள். இங்கே அவருக்கு ஆதரவு காட்ட பலர் வந்திருக்கிறார்கள். வந்திருக்கும் நபர்களில் யாரேனும் இந்த தொகையை பிணையாக செலுத்தட்டும் என்றார். பெரிய கூட்டமாக அமர்ந்திருந்தவர்களில் முகம் இருளடைந்து விட்டது. இவ்வளவு பெரும் தொகை யாரிடமும் இருக்க வாய்ப்பில்லை. வழக்கறிஞர் மீண்டும் ஒருமுறை நீதிபதியை பார்த்து வேலு ஒரு உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்தவர் அவரிடம் அவ்வளவு பணம் இல்லை என்றார். பதிலுக்கு நீதிபதி வந்திருப்பவர்களில் யாராவது செலுத்தட்டுமே என்றார், மிகவும் அமைதியாக இருந்தது நீதிமன்றம்.

உடனே, வழக்கறிஞர் அபிகெயில் எதிர்புறம் உட்கார்ந்திருந்தவர்களிடம் என்ன செய்யலாம், இவ்வளவு தொகை உங்கள் யாரிடமாவது உண்டா என்று கேட்டுக் கொண்டு வந்தார். அப்போது தோழர் நிர்மலா இது அதிகம் என்று நீதிபதியிடம் முறையிடச்சொன்னார். பிறகு அவரே சொல்லவும் செய்தார். நீதிபதி எவ்வளவு தொகை பிணையாக தர முடியும் என்றார். நான் சட்ட ஆலோசகராக பணி செய்கிறேன், வேண்டுமானால் 5,000 பவுண்ஸ் பிணை தொகை செலுத்த தயார்

என்றார். சிறிது நேரம் இதை பார்த்துக் கொண்டிருந்த நீதிபதி சரி அந்த தொகைக்கு சம்மதிக்கிறேன் என்றார்.

அதில் ஒரு நிபந்தனை வேலு இரவு நேரத்தில் மாலை 6 மணியில் இருந்து காலை வரை அவருடைய வீட்டில் மட்டுமே தங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். அவருடைய பணி இரவு நேர பணி என்பதால் நான் வழக்கறிஞரிடம் சொல்லி நிபந்தனையை மாற்ற மீண்டும் நீதிபதியிடம் முறையிட சொன்னேன். அதைக் கேட்டுக் கொண்ட நீதிபதி அந்த நிபந்தனையை மாற்றி பகலில் வேலு அவர் வீட்டில் மட்டுமே தங்க வேண்டும் என மாற்றி அறிவித்தார். கடுமையான நிபந்தனைகளின் கீழ் அவர் வெளியில் வந்தார். என்னைப் பொறுத்தவரை அதுவே மிகப் பெரும் சாதனை என்று நினைத்தேன். அவரது வழக்கை புகழ் பெற்ற பயிண்ட்மான்ஸ் (Bindmans ) வழக்கறிஞர் மையத்தினர் நடத்தினர். அவரது குற்றவியல் வழக்குக்கு வாதாட இங்கிலாந்தின் மிகப் புகழ் பெற்ற குற்றவியல் பரிஸ்ரர்களைக்கொண்ட டவுட்டி சம்பெர்ஸ் (Doughty street Chambers) நிறுவனம் அமர்த்தப் பட்டது. இந்த நிறுவனத்தில்தான் இன்றைய பிரதமர் கியர் ஸ்டார்மர் வழக்கறிஞராக இருந்தார். வேலுவுக்கு வாதிட டேவிட் ரோட்ஸ் என்ற வழக்கறிஞர் அமர்த்தப்பட்டார். அவர் வழக்கு தொடர்பான சில திட்டமிடல் கூட்டங்களில் நானும் சென்று அமர்ந்திருந்தேன். சுருக்கமாக சொன்னால் வேலுவுக்கு வாதிட அமைக்கப்பட்ட வழக்கறிஞர் குழு மிகச் சிறந்தது என்று சொல்லலாம். இத்தகைய சிறப்பான ஏற்பாடுகளை செய்தவர்களில் முக்கிய மானவர்கள் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் பொதுவுடைமை சிந்தனையுள்ள தமிழ் அறிவுஜீவிகள் தான் என்று பின்னர் அறிந்து கொன்டேன்.

வழக்கின் விசாரணை வெஸ்ட்மின்ஸ்டர் மாவட்ட நீதிமன்றத்தில் (Westminster District Court) நடந்தது. நான் அங்கே இருந்த காலம் வரை அனைத்து விசாரணை யிலும் நீதிமன்றத்தில் உட்கார்ந்து கேட்டு கொண்டிருந்தேன். சில விசாரணையில் அவருக்கு தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தேன். என்னைப் பொறுத்தவரை, இந்த வழக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு என்பதே என் கருத்து.

வேலு என்ன குற்றம் செய்ததாக சொல்லப்பட்டு ஐந்து ஆண்டு காலம் சிறையில் இருந்து இந்திய நீதிமன்றங்களில் விசாரணையை எதிர் கொண்டாரோ, அதே வழக்கை காரணமாக காட்டி இங்கிலாந்தில் அரசியல் அகதியாக புகலிடம் கேட்டார். எவ்விதமான பொய்யோ அல்லது மிகைப்படுத்தலோ இன்றி அகதி யாக இரந்து புகலிடம் தர அவர் கேட்கவில்லை. அதுவே எனக்கு மிகப் பெரும் வியப்பு. இந்தியாவிலிருந்து தான் ஒரு நக்சலைட் இயக்கத்தை சேர்ந்த பொதுடைமைவாதி என்று சொல்லி அரசியல் புகலிடம் கேட்டவர்கள் யாரும் இருப்பதாக தெரியவில்லை. புரட்சிகர இயக்கங்களை சேர்ந்தவர்கள் என்று சொல்லி, இந்திய அரசு தம்மை துன்புறுத்தும் அல்லது கொலை செயது விடும் என்று அஞ்சி புகலிடம் கேட்ட இந்தியர்கள்கூட யாரும் இருந்ததாக தெரிய வில்லை. நான் அறிந்தவரை சட்ட நூல்களில் இது குறித்து எந்த குறிப்பும் இல்லை. அந்த வகையில் வேலு பொதுவுடைமை இயக்கத்தை சேர்ந்த ஒருவர் அரசியல் புகலிடம் கேட்ட முதல் நபர் என்பது என் எண்ணம்.

வேலுவின் வழக்கு விசாரணை சென்னை தடா நீதிமன்ற விபரங்களை மட்டும் கொண்டு நடந்த வழக்கு. இந்திய மனித உரிமை ஆர்வலர் ஒருவர் நீதிமன்

றத்துக்கு இந்தியாவில் அரசியல் போராளிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்று விளக்கமாக சாட்சியம் அளித்தார். இறுதியாக, இந்திய அரசு தமது கோரிக் கையை இங்கிலாந்து நாட்டின் மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்க முடிய வில்லை. இந்திய அரசின் சார்பாக இங்கிலாந்தின் மிகப் பிரபலமான 3 ரெய்மான்ட் (Three Raymond) நிறுவனத்தினர் வாதிட்டனர். இந்திய அரசின் வழக்கு தோல்வி யடைந்தது. வேலுவுக்கு எதிரான வழக்கு விசாரிக்க தகுந்ததாக இருப்பினும் இந்திய காவல்துறையினர், நீதிமன்றங்கள் வழக்கத்திற்கு மாறாக உள்நோக் கத்துடன் செயல்பட்டு திட்டமிட்டே தாமதப் படுத்தி வருகிறார்கள், இவர்களை நம்பி வேலுவை விசாரணைக்காக இந்தியாவுக்கு அனுப்ப முடியாது என்று தீர்ப்பளித்தது.

அதிலும் வியப்பு என்னவென்றால், இந்த வழக்கை மேல் விசாரணை செய்ய வேண்டுமென்றால் லண்டன் உயர்நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் வேலுவின் வழக்கை விசாரித்த திரு. குவெண்டின் பர்தி (Judge Quentin Purdy) வாய்ப்பளித்தார். ஆனாலும் இந்திய அரசு இங்கிலாந்தின் நீதிமன்றங்களில் இந்த வழக்கு வெற்றி பெற வாய்ப்பு இல்லை என அறிந்து மேல் விசாரணைக்கு செல்லவில்லை.

ஒருவேளை, வேலுவை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று இங்கிலாந்து நீதிமன்றங்களும் அரசும் முடிவு செய்திருந்தால் அது மிகப் பெரும் சர்வதேச சட்ட சிக்கலை ஏற்படுத்தி இருக்கும். குறிப்பாக, என்ன காரணத்திற்காக ஒருவர் அகதி என்று புகலிடம் பெற்றாரோ அதே வழக்கை காட்டி அவரை திருப்பி அனுப்ப முடியுமா?, அப்படி செய்தால் சர்வதேச அகதி புகலிடங்கள் குறித்த சட்டங்கள், ஒப்பந்தங்கள், எழுதா சட்டங்களின் நிலை என்னவாகும் என்பது பெரும் கேள்வியே.

அவருடைய சட்டப் போராட்டங்களை மட்டுமே தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டால் நலம். எப்படி பார்த்தாலும் வேலு அவர்களின் போராட்டம் இந்திய அரசியல் உலகை மீறி சர்வதேச சட்ட அரங்கிலும் ஒரு முத்திரையை பதித்துள்ளது என்பது என் எண்ணம்.

●



# In Honour of Comrade Shanmugam Velu:

## A Dedicated Leading Member of the Indian Workers' Association, Great Britain (IWA GB)



It is incredibly hard to accept that Com. Velu is no longer with us. He was not just my comrade; he was my brother and a friend close to my heart. We, at the Indian Workers' Association, Great Britain (IWA GB), join together with deep sorrow to pay homage to one of our most dedicated members, who passed away on 28 March 2026 at Basildon University Hospital after a massive heart attack.

I first met Velu about fifteen years ago at a protest organised by the IWA GB, when Com. Onkar Sangha introduced us. From that moment, we became close — not only as comrades in the struggle, but personally as well. We spent hours discussing India, the struggles of its people, and their dreams for a better future.

Velu was an honest and open hearted person. His sincerity, warmth, and genuine care for others were evident in everything he did, and those qualities defined the way he lived and related to the people around him.

Over the years, I visited their home in Walthamstow, and later in Romford, almost every Christmas and New Year. I shared countless meals with them and always felt the warmth and love they extended to me. Rajitha never let me leave without dinner. She treated me like her own brother, and I will forever hold that kindness in my heart.

The Covid 19 pandemic changed the world in ways none of us could have foreseen. It limited our ability to meet, to gather, to organise as we once did. Yet even through those long months of distance, Velu and I found ways to stay connected. His memory still returns to me as a quiet reminder of the unbreakable bond of comradeship.

I have known Nilofer, their daughter, since she was a little girl. Time has flown. Today she is a young woman studying law, aspiring to become a human rights barrister. Seeing her full of promise fills me with pride and bittersweet memories. This family has been an integral part of my life. When I visited them the following

week, Nilofer said, "*I still keep imagining that Appa might come home from work any moment.*" Her words left me heart wrenched.

Velu's strength and commitment to social justice deeply shaped both Rajitha and Nilofer. He taught them love, compassion, courage and resilience. Those values will continue to guide them, and I am confident they will carry his legacy forward.

**The Final Days — A Personal Memory**

I will never forget the moment Nilofer messaged me to say something had happened to her father. When I called her, she told me that Velu had been taken by ambulance to Basildon University Hospital in the early hours of the morning. The hospital was two hours away by train from where I live, but I left immediately.

When I reached his bedside, Velu lay there on life support, as if in a deep, peaceful sleep. The doctors explained that the massive heart attack had caused irreversible damage to his brain, even though the rest of his body was functioning normally. The hospital ward was filled with his friends, comrades, and extended family — a testament to how deeply he was loved.

I stayed with Rajitha and Nilofer through those two days, trying to help them stay strong in whatever small way I could. Velu, being the generous human being he was, had registered to donate all his vital organs many years ago. The doctors honoured his wishes, recovered his organs, and then turned off the life support on 28 March.

The funeral was held on 16 April. The venue at Kasha Royal was full — 400 people came, though we had expected only 300. We honoured Com. Velu by laying a large red flag with the hammer and sickle over him. Nilofer laid the Palestinian keffiyeh on her father, as he strongly defended the right to self-determination and liberation of Palestine from Zionist genocidal occupation. And in the end, with broken hearts, we all offered our final farewell to Comrade Velu at Herongate Woodland Cemetery, where he now rests in peace.

**Velu the Activist — The Collective Memory**

As an activist, Velu's commitment to the philosophy and principles of Marxism Leninism was unmatched. He stood literally at the forefront of every protest, every campaign for people's rights, and every struggle for social justice. As an active and one of the leading members of IWA, he lived and breathed the values of equality, dignity and fairness.

Though firmly committed to the ideological line of the IWA, he never let differences with those outside the organisation stand in the way of friendship or united front work. He believed deeply in building issues-based tactical fronts across organisations whenever the cause required it.

From the early 2000s, under the ideological and organisational leadership of Com. Onkar Sangha, the IWA GB waged consistent campaigns in Britain to defend peasant resistance and expose state repression in India. Com. Velu stood at the forefront of many of these campaigns. He played a major role in numerous protests

outside the Indian High Commission in London, mobilising activists and community supporters to demand the release of political prisoners and to oppose state repression.

For example, he was prominent in demonstrations calling for the release of Professor G. N. Saibaba, who was held in solitary confinement after being charged under UAPA for standing in defence of the marginalised sections of the society such as Dalits and Adivasis. He also participated in the campaigns for freedom to Dr Binayak Sen, who faced imprisonment for opposing mining operations that threatened the very existence of Adivasis of Orissa. Velu's visible participation consistently organised around demands including a stop to the Indian state's Operation Green Hunt – an operation meant to facilitate landgrab in central and eastern India by multinational mining corporations.

In 2013, the Indian state filed an extradition request in the British courts against Comrade Velu for his active participation in revolutionary politics during his years in India. He successfully defeated the extradition bid with substantial support from South Asia Solidarity Group, and IWA GB throughout the three year legal battle.

**Legacy**

As much as Velu was a committed activist, he was also deeply sensitive to the struggles of the people back home. I personally believe that the heartbreak over the events of the past year or so, particularly the brutal crackdown by the Indian state on the peasant movements in central and eastern India—movements that he had dedicated so much of his life to—took a toll on his health. The same comrade who had always been physically strong and mentally resilient, who never backed down from a challenge, was ultimately overwhelmed by the sadness of witnessing the very movements he fought for being mercilessly crushed by the state.

Velu remained committed to the belief that the world could and should be better for everyone. His passing leaves a hole that can never be filled. His tireless work for people's rights and his contributions to the IWA GB will live on. He will be remembered not only as a comrade but as a true champion of justice, equality and liberation. His spirit and example will continue to inspire us to keep fighting for a fairer and more humane world.

**Long Live Comrade Velu!**

**With Revolutionary Greetings and Red Salutes**

**Raghu Jayantiya,**
**on behalf of**
**Indian Workers' Association, Great Britain (IWA-GB)**

●

# Still Standing Tall as the Mannâ Malai Peak…

## - Radha D'Souza



If it is true that the source of politics must be love for people and not hatred for the enemy, Shanmugam Velu's life was a living illustration of that principle. Velu's love for his family, his comrades, for his community, his love for justice, love for truth, love for the homeland, remained the source of energy that powered his life and his work. Those who knew him, saw in him a large hearted, compassionate, positive and dynamic person. Velu was much more than a good man. He is a hero, a revolutionary hero at that. He will therefore live on forever. It is this aspect of his life that I wish to highlight in the hope that it will inspire others to follow in his footsteps.

Velu was born in a small village called Thurinjipatti in Dharmapuri district of Tamil Nadu in India. Dharmapuri district is what the civil service bureaucracy in India classifies as 'underdeveloped' or 'backward' district. Over 80 percent of the people in the district are agriculturists, a large proportion of them landless labourers. Over 22 percent of people are 'Dalits' and 'Adivasis', the former being people of the land, the latter being people of the forests. Oppression of Dalits and Adivasis is historically embedded in Indian society, culture and history, and atrocities against them are routine and commonplace. In such a society where inhumanity is the norm, safeguarding one's own humanity becomes a serious challenge. To show compassion for fellow human beings, a sense of justice, and empathy for their conditions in such a social context invites the full blown might of the state and its oppressive police apparatuses. Velu invited the wrath of the Tamil Nadu police, backed by federal government policies, because of his opposition to the mistreatment of Dalits and Adivasis and the impoverished agricultural labourers in Dharmapuri district.

Born in a working-class family, his father, who worked as electrician in Tamil Nadu State Electricity Board, died when Velu was only nine years old. His maternal uncle who supported the family wanted Velu to have a university education and sent him to college in Chennai. However, Velu gave up his studies to seek employment because he could not afford to study and wanted to support his mother and younger brother instead. He joined the same Tamil Nadu State Electricity Board as his father where he worked as assessor.

If Velu's love for his mother and brother impelled him to abort his studies and find employment, his love for his fellow workers, his love for justice for Dalits and Adivasis and landless peasants drew him to political movements in the region. Around him there were movements that mobilised the Dalits, Adivasis and landless labourers against routinised state, caste, gender and class violence. Velu became active member of the Radical Youth League at the age of nineteen. Such resistance movements have a long history in India going back to colonial period and the Telangana liberation struggle (1946-1951) that was concurrent with independence. The Naxalbari (West Bengal) and Srikakulam (Andhra Pradesh) uprising in 1967 had ripple effects in many other states in central and southern India including the state of Tamil Nadu. Dharmapuri district, where Velu lived and grew up, bordered Andhra Pradesh and Karnataka. These movements had profound impact on Indian youth across the nation and sensitised an entire generation of Indians. Velu was amongst those sensitised youth who committed himself to the dream of a democratic India where freedom existed not only for the rich and the educated classes in Chennai, Mumbai, Kolkata and Delhi but equally for the Dalits, the Adivasis, the landless labourers in the so-called 'backward districts' such as Dharmapuri that was home to Velu.

The landless labourers in Dharmapuri convened meetings and demonstrations to demand better wages, to protest custodial rape of women by the police, and torture and custodial deaths. The irony, as Velu found out soon, was that the protestors would get arrested for protesting against police violence! When members of his community were arrested for protesting police violence, Velu helped the families to find lawyers for the detainees, contact their family members, arrange for sureties if bail was granted to any of them not least because he was amongst the few people who where literate in a community was illiteracy was widespread. In other words, Velu helped to defend the civil liberties and democratic rights of his community, both being universally acclaimed values. In that process Velu became exposed to the state violence that underpins the façade of India's democratic constitution.

In 1991, Velu took the lead to organise a conference in the town of Harur in Dharmapuri district on youth unemployment. The conference slogan was "Employment is our birth right. It is the government's duty to address youth unemployment." The conference was perfectly legal and within the Fundamental Rights guaranteed by the Indian constitution. Velu sought police permission to hold the conference. The police 'sat' on the application neither declining it, nor granting it. Velu and his comrades decided to go ahead with the conference as there was nothing illegal in a supposedly democratic state to demanding employment for all. Nearly six hundred people attended the conference. The police stopped the attendees and arrested over three hundred of them. All were taken to Vellore prison. Velu proposed that the detainees hold the conference in the prison instead! The prison guards subjected Velu and other leading comrades to severe beatings, one of who sustained head injuries. The police detained the conference attendees for twenty days! Not many in Britain, including judicial officers, understand how the democratic constitution of India works in practice as Velu was to find out for himself.

Undeterred by his experiences, in 1992 Velu organised a cultural tour inviting the legendary Telugu poet Ghaddar to perform in several cities and towns in Tamil Nadu. Velu had deep and abiding interest in Tamil literature and wrote poetry. Over six to seven hundred people attended each event. Velu was by no means a 'loner'; far from it, he was a people's person. During this time, Velu continued to work at the Tamil Nadu State Electricity Board and support his family.

Injustices lurk in every nook and corner in India, and the State Electricity Board was no exception. Although a statutory organisation, the Electricity Board employed a large number of causal workers on precarious contracts paying them a pittance. When the workers on casual contracts organised for job security and better pay, Velu supported their struggle. He led a large demonstration for which he was arrested once again in 1992, by the Thiruvannaraalai police, together with seven others where he was beaten. Such beatings are routine and do not surprise people in India at least. Police violence either breaks people or steels them. In Velu's case the police violence against him made him more determined to struggle for a democratic society.

Once out of prison, Velu led two fact finding missions to investigate police violence against the Adivasis, the forest dwellers in his district who were accused of cutting down trees! In fact, it was the corrupt forest officials who were complicit in the lucrative sandalwood trade conducted by traders who cut down sandalwood trees illegally. The nefarious networks in sandalwood trade had deep roots amongst influential politicians and

businessmen. The police arrested the Adivasis, tortured them, raped their women, hence the need for an independent citizen's inquiry that Velu led. The fact-finding missions drew the attention of the People's Union of Civil Liberties (PUCL) in the state who launched a statewide campaign on police violence against Adivasis. His steadfastness and his commitment to truth and justice made Velu a marked man for the police.

The federal government introduced the draconian Terrorist and Disruptive Activities (Prevention) Act, 1987 (TADA) directed precisely against those like Velu who dream of a democratic and just India. The Act permitted arrest and detention without charges, made confessions to police, often procured by torture, permissible evidence in court, it expanded the definition to "terrorism" to an extent that even unknowingly communicating with a person accused of terrorism, I repeat, *accused of* and not *convicted of* terrorism charges, a terrorist offence; made bail almost impossible; and included the death penalty. Exposés of the types of fact-finding missions that Velu led in Tamil Nadu, generated a nationwide protest movement against the draconian TADA law. Most importantly TADA cast aside the rule that a person is 'innocent until proved guilty', often called the 'Golden Rule of Justice'. Under TADA, the presumption was that the accused was guilty until they proved their innocence. Sadly, Velu was eventually arrested under the very same TADA that he campaigned against. Upon arrest he was tortured severely. Cases such as Velu's led to a nationwide campaign for the repeal of TADA. In 1995 TADA was repealed however pending cases already filed under the Act such as Velu's were continued even after the federal government had repealed the Act!

Many outside India believe that when the police arrest a person, they *intend* to bring evidence against them, prove their guilt before a court of law and seek their conviction after following procedures established by law. Velu's experiences with the justice system belies this belief. Instead, Velu's tryst with the judicial system in India proves the principle that the legal process itself is the punishment. Velu was arrested in November 1992 on concocted charges, with little or no evidence or investigation. For three and half years Velu's mother, fearing for her son's life, ran pillar to post filing 5-6 Habeas Corpus petitions to produce him in court. Eventually in 1996 Velu was granted bail but the trial continued. For a person who aborted his studies to support his family, the judicial process *was* the punishment. It meant every other week Velu had to remain present in court, he could not seek employment or work, and he could not move around or engage in any social, political or cultural activities. It was the Indian state's way of demobilising a person. The trial, not surprisingly, found no evidence against

him but the judgment was in abeyance. In this way the trial remained inconclusive for ten years until he fled to the UK in 2002.

Outside the prisons, reports of 'encounter deaths' were widespread across the country at the time. The term 'encounter death' is an Indian contribution to the English legal dictionary. Typically, a person is 'encountered' when the police kill them in cold blood and put out a narrative that the police killed the person in self-defence because they were attacked first. That was the 'encounter'. Fearing an 'encounter', Velu fled for his life to the UK. He was amongst the very few who from the Left movements in India who was successful in his asylum application.

During his time in prison, Velu's love for fellow prisoners led him to organise them against the abuse and mistreatment by prison authorities. He organised petitions to civil liberties organisations, to jail and judicial superiors besides to bring attention of the outside world and protests within the prison. Amongst the prisoners there were many Tamil activists from Sri Lanka also charged with acts of terrorism. They too became part of Velu's prison community. When Velu arrived in the UK the Sri Lankan Tamil community adopted him as their own. In the UK Velu successfully applied for asylum with the support of the Sri Lankan Tamil community. Tamil solidarity had travelled to the United Kingdom with Velu beyond Sri Lanka and India.

In the UK, Velu rebuilt his life with the same love for people that energised him to remain an active champion for freedom and justice. He married Rajitha, a Sri Lankan Tamil, raised his daughter Nilofer, worked very hard for his family, became part of Tamil literary circles, and continued to campaign against state violence in India and Sri Lanka. The Government of India however had not forgotten Velu. A decade later, just when things were looking up for Velu, the Indian government filed an extradition request to return him back to India arguing the court had yet to pass judgment. At that stage the trial had been ongoing for thirty-two years since the date of arrest!! Undeterred, Velu defended his case. His is perhaps the only extradition request by an activist on the political Left heard by a UK court, and thankfully, rejected. It seemed the worst was over and Velu could continue his life with the family and community that he loved so much. Alas that was not to be.

Mao Tse-tung famously said: "Though death befalls all men alike, it may be heavy as Mount Tai or light as a feather". During his life Velu stood tall as the Mannâ Malai peak. His death is heavy as the ranges of the Eastern Ghats that mark Tamil Nadu.

●

# மனிதத்தில் ஜெயித்தவர்

## - அஞ்சனா



தோழர் வேலு, ஆமாம் தோழரும் வேலும் இணைபிரியாத பெயர்கள். உழைக்கும் வர்க்கத்தினருக்கான அரசியலை இறுதி மூச்சு வரை தாங்கி நின்றவரின் ஓங்கி ஒலித்த குரல் நின்று விட்டது. இன்று மே தினம், அவரின் அறக்கூவல் கேட்காமல் எங்கள் நெஞ்சங்களில் சோகம்.

உற்ற தோழி கலாவின் பிரிவில் கண்ணீர் முழுமையாக காயும் முன்னரே தோழர் வேலுவும் விடை பெற்று மனதை கனக்க வைத்து விட்டார். அவரின் களப்பணியும் எதிர்வினை அரசியலும் பெரிது, அதை விதந்துரைத்து கூறும் அளவிற்கு எனக்கு எந்த தகுதியும் இல்லை, அவர் தன் வாழ்வில் கண்ட நெடிய போராட்டங்களும் இன்னல்களும் என் முன்னே மலை போல் உயர்ந்து நிற்கும் போது அதன் முன்னே ஒரு சிறு கல்லாகவே நிற்கிறேன்.

நேரிலும் முகநூலிலும் தொலைபேசியிலும் அரசியல் சம்பாஷணைகள் பல செய் துள்ளோம். தனது கருத்துக்களையும் விமர்சனங்களையும் இன் முகத்தோடு வெளிப்படையாக முன் வைப்பார்.சக தோழர்களை தட்டிக் கொடுத்து உற்சாகப்ப டுத்தி ஆனந்தப்படும் உள்ளம் தான் அவர். போட்டி பொறாமை, வஞ்சம் என்று ஒரு துளி கூட இல்லாத விநோதமான ஒரு சில மனிதர்களில் அவரும் ஒருவர். நிறைகுடம் தளம்பாது என்பார்கள், தான் என்ற அகங்காரம் இல்லாதவர். நல் லெண்ணம் படைத்தவர்களை இந்த இயற்கை சீக்கிரம் சுவீகரித்து கொண்டு


தன்னை இன்னும் அழகாக்கி கொள்கிறதோ என்னமோ அவர் இல்லாமை என்பது போராட்ட அரசியலுக்கும் மனித மாண்புஇருத்தலுக்கும் ஒரு அப்பட்டமான வெற்றிடம்.

சந்தோசம், மகிழ்ச்சி, புன்னகை, சிரிப்பு - இப்படி எல்லா வகையான நேர்மறை எண் ணங்களையும் நினைபடுத்துபவர் வேலு. Eastham Trinity Community Centre இல் பல இலக்கிய - அரசியல் ஒன்றுகூடல்கள் அரங்கேறி இருக்கின்றன. அதில் ஒவ்வொன்றிலும் வேலுவை கண்டிருப்போம் என்று சொன்னால் அது மிகையில்லை என்று நினைக்கிறேன். அந்த மண்டபத்தின் வலது கை பக்கத்தில் ஒரு பக்கவாட்டு வாங்கு ஒன்று உள்ளது. அந்த வாங்கை பார்க்கும் போதெல்லாம் அவர் ஞாபகமே வருகிறது. அவரும் நானும் இன்னும் ஓரிரண்டு தோழர்களும் அதில் உட்கார்ந்து அரட்டையடித்து மகிழந்திருக்கிறோம். ஒரு பக்கம் கூட்டம் அமைதியாக நடை பெற்றாலும் கடைசி பென்ச் மாணவர்கள் போல் நாம் வடையும் தேநீருமாக எமது நமட்டுச் சிரிப்புக்களையும் மெல்லிய குரலில் பேச்சுக்களையும் அந்த வாங்கு கண டுள்ளது. மிக சீரியசான அரசியல் உரைகளை கேட்ட அந்த மண்டபத்தில் நகைச் சுவைகளுக்கும் பஞ்சமில்லை. இந்த சுவையான சூழலை எற்படுத்திக் கொடுக்கும் மனிதர்களில் வேலு முதன்மையானவர். இனி அந்த நாட்கள் மீண்டும் வராதே என்று உணரும் போது ஏக்கம் தொற்றிக் கொள்கிறது.

ஒரு உழைப்பாளியாக, போராளியாக இருக்க வேண்டிய பயணத்தில் பலர் மனிதத்தை இழந்து விடுகிறோம். போட்டி, பொறாமை, எரிச்சல், சதி, சூழ்ச்சி என்று சகதிகளை உருவாக்கி விடுகிறோம். கள்ளம் கபடமில்லா மெய்யன்பையும் பண்பையும் என்றும் தொலைக்காதவர் தோழர் வேலு.

மனிதனாகவும் வென்று விட்டார் அவர், செவ்வணக்கங்கள்!

●



# தோழர் வேலு!

**-சுகன்**



நக்சலைட் ஒருவரின் வெகுஜன முகம் வேலுத் தோழர்.

தமிழ் நாட்டின் நக்சலைட் அமைப்புகளில் ஒன்றில் தீவிரமாக இயங்கி , 1990 களிற் சிறைசென்று , விடுதலையாகிப் பின் பொலிஸ் அதிகாரத்தின் தொடர் கெடுபிடிகளால் தலைமறைவாகி, அச் சூழலிலின்றும் வெளியேறி , லண்டனில் மாற்று வெளிகளில் இயங்கிய தோழர் வேலு இன்று அதிகாலை 1.30 மணியளவில் காலமான அவலச் செய்தியை அவர் மகள் நிலோபர் அவர்களினது வாட்சப் செய்திமூலமும் தோழர்களின் இரங்கற் செய்திகள் மூலமும் அறிய இன்றைய மோசமான காலை விடிந்தது.

நண்பர்கள் நித்தி , ராகவன் இருவரும் தோழர் வேலுவின் இரண்டு நாட்கள் முன்னரான இறுதி நேர நிலையை எனக்கு அறியத்தந்தார்கள்.

தோழர் புதியவன் வேலுத் தோழரது கவலைக்கிடமான நிலையை இரு நாள் முன் தன் முக நூலில் அறிவித்திருந்தார்.

மாரடைப்பு ஏற்பட்டு மூளைச்சாவடைந்த இறுதி இரண்டு நாட்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான மரபுவழி நக்சலைட் உணர்வில் இயங்கிய அவர் இதயம் உயிர்காப்பு இயந்திரத்தின் உதவியுடன் இயங்கிக்கொண்டிருந்தது.

அவர் அன்பின் உணர்தலில் அவரோடு தோழமை பாரித்த அவர் நண்பர்கள்

" வேலுத் தோழர் !

எழுந்திருங்க தோழர் !

வீட்டுக்குப் போவோம் எழுந்து வாங்க தோழர் ! " என அவர் அரையுயிர் படுத்திவைக்கப்பட்ட மருத்துவ மனையில் அவரை எழுந்திருக்கச் சொல்லி வேண்டிக் கேட்டவண்ணம் இருந்தனர்.

ஏதாவது மருத்துவ அதிசயம் நிகழ்ந்துவிடமுடியும் என்ற நப்பாசையோடு.

நுண் மருத்துவ அறிதலில் அவர் மீண்டு வர வாய்ப்பில்லை என மருத்துவர்கள் அவர் உறவுகளிற்கு அறியத்தந்தார்கள். தன் உடல் உறுப்புகளை மாற்றுப் பயன்பாடுகளிற்காக அவர் உவந்தளித்திருந்ததால் தொடர்ச்சியாக இயந்திர இயக்கம் அவ் உறுப்புகளிற்கான பாதிப்பு வீதத்தை அதிகரிக்கும் என்பது மருத்துவ முடிபாயிற்று. முடிபில் அவர் உயிர்வாழும் இதர துணைக் கருவிகள் அகற்றப்பட்டு அவர் நீள் துயில் கொள்ள வைக்கப்பட்ட பெருந்துயர் நிகழ்ந்தது.

தாம் சார் பேரவலங்களை மிக இயல்பாக எழுதிச்செல்லும் 'வரம்' ஈழத்தமிழர்க்கு வந்தமைந்த பண்புகளில் ஒன்று. மரணச்செய்திகளும் அத்தகை பண்புகளைப் பெறுகின்றன.

அரசியற் தஞ்சம் கோரிய இங்கிலாந்து மண் வரை இந்திய அதிகார வர்க்கம் , தூதரகம் மூலம் அவரைத் துரத்தியது.

அவரை நாடு கடத்தக் கோரிய வழக்கு இந்திய அதிகாரவர்க்கத்திற்கு ஒரு சவாலான தன்மானப் பிரச்சனையானது. தோழர் ராகவன் , நிர்மலா இருவரதும் சிறப்பு வழிநடத்தலில் அவ் வழக்கில் தோழர் வேலு வென்றார்.

அவருக்கான பிரஜா உரிமை கிடைத்தபின் அவரை நாடுகடத்தச்சொல்லி இந்திய அதிகார வர்க்கம் இங்கிலாந்திடம் கோரி நின்றது.

அவர் நாடுகடத்தப்படும் நிலையில் அவர் எங்கவுண்டரில் கொல்லப்படுவார் என்பது நிச்சயமான ஒன்று. அவருடன் இயங்கிய ஐந்து தோழர்கள் ஏற்கனவே என்கவுண்டரில் கொல்லப்பட்டிருந்தனர்.

ஒருவரை ஆரத் தழுவித் தோழமை கொள்வது தோழர் வேலுவின் தனித்துவ அடையாளம். கருத்தியல் விவாதத் தர்க்கங்களிலும் பொது நிகழ்வுகளிலும் அவர் ஆளுமை துல்லியமாகவும் கவர்ச்சியாகவும் கம்பீரமாகவும் இருக்கும். இருக்கும் சூழலை உற்சாகமாக வைத்திருப்பது அவரது இயல்பு. வெற்று உரையாடல்களிலும் சலம்பகங்களிலும் அவர் ஈடுபடுவதில்லை.

மாற்றுக்கருத்தின் மதிப்பு எப்படியானது என இங்கு உணரப்படுகின்றதெனில் ஒரு தொடர் இயக்கம் இயங்குகின்றதெனில் தோழர் வேலு அவர்கள் தனது இன்மையாலும் உணரப்படுவார்.

புரட்சிகர செவ்வணக்கம் தோழர் வேலு. !

●

# சித்தப்பா....

## - அஷ்வினி நவீன்



என் வாழ்வில் வேலு சித்தப்பா எவ்வளவு முக்கியமானவராக இருந்தார் என்பதை சொல்வதற்காக வார்த்தைகளைத் தேடித் தவிக்கிறேன். வார்த்தைகளால் முழுமையாக சொல்ல முடியும் என்று தோன்றவில்லை.

எமது குடும்பத்தில் சித்தியின் கணவர் என்பதைத் தாண்டி சித்தப்பா என் வாழ்வில் முக்கியமான ஒருவராக இருந்தார்.நான் ஒவ்வொரு முடிவுகளை எடுக்கும் போதும் ,என் வாழ்வின் அடுத்த கட்ட நகர்வின் போதும் பாராட்டியும்,ஊக்கப்படுத்தியும்,ஆலோசனை வழங்கியும் முக்கியமானவரானார். எனது உயர் கல்வி, வெளிநாட்டுப் பயணங்கள், என் வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்தல் என அனைத்திலும் அவரது பங்கு முக்கியமாயிருந்தது.நான் வேறு யாரிடமும் பகிர்ந்திராத என் வாழ்வின் சில விடயங்களைக் கூட அவர் மேல் எனக்குள்ள நம்பிக்கையின் நிமித்தம் கூறியிருக்கின்றேன். நான் மிகவும் நேசித்த நம்பிக்கைக்குரிய மனிதன் என் சித்தப்பா.

அவர் முதன் முதலில் இலங்கைக்கு வந்திருந்த போது நான் சிறு பிள்ளையாக இருந்தேன். இடங்களைப் பார்க்கவும் அவரது தோழர்களைச் சந்திக்கவும் என்னைத் தான் அழைத்துச் செல்வார். அவரோடு செல்லும் போது மகிழ்ச்சியாக இருந்ததும்,கேக் சாப்பிட்டதும் மட்டுமே என் ஞாபகத்தில் இருந்தது.ஆனால் பல வருடங்களின் பின் சித்தப்பாவுடன் கதைக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் நாம் சென்ற அந்தப் பயணங்கள்,என்னோடு பேசியவை இரசித்த காட்சிகள் அவர் சந்தித்தவர்களோடு உரையாடியவை பற்றியெல்லாம் 21 வருடங்களின் பின் கூறிய போது வியந்து நின்றேன்.நான் உணராத பல விடயங்களை உணர்வுபூர்வமாக மதித்தும் இரசித்தும் இருந்தார்.அவரது வாழ்வு போராட்டங்களும் சவால்களும் நிறைந்ததாக இருந்தாலும் அழகான சிரிப்போடும்,அக்கறையான பேச்சோடும் வாழ்க்கையை இரசித்து வாழ்ந்தார். கடினமான விடயங்களையும் இலகுவாக எடுத்துக்கொண்டார்.

நான் கனடாவிலிருந்து திருமணத்தின் பின் லண்டன் வந்த போது உண்மையாகவே மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மீண்டும் அவரோடு நேரம் செலவிடக் கிடைத்தமையை எண்ணி எனக்கும் மகிழ்ச்சியாயிருந்தது.சமீபத்தில் நாங்கள் பல பயணங்கள் சென்றோம். மணிக்கணக்காக பல விடயங்களைப் பற்றிப் பேசினோம். அதிகமாக சிரித்தோம். ஒவ்வொரு முறை சந்தித்த போதும் இப்படி நாங்கள் அடிக்கடி சந்திக்க வேண்டுமெனக் கூறினார். ஆனால் சித்தப்பா எங்களை ஏமாற்றி

விட்டு சென்று விட்டீர்களே!...

என் தந்தை 2020 ம் ஆண்டு இறந்த போது "நான் உங்களோடு இருக்கிறேன் "என எம் குடும்பத்திற்கு வெறும் வார்த்தையாக அல்லாமல் செயலிலும் காட்டினார். எனக்கும் என் தம்பிக்கும் ஆசானாக, வழிகாட்டியாக இருந்தார். என் தாய்க்கு அண்ணனாக உதவினார். என் அப்பா இருந்த போது அவரது தொழிலுக்குத் தேவையானவற்றை லண்டனிலிருந்து தேடித் தேடி அனுப்பினார்.

எனது திருமணம் நிச்சயமான சமயத்தில் இருந்து சில மாதங்களே பழகிய எனது கணவர் நவீன் என் சித்தப்பாவோடான தன் அன்பை ,உறவை இவ்வாறாகப் பகிர்கிறார்.

"அவர் என் வாழ்வில் ஒரு உறவாக வந்தாலும், ஒரு வழிகாட்டியாக நிலைத்து நின்றவர். அஷ்வினியின் குடும்பத்தில் நான் முதன்முதலில் நேரில் கண்ட முகம் அவர்தான். ஹேரல்ட் வூட் நிலையத்தின் அந்த தருணத்தில், ஒரு மென்மையான புன்னகையுடன் என்னை எதிர்கொண்டார் அந்த புன்னகை அந்நியத்தை கரைத்து நெருக்கமாக மாறிய ஒரு அமைதியான தொடக்கம்.

குறைந்த நேரமே நாம் பகிர்ந்திருந்தாலும், அவர் சொன்ன ஒவ்வொரு அனுபவமும் காலத்தால் செதுக்கப்பட்ட ஞானமாக என் உள்ளத்தில் பதிந்தது. சொல்லாத வார்த்தைகளின் வழியே, ஒரு வீட்டின் தலைவனாக நிற்க வேண்டிய தகுதியையும் தன்னம்பிக்கையையும் எனக்குள் விதைத்தார். நான் என் சிறு உலகத்தை- தொழில்நுட்பத்தின் பாதைகளை- அவருடன் பகிர்ந்தேன் குழப்பம் வந்த போதெல் லாம் என்னை நாடியவர் அவர். வாழ்க்கை சிக்கலாக மாறிய தருணங்களில், நான் திரும்பிச் சென்றது அவரிடமே - ஒரு ஒளியாக.

நாம் கழித்த நேரம் குறைந்திருந்தாலும், நம் உறவு காலத்தை மீறியது. பகிர்ந்த நினைவுகள் அமைதியாக என் மனதில் ஒலிக்கும் கவிதைகள் சொல்ல முடியாத உணர்வுகள், அளக்க முடியாத பந்தம் - வார்த்தைகளால் அல்ல, இதயத்தால் மட்டும் உணரப்பட்டது."


சித்தப்பா மறைந்த நாளிலிருந்து இன்று வரை கூடும் மக்களையும் அவர்கள் கூறுகின்றவற்றையும் கேட்கும் போது அவர் எனக்கு மட்டும் சிறப்பானவர் அல்ல பலருக்கும் சிறப்பானவர் என்பதை உணர்ந்தேன்.தன் குடும்பத்துக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த அதே வேளை அவர் ஏனையவர்களுக்கும் தன் பங்களிப்பைக் கொடுத்த விதம்...இது எல்லோராலும் முடியாது.இது அரிதான விடயம்.

சித்தப்பா! நீங்கள் விட்டுச்சென்ற இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.நீங்கள் எமக்குக் கற்றுத் தந்த வழிகளும் அன்பும், நம்பிக்கையையும் தான் நம்மை வழிநடத்த வேண்டும். உங்கள் பெயர் சொல்ல உங்கள் நினைவு களுடன் வாழ் வோம் .என் சித்திக்கும்,நிலோபருக்கும் என்றும் துணையாக இருப்போம்.சித்தப்பா கண்ணீரோடு விடை கொடுக்கிறேன்.அமைதியாக இளைப்பாறுங்கள்

●

# Comrade Velu: An Uncompromising Life of Struggle and Solidarity

**-Santhush Kumar**



Dear Comrade Velu,

I am still unable to cope with the seismic waves created by your absence. I remain at a loss for words to comfort the undeserved suffering your beloved ones are enduring. Yet, I try to gather the strength and spirit that your memories continue to offer, so that I may learn to cope.

I came to know you in 2007, shortly after moving to London. It was through literature and political gatherings that we first connected. Over time, what began as a shared intellectual space grew into a personal relationship, especially when you introduced your family to us.

We shared many panels and spent long hours in political meetings, exchanging ideas and talking over the phone for hours. I was always struck by how organised you were - how you balanced your personal commitments and demanding night shifts at work, yet still found the energy to participate in protests and offer thoughtful literary criticism in meetings. Even when faced with books running into hundreds of pages, you seemed to have read them in full, always ready to engage deeply.

It seemed to me that your early involvement in political activism and struggle had shaped in you a tireless spirit and a remarkable temperament-one that could draw people in, even those who had met you only once. Being part of the mass movements of the People's War since the 1990s has shaped you into a cadre with deeply tested experience in grassroots

struggles. Even your arrest under TADA (The Terrorist and Disruptive Activities (Prevention) Act), followed by four years of imprisonment and severe torture, did not diminish your spirit or your unwavering enthusiasm. Instead, the rich grassroots experience you have gained has transformed you into an organic intellectual- a grounded and practical thinker. Yes, your profile truly embodies Antonio Gramsci's idea of the "new intellectual"- one whose identity is not merely theoretical, but deeply rooted in praxis.

You did not leave the struggle behind when you came here- you carried it with you at all times. It was always part of you: in the way you spoke, in every action you joined, wherever it took place. The struggle and resistance were inseparable from you, comrade. You were an integral part of that unwavering and uncompromising resistance. You stood alongside the struggle, following it with unwavering focus and offering your steadfast support to the people's movement.

Since its emergence as a rapidly expanding nation-state, India has increasingly attracted Western corporate and speculative capital; however, this growth has remained uneven, benefiting only selected sectors of the economy. In this context, as Pankaj Mishra observes, economic globalisation "raises expectations everywhere, but distributes its benefits narrowly," thereby rendering vast sections of the population susceptible to populist and ethnocratic political forces.

The frustration and despair of landless peasants have found expression in communist militant movements, which have gained significant ground through widespread popular support, coming to dominate large parts of central and northern India, particularly in Andhra Pradesh, Jharkhand, Bihar, Chhattisgarh, and Orissa. The masses represented by these Maoist movements largely belong to communities living in conditions of extreme poverty and deprivation, where more than half of children under the age of five are malnourished, and where failed crops and spiralling debt have driven more than a hundred thousand farmers to suicide over past decades.

The communist guerrilla army, which has expanded across the forests of central India over the last thirty years, has been fighting against mining companies seeking to seize indigenous homelands-lands that sit atop trillions of dollars' worth of mineral wealth. In response, the Indian government launched a military campaign against these guerrilla militants, known as Operation Green Hunt, deploying nearly 200,000 paramilitary personnel. As Arundhati Roy poignantly observed, "the army of the world's largest democracy is preparing to wage war against some of its poorest people." You were the very embodiment and face of this struggle, my dear comrade.

In a world where formal education often amounts to capitalist indoctrination, interactions and encounters with rare activists like you can themselves be profoundly educational- not only for younger generations, but for everyone.

I cherish the memories of my encounter with you as invaluable, and I feel fortunate to have had that opportunity.

To recollect some...

I vividly remember the time we spent together in Lanka in 2011. You, Nathan, and I wandered through the streets of Colombo, visiting bookshops and stopping at tea stalls. We met the veteran Marxist–Leninist political activist, Comrade Senthivel, at his home. Later, we visited the pioneering activist and writer Dominic Jeeva at his office. He was delighted to see you-a comrade from Tamil Nadu. I could see the excitement and joy in you as you met him.

As Dominic Jeeva recounted the story of his life and his struggle against the deeply entrenched and inhuman caste system in Jaffna, I noticed you quietly wiping away your tears, deeply moved. You told me then that you would never forget that moment in your life.

At an Indian restaurant in Wellawatte that served Tamil Nadu cuisine, you explained to Nathan and me the proper way to eat rice with curries. Walking along the streets of Bambalapitiya, past a temple, you said you felt as though you were in Tamil Nadu. I noticed your quiet smile and the sparkle in your eyes as you said it.

For you, as a person who had fled persecution from the Indian state and its oppressive machinery, it meant that you might never see your place of origin again. Although you rarely spoke of this pain directly, I could always sense it.

There was a time when Tamils from Lanka, scattered across the world in exile due to war and persecution, believed they would never again see the soil where they were born and raised-the place where their sense of belonging was rooted. Yet many were eventually able to return, at least for a visit, after nearly three decades of war. But for people like you -who cherished the land where you were born, lived, and struggled - that very space was denied to you, simply because you stood up for the downtrodden people of your own soil.

As we all know, you were often critical of the traditional left in India, especially for what you saw as its ideological compromise and gradual degeneration. Yet I have always held close a remark you once shared with me in conversation:

“Tholar, when we are children walking to nursery school, we hold the hand of an elder who gently guides us along the way. But as we grow, step

by step, we no longer need that hand to walk. Still, this does not mean that the hand - or the person - ceases to be part of our journey. In the same way, our left pioneers and their guidance remain with us, shaping the path we continue to walk."

Though you were an uncompromising leftist, you were never sectarian. You never closed yourself off from other voices; instead, you remained open - always willing to listen, to question, and to engage in thoughtful dialogue. You approached difference not with rigidity, but with curiosity, always ready to explore alternative perspectives and to learn from them. Despite our slight ideological differences on certain political issues, I have always cherished the rich, dialectical exchange that shaped our conversations.

I remember one day, as we were driving back from the memorial meeting of the late Comrade Thangavadivel Master—a pioneering anti-caste activist in northern Lanka during the 1960s—we found ourselves in a deeply engaging conversation about Malcolm X and Martin Luther King Jr. You were particularly struck by Malcolm X's reflections, especially his distinction between the "field Negro" and the "house Negro." That idea stayed with you; it stirred something deeper. You spoke with great enthusiasm about continuing the conversation, even proposing that we organise a series of discussions based on selected readings in postcolonialism and decolonisation.

What stood out most was not only your engagement with those who differed from you politically, but also your patience with those outside political discourse altogether. Even in conversations with individuals holding traditional or regressive views, I witnessed your remarkable composure. You never dismissed them; instead, you explained your position steadily, with clarity and conviction, yet always with respect.

Your life reflects a microcosm of postcolonial history shaped by British colonialism. Modern India, which liberated itself from British rule, did not allow you to exercise your human potential - the basic rights of its own citizens in the newly independent nation. Your freedom and your right to resist were suppressed by the modern Indian nation-state. You were forced to flee in order to save your life, seeking refuge in Britain—the former colonial master of India.

As A. Sivanandan's well-known epithet reminds us: "We are here because you were there." Thus, you found yourself in the UK, fleeing your own country- a former colony - to the land of its former master. In the process, you even became stateless for a period of time. To add further irony to this tragic trajectory, the Indian state issued an extradition order, seeking your return not to protect you or restore your citizenship, but rather to punish-

if not execute—you. Is this not, my dear comrade, part of the tragic irony embedded within postcolonial history?

The word "comrade" has felt intimate and close to my soul since childhood, echoing across shifting circumstances and uncertain times - heard as comrade, sahodaraya, tholar, Genossin, Genosse.

Yet it is your voice, calling me 'tholar' with such warmth, passion, and a quiet smile, that I will miss most deeply. Its absence will linger within me, a silent ache that endures.

I remember those trials concerning the extradition order against you, held in the London courts, where I had the chance to view the proceedings on a couple of occasions. Those were days overshadowed by uncertainty, heavy with warnings and despair. We were all deeply worried, anxious about what each hearing might bring. What kind of verdict would be delivered? What would happen to you? Would you be deported?

Even now, words fail to capture how your loved ones - especially Rajitha and Nilofer, along with your close friends and family - felt during that time. I still recall how you stood before the judiciary panel, unwavering and composed. Yet, to our amazement and relief, you returned, my dear comrade. Like spring emerging after a harsh snowstorm, you came back renewed.

And with that return, your activism and resistance continued, carried forward with the same spirit, despite all the obstacles and setbacks along the way.

When you suddenly fell ill, and in a single moment it became clear that recovery - and your return- were no longer possible, time seemed to abandon us all, turning even the faintest hope into a dream that dissolved into a nightmare.

Dear comrade, you lived in a time when the old world was dying, and the new world struggled to be born. With relentless courage and unwavering conviction, you resisted and confronted the monsters of your time.

"*The only dream worth having is to dream that you will live while you are alive and die only when you are dead… To never get used to the unspeakable violence and vulgar disparity of the life around you,*" writes Arundhati Roy in her non-fiction eyewitness account *Walking with the Comrades*, where she documents her journey into the Chhattisgarh forests to live with Naxalite-Maoist guerrillas.

You lived a life filled with that dream.

Lal Salam, my dear comrade Velu!


●

# சிறு செங்கீற்று!

## -ஷோபாசக்தி

'உண்மையான புரட்சியாளர் பேரன்பு என்னும் மகத்தான உணர்வாலேயே வழிநடத்தப்படுகிறார். இந்தப் பண்பு இல்லாதவர் ஒரு உண்மையான புரட்சியாளாராக இருக்கவே முடியாது' என்பார் சே குவேரா. இந்த வார்த்தைகளுக்கு அச்சொட்டாகப் பொருந்திப் போகும் தோழர்தான் வேலு. பேரன்பு கொள்ளுதலே அவரின் அடிப்படைச் சித்தாந்தம்.

நான் என்னுடைய வாழ்வில் பல்வேறு இடதுசாரிச் செயற்பாட்டாளர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். இடதுசாரிக் கட்சியோடு பயணித்திருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில், பல இடதுசாரித் தோழர்கள் கடுமையான கட்சிநிலைப் பிடிவாதத்துடனும் கருத்து மூர்க்கத்தனத்துடனும் காணப்படுவதுண்டு. இந்தக் கடினத்தன்மை அவர்களது தனிப்பட்ட குணச்சித்திரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதுண்டு. அவர்கள் இறுக்கமானவர்களாகவும் எளிதில் அணுக முடியாதவர்களாகவும் மாறிவிடுவதுமுண்டு. ஒரு கருத்து விவாதத்தின்போது சக மனிதர்களையும், ஏன் தங்களது தோழர்களையும் கூட இவர்கள் எதிரி நிலையில் வைத்து அணுகுவதற்கு ஒருகணமும் தயங்குவதில்லை. இத்தகைய வறட்டுத்தனம் மற்றும் அவர்கள் போர்க்குணம் என அழைத்துக்கொள்ளும் பெரும் மூர்க்கம் எங்கிருந்து உருவாகிறது என்று நான் யோசிப்பதுண்டு. இவர்கள் தங்களை மேல் நிலையில் வைத்து மற்றவர்களை அவமானப்படுத்துவதில் திருப்தி அடைகிறார்களா?






அல்லது தங்களைப் புரட்சிகரக் கமிஷார்களாகக் கற்பனை செய்து Don Quixote உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களா? அதேவேளையில் இடதுசாரிகளிடையே பேரன்பு கொண்ட மனிதர்களையும் நான் அவ்வப்போது காண்கிறேன். அவ்வாறு, நான் சந்தித்தவர்களில் ஒருவரே தோழர் வேலு.

'கொம்யூனிஸ்ட் கட்சியில் இல்லாத ஒருவர் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அவர் ஒருபோதும் கொம்யூனிஸ்டாக இருக்க முடியாது' என்பார் ருஷ்யப் புரட்சியாளர் லெனின். தோழர் வேலு இளமையிலேயே தன்னை இடதுசாரிக் கட்சியில் இணைத்துக்கொண்டவர். தீவிரமாகக் களப் பணியாற்றியவர். இந்திய அரசால் கைது செய்யப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டவர். இந்தியாவிலிருந்து தப்பித்து அய்ரோப்பாவுக்கு வந்து அரசியல் அகதியாக வாழ்க்கையை இங்கிலாந்தில் தொடக்கியவர். தன்னுடைய மரணம்வரை வேலு தொடர்ந்து சர்வதேச அரசியல் பரப்பில் தீவிரமான இடதுசாரியாக இயங்கிக்கொண்டேயிருந்தார்.

புலம்பெயர்ந்த வாழ்க்கையிலே அவருக்குப் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள் - கலைஞர்கள் - அரசியலாளர்கள் - சிந்தனையாளர்களுடன் பரந்துபட்ட தொடர்பு ஏற்பட்டது. பொதுவாகவே தமிழகத்தைச் சேர்ந்த அரசியலாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீது விமர்சனமற்ற ஓர் ஆதரவு நிலையே இருந்தது. இந்த ஆதரவு நிலை மாயையாகத் திரிபுற்று, விடுதலைப் புலிகள் ஆதரவாகவே குறுகியிருந்தது. இதற்குத் தொல். திருமாவளவனிலிருந்து எம்.எஸ்.எஸ். பாண்டியன்வரை உதாரணங்களைச் சுட்டலாம். ஆனால், தோழர் வேலு இந்த மாயைக்குள் சிக்கிக்கொள்ளவேயில்லை. அவரது பாட்டாளி வர்க்க உணர்வும் மனிதவுரிமை மதிப்பீடுகளும் ஈழப் போராட்டத்தை விமர்சனத்தோடு அணுகும் ஓர் அரசியலாளராகவே அவரை ஆக்கியிருந்தன. எனவே, குறுந் தமிழ்த் தேசியவாதிகளுடன் இல்லாமல் மாற்றுக் கருத்தாளர்கள், மனிதவுரிமைச் சிந்தனையாளர்களுடனேயே அவரது இணைவு அய்ரோப்பாவில் இருந்தது. இதுதான் என்னையும் அவரையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தது.

இந்தியா - ஈழம் போன்றவற்றுடன் தோழர் வேலுவின் அரசியல் செயற்பாடுகள் தேசியப் புறநீங்கல்வாதமாகத் தேங்கிவிடவில்லை. இங்கிலாந்திலும் சர்வதேச அளவிலும் தோழர் வேலுவின் அரசியல் ஈடுபாடு இருந்தது. முகநூலில் இரவிரவாக முழித்திருந்து அமெரிக்காவின் போர்களுக்கு எதிராகப் பொரிந்து தள்ளுபவர்கள்

போல் அல்லாமல், காஸா மக்களுக்காகவும் வெனிசூலா மக்களுக்காகவும் வீதியில் இறங்கிப் போராடியவர் தோழர் வேலு. இங்கிலாந்தில் பல்வேறு தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயற்பட்டவர். அவரது பணி எத்தனை பெரிது, அவரது மரணம் எத்தனை பாரமானது என்பதற்குச் சாட்சியாகப் பல்வேறு இனங்களையும் மொழிகளையும் சேர்ந்த தொழிலாளர்களும் அரசியற் செயற்பாட்டார்களும் இறுதி வணக்க நிகழ்வில் திரளாகக் கூடியிருந்தார்கள்.

தோழர் வேலு செயலாற்றும் மார்க்ஸியவாதியாகவே வாழ்ந்தவர். எனினும், மார்க்ஸியம் தவிர்ந்த ஏனையச் சிந்தனைப் போக்குகளை அவர் முன்முடிவுகளுடன் அணுகுபவராகவோ, எடுத்தெறிந்து நிராகரித்துப் பேசுபவராகவோ ஒருபோதும் இருக்கவில்லை. நான் அவருடன் பங்குகொண்ட பல்வேறு அரசியல் - இலக்கியக் கூட்டங்களில் இத்தகைய நிதானமான பண்பை அவரிடம் கண்டிருக்கிறேன். பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் மார்க்ஸியத்திற்கு விரோதமானதாக அவர் பார்த்ததில்லை. தோழமைக் கருத்தியல்களாகவே கருதி அவற்றையும் உயர்த்தியே பிடித்தார். என்னைப் போன்று பின்நவீனத்துவ அறிதல்முறைகளை முன்நிறுத்திப் பேசுபவர்களோடும் அவர் பொறுமையுடன் உரையாடியும் விவாதித்தும் வந்திருக்கிறார். பேரன்போடு தோழமை பாராட்டியிருக்கிறார்.

தோழர் வேலுவின் பேரன்புமும், உரத்த உற்சாகமான குரலும், நிதானமான பார்வையும், சிரித்த முகமும் இனி எம்முடன் இல்லை. தோழர் வேலுவின் ஞாபகங்கள் மட்டுமே இனி எங்களுடன். அரிவாள், சுத்தியல் பொறித்த செங்கொடியால் தோழர் வேலுவின் உடலைப் போர்த்தி எடுத்துச் சென்று குடும்பத்தினரும் தோழர்களும் வெற்றுக் குழிக்குள் இறக்கியபோது, பேரன்பு அந்தக் குழியை நிறைத்தது. அவரது வாழ்வு இனி வரலாற்றில் ஒளிரும் சிறு செங்கீற்று..

தோழர் வேலுவுக்குச் செவ்வணக்கங்கள்!



# எங்கிருந்தோ வந்தான்!

## மீனாள் நித்தியானந்தன்




இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நா.சண்முகதாசன் அவர்களைப் பற்றிய கருத்தரங்கில்தான் தோழர் வேலுவை நான் முதலில் சந்தித்தேன்.

நக்சலைட் போராளியாக அறிமுகமான தோழர் வேலு, என் சொந்தச் சகோதரனாக - என் குடும்பத்தில் ஒருவராக எப்படி இணைந்தார் என்பதை யோசித்துப் பார்க்கையில் ஆச்சரியத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து போகிறேன்.

அவருடன் இலக்கிய, அரசியல் மேடைகளில் பங்கெடுத்திருக்கிறேன்.

பெண்களின் அரசியல் ஈடுபாட்டை உளமார வரவேற்பவர். பெண்களைக் கௌரவத்தோடு நடத்தும் உயர்பண்பு கொண்டவர்.

எப்போதும் - எந்தக் கலந்துரையாடலிலும், சிரித்த முகத்தோடு விவாதிக்கும் பக்குவம் கொண்டவர். எவர்மீதும் அவர் கோபம் கொண்டதை நான் பார்த்ததில்லை. பிறரைக் குறைகூறும் குணமும் அவரிடம் இல்லை. அவர் வெள்ளாந்தி மனம் கொண்டவர். நான் லண்டனில் சந்திக்க நேர்ந்த மனிதர்களில் தோழர் வேலு அபூர்வமானவர். அவரைப்போன்ற உயர்பண்பு மிக்க ஒருவருடன் பழகக் கிடைத்தது ஒரு வரம்.

என் வீட்டிற்கு வரும்போதெல்லாம், சொந்த சகோதரன் போன்ற உரிமையுடன், ஆற

அமர இருந்து, உண்டு மகிழ்ந்து, அரசியல், இலக்கியம், குடும்பம் என்று பேசிக் கழித்த நாட்களை நினைத்துப்பார்க்கையில் கண்களில் நீர் மல்குகிறது. இவ்வளவு விரைவில் எங்களை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுப் போவார் என்று யார் நினைத்திருக்கக்கூடும்?

நித்தியின் பவளவிழா மலருக்கு, நித்தியைப் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதித் தருமாறு கேட்டதற்கு, 'என் தலைவனுக்கு நான் எழுதுவது எனக்குக்கிடைத்த பாக்கியம்' என்று சொல்லி, அழகான கட்டுரை ஒன்றை எழுதித் தந்தார். இன்று நினைக்கையில், தோழர் வேலு நித்தியைப் பாராட்டி எழுதியது, நித்தி செய்த பாக்கியம் என்று நினைக்கிறேன்.

அந்தப் பவளவிழாவைத் தனது சொந்த நிகழ்வாக எடுத்து, ஓடியாடி விழா முடியும்வரை பம்பரமாய் நின்று வேலை பார்த்தது என் மனதில் என்றும் நிழலாடும்.

பெரியார்மீது அவதூறு பரப்பிய தமிழகச் சூழலை எதிர்த்து, நாங்கள் கூட்டிய கூட்டத்தில், சீமானின் கும்பல் ரகளையில் ஈடுபட்டபோது, நானும் தோழர் வேலுவும், ராகவனும் ,பாரதியும், நித்தியும் கடும் வாதத்தில் ஈடுபட்ட நாட்களைத் துயரோடு நினைவுகூர்கிறேன்.

இறுதியாக, லண்டனில் நடைபெற்ற ,நோர்வே சரவணனின் படைப்புகள் பற்றிய கலந்துரையாடலில், இந்திய ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து நான் கருத்துத் தெரிவித்தபோது, தோழர் வேலு எனது கருத்தினை ஆதரித்து ஆற்றிய பேச்சுத்தான் அவர் ஆற்றிய இறுதி உரையாக அமைந்துவிட்டது. நான் எப்போது சபையில் பேசினாலும், எனக்கு உற்சாகம் தந்து பாராட்டும் பண்பு அவரிடமிரு ந்தது. 'தலைவி, பின்னீட்டிங்க' என்று மனந்திறந்து பாராட்டும் அந்த நல்ல உள்ளத்தை நான் எப்படி மறப்பேன்?

'ஈஸ்டருக்கு தென்றல், தேனுகாவைப் பார்க்க வீட்டிற்கு வருகிறேன்' என்று சொன்னவர், இனி என்றுமே வரப்போவதில்லை என்று நினைக்க முடியவில்லை.

'தலைவி, தென்றல், தேனுகாவிற்குச் சொந்த தாய்மாமன் நான் இருக்கிறேன்' என்று சொன்ன வார்த்தைகளை நினைக்க நினைக்க என் மனம் விம்முகிறது.

அந்தப்பாசமுள்ள சகோதரனை 'நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்'!

சென்று வா, சகோதரனே! விழிநீர் சிந்தி, என் இனிய சகோதரனுக்கு செவ்வணக்கம் செலுத்தி, விடைதருகிறேன்.



# அர்ப்பணம்

## -மஞ்சு

*என் வாழ்க்கையில் சில மனிதர்கள் சாதாரண உறவுகளாக வருவதில்லை. அவர்கள் வழிகாட்டிகளாகவும், பாதுகாப்பாளாரகவும் சில நேரங்களில் பெற்றார் போன்ற ஆதரவாகவும் மாறிவிடுகின்றனர். என் வேலு மாமாவும் அப்படிப்பட்டவர். இந்த அஞ்சலியை எழுதும் இத் தருணத்தில் என் மனம் துக்கத்தாலும் அதே வேளை நன்றியாலும் நிரம்பியிருக்கிறது. வேலு மாமா எம்முடன் இல்லை என்ற உண்மை பெரும்வலி. அதே வேளை , அவர் எனது வாழ்க்கையில் எனக்கு செய்த உதவிகள், அவர் கொடுத்த உற்சாகம், அவர் காட்டிய பாதை அனைத்தும் என்னுள் வாழ்கின்றன. இது வெறும் நினைவஞ்சலி மட்டுமல்ல் என் நன்றிக்குரல்.*
*2009 ம் ஆண்டு நான் வேலு மாமாவை முதன் முறை சந்தித்தேன். அந்த நாளில் தொடங்கிய உறவு , என் வாழ்க்கைப்பாதையை மாற்றும் அளவுக்கு வளர்ந்தது. முதல் சந்திப்பிலேயே அவர் உதிர்த்த அழகிய புன்சிரிப்பும் ,அவரின் அன்பும், எளிமையும் என்னை மிகவும் கவர்ந்தது. அவர் பேசும் பாணி அமைதியும் நம்பிக் கையூட்டும் வகையிலும் அமைந்தது. சந்தித்த அன்றே, அவர் ஒரு விசேடமான மனிதர் என்ற உணர்வு என்னுள். ஒரு மனிதர் எப்போ முக்கியமானவராக மாறு கிறார் என்றால் நாம் இக்கட்டான நிலையில் இருக்கும் போது நம்முடன் நிற்கும் போது தான். எனது மாமா அப்படியானவர் தான்.*
*இலங்கையை விட்டு வெளியேறி நான் இங்கிலாந்துக்கு புதிய வாழ்க்கை தேடி நான் வந்த போது, அது நான் நினைத்தது போல் அமையவில்லை. சிரமங்கள், குழப்பங்கள், பயம் சூழ்ந்த காலமது. அந்த சூழலில் எனக்கு உறுதுணயாக இருந்தவர் வேலு மாமா. அவர்கொடுத்த நம்பிக்கை, துணிச்சல், ஊக்கம் அனைத் தும் தான் என் வாழ்க்கையைத் தொடர்ந்தும் மேம்படுத்துகிறது.*
*என் வாழ்க்கையின் மிகப் பெரும் திருப்பம் என் கணவருடன் பெல்ஜியத்தில் இணைந்த நாள். அதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்தவர் வேலு மாமா. அதன் பின், அவருடனான தொலைபேசி உரையாடல்கள் நித்தமும் தொடர்ந்தன. பல்வேறு விடயங்களை நாம் பேசிக்கொள்ளினும் எனது நலனில் அக்கறை காட்டு வதிலேயே வேலு மாமா கவனம் செலுத்தினார். பிள்ளை ! உன்னுடைய காலில் நீ நிற்கவேண்டும் அதனால், சாரதி அனுமதிப்பத்திரத்தை எடுத்துக்கொள் ஏதாவது படி - வேலைக்கு சென்று உனது தேவையை நீயே பூர்த்திசெய்து கொள் என அடிக் கடி ஊக்கம் தருவார் எனது மாமா.*
*2023 ம் ஆண்டு வேலுமாமாவைக் கடைசியாக சந்தித்தேன் . வழமையான சந்திப் புப் போல் இருந்தாலும் இன்று நினைக்கையில் அது என் மனதில் ஆழமாகப் பதிந் துள்ளது. 28 மார்ச் 2026 என் வாழ்க்கையை உலுப்பிய மறக்கமுடியா நாள். என் மாவை இழந்த நாள் அது. அவர் விட்டுச்சென்ற நினைவுகள் என் மனதில் சஞ்ச ரிக்கின்றன. ஒருவரை இழப்பதென்பது அவரை மறப்பது அல்ல. மாறாக அவரை நினைவுகளில் என்றும் வைத்துக்கொள்வது. நீங்கள் இன்று இல்லை யெனிலும் எம்மனதில் என்றும் நீங்கள் வாழ்கிறீர்கள். விதைத்தவன் உறங்கலாம். விதைகள் முளைத்துக்கொண்டே இருக்கும். உங்கள் சமூக விடுதலைப் போராட்டம் ஒரு நாள் வெல்லும்.*

# South Asia Solidarity Group (SASG statement)

It is now just over a month since our beloved comrade Velu passed away. Even now it is hard to comprehend that we have lost him.

For 20 years he stood with us in our campaigns against state repression and communal, casteist, and patriarchal social forces. His warmth, intensity and commitment lit up our demonstrations, solidarity events and political meetings.

Com. Velu hailed from Dharmapuri in Tamil Nadu and had been involved in revolutionary struggle, eventually being incarcerated and severely tortured. On arrival in the UK he faced the horrors of an extradition struggle against the vindictive Indian state. His experiences in India together with the intense hardships of making a living as a refugee in Britain took a toll on his health but never on his vibrant revolutionary energy. It is after



arriving in the UK, from 2003-2004 on that Velu became involved in the work of SASG.

Like SASG, Velu had a broad outlook and made the connections between global, US-led 'wars on terror', neoliberal economic policies, environmental destruction, rising fascism and human rights violations, ruthless policies of 'austerity' and intense racism and Islamophobia of the British state. For this reason he joined many of our demonstrations; remembrance events for the Gujarat 2002 genocide and protests against the Nandigram 2007 massacre, against corporate violence and plunder targeting Vedanta, Sterilite and against attacks on the Koodankulam protestors and Modi's visit to Britain. He actively mobilised people to respond to the British Government's caste consultation and was an integral part of many of our other campaigns. He also joined us in actions to show solidarity and support for the Farmers' Protests in India and with the movement against the India's Citizenship Amendment Act (CAA). For these actions and so many more, Velu was on the frontlines, with his infectious smile and utmost dedication, leading the chants at our demonstrations. It is hard to believe that that powerful voice is now silenced.

Our thoughts are with his beloved family - his wife Rajitha and daughter Nilofer.

**We will never forget you, Comrade Velu!**
**Lal Salaam Comrade!**

●



# A Statement of Remembrance for Comrade Shanmugam Velu by a Senior Member of the IWA-GB

I have been part of the Indian Workers' Association (Great Britain) since the late 1960s, and in that long span I have witnessed the leadership of towering figures such as Comrade Jagmohan Joshi, whose Marxist-Leninist ideological guidance shaped the direction of our organisation. Comrade Velu belonged to a different generation, but he embodied the same unwavering commitment, discipline, and selfless dedication that have sustained our movement through the decades. His contribution was defined by the consistency, sincerity, and reliability with which he served the struggle. It is in recognition of that steadfast spirit that I offer this tribute to his memory.

When I first came to know Velu, he was already active in East London, taking part in IWA campaigns with utmost dedication and quiet determination that defined his entire life. He came from a tradition of south Indian comrades who had long contributed to the IWA's work in London, but Velu brought something uniquely his own — a combination of humility, courage, and unwavering Marxist-Leninist ideological clarity.

Over the years, I watched him take on responsibilities that many would shy away from. Whether it was mobilising people for protests, supporting campaigns for political prisoners, or standing firm against injustice, Velu never hesitated. He did not measure his involvement by convenience or comfort. If there was a struggle to be supported, he was there - early, prepared, and ready to give everything he could. What always struck me most was his sincerity. Velu did not treat activism as a performance.

He lived his politics. He carried his principles into every aspect of his life - in how he spoke, how he worked, how he treated people. He was respectful, disciplined, and deeply compassionate. Even when he disagreed with someone, he did so with dignity. He believed in unity where unity was possible, and he believed in standing firm where principles demanded firmness.

His loss is felt across all our branches, not because of the positions he held, but because of the person he was. Comrade Velu represented the best of what our movement strives to be: principled, selfless, and rooted in the struggles of ordinary people. His passing has left a void in our organisation, but more importantly, it has left a void in our hearts.
On behalf of the Indian Workers' Association, Great Britain (IWA-GB), I offer my deepest condolences to his family. We share their grief, and we honour the memory of a comrade who gave so much of himself to the cause of justice and equality. His example will continue to guide us in the years ahead.

**Long live the memory of Comrade Velu.**
**Red Salutes.**

Surat Dasanjh
Secretary, Indian Workers' Association , Great Britain (IWA-GB)



# புன்சிரிப்பின் மகிமை
## - றஜோ



வேலு அங்கிள், நாங்கள் உங்களை அழைத்தது,
ஆனால் நீங்கள் என் அண்ணன்,
அழகிய வட்டமுகத்தில் அளவான அந்தக்கண்ணாடி,
புன்சிரிப்பிற்கு அர்த்தம் சொல்லும் உதடுகள்,
அழகான வார்த்தைகள், ஆயிரம் அனுபவங்களை பேசும்,
“அதெல்லாம் தானா நடக்கும் விடு”
உங்களிடம் இருந்து கற்ற தாரக மந்திரம்,
உங்கள் அழகிக்கு(எம் மகள்) கொடுத்த முத்தம்,
காலம் முழுதும் உங்கள் ஆசீர்வாதங்களாக..

●

# சிரித்தமுகப் போராளி

- பால சபேசன்



தோழர் வேலுவின் சிரிக்கும் முகத்தின் பிரசன்னமில்லாத இலக்கிய கூட்டங்களை இனிமேல் பார்க்கவேண்டியிருக்கும் என்ற நினைப்பே துயர் கவிய வைக்கிறது. அவருக்கு மாரடைப்பு வருவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் சவுத் ஹரோ வில் நடத்த இலக்கிய கூட்டத்திற்கு வழக்கம் போலவே தோளில் கனத்த ஒரு பையுடனும் சிரித்தமுகத்துடனும் வந்தருகில் அமர்ந்திருந்தார். காலம் எதிர்பா ராத திருப்பத்தில் வைத்து அவரை களவாடப்போகிறது என்ற சமிக்ஞையை கிஞ் சித்தும் தராத சந்திப்பு அது. சிந்தாந்தத் தெளிவும் செயல்திறனும் கொண்ட "உண்மைத் தோழர்" அவர். தோழர் வேலு அவர்களுடன் நான்கு ஆண்டுகால அறிமுகமே ஆனாலும் அவரிடம் இருந்து கற்றது ஏராளம்.

ஒரு இலக்கிய கூட்டத்திற்கு பின்னர் நீண்ட தொடருந்து பயணத்தில் ஈழப்போரா ளிகளோடு தனக்கிருந்த அறிமுகம் பற்றி, கல்லுடைக்கும் தொழிலாளர்களுடன் தான் செலவிட்ட நாட்கள் பற்றி, தனது தலைமறைவு வாழ்க்கை பற்றி சொல்லிக் கொண்டு வந்தார். அவர் பேசப்பேச எத்தனை பெரிய மனிதருடன் பழகிக்கொண்டி ருக்கிறோம் என்றெனக்கு உறைக்க ஆரம்பித்தது.


நீரில் மிதக்கும் ஒரு மகரந்த துகளின் பிரவுணியன் அசைவு போல இடையறாது அலைவுறும் வாழ்வமைந்திருந்தது அவருக்கு. அத்தனை பாடுற்ற பொழுதும் தனது கொள்கையில் இருந்து வழுவாது கரை நனைக்கும் நதியாக வாழ முடிந்தி ருப்பது அவருக்கு மட்டுமே முடிந்திருக்கிறது. ஒரு இலக்கிய கூட்டத்திற்கு பின் ஈஸ்ட் ஹாமில் ஒரு சிறிய அறையில் நண்பர்கள் கூடியிருந்தோம். பேச்சு ஒரு திரைப் படம் குறித்ததாக திரும்பியது. ஒரு "நக்ஸலைட் வாத்தியார் "குறித்த படம் அது. தோழர் வேலு அந்த திரைப்பட ஆக்கத்தில் வேலை செய்தவர்களில் இருந்து திரைக்கதைவரை எத்தனை தூரம் அது தொழிலாளர் நலனுக்கு எதிரானது என்று விளக்க, எனக்குள் நானறியாத தமிழகத்தின் பக்கம் திறந்தது. அதுதான் தோழர் வேலு. எந்த சம்பவம் குறித்து உரையாட நேர்ந்தாலும், அவர் கருத்து ஒரு காந்த ஊசியை போல இன, நாட்டு எல்லைகள் கடந்து தொழிலாளர் நலன் குறித்தே திரும்பி நிற்கும். அவர் பேசும் பொழுது ஆசானின் பாவனையே குரலில் இருக்காது. தோழமையுடன் சிரித்தபடி கைகள் ஓர் தனித்த பாவனையில் அசைய பேசுவது அவருக்கேயுரிய தனித்த பாணி. நாம் அவரிடமிருந்து புதிதாக ஒன்றை தெரிந்துகொண்டிருக்கிறோம் என்று புரியவரும் பொழுது சந்திப்பு முடிந்து நேரம் கடந்திருக்கும். செயல் திறனும், அறிவார்ந்த சிந்தனையும், நேர்மையும் ஒன்றி ணைந்த மனிதர்களை காண்பது அரிதிலும் அரிது. அந்த வகையில் தோழர் வேலு இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு.

சாத்தியப்படக்கூடிய அத்தனை நன்மைகளும்
அவர் குடும்பத்தினர் மீது கவியட்டும்.

●

# “சிறிய காலம், பெரிய நினைவுகள்”

- அபிநயா



வேலு மாமாவை என் வாழ்க்கையில் அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்ததற்காக நான் ஆழ்ந்த நன்றியுடன் இருக்கிறேன். நான் திருமணத்துக்குப் பிறகு நான்கு ஆண்டுக ளுக்கு முன்பு இங்கிலாந்துக்கு வந்தேன். முற்றிலும் புதியதும் அறியாததுமான ஒரு இடத்தில் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கினேன். அந்த காலத்தில், மாமா தான் என்னை முதலில் சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும் உணர வைத்தவர்களில் ஒருவர். திருமணத்துக்குப் பிறகே அவர் என்னை அறிந்திருந்தாலும், ஒருபோதும் அவர் என்னை வெளியான ஒருவராகப் பார்த்ததில்லை. நான் எப்போதும் இந்தக் குடும்பத்தின் ஒரு அங்கம் போலவே இருக்கிறேன் என்று உணருமாறு, அவர் என்னை அன்புடனும் அக்கறையுடனும் வரவேற்றார். அதுவே அவரது தனிச்சிறப்பு.

இங்கே இங்கிலாந்தில் எங்களுக்கு இருந்த முதல் குடும்பமாக அவர் இருந்தார். ஒவ்வொரு விதத்திலும் எங்க ளுக்கு ஒரு உறுதியான ஆதாரமாக இருந்தார். வழிகாட்டுதல், ஆதரவு, அல்லது தேவைப்படும் நேரத்தில் அருகில் இருப்பது, எதிலும் அவர் தயக்கமின்றி எப்போதும் இருந்தார். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடனும், வாழ்க்கையை ரசிக்கும் மனநிலையுடனும் இருந்தவர். அவர் இருந்த ஒவ் வொரு இடமும் சிரிப்பால் நிறைந்து விடும். நாங்கள் சிரித்தோம், விளையா டினோம், ஒருவரை ஒருவர் கிண்டல் செய்தோம், அந்த எளிய தருணங்களே இப்போது என் மனதிற்கு மிகவும் அருகிலுள்ள நினைவுகளாக இருக்கின்றன.

அவர் உணவை மிகவும் விரும்புவார். குறிப்பாக நான் அவருக்காகச் செய்த இந்திய உணவுகளை அவர் மிகவும் ரசித்தார். எளிய வீட்டுச் சமையல்கூட அவர் அவ்வளவு மகிழ்ச்சியுடன் சாப்பிடுவதைப் பார்க்க எனக்கு பெரும் சந்தோஷமாக இருந்தது. அதேபோல், நாங்கள் அவர்களின் வீட்டுக்குச் சென்றால், அவர் எங்களுக்காக சமைப்பதை மிகவும் விரும்புவார். அந்த அன்பு ஒவ்வொரு சந்திப்பையும் சிறப்பாக்கியது. என்னை மிகவும் தொட்டது, அவர் சிறிய விஷயங்களையும் மதித்த விதம். சிறிய அன்பிலும் அக்கறையிலும் உள்ள

உணர்வை அவர் கவனித்து, அதை மிகவும் மதிப்பாக மாற்றுவார்.

நள்ளிரவு நேர உரையாடல்கள் எனக்கு என்றும் மறக்க முடியாத நினைவுகள். நாங்கள் மணிநேரங்களாக பேசுவோம், சில சமயம் அதிகாலை வரை. சிரிப்பு, கதைகள், மற்றும் என் கணவரின் அம்மா, அப்பாவைப் பற்றி அவர் கூறும் அன் பான நினைவுகள் - அந்த உரையாடல்கள் முழுவதும் அன்பு நிறைந்தவை. அவர் இயற்கையையும், பயணத்தையும், புதிய இடங்களை ஆராய்வதையும் மிகவும் விரும்பினார். நாங்கள் சேர்ந்து சென்ற குடும்பப் பயணங்கள், பகிர்ந்த சிரிப்புகள், முடிவில்லா உரையாடல்கள் - அவை ஒருபோதும் மறக்க முடியாத நினைவுகள். சாதாரண தருணங்களையும் அவர் சிறப்பாக மாற்றும் தன்மை கொண்டவர்.

நான் அவரை நான்கு ஆண்டுகள் மட்டுமே அறிந்திருந்தாலும், என் வாழ்க்கை யில் அவர் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினார். சிலர் வாழ்நாள் முழுவதும் ஒரு தடத்தை விட முயற்சிப்பார்கள், ஆனால் மாமா தனது அன்பு அக்கறை மற்றும் இருப்பின் மூலம் குறுகிய காலத்திலேயே அதை செய்தார். அவரின் மறைவு எங்கள் இதயங்களில் ஒரு பெரிய வெற்றிடத்தை உருவாக்கி யுள்ளது. அதை வேறு யாராலும் நிரப்ப முடியாது. இன்னும் இது நம்ப முடியாத தாகவே இருக்கிறது. அவர் இப்போது எங்களுடன் இல்லை என்பதை ஏற் றுக்கொள்வது இன்னும் கடினமாக இருக்கிறது. அவருடன் இன்னும் அதிக நேரம் இருந்திருக்க வேண்டும் என்று உண்மையாக விரும்புகிறேன்.

ரஜிதா அக்கா மற்றும் நிலோ, நீங்கள் ஒருபோதும் தனியாக இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். நாங்கள் எப்போதும் உங்களுடன் இருப்போம். ஒரு குடும்பமாக, இந்த கடினமான நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, பார்த்துக் கொண்டு, துணையாக இருப்போம் - மாமா விரும்பியிருந்தது போலவே.

மாமா, உங்கள் அன்புக்கும், அக்கறைக்கும், சிரிப்புக்கும், எங்களை இவ்வளவு ஆழமாகக் கவனித்ததற்கும் நன்றி. நீங்கள் இப்போது எங்களுடன் இல்லாவிட் டாலும், நீங்கள் கொடுத்த அன்பும் விட்டுச் சென்ற நினைவுகளும் எங்களுடன் என்றும் இருக்கும். நீங்கள் ஆழமாக நேசிக்கப்பட்டவர், நீங்கள் ஆழமாக நினைவுகூரப்படுவீர்கள்.

உங்கள் ஆன்மா அமைதியாக இளைப்பாறட்டும்.

●

# *மன்னிக்கமுடியவில்லை இயற்கையை*

**- செந்நிலன்( கோகுலறூபன்)**

தோழரே! சாவா? உங்களுக்கா? சாவை வென்று வந்தவரல்லவா நீங்கள்.
மறுபிறவி பெற்றவரல்லவா நீங்கள். உங்களுக்கு இன்னுமொரு சாவா?
மரணத்தீர் என்கிறார்கள் மன்னிக்க முடியவில்லை இயற்கையை
தன் வாழ்வை தனக்காக வாழாத மாபெரும் தோழரே!

உங்கள் காதல் மனைவியையும், நீங்கள் உயிருக்குயிராய் பாசமூட்டி வளர்த்த
பெண் பிள்ளையையும் எப்படி எதிர்கொள்வது? எவ்வாறு ஆறுதல் சொல்வது?
மன்னிக்குக, உணர்வை இழந்து நிற்கிறோம்! உங்களை மனக்கண்களில்
சுமந்து நிற்கிறோம்- சுமந்து நடக்கிறோம்- விக்கித்து நிற்கிறோம்
விழிமழை சொரிகிறோம்.
உங்கள் இழப்பையும் ஏற்போமா? இனி வரும் நாட்களில் நீங்கள் இல்லாத
வெறுமையைக் கடப்போமா?
நம்பிக்கையற்ற காலம் இது. உலகமே தலைகீழாக புரண்டு கிடக்கிறது. எமது
நம்பிக்கைக்குரிய எல்லாவற்றையும்
ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்கியிருக்கிறோம்
முதலாளித்துவ வல்லாதிக்க அரசுகள் தமது அழிப்பு நடவடிக்கைகளை மிக
வெளிப்படையாக நடத்த ஆரம்பித்திருக்கிற நிலையில் நமது கடைசி
நம்பிக்கையாக இருக்கும் இடதுசாரித் தோழர்களையும் இழப்போமா?
தோழரே! உங்களை நாங்கள் இழப்பது என்பது
எமக்கான இழப்பு மட்டுமல்ல
உலகம் தழுவிய கம்யூனிஸ்டுகளின் இழப்பு
அதிகாரத்தால் நசுக்கப்படும்
போராடும் மக்களின் இழப்பும்கூட...
செங்கொடியைத் தாழ்த்தி வணக்கம் செய்கிறோம்.

மாவோயிச வாதியே!
மனிதாபிமான வாதியே! வரலாறு முழுவதும்
நீளும் வர்க்கப்போரில் செங்கொடியை ஏந்தி
முதல்வரிசையில் நின்றவரே எமது வழிகாட்டியே
எங்களை நீங்கள் நடுவில் விட்டுச் செல்லவில்லை
உங்கள் வாழ்வும், எழுத்தும், சிந்தனையும்
எங்களை வழிநடத்தும்.
விரைவாகவே பயணித்து விட்டீர்கள் செல்லுங்கள்
பணிமுடித்துத்திரும்புகிறோம்
ஆயிரம் ஆயிரம் தோழர்களுக்கு வழிகாட்டியே
செல்கிறீர்கள். உங்கள் வாழ்வு நிறைவானது
தளர்வடையோம்! போராடுவோம்!!

●



# இன்று நீர் வேலுவே...! எங்கு நீர் போயினீர்...!



**கவியாக்கம்:**
**கவிஞர் செ. சுதர்ஷன்**

*அன்பிலே உம்கால் ஆழவே ஊன்றினீர்!*
*அருஞ்சிரிப் போடுமே அகமதில் வாழ்ந்த நீர்!*
*இன்பதில் ஊறுநல் உறவென இருந்த நீர்!*
*ஈவதில் இதயமாய் எனவுருக் கொண்ட நீர்!*
*மன்பதை வெல்லவே மனமதால் துதித்த நீர்!*
*மாய்ந்திடும் போதிலும் மனிதமே வென்ற நீர்!*
*இன்று நீர் வேலுவே...! எங்கு நீர் போயினீர்?*
*இன்னலில் நாமெலாம்...! இங்கு வா வேலு நீர்!*



*நல்லதோர் தோழராய் நம்மனை நாடினீர்!*
*நாவதால் நன்மொழி நயந்துமே பேசினீர்!*
*வெல்லமாம் தேன்சுவைச் சமையலே உண்ட நீர்!*
*வேறிலா நட்புகொள் நாடியே நயந்த நீர்!*
*கல்வியின் தேடலைக் காணவே விழைந்த நீர்!*
*காலமாம் துயரதில் கால்களே பதித்த நீர்!*
*நல்லதோர் அன்பென நாடியே வந்த நீர்!*
*நாமெலாம் விம்மலில்... நல்லவா.. எங்கு நீர்...!*

போரது பொய்வலை விரித்திடும் போதிலும்;
பொய்யெனச் சூழ்ச்சிகள் வரித்திடும் போதிலும்;
பேரது கொண்டுமே பெற்றி நீர் பெற்றவர்;
பெரிதுமே அறிவெனக் கொண்டு நீர் வாழ்ந்தவர்;
ஆரிது இவரெனக் கேட்டிடும் போதிலும்
அன்பதே முகவரி ஆகவே வாழ்ந்தவர்;
வேரலை கின்றதோர் வாழ்வென ஆகியும்
வேறது நாமல... என்றுமே கூடினீர்!

வேலுவுன் தோழமை வெல்லுமா புவிதனை!
வெல்லவோர் சாத்திரம் இருக்குமா படி அதை!
சாலவே நட்பதைச் சார்ந்துமே நின்றவா!
சந்தன உன்முகம் பார்த்துமே சரிகிறோம்!
காலனும் இங்கொரு காரியம் சடுதியில்
காரிருள் வேளையில் புரிந்தனன் என்சொல!
காலமாம் கயிறதில் பட்டு நீ போயினைய்!
கண்களில் நீர்வழி மாலையாய் ஆகினைய்!

தாயென அன்பினைத் தந்துமே நின்றவா!
தங்கமாய்த் தினந்தினம் தகுமொழி சொன்னவா!
காய்ந்திடா அன்பிலே கடலென விரிந்தவா!
கண்களில் உறவதன் கால்களைத் தந்தவா!
தோயுமோர் துயரெனில் தோள்களைக் கொடுத்தவா!
தொய்வுறும் போதிலின் சொற்களைப் பொழிந்தவா!
பாயிலே நீவிழப் பார்ப்பதோ...நெஞ்சமும்!
பற்றி நீ எரிகையில் பார்க்குமா.. கண்களும்!


சென்றுநீ வருகவே... கைகளை அசைக்கிறோம்!
சேருவாய் என்றுமே மனமுமே துடிக்கிறோம்!
அன்று நீ பொழிந்தநல் வார்த்தைகள் சுமக்கிறோம்!
ஆருயிர் சோரவே அழுகையில் நனைகிறோம்!
இன்று நாம் அழுகிறோம்... இல்லை.... நீ விம்முறோம்...
இன்னுமேன் எழுகிலை...!? என்றுமே துடிக்கிறோம்!
நண்ப நல் வேலுவே நாமுனை நாடுவோம்"
நாள்தொறும் நினைவுகள் துரத்தவே தேடுவோம்!

பாதையுன் மார்க்சியம் பயணமாய்க் கொண்டவா!
பார்வையில் பாசமே விரித்துமே நின்றவா!
வாதைகொள் வேளையில் யார்தனை நினைந்தனை?
வந்தெனைப் பாரெனச் சொல்லெதை உதிர்த்தனை!
ஏதெது என்றுமே யாரிது புரிகிலார்?
என்றுமே காலமாம் வலையதும் தெரிகிலார்!
மோதுமோர் துயரெழ நாமுமே அழுகிறோம்!
நொந்துமே இங்குமே நாம் நிதம் சோர்கிறோம்!

உன் ஆத்மா சாந்தி அடைக!

**உன் மீள் வரவை நாடும்**
**'விம்பம்' நண்பர்கள்**





ஆழமான அன்பே
உண்மையான புரட்சியாளனின் வழிகாட்டி –சே